# அயலவர்கள் எல்லோரும் எங்கு சென்று விட்டார்கள்?

## அளுத்கம கலவரங்களும் அதன் பின்னரும்

*அளுத்கம, தர்கா நகர், வலிப்பன்ன மற்றும் பேருவளை தொடர்பிலான உண்மையைக் கண்டறியும் ஒரு பணி*

சட்டம் மற்றும் சமூகத்திற்கான அறநிலையத்தின் ஒரு முயற்சி

**ஆய்வுக் குழு:**

பர்ஸானா ஹனிபா, ஹரிணி அமரசூரிய, விஷாக்கா விஜயநாயக்க, ஜெஹான் குணதிலக்க

© வர்த்தக ரீதியற்ற நோக்கங்களுக்காக இவ் அறிக்கையின் எப்பாகத்தினது உள்ளடக்கமும் வெளியீட்டாளரினதும் வெளியீட்டகத்தினதும் அனுமதியுடன் மீள்பிரசுரம் செய்யப்படலாம்.

**அட்டைப்பட புகைப்படம்:**

தியாகி றுவான் பத்திரண

*Groundviews* இணையத்தில் காணப்பட்டவாறாக

**பதிப்பு:**

சட்டம் மற்றும் சமூகத்திற்கான அறநிலையம்
3, கின்சி டெரஸ்
கொழும்பு 00800
இலங்கை
தொலைபேசி: +94 (0) 11 268 48 45
தொலைநகல்: +94 (0) 11 2686843
இணையதளம் : www.lawandsosietytrust.org

## நன்றியறிதல்

*அயலவர்கள் எல்லோரும் எங்கு சென்று விட்டார்கள்?* என்பது அளுத்கம, தர்கா நகர், வெலிப்பன்ன மற்றும் பேருவளை ஆகிய இடங்களிலுள்ள முஸ்லிம் சமூகங்கள் மீதான காடையர் தாக்குதலைத் தொடர்ந்து 2014 ஜூனில் சட்டம் மற்றும் சமூகத்திற்கான அறநிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு அறிக்கையாகும்.

ஆய்வுக்குழுவானது எரிந்த கடைகள், ஆதனங்கள் மற்றும் வீடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் இரு சமூகங்களையும் சேர்ந்த, தலைமுறை தலைமுறையாக அருகருகே வாழ்ந்த மக்கள் தமது கவலைகளையும், என்ன நடந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியாத இயலாமையையும் வெளிப்படுத்தினர்; இன்னும் சிலர், தமது அயலவர்களைக் கவனித்துக் கொள்ளவோ ‘ஏனையோருடன்’ தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவோ முடியாதிருந்ததாகவும் தெரிவித்தனர்.

இந்த அறிக்கையானது அவர்களது கதைகளை ஆவணப்படுத்துவதுடன் அவர்கள் கண்டவற்றையும் அனுபவித்தவற்றையும் பதிவு செய்கிறது. விசாரணை மேற்கொண்ட குழுவானது கலாநிதி பர்ஸானா ஹனிபா (மானிடவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் - கொழும்பு பல்லைக்கழகம்), கலாநிதி ஹரிணி அமரசூரிய, (திறந்த பல்கலைக்கழக மானிடவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்) மற்றும் விசாக்கா விஜயநாயக்க (யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர்) ஆகியோரினால் தலைமை தாங்கப்பட்டது. ஆய்வுக் குழுவினர் தமது இரண்டு விஜயங்களின் பொழுதும் அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் சமூகத் தலைவர்களுடனும் கலந்துரையாடி இரு பக்க அரசியல் தலைவர்களாலும் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மேற்கொள்ளப்பட்ட பகிரங்க அறிக்கைகளை

சேகரித்தனர். ஜெஹான் குணதிலக்க (சட்டத்தரணி, சிரேஷ்ட ஆய்வாளர் - Verite Research) வரைபுப் பிரதியை முழுமையாக வாசித்து முக்கியமான குறிப்புகளை வழங்கியிருந்த அதேநேரம், தில்ஹார பத்திரண பிரசுரத்திற்கான ஆசியர் பீட உதவிகளை வழங்கியிருந்தார். தியாகி றூபன் பத்திரணவினால் எடுக்கப்பட்டு *Groundviews* இணையத்தில் பிரசுரமான நாம் எல்லோரும் அனுபவித்த அவநம்பிக்கையை எடுத்துக்காட்டும் புகைப்படம் ஒன்றைப் பயன்படுத்தி கொணல் ஹர்ஷானி அட்டையை வடிவமைத்தார்.

"அபாயகரமான" இந்தப் புலனாய்வுப் பணியில் LST ஏன் இறங்கியிருக்கிறது எனப் பலர் விசாரித்தனர். சட்டத்தின் ஆட்சி, சமூக நீதி, மனித உரிமைகள் என தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு நிறுவனம் என்ற வகையில் அவ்வாறு செய்யாமல் எம்மால் அமைதியாக இருக்க முடியாது என்பதே எமது பதிலாகும். அந்த சமூகங்களுக்கு உள்ளாகவும் தாக்குதல் நடத்தும் காடையர்களில் இருந்து தூரத்தில் உள்ளவர்களிடத்திலும் நிலவிய அச்ச உணர்வும் இந்த ஆய்வோடு தொடர்பைக் கொண்ட எம்மவர்களுக்குள்ளான சந்தேகமும் புரிந்து கொள்வதற்கு கடினமானதாகவும் மறுப்பதற்கு முடியாததாகவும் இருந்தது. இந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவதானது சமநேரத்தில் நடத்தப்பட்ட ஏனைய புலன்விசாரணைகளின் அறிக்கைகளை வெளியிடுவதற்கு வழிவகுக்கும் என நாம் நம்புகிறோம்.

பாதிக்கப்பட்ட சமூகங்களிடம் உடனடியாக விஜயம் செய்வது பற்றி தமது தோழர்கள் குடும்பத்தினரிடமிருந்தான எச்சரிக்கை வார்த்தைகளையும் பொருட்படுத்தாமல் தமது தனிப்பட்ட பாதுகாப்பினையும் கவனத்திற்கொள்ளாது அர்ப்பணிப்புடன் செயற்பட்ட குழும உறுப்பினர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகுக. தாக்குதல் நடைபெற்ற உடனடியாக நேர்காணல் செய்யப்படுவதற்கு இணங்கிய எல்லோருக்கும் அத்துடன் அரச பணியில் தமது இருப்புக்கான அச்சத்தின் மத்தியிலும் சேதம்

குறித்த உத்தியோகபூர்வ தரவுகளை வழங்கிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட மக்களுடன் நேர்காணல் செய்வதை வசதிப்படுத்திய நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் (NFGG) உறுப்பினர்களுக்கும் LST குழுவினர் ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் நிகழ்வுக்குப் பிற்பாடான நேர்காணல் ஒளித்தரவு ஒளிப்பதிவுகளையும், பதிவு செய்யப்பட்ட கணங்களையும் பெற்றுக்கொள்வதில் உதவியதற்காகவும் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பரந்த சூழலமைவு மற்றும் நிகழ்வுகளுடனான உணர்வுரீதியான ஈடுபாடு என்பவற்றிற்காக நஜா மொஹமட்டின் புரிந்துணர்வானது இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கான இலக்கின் ஆழ அர்த்தங்களைத் தேடுவதில் பங்களிப்புச் செய்திருந்தது.

இந்த அறிக்கையின் தமிழ், சிங்கள மொழிபெயர்ப்புகளின் வெளியீடானது, இங்கு பதியப்பட்டுள்ள நிகழ்வுகள் ஒருபோதும் மீட்டப்பட மாட்டாது என்பதை உறுதிப்படுத்துகின்ற குறித்த சமூகங்கள் சுயமதிப்பீடு மற்றும் துலங்கலில் ஈடுபடுவதற்கான பகிரங்க விவாதத்தை ஊக்குவிக்கும் என நம்புகிறோம்.

மாலா லியனகே
நிறைவேற்றுப் பணிப்பாளர்
Law and Society Trust
கொழும்பு
இலங்கை
டிசம்பர் 2014

# உள்ளடக்க அட்டவணை


அத்தியாயம் I

அறிமுகம் ....................................................................................1
முறையியல்..................................................................................4

அத்தியாயம் II

பொது பல சேனா........................................................................12
இலங்கை வரலாற்று விபரிப்பின் ஒரு செயற்பாட்டாளராக பிக்கு ...12
பொது பல சேனாவின் உருவாக்கம்...............................................15
பொது பல சேனா குரல்பெறல் .....................................................16
பொ.ப.சே.வின் அரசியல் புள்ளிகளுடனான ஈடுபாடு ......................18
ஹலால் வேண்டாம் என பொ.ப.சே. சொல்லுகிறது .......................20
பொ.ப.சே.வும் வன்முறை விழிப்புணர்வும் ......................................22
2014 உம் வரவிருக்கும் விடயங்களின் முன்னெச்சரிக்கை ............24
உணர்வுகளும் ..................................................................................

அத்தியாயம் III

உசுப்பிவிட்ட நிகழ்வு.......................................................................28
பொதுக் கூட்டம் ..............................................................................34
ஊர்வலம் ........................................................................................36

அத்தியாயம் IV

வன்முறை: பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் .........................39
தர்கா நகரிலிருந்தான கதைகள் .....................................................41
சீனவத்த..........................................................................................41
இராணுவ வீதி.................................................................................50
பத்திராஜகொட ...............................................................................56
அதிகாரிகொட .................................................................................59
புதிய வீதி (பதா ஹாஜியார் மாவத்தை)........................................69
மிஹிரிபென்ன வீதி..........................................................................70
வெலிபிற்றிய ..................................................................................73
அளுத்கம நகர் ...............................................................................79
வெலிப்பன்ன....................................................................................82
பேருவளை......................................................................................85

வைத்தியரின் சாட்சியம் ....................................................................87
நிகழ்வு விபரிப்புக்களில் இருந்தான பிரதான கண்டறிகைகளும் அப்பகுதியின் அவதானிப்புக்களும் ....................................................91

அத்தியாயம் V
நிகழ்வுகளின் பின்னர் ....................................................................98
அளுத்கம விடயத்தில் அரசின் பதிற்செயற்பாடு ............................98
2014 ஜூன் 15ஆம் திகதி தெஹிவளை பள்ளிவாசல் கூட்டம்.........98
ஜூன் 16ஆம் திகதி களுத்துறை கச்சேரி கூட்டம்...........................99
அளுத்கம கலவரங்கள் தொடர்பான
இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் உத்தியோகபூர்வ கூற்று......101
அளுத்கம சம்பவங்கள் தொடர்பில் எதிர்க்கட்சியான ஐதேக யின் துலங்கல் ....................................................................109
அளுத்கம தொடர்பாக ஜனதா விமுக்தி பெரமுன (JVP) ..............114
தமிழ் தேசியக் கூட்டமைப்பு...........................................................115
“அளுத்கமவின் உண்மைக் கதை” ..................................................116
அடிமட்டத்தில் விபரிப்புக்களை ஒப்பிடுதல் .......................................119
நிகழ்வு தொடர்பான முஸ்லிம் பாராளுமன்ற
உறுப்பினர்களின் பதிற் செயற்பாடுகள் .............................................125
நிகழ்வுகளின் துலங்கலாக உள்ளூர் மற்றும்
சர்வதேசக் கூற்றுக்கள் ....................................................................127

அத்தியாயம் VI
அளுத்கம கலவரங்களின் ஊடகப் பதிவுகள்...................................128
மரபு ரீதியான ஊடகம் ....................................................................128
சமூக ஊடகம் ....................................................................132

அத்தியாயம் VII
அளுத்கம நிகழ்வுக்குப் பின்னரான சட்டரீதியான செயற்பாடுகள்:..137
முடிவுகளும் சிபாரிசுகளும்..............................................................141
முடிவுகள் ....................................................................141
சிபாரிசுகள் ....................................................................148

பின்னிணைப்பு I....................................................................153
பின்னிணைப்பு II ....................................................................157

# அத்தியாயம் I

## அறிமுகம்

யுத்தத்தில் இருந்து அமைதிக்கான ஒரு சிரமமான நிலைமாற்றச் சூழலமைவில், முஸ்லிம் எதிர்ப்பு உணர்வலைகள் இலங்கையின் முக்கிய இடத்தை எடுத்துக் கொண்டுள்ளன. இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஒன்பது சதவீதத்தினராகிய முஸ்லிம் மக்கள் நாடுபூராகவும் சிறு சமூகங்களாக பரந்து வாழ்வதுடன் கிழக்கு, வடமத்தி மற்றும் மேல் மாகாணங்களில் கணிசமான செறிவுடையவர்களாகவும் உள்ளனர். கிளர்ச்சிக்காரர்களுக்கெதிரான அரசாங்கப் படைகளின் வெற்றிக்குப் பின்னர் பல சிங்கள பௌத்த தேசிய குழுக்கள் மேற்கிளம்பியதுடன் அவை தமிழர்களை இன்னும் முக்கியமானவை அல்லாமல் முஸ்லிம்களையும் அவ்வாறனவர்களாகக் கண்டார்கள். 2011 இன் பிற்பகுதியில் இருந்து முஸ்லிம் எதிர்ப்பு உணர்வலைகள் பல குழுக்களால் முறைமை ரீதியாக வளர்க்கப்பட்டன. 2014 ஜூன் அளுத்கம சம்பவமானது மிக அண்மித்த ஒன்றாகவும், அதீத வன்முறை நிறைந்ததாகவும், வெறுப்புணர்வின் மிகப் பரந்துபட்ட உதாரணமாகவும் உள்ளது. இவ் அறிக்கையானது அளுத்கம சம்பவத்தின் பிற்பாடு LST இனால் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் (National Front for Good Governance - NFGG) பங்காண்மையுடன் உருவாக்கப்படுகிறது. இவ் அறிக்கையானது அளுத்கமவில் என்ன நடைபெற்றது என்பது பற்றியும் இந்த இரண்டு மணித்தியாலங்களின்பொழுது ஜனநாயகத்திற்கும் மற்றும் பன்மைவாதத்திற்குமான முன்னுரிமை அளிக்கும் இலங்கையின் இயலுமைகளின் ஒரு பார்வை நோக்கிலிருந்து கட்டமைக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இம் முயற்சியில் ஈடுபட்ட ஆய்வாளர் குழுவானது பன்மைத்துவம் மற்றும் ஜனநாயகம் தொடர்பில் நிரூபிக்கப்பட்ட அவர்களது அர்ப்பணிப்புகளுக்காக தெரிவு செய்யப்பட்டது.

2014 ஜூனில் தென்னிலங்கை நகரங்களான அளுத்கம, தர்கா நகர், வெலிப்பன்ன மற்றும் பேருவளையில் முஸ்லிம்கள் எதிர்ப்பு வன்முறை வெடிப்பினைக் கண்டது. 2012 இல் பிக்குகள் குழுவினால் உருவாக்கப்பட்ட பொது பல சேனா அமைப்பினால் கடந்த இரண்டு வருடங்களாக மத வெறுப்புணர்வு வகுக்கப்பட்டு வந்ததுடன், அந்நேரத்தில் நாடுபூராகவும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வன்முறைகளும் விரவிக் காணப்பட்டன.[1] இந்த உணர்வானது முறைமை ரீதியான வகையில் உருவாக்கப்பட்டதுடன் 2014 ஜூன் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் வன்முறையாக அரங்கேற்றப்பட்டது. இதனைத் தூண்டிவிட்ட நிகழ்வாக ஒரு பௌத்த குருவுக்கும் அந்த பௌத்த மதகுருவைத் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட மூன்று முஸ்லிம் இளைஞர்களுக்குமிடையிலான வாய்த்தர்க்கமாகக் கருதப்படுகிறது. இதற்குப் பின்னர் இந்த நிகழ்வுக்குப் பதிற்செயற்பாடாக ஒரு பெரிய பொதுக்கூட்டம் பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் வண. குலபொட அத்த ஞானசார தேரரினால் நடத்தப்பட்டது. அவரது கூற்றுக்களில் அநேகமானவை இனவாதமாகவும் அதனைப் பற்ற வைப்பனவாகவும் இருந்தன.

பொலிஸ் ஊடரங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்ட 15 ஆம் திகதி பிற்பகலில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் அப்பகுதியில் வெடித்தது, இரண்டு நாட்களுக்கு மேல் தொடர்ந்திருந்தது. இந்தக் கால இடைவெளியில் முஸ்லிம்களின் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்கள் மட்டுமல்லாமல் (பத்திராஜகொட, அதிகாரிகொட, மிஹிரிப்பன, வெலிப்பன்ன ஆகிய கிராமங்களைச் சேர்ந்த) சில சிங்களவர்களுடையதும் கொள்ளையடிக்கப்பட்டதுடன் எரித்து அழிக்கப்பட்டன. உள்ளூர் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உறவு கடுமையாக பாதிக்கப்பட்டது. அப்பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கு சட்டத்தை அமுல்படுத்துபவர்களுடனான இருந்த உறவும் மற்றும்

---

1 2014 ஜனவரியில் இருந்தான வெறுப்புணர்வு மீதான ஆவணப்படுத்தல். பார்க்குக http://bit.ly/1vCc3jy

பொதுவாக அரசுடன் இருந்த உறவும் மாற்றமடைந்தடன், ஒரு முற்று முழுதான சமூகமும் மனவடுவுக்கு ஆளானது. இவ் அறிக்கையானது நிகழ்வுகளை ஆவணப்படுத்தவும், பாதிக்கப்பட்ட சமூகங்கள் மீதான அவற்றின் பின்விளைவுகளை ஆவணப்படுத்துவதற்கும் முயற்சிக்கிறது. இது முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டிருந்த ஒரு சமூகத்தின் மீதான திட்டமிடப்பட்ட தாக்குதல் மட்டுமன்றி, அதில் சிங்களவர்களும் உள்ளடக்குகிறது என்பதாக நிகழ்வு தரும் சான்றுகள் இவ் அறிக்கையில் நாம் வாதிடுகிறோம். அந்த தாக்குதலும் பின்விளைவுகளும் இரு சமூகங்களையும் பாதித்துள்ளன. தாக்குதல்கள் பொது பல சேனா மற்றும் நாட்டில் எதிர்ப்புத் தெரிவிக்கப்படாத அதனுடன் ஒத்துழைக்கும் குழுக்களால் நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி நிரலின் நோக்கத்தை அடைந்து கொள்ளவே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதே எமது கருத்தாகும். அளுத்கம மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த உள்ளூர் மக்கள் வெறுமனே இந்த நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

சிரமமான யுத்தத்தில் இருந்து அமைதிக்கு இலங்கை நிலைமாற்றம் பெறும்வேளையில் இது இடம்பெற்றமையானது இரட்டைக் கவலையைத் தருகிறது. கள விஜயங்கள், ஊடகப் பதிவிடல்கள், அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகங்களிடமிருந்தான பதிற் செயற்பாடுகள் என்பவற்றில் இருந்து பெறப்படும் சான்றுகள் நாடு எதிர்கொள்ளும் ஒரு ஆழமான நெருக்கடியை சுட்டிக்காட்டுகின்றன. தாக்குதல் விடயத்தில் தர்கா நகர் முஸ்லிம்களை குற்றம்சாட்டுவதுடன், வன்முறை மேற்கொள்ளப்பட்ட பாங்கில் எவ்வித பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொள்ள மறுப்பதும், சட்டத்தை நிலைநாட்டும் முகவர்கள் காடையர்களின் அடாவடித்தனங்களுக்கு உடந்தையாக இருந்தமையும் நாட்டின் கடந்த காலத்தில் திட்டமிட்டு தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கறுப்பு ஜுலையை, 1983 படுகொலையை நினைவூட்டுகிறது என நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேர்காணல் செய்யப்பட்ட முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அளுத்கம கலவரத்தை ஓர் இறுதி முடிவாகப் பார்க்கவில்லை. மாறாக, மிகப் பெரிய வன்முறைகளின் ஆரம்பமாகவே பார்க்கின்றனர்.

## ஆய்வு முறையியல்

இந்த அறிக்கையானது வன்முறை இடம்பெற்ற பகுதிக்கு உடனடியாக விஜயம் மேற்கொண்ட அக்கறையுடைய முஸ்லிம் செயற்பாட்டாளர்களால் சேகரிக்கப்பட்ட சாட்சியங்களினதும் அளுத்கம, பேருவளை, வெலிப்பன்ன முதலான இடங்களுக்கு LST ஆய்வுக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட உண்மையைக் கண்டறியும் மூன்று முழு நாள் விஜயங்களின்பொழுதும் சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தத் தகவல்கள் கொழும்பில் உள்ள உரிய பங்காளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களை உசாத்துணைகளாகக் கொண்டுள்ளது. அத்தியவசியமான இரண்டாம் நிலை மூலங்களாக பத்திரிகை அறிக்கைகள், இணைய சஞ்சிகைகளில் இருந்ததான அறிக்கைகள், ருவிட்டரில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவை பயன்படுத்தப்பட்டன. வன்முறைச் சூழல் இடம்பெற்ற உடனடியான நிலையையும் பலரது அதிர்ச்சி அனுபவங்களையும் குறித்த இடத்தில் அவர்களது எதிர்காலம் குறித்த பிரதிபலிப்புகளையும் நாம் பெற்றுக்கொள்ள முயற்சித்தோம். ஆய்வுக் குழுவானது சொத்துக்கள் சேதமாக்கப்பட்ட சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் நேர்கண்டதுடன் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கிடையிலான உறவுகளில் தாக்கம் ஏற்படுத்திய நிகழ்வு குறித்து உறுதிப்படுத்துவதற்கும் முயற்சி செய்தது. தர்கா நகரில் உள்ள முஸ்லிம் வீடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு மேலதிகமாக பத்திராஜகொடவிலுள்ள ஆறு சிங்களவர்களுக்கு சொந்தமான வீடுகளும் தாக்கப்பட்டதுடன், மிஹிரிப்பன்ன வீதியில் உள்ள ஒரு வீடும் தாக்கப்பட்டது. தர்கா நகரில் தாக்குதல்

இடம்பெற்ற அதேவேளையில் இத் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. அதிகாரிகொடவில் ஒரு சிங்கள வீடும் பின்னர் தாக்கப்பட்டமை பழிவாங்கும் நடவடிக்கையாக இருக்கலாம். தலைமுறை தலைமுறையாக சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் நல்லிணக்கத்துடன் இந்த இடத்தில் வாழ்ந்து வந்திருப்பதைப் பார்க்கும்போது சமூக ஊடகங்களால் முன்னெடுக்கப்பட்ட முஸ்லிம் எதிர்ப்புப் பிரசாரங்களும் அதற்குப் பின் வெளியார் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தெரிந்தவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் உறவுகளில் முறிவை ஏற்படுத்தியுள்ளதை ஆவணப்படுத்துவது முக்கியமானது என நாம் கருதினோம்.

வாழ்நாள் முழுவதுமான உழைப்பின் ஊடாக சேர்க்கப்பட்ட பொருட்கள், சொத்துக்களின் அழிப்பு பொலிசாரிடமிருந்தும் விசேட அதிரடிப் படையினரிடமிருந்தும் உதவி மறுக்கப்பட்டதாக பார்க்கப்படுவது போன்ற பலரது அனுபவங்கள் மட்டிலான அதிர்ச்சி, காட்டிக் கொடுக்கும் உணர்வு என்பவற்றை ஆவணப்படுத்தும் முகமாக பாதிக்கப்பட்ட தனிநபர்களின் விபரிப்புகளுக்கு நாம் கணிசமான அழுத்தம் கொடுத்துள்ளோம். இதனால் அவர்கள் இந்த அழிப்பு நடவடிக்கையில் அரசின் உடந்தையை சந்தேகித்தனர். பொலிசார் மற்றும் அதிரடிப்படை ஆட்களின் பாகத்தின் மீதான நடத்தைப் பாங்கை விபரிக்கும்பொருட்டு பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் அவர்களிடமிருந்து உதவியை நாடியபொழுது மறுத்தது மட்டுமன்றி, சில வேளைகளில் மோசமாக நடந்துகொண்ட முறைமையின் பல விபரிப்புக்களையும் நம் உள்ளடக்கியுள்ளோம். தீவைத்தல், களவு, கொள்ளையடித்தல் போன்ற, பிரதேசத்தில் இடம்பெற்ற மற்றும் ஒத்த முறைமைகளின் பாங்குகளை எடுத்துக்காட்டுவதற்கு இந்த விபரிப்புக்களை நாம் பயன்படுத்தியுள்ளோம். வன்முறையின் ஒழுங்கமைக்கப்பட்ட தன்மையை இந்தப் பாங்குகள் பேசுகின்றன.

நாம் நேர்காணல்களை மேற்கொண்டபொழுது அளுத்கம, தர்கா நகர் ஆகியவற்றின் சில பகுதிகளிலும் வெலிப்பன்னவிலும் இராணுவம் மற்றும் அதிரடிப்படையினரின் பிரசன்னத்துடன் ஒரு பதற்றம் நிலவியிருந்தது. எனவே, ஆய்வுக்குழுவிடம் தமது பெயர்களை வெளிப்படுத்த மக்கள் தயக்கம் காட்டினர். அதற்கு மேலதிகமாக சம்பவம் தொடர்பான தகவல்களின் மீது அரசானது கட்டுப்பாட்டினை விதித்திருந்ததுடன், நிகழ்வின் உடனடியாக உள்ளூர் பத்திரிகைகளை சம்பவம் குறித்து பேசவிடாது செய்து, நிகழ்வின் குறிப்பிட்ட சம்பவங்களை மட்டுமே வெளிப்படுத்த அழுத்தம் கொடுத்திருந்தது. ஆய்வுக் குழுவும் கூட, அறிக்கையில் தனிநபர்களின் பெயர்கள் மற்றும் இடங்களைப் பயன்படுத்துவதில் தெரிவு செய்து செயற்படுவதற்கு தீர்மானித்திருந்தது.

**நிகழ்வுகளின் நேர ஒழுங்கு**

**8 மே 2014:** ஏழு வயது நிரம்பிய பிள்ளையொன்றின் தாய் தனது மகனை ஒரு கடையின் ஐம்பது வயதுடைய வேலையாள் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம்சாட்டுகிறாள். பொலிசாருக்கும் கடைக்கும் எதிராக பௌத்த பிக்குகளின் குழுவொன்று ஓர் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கிறது.

**9 மே 2014:** பிள்ளையை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்படுபவர் (உரிமையாளரின் சகோதரர்) பணிபுரியும் ஆடம்பரக் கடைக்கு அதிகாலையில் தீவைக்கப்படுகிறது. அளுத்கமவில் பதற்றம் அதிகரிக்கிறது.

**12 ஜூன் 2014:** வண. அயகம சமித்தவின் சாரதிக்கும் தர்கா நகரின் இரண்டு முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையில் ஒரு வாய்த்தர்க்கம் ஒரு போயா தினத்தில் இடம்பெறுகிறது. (சம்பவத்துக்குப் பின்னர் டெய்லி மிரரின் ஒரு நேர்காணலில், பாதுகாப்பு செயலாளர்

குறிப்பிடுகையில் அவ்விடம் பதற்றமான இடம் எனத் தான் ஏற்கனவே அறிந்திருந்தால் சம்பவம் குறித்து அறியவந்தபோது உடனடியாக அது பரவுவதைத் தடுப்பதற்காக அப்பகுதிக்கு பொலிஸ் மாஅதிபரை அனுப்பி வைத்ததாகக் குறிப்பிடுகிறார்.)

**13 ஜூன் 2014:** ஜும்மா தொழுகையின் பிற்பாடு அப்பகுதியில் இடம்பெற வாய்ப்புள்ள வன்முறை தொடர்பாக அளுத்கம பள்ளிவாசல் குழுவுக்கும் பொலிசாருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. ஒழுங்கான முறையில் ஜும்மா தொழுகைக்குப் பிற்பாடு மக்களைக் கலைந்து செல்லுமாறு முஸ்லிம்கள் தூ ண்டுகின்றனர். முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல கடைகள் மற்றும் ஒரு சிங்களவருக்குச் சொந்தமான கடை என்பன அளுத்கம மற்றும் தர்கா நகரில் கல்லெறிக்கு உள்ளாகின்றன. பொது பல சேனாவின் முகநூல் பக்கத்தில் பொதுபலசேன பிக்கு வண. குலபொட அத்த ஞானசாரவினை மையப்படுத்தி ஜூன் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஒரு கூட்டம் தொடர்பாக அறிவிப்பு வருகிறது.

**15 ஜூன் 2014:** முஸ்லிம் சிவில் சமூக தூதுக்குழுவானது ஷிராஸ் நூ ர்டீன் ஆல் ஒழுங்கமைக்கப்பட்டு அளுத்கமவில் பொலிஸ் மாஅதிபரைச் சந்திக்கின்றது. பொது பல சேனாவின் கூட்டம் நடைபெற்றால் வன்முறை வெடிக்கக்கூடிய சாத்தியம் குறித்து அவர்கள் தமது அக்கறைகளை வெளிப்படுத்தினர். பெருமளவிலான அதிரடிப்படை மற்றும் பொலிஸ் பிரசன்னத்தினால் பாதுகாப்பு வழங்கப்படும் என தூ துக் குழுவிடம் உறுதியளிக்கப்படுகிறது.

- **பி.ப. 3.00 -** வன்முறை ஆலோசனைகள் கலக்கப்பட்ட இனவாதப் பேச்சுடன் அளுத்கம நகரில் பொதுபலசேனவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் இடம்பெறுகிறது.

- **மாலை 5.00 -** கூட்டம் கலைந்ததும் அவர்கள் தர்கா நகரின் நடுவில் உள்ள பத்திராஜகொட நோக்கிச் செல்கின்றனர்.

அவர்கள் அவ்வாறு செல்லும் வழியில் பள்ளிவாசலுக்கு அண்மையாக வீதிவழியே கூடியிருந்த முஸ்லிம்களின் பெரும் கூட்டத்தினைக் கடந்து செல்கின்றனர்.

- **மாலை 5.30** - கூட்டத்தினரால் கல்லெறி இடம்பெறுகிறது. ஊர்வலத்தில் உள்ள சிங்களவர்களும் தர்கா நகரின் பெரிய பள்ளிவாசலுக்கு வெளியே உள்ள முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் கல்லெறிகின்றனர். முதற் கல்லை எறிந்தவர் யார் என்பது தொடர்பான பிணக்கு தொடர்கிறது. கூட்டத்தினரைக் கலைப்பதற்காக பொலிசார் கண்ணீர்ப்புகையை பயன்படுத்துகின்றனர்.

- **மாலை 6.30** – பொலிசார் ஊடரங்குச் சட்டத்தை பிறப்பிக்கின்றனர்.

- **மாலை 6.45** - "எல்லைப் பிரதேசங்களில்" தாக்குதல்கள் ஆரம்பிக்கின்றன. காடையர்கள் ஆயுதம் தாங்கியவர்களாகவும் ஒழுங்கமைக்கப்பட்டவர்களாகவும் சில சமயங்களில் போதைப் பொருள் ஊட்டப்பட்டதாகவும் இருந்ததாக பல நேரில் கண்டோர் தெரிவிக்கின்றனர். வன்முறைக்குப் பின்னர் கைது செய்யப்பட்டவர்களுள் போதையிலிருந்த இரண்டு பௌத்த பிக்குகளும் உள்ளடங்குவதை பொலிசார் உறுதிப்படுத்தியதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.[2] தாக்குதல்கள் அதிகாரிகொடவில் (முஸ்லிம் வீடுகள்) ஆரம்பித்தன. பத்திராஜகொட (சிங்கள வீடுகள்), சீனவத்த (முஸ்லிம் வீடுகள் மற்றும் கடைகள்) அத்துடன் புதிய வீதி (முஸ்லிம் வீடுகள்), தர்கா நகரத்திலும் அளுத்கம நகரத்திலும் (முஸ்லிம் வீடுகள்).

---

2 The Island,19th June 2014, p. 1தடுப்பு நடவடிக்கை எடுக்கத் தவறியமை குறித்து Dew கேள்வி எழுப்புகிறார்.

அதிகாரிகொடயிலும் சீனவத்தவிலும் காடையர்களுக்கு எதிராக ஒரு தற்பாதுகாப்பை முஸ்லிம்கள் மேற்கொண்டனர். இராணுவ வீதியில் தமது வீட்டுக்கு வெளியே காடையர்களை அனுப்ப முயற்சித்த இரண்டு முஸ்லிம் ஆண்களுக்கும் காடையர்களுக்குமிடையில் ஒரு மோதல் இடம்பெற்றதாக ஓர் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

- **இரவு 8.00** - வெலிபிற்றியவிலுள்ள பள்ளிவாசலுக்கு அண்மையில் காடையர்கள் காணப்பட்டனர். ஆனால் அவர்கள் உடனடியாகக் கலைந்து சென்று விட்டனர்.

- **இரவு 8.00** - அதிகாரிகொடவில் முஸ்லிம் இளைஞர்கள் எதிர்ப்பு நடவடிக்கையாக சிங்கள காடையர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர். ஒரு சிங்கள வீடும் தாக்கப்பட்டது.

- **இரவு 8.00** - (தெஹிவளை) இராணுவப் புலனாய்வுப் பிரிவுடனான சந்திப்புக்கான ஓர் அழைப்பை முஸ்லிம் சமூகம் விடுத்தது. வன்முறையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்களுக்கு உறுதி அளிக்கப்படுகிறது. பின்பு காடையர்கள் மிகவும் பலமாக இருப்பதாகவும், அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு தம்மிடம் பலம் இல்லையெனவும் கூறி தமது பொறுப்பில் இருந்து பாதுகாப்புப் படைகள் பின்வாங்கிக் கொண்டன.

- **இரவு 10.00** – ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளதாகவும், தகவல்களின்படி சாதாரண நிலை நிலைநாட்டப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹணவினை ஆதாரப்படுத்தி சிரச பிரதான நேரச் செய்தி தெரிவிக்கிறது.”

- **இரவு 11.00 –** அளுத்கமவில் இருந்து திரும்பிவரும் கூட்டத்தினர் அம்பேபிற்றிய மற்றும் பேருவளையில் உள்ள கடைகள் மற்றும் வீடுகள் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.

- **இரவு 11.00 -** வெலிப்பிற்றய வீதியில் பெருமளவிலான காடையர்கள் ஒன்றுகூடுகின்றனர். ஆண்கள் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் பாதுகாப்புக்காக பள்ளிவாசலில் ஒன்று கூடுகின்றனர். காடையர்கள் முன்னேறி வருவதை பொதுமக்கள் தடுக்க முயற்சிக்கின்றனர். இரு குழுக்களுக்கும் இடையில் ஒன்றரை மணித்தியாலமாக மோதல் இடம்பெறுகிறது.

- **அதிகாலை 12.45 -** சூட்டுச் சப்தங்கள் கேட்கின்றன. காயப்பட்டவர்கள் வெலிப்பிற்றிய பள்ளிவாசலுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர்.

- காடையர்கள் நகரத்தில் நுழையாமல் வெலிப்பிற்றிய கிராமத்தை விட்டுக் கலைகின்றனர்.

- **அதிகாலை 1.30** - காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு வெலிப்பிற்றியவுக்கு பொலிஸ் ஜீப்வண்டிகள் வருகின்றன.

**16 ஜூன் 2014:** பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் தொடர்கிறது.

-**மு.ப 9.30 -** வன்முறையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்ட ஏற்பாடுகளைக் கலந்துரையாட களுத்துறைக் கச்சேரியில் கூட்டம் இடம்பெறுகிறது. வண. ஞானசார தேரரும் கூட்டத்தில் பங்குபற்றுகிறார். நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு கிழக்கில் இருந்து துருப்புக்களைக் கொண்டுவர ஆலோசிக்கப்படுகிறது. கைது

செய்யப்பட்ட 11 பேரில் 7 பேர் விடுவிக்கப்பட வேண்டுமென பொது பல சேனா வேண்டுகோள் விடுக்கின்றது. பொலிஸ் மாஅதிபர் மாவனல்லையில் கூட்டம் நடத்துவதை நிறுத்துவது என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் பொலிஸ் மா அதிபர் சம்மதிக்கிறார். பிக்கு கொல்லப்பட்ட வதந்தியானது உண்மையல்ல என அறிக்கை விடுக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் முஸ்லிம் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

- **மு.ப.11.30** - பேருவளையில் கடை எரிக்கப்படுகிறது.
- **பி.ப. 2.00** - (அண்ணளவாக)- கொழும்பில் இருந்து தர்கா நகருக்குள் நோயாளர் காவு வாகனம் நுழைகிறது. காடையர்கள் இன்னும் சூழ்ந்துள்ளனர்.
- **மாலை 5.00** - நோயாளர் காவு வாகனம் தர்கா நகரை விட்டுச் செல்ல முயற்சிக்கிறது. அது பிரதான வீதியை அணுகும்பொழுது காடையர்களால் தாக்கப்படுகிறது.
- **இரவு 7.00** - நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், வன்முறையில் எந்தப் பிக்குவும் உயிர் இழக்கவில்லையெனவும் பத்திரிகை மாநாட்டில் பொலிஸ் மாஅதிபர் குறிப்பிடுகிறார்.
- **இரவு 11.30** - வெலிப்பன்னவில் பண்ணையொன்று தாக்கப்படுகிறது.
- **இரவு 11.45** - வெலிப்பன்ன நகரம் தாக்கப்படுகிறது.

மேற்படி நேர ஒழுங்கானது மிஹிரிப்பன்ன, துந்துவ மற்றும் மத்துகம போன்ற இடங்களில் இடம்பெற்ற தாக்குதல்களையோ ஜூன் 15 இல் அறிக்கையிடப்பட்டவாறு நளீமிய்யா கலாபீடத்தில் பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா அடைத்து வைக்கப்பட்டதையோ உள்ளடக்கவில்லை.[3]

---

3 பார்க்க http://dbsjeyaraj.com/dbsj/archives/30652

# அத்தியாயம் II

## பொது பல சேனா

**பின்புலம்:**

ஜூன் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் இடம்பெற்ற நிகழ்வுகள் பொதுபலசேனவினாலும் அதன் ஆதரவுக் குழுக்களினாலும் யுத்தத்திற்குப் பிந்திய ஆண்டுகளில் வெற்றிகரமாக கொண்டு செல்லப்பட்ட முஸ்லிம் எதிர்ப்பு வெறுப்பு உணர்வலைகளில் இருந்து தனித்த ஒன்றாகக் கருதப்பட முடியாதவை. அத்தியாயம் இரண்டு சிங்கள பௌத்த தேசியவாதத்தின் புதிய யுத்தத்திற்குப் பிந்திய வெற்றிகரமான நிலையின் மற்றுமொரு ஏற்ற இறக்க தந்திரோபாயரீதியில் அவசியமான குழுவினர்களாக முஸ்லிம்களை பொதுபலசேன சட்டகப்படுத்திக் கொண்ட முறை குறித்து கலந்துரையாடுகிறது.

### இலங்கையின் வரலாற்று விபரிப்பில் ஒரு செயற்பாட்டாளராகிய பௌத்த பிக்கு

இலங்கையில் பௌத்த பிக்குகள் பௌத்தர்களால் கௌதம புத்தரின் போதனைகளை பாதுகாப்பவர்களாகவும் பரப்புபவர்களாகவும் மதிக்கப்படுகின்றனர். சில பிக்குகள் வரலாறு பூராகவும் இலங்கையின் அரசியல் பிரக்ஞையை உருவகப்படுத்துவதில் செல்வாக்கு செலுத்துவதில் மரியாதையான இந்த நிலையினைப் பயன்படுத்தியுள்ளனர்.

சங்க சமூகமானது அவர்களது பிழைப்புக்காக முடியாட்சியின் ஆதரவை நாடியிருந்தது. இலங்கையின் காலனித்துவத்திற்கு முந்திய வரலாற்றில் சிறந்த வரலாற்று பாகமாகிய மகாவம்சமானது பிக்குவின்

பார்வையில் இருந்ததான விபரிப்பு சமர்ப்பிப்பாக இருந்தது.[4] திசாரணி குணசேகர எழுதுவதின் பிரகாரம் மகாவம்சமானது சிங்கள பொதுஉணர்வை அமைப்பதுடன் மற்றும் சாராசரி சிங்களவர்கள் அறநெறி நோக்கை விஸ்தரிப்பதோடு அல்லாமல் சிங்கள பௌத்தத்தின் நூலின் வகிபங்கையும் ஆற்றுகிறது.[5] அவர் எழுதுவதின் பிரகாரம் எல்லாளனுக்கு எதிரான தனது யுத்தத்தில் மில்லியன் கணக்கானோரை கொலை செய்தது மீது வருந்தியழுத துட்டகைமுனு அரசனை ஆறுதல்படுத்துவதற்காக வந்த பிக்குகள் குழுவினர் தொடர்பான மகாவம்ச விபரிப்புக்களை அவர் இந்த வார்த்தைகளால் எடுத்தாளுகிறார். மோட்சத்திற்கு செல்லும் பாதைகளில் உண்மையில் இந்த செயலில் இருந்து எந்த தடையும் எழவில்லை. உம்மால் இங்கே ஒன்றரை மனித உயிர்களே வீழ்த்தப்பட்டுள்ளன. ஆண்களின் கடவுளே ஒருவர் மூன்று அகதிகள் வரைக்கும் வந்துள்ளார். மற்றையவர் தானாக ஐந்து கட்டளைகளை எடுத்துச் சென்றுள்ளார். மில்லியன் கணக்கானோரின் கொலையை முக்கியமற்றவைகயாகக் குறைப்பதினால் ஏனையோரை ஏளனப்படுத்தும் ஒரு வரலாற்று அடையாளமாக மாத்திரம் இராது. (மகாவம்ச வரலாற்றில் உருவாக்கப்பட்டவாறாக) சிங்கள பௌத்த தேசியவாத எண்ணமாகிய வெளியார் எனக் கருதப்பட்டவர்களுக்கு எதிரான வன்முறையை நியாயப்படுத்த வரலாற்று ரீதியாக இது முயற்சிக்கிறது.

காலனித்துவ யுகத்தின்பொழுது பௌத்த பிக்குகள் ஆதிக்கத்திலிருந்து சுய நிர்ணயத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மிகவும் துடிப்பான வகிபங்கை கைக்கொண்டிருந்தனர்.[6] பேச்சுத்திறன் வாய்ந்த அநாகரிக தர்மபால உள் ஏற்றுக்கொள்ளாத சிங்கள பௌத்த அடையாளத்துவத்தைக் எடுத்துக்காட்டி காலனித்துவவாதிகளுக்கு

4 James J. Hughes, “Buddhist Monks and Politics in Sri Lanka”, Presented at Spring Institute for Social Science Research University of Chicago in1987.

5 Thisaranee Gunesekera, ‘Occupied by Extremism’, LankaNewspapers.com, 29 March 2009.

6 மேலுள்ளவாறாக

எதிரான பிரச்சாரத்தை எடுத்துச் சென்றதுடன் இலங்கைக்குள்ளான சிறுபான்மையினரையும் அந்நியப்படுத்தினார்.[7] 1956 இல் S.W.R.D. பண்டாரநாயக்காவின் ஐக்கிய மக்கள் முன்னணியானது சங்க, வேத, குரு, கோவி, கம்கங்கரு ஆகிய இந்த ஐந்து மக்கள் பிரிவுகளுக்கும் பிரதான அரசியல் ஓட்டத்தில் சிங்கள பௌத்த மீள் எழுச்சியை ஊக்குவிப்பதற்கு அழைப்பு விடுத்தது. தேர்தலில் பண்டாரநாயக்கவின் வெற்றியானது இந்த அரும்பும் சிங்கள பௌத்த மரபிற்கு அரச அங்கீகாரத்தின் முத்திரை குத்தியது. அதிலிருந்து குணதாச அமரசேகர மற்றும் நளின் டி சில்வா போன்ற பத்திஜீவிகளும் இன்னும் பலரும் சிங்கள பௌத்த தேசியவாத அரசானது ஒரு புராதன நாகரிக அத்திவாரத்தைக் கொண்டுள்ள ஒன்றின் இருப்பு என மீள அழுத்தியுரைத்து வந்தனர்.[8]

2001 இல் வண. பத்தேகம சமித்த தேரர் இலங்கை வரலாற்றில் பாராளுமன்றத்துக்கு தெரிவான முதல் பிக்குவாக விளங்கினார். இலங்கைப் பாராளுமன்றத்திற்கு ஒரு தேசிய மயப்பட்ட மேடையில் சிங்கள பௌத்த அடையாளத்துவத்தை முன்கொண்டு வருவதில் சங்க சமூகத்தின் ஈடுபாட்டின் ஒரு புதிய பக்கமாக 2004 ஆம் ஆண்டு தேர்தலில் 200 பிக்குகளை ஜாதிக ஹெல உறுமய களமிறக்கியதன் ஊடாக பாராளுமன்றத்தில் 9 இருக்கைகளை வெற்றி கொள்ளுவதில் வெற்றியடைந்திருந்தது.[9] ஜாதிக ஹெல உறுமயவுடன் கலகொட அத்த ஞானசார தனது திறன்களை தீட்டிக்கொண்டதுடன் கட்சியானது போதிய போராட்டத்தன்மை வாய்ந்ததல்ல என்ற அடிப்படையில் கட்சியை விட்டு புறப்படுவதற்கு முன்பதாக அதன் ஒருங்கிணைப்பாளராகவும் அவர் பணியாற்றியிருந்தார்.[10]

---

7 A. R. M. Imtiyaz “Politicization of Buddhism and Electoral Politics in Sri Lanka” Ali Riaz, Religion and Politics in South Asia (London: Routlege, 2010).

8 Jude Lal Fernando, ‘Religion, Conflict and Peace in Sri Lanka: The Politics of Interpretation of Nationhoods’, LIT Berlin (2013), p.115.

9 Mahinda Deegalle, “Politics of the Jathika Hela Urumaya Monks: Buddhism and Ethnicity in Contemporary Sri Lanka”, Contemporary Buddhism 5 (2) 2004: 83-103.

10 பார்க்க “GnanasaraThero is Freely Roaming the Streets and Challenging Police Dare Arrest Him”, Tamils Guide, 16 July 2014.

## பொது பல சேனாவின் உருவாக்கம்

பொது பல சேனாவானது 2012 மே 07 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. அதன் நிறைவேற்றுக் குழுவில் பொது பல சேனாவின் பிரதம கர்த்தா பிரதம தலைவராக வண. கிரம விமலஜோதி தேரர், பொது பல சேனா செயலாளராக வண. கலஹகொடத்த ஞானசார தேரர் மற்றும் ஏனைய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக வண. ஹப்புத்தலே பஹ்கசார தேதர், வண. விஹாரன்தெனியா நந்த தேரர் மற்றும் டிலந்த விதானகே என்போர் பொது உறுப்பினராக இருந்தனர்.[11]

ஆரம்பிப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாகவே 2011 ஏப்ரலில் பொதுபலசேனவின் மூன்று உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட நோர்வேக்கான உலகப்பார்வை சர்வதேச தாபனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு சுற்றுப்பயணம் குறித்து அதீத எண்ணப்பாடுகள் உள்ளன.[12] நோர்வே அரசாங்கத்திடமிருந்து ஏதாவது நிதியீட்டங்களை பெற்றுக்கொள்வது குறித்து பொது பல சேனா தொடர்ச்சியாக மறுத்து வந்துள்ளது. 2014 ஜூன் 20 ஆம் திகதியை அண்மித்த அறிக்கை ஒன்றில் நோர்வே அரசாங்கமானது[13] பொதுபலசேனவிற்கு எந்த விதமான நிதி மற்றும் அற மற்றும் எண்ணக்கருத்து ஆதரவுகளை வழங்குவதை மறுத்துக் குறிப்பிட்டதுள்ளதுடன் இலங்கையிலோ அல்லது வேறு நாடுகளிலோ சமய உறவுகள் மற்றும் அமைதியான சகவாழ்வுக்கு எதிராக செயற்படுவதாகக் காணப்படும் எந்த நிறுவனத்திற்கும் எந்த சூழ்நிலையிலும் ஆதரவளிக்காது எனத் தெரிவித்துள்ளது.[14]

2012 ஜூலை 28 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பொது பல சேனாவின் முதலாவது தேசிய

---

11 பார்க்க "Genesis of Bodu Bala Sena", Asian Tribune, 7 April 2013

12 பார்க்க "Making Sense of BoduBalaSena", The Island, 25 April 2014.

13 பார்க்குக "Genesis of Bodu Bala Sena", Asian Tribune, 7 April 2013

14 பொது பல சேனவுக்கும் நோர்வேக்குமிடையில் உள்ளதாக சொல்லப்படும் தொடர்பு பற்றிய கூற்றைப் பார்க்க www.norway.lk. 2014 ஜூன் 20 இல் காணப்பட்டவாறாக.

மாநாட்டில் 1200 க்கு மேற்பட்ட பிக்குகளும் 300 பிக்குணிகளும் பங்குபற்றியிருந்தனர்.[15] பொது பல சேனாவின் தலைவர் மற்றும் நெதிமால பௌத்த கலாசார மத்திய நிலையத்தின் பணிப்பாளர் வண. விமல ஜோதி தேரர் அம்மாநாட்டில் ஐந்து தீர்மானங்களை நிறைவேற்றினார். அத் தீர்மானங்களில் முதலாவது, சிங்கள பௌத்த சனத்தொகையின் குறைந்து செல்லும் வீதம் குறித்து பாரதூரமான கவனிப்பை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் குடும்பத் திட்ட சத்திர சிகிச்சைகளுக்கு ஒரு முடிவைக் காணுதல்; அவ்வாறான சத்திர சிகிச்சைகளுக்கு உட்படும் ஆட்களுக்கும் வைத்தியர்களுக்கும் அரசாங்கத்தால் செய்யப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கும் வேண்டி நின்றது. இரண்டாவதாக உள்ளூர் பௌத்தர்களின் உரிமைகளையும் அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும் காப்பதற்கும் போதியதற்றதாக உள்ள உரோம, போர்த்துக்கேய ஆங்கிலச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட தற்போதுள்ள சட்ட முறைமைகளைத் திருத்துவதற்கும் தீர்மானித்திருந்தது. மூன்றாவதாக சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு கல்வி முறைமையின் மறுசீரமைப்பிற்கும் அது அழைப்பு விடுத்தது. நான்காவது தீர்மானமாக 1959 ஆம் ஆண்டு நவம்பர் மாத பௌத்த சாசன ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தது. ஐந்தாவது தீர்மானமாக பௌத்தம் தொடர்பான புத்தகங்கள் மற்றும் ஏனைய பண்டங்களின் உள்ளடக்கத்தை மேற்பார்வை செய்வதற்கும் கொள்கைகளில் மதக் கொள்கைகளை தற்போதுள்ள சட்ட முறைமைகளைத் திருத்துவதற்கும் அது தீர்மானித்திருந்தது.[16]

## பொது பல சேனா குரல் பெறுகிறது

உள்ளூரிலும் உலகளாவிய ரீதியிலும் இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிரான பல்வேறு போராட்டங்களில் பொது பல சேனா ஏற்பாடுகளில்

---

[15] பிறப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தடைசெய்யப்படுவதை பௌத்த குருக்கள் விரும்புகின்றனர். பார்க்க The Island, 29 July 2012

[16] மேலுள்ளவாறாக

ஈடுபட்டு வந்தததது. முஜாஹிதீன் பயங்கரவாதக் குழுவினால் புத்தகாயவின் அழிப்புக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டனர்.[17] பொது பல சேனாவினால் உருவாக்கப்பட்ட பதற்றமான சம்பவங்களில் மிகவும் ஆரம்பத்தில் இடம்பெற்ற ஒன்றாக இருப்பது 2013 ஜனவரியில் கண்டிக்கு அண்மையிலுள்ள பூவெலிக்கட என்ற நகரில் ஒரு பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த சிங்கள இளைஞர் குழு, வீதியை ஒரு வான் மறித்து இருப்பதாகக் குற்றம்சாட்டி தொடங்கிய விடயமானது ஒரு மோதலை ஏற்படுத்திப் பல முஸ்லிம்கள் காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையாகும்.[18] முஸ்லிம்களுக்கு எதிரான சுவரொட்டிகள் நகரம் முழுவதும் ஒட்டப்பட்டன. பௌத்த கொடிகள் முஸ்லிம் வீடுகள் மற்றும் வியாபாரத் தலங்களில் கட்டாயமாக வைக்கப்பட்டன. அத்துடன் பௌத்த மத பிரசங்கங்களுடன் கூடிய ஒலிபெருக்கிகள் முஸ்லிம் வியாபாரக் கட்டிடங்களில் கட்டப்பட்டன. விசேட அதிரடிப்படை (STF) குற்றமிழைத்தவர்களை தடுக்கவோ தண்டிக்கவோ முடியவில்லை.[19]

2012 ஏப்ரலில் தம்புள்ளை நகரத்தில் ஒரு பள்ளிவாசல் மீது ஒரு நெருப்புக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து பிக்குகள் உட்பட 2000 பௌத்தர்கள் பள்ளிவாசலானது சட்டத்திற்கு முரணாகக் கட்டப்பட்டது என வாதாடி அந்தப் பள்ளிவாசலை இடிக்குமாறு கோரி ஒன்று கூடினர்.[20] பிரதமரும் பள்ளிவாசலை இடம் மாற்றுவதற்கு கட்டளையிட்ட பொழுது[21] கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தாக்குதலுக்கு எதிரான ஓர் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

---

17 பொது பல சேனா எதிர்ப்பு டெய்லிமிரர் 25 ஒக்ரோபர் 2012

18 பார்க்க சிங்கள பௌத்த இனவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டுகின்றனர். பார்க்க உலக சமூக உடமை இணையத்தளம் 9 ஜனவரி 2013

19 மேலுள்ளவாறாக

20 பார்க்க தம்புள்ளை பள்ளிவாசல் தொடர்பாக இலங்கை முஸ்லிம்கள் வேலைநிறுத்தம் பிபிசி 2014 26 ஏப்ரல்.

21 மேலுள்ளவாறாக.

ஞானசார தேரர் கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் தீவிரவாதிகள் கிழக்கில் தனியான அரசை நிறுவ முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார்.[22]

2012 இன் முடிவில் பொபசே தன்னை ஒரு உத்தியோகப்பற்றற்ற ஒரு பொலிஸ்படையாக இனம்காட்டியிருந்தது.[23] மேலும் 2013 ஜனவரி 21ஆம் திகதி பொது பல சேனா இலங்கை சட்டக் கல்லூரிக்குள் நுழைந்து முஸ்லிம் மாணவர்களுக்கு சார்பாக பரீட்சை முடிவுகள் மாற்றப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தி கலகத்தில் ஈடுபட்டது.[24] இவ்விடயத்தில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் உடந்தையாக இருந்தார் என அது குற்றம் சாட்டியது.[25] 2013 ஜனவரி 21 ஆம் திகதி ஒரு 'பௌத்த குடிபானக் கடையை நடத்துவதாகக் குற்றம் சாட்டி பேருவளையில் உள்ள ஒரு ஹோட்டலில் அவர்கள் சோதனை நடத்தினர்.[26]
கிழக்கில் தீவிரவாதம் தொடர்பான பொது பல சேனாவின் மேற்படி குற்றச்சாட்டுக்களோ அல்லது சட்டபீட உள்நுழைவு பரீட்சை தொடர்பான ஒழுங்கீனங்களோ அல்லது பௌத்த குடிபான நிலையம் இருப்பது மீதான குற்றச்சாட்டுக்களோ இவை எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

## அரசியல் தலைவர்களுடனான பொது பல சேனாவின் ஈடுபாடு

பொது பல சேனாவுக்கான ஒரு கடிதத்தில், மல்வத்தை மகா நாயக்க அதி வணக்கத்திற்குரிய திபுட்டுவாவ சித்தார்த்த சுமங்கல

---

22 மேலுள்ளவாறாக, கிழக்கு மாகாண அம்பாறையில் இனம்காணப்படாத குழுவினரால் பௌத்த கோவில் ஒன்று அழிக்கப்பட்டதை தொடர்ந்து 2012 நவம்பரில் கலகொடத்த ஞானசார தேரர் இந்தக் குறிப்புக்களை செய்திருந்தார்.

23 மேலுள்ளவாறாக.

24 பார்க்க "சட்டக்கல்லூரி அனுமதிகள் ஒரு வாரத்தால் தாமதமாக்கப்பட்டன". ஹிரு செய்திகள் 8 ஜனவரி 2013

25 பார்க்க "முஸ்லிம் மாணவர்கள் தமது திறமைகளினால் சித்தியடைகின்றனர்: ஹகீம்." லங்கா சீ நிவுஸ் 2012 டிசம்பர் 20, இலங்கை சட்டக்கல்லூரியால் மேற்கொள்ளப்படும் கல்விக்கொள்கைகள், பரீட்சைகள், பரீட்சைத்தாள்கள் தயாரிப்பதில் தனக்கு எந்த தொடர்பும் இல்லை என அமைச்சர் குறிப்பிட்டார்.

26 பார்க்க "இரவுணவு நிகழ்வு தொடர்பாக ஹோட்டல் முகாமையாளர் கைது செய்யப்பட்டார்" சண்டே ரைம்ஸ் 27 ஜனவரி 2013

தேரர் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக தனது ஆசியை வழங்கி செய்தி அனுப்பியிருந்தார். அதிகாரிகள் தமது கண்களைத் திறந்து கொள்வதற்கான தமது நேரம் வந்துள்ளதாகவும், சிங்கள சனத்தொகை மற்றும் பௌத்த வணக்கஸ்தலங்களில் துரிதமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை சுட்டிக்காட்டும் அண்மைய புள்ளிவிபர மற்றும் குடித்தொகை புள்ளிவிபரங்களை பார்ப்பதற்கு அதிகாரிகள் கண்களைத் திறக்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார்.[27] 2012 டிசம்பர் 25 ஆம் திகதி அவர்கள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் ஒரு கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.[28] ஒரு மாதத்திற்கு பின்பு 2013 ஜனவரி 28 ஆம் திகதி அவர்கள் அவரது சகோதரரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தனர்.[29]

பொது பல சேனாவினால் முன்னெடுக்கப்படும் முஸ்லிம் எதிர்ப்புக்களை வெட்டி விடுவதற்கான போதிய ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளாததை குற்றம் சாட்டும் அதேவேளை, கேகாலை பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் அவர்களின்

---

[27] பார்க்க "மல்வத்த மகாநாயக்க தேரர் பொது பல சேனாவினை வரவேற்கிறார்". இலங்கையில் அமைதியான சகவாழ்வுக்கான சபை 2013 ஜனவரி 1 ஆம் திகதிய கடிதம் பின்வருமாறு கூறுகிறது. கிரம விமலஜோதி நாயக்க தவிர மற்றும் கல்கொடத்த ஞனசார என்போரின் தலைமையில் பிக்குககளின் ஒரு குழுவினரால் எடுக்கப்படும் ஒரு பாதையானது தேசியத்தை விழிப்பூட்டுவதற்கான உரிய நேரத்திலான நடவடிக்கை. சிங்கள பௌத்த மதகுருக்களும் பொதுநிலையினரும் மற்றும் தேரவாத சம்புத்த சசங்க தேசிய மற்றும் சர்வதேச முன்னணிகளிடமிருந்து சவால்களை எதிர்கொண்டுள்ளனர் என்பது உண்மையாகும். பௌத்தர்களின் உரிமையை எழுப்புவதற்கான எல்லா இயலுமைகளையும் பொது பல சேனா கொண்டுள்ளதுடன் முனைப்பாக்கப்படாத மனங்களிடையே பிக்குகள் தொடர்பாக உள்ள பிழையான கருத்துக்களையும் நீக்குவதற்குவதற்கான சவாலும் அவர்களிடம் உள்ளது.

[28] பார்க்க. சிங்கள பௌத்த இனவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டுகின்றனர். உலக சமூக உடமை இணையத்தளம் 9 ஜனவரி 2013

[29] பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஷபக்ஷ, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தன. பெற்றோலிய வளங்கள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் பிரதியமைச்சர் M.K.A.D.S. குணவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் லலித்த வீரதுங்க என்போர் அதில் பங்குபற்றியிருந்தனர். பார்க்க. எல்லா சனசமூகங்களினதும் உரிமைகளை மதிப்பதற்கான தேவைக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ அழுத்தம் கொடுக்கிறார். ஐலண்ட் 28 ஜனவரி 2013

தலைமையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு தூதுக்குழு பொது பல சேனாவின் நான்கு பிக்குகளைச் சந்தித்தது.[30] 2013 பெப்ரவரியில் இராணுவத்தினர் மற்றும் பொலிசாருடன் கூட்டங்களை நடத்திய பொது பல சேனா, தீவிரவாதக் குழுக்கள் நாட்டில் இயங்குவதாக எச்சரிக்கை விடுத்தது.[31] பிக்குகளுக்கும் பொதுமக்களுக்குமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட, காலி வஞ்சவல பிலனவில் அமைந்துள்ள பொது பல சேனாவின் கலாசார மற்றும் பயிற்சி நிலையமாகிய “மெத் செவன”வினை 2013 மார்ச் 9 ஆம் திகதி பாதுகாப்பு செயலாளர் திறந்து வைத்தார்.[32] மெத் செவனவின் தலைவராகிய வண. விஜித தேரர் அவர்கள் பௌத்த சாசனத்தின் முன்னேற்றத்தை நோக்கிய பொது பல சேனாவின் சேவைகளை பாதுகாப்பு செயலாளர் பாராட்டியிருப்பதாக சொன்னதாக அறிக்கையிடப்படுகிறது.[33] இந்த நிகழ்வில் பாதுகாப்பு செயலாளரின் பங்குபற்றுகையானது பொது பல சேனவானது ஒரு கருவி; அல்லது ஆட்சியாளரால் அமைக்கப்பட்டது என்ற விமர்சகர்களின் மதிப்பீட்டை உறுதிப்படுத்துவதாகக் காணப்பட்டது.

## ‘ஹலால் வேண்டாம்’ என பொது பல சேனா கூறுகிறது

2013 ஜனவரி 02 ஆம் திகதி பொபசே ஹலாலைத் தடைசெய்யும் ஒரு பிரசாரத்தை நடத்தியது.[34] 2013 பெப்ரவரி 17 ஆம் திகதி மகரகம பிரகடனத்தை நிறைவேற்றியதுடன் பிரச்சாரம் உச்சத்தை அடைந்தது.[35] பிரகடனமானது 10 விடயங்களை உள்ளடக்கியிருந்தது. அவற்றில் ஒன்று ஹலால் சான்றுப்படுத்தல் மீதான தடையை விதிப்பதாகும்.

---

30 பார்க்க ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொது பல சேனா இழுபறியில்.

31 பார்க்க இராணுவம் சான்றுகளைக் கேட்கிறது.

32 பார்க்க. பொது பல சேனா மெத்செவனவினை கோத்தபாய ஆரம்பித்து வைக்கிறார்.

33 மேலுள்ளவாறாக

34 பார்க்க. இலங்கை பௌத்த இனவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டுகின்றனர்.

35 பார்க்க. பொதுபலசேனா ஹலால் சான்றிதழை தடைசெய்யவதற்கான காலக்கேடு அழிக்கிறது மிரர் 18 பெப்ரவரி 2013

பொது பல சேனா ஹலால் சான்றிதழை தடைசெய்வதற்கு 2013 மார்ச் 31 ஆம் திகதி வரையான காலக்கெடுவை அரசாங்கத்திற்கு தாம் கொடுப்பதாக ஹலால் தடுப்பு சுலோகங்களைத் தாங்கிய ஒரு கூட்டத்தினரிடம் தெரிவித்தது. அவர்களின் ஏனைய அக்கறைகளாக இருந்தவையாவன: இலங்கைப் பெண்களை மத்திய கிழக்கிற்கு அனுப்புதல், மத்திய கிழக்கு நிதிகள் ஊடாக பள்ளிவாசல்களைக் கட்டுதல், சிங்கள சனத்தொகை வளர்ச்சியைக் குறைவடையச் செய்வதாக அவர்கள் கருதும் சில பிறப்புக் கட்டுப்பாட்டு முறைகள், 'முக மூடித் திருடன்' (*gonibilla*) அலங்காரம் என அவர்கள் வர்ணிக்கும் முஸ்லிம் பெண்களின் உடை[36] என்பனவாகும்.

ஹலால் சான்றிதழுக்கு எதிரான பொது பல சேனாவின் செயற்பாட்டுக்கு பதிற்செயற்பாடு காட்டும் விதத்தில் பௌத்த மற்றும் இஸ்லாமிய மத குருமார்கள் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் 2013 மார்ச் 11 ஆம் திகதி சினமன் கிராண்ட் ஹோட்டலில் சந்தித்தனர்.[37] அகில இலங்கை ஜம்இய்யம்துல் உலமா சர்ச்சைக்குரிய ஹலால் இலச்சினையானது நுகர்வோர் உற்பத்திகளின்மீது கட்டாயமாக காட்சிப்படுத்தப்பட வேண்டிய தேவை இனியும் தேவைப்படுவதில்லையென அறிவித்தது.[38]

2013 மார்ச் 12 ஆம் திகதி பொது பல சேனா அதனை ஒரு தீர்வாக ஏற்க மறுத்தது. கூட்டத்திற்கு சமுகமளித்தவர்கள் மீது கண்டனம் தெரிவித்ததுடன் ஹலால் இலச்சினையின் தடையை முற்றுமுழுதாக தடைசெய்வதுதான் கிடைக்கக்கூடிய தீர்வு என அவர்கள்

---

36 பார்க்க. இது ஒரு சிங்கள நாடு சிங்கள அரசாங்கம் பொது பல சேனா டெய்லி FT, 18 பெப்ரவரி 2013

37 எண்ணெய் யுத்தத்தில் தோற்றுப்போதல்

38 மேலுள்ளவாறாக அறிக்கை மேலும் குறிப்பிடுவதாவது இலங்கை சம்மேளன தவிசாளர் முக்கியமான வரையில் விரைவாக சில்லறை விற்பனைகளுக்கு உற்பத்திகள் குற்றமிழைக்கும் இலச்சினை இல்லாது உற்பத்திகளை செய்யுமாறு அதன் உறுப்புரிமையாளர்களுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது. அதன் நிமித்தம் இதன் விடயம் அமைதிக்கு கொண்டுரவக்கூடியது என்பதுடன் இது தொடர்பாக உருவாக்கப்பட்ட பதற்றங்களும் செயல்விளைவுள்ள முறையில் மறைந்துவிடும். சிரேஷ்ட பௌத்த பிக்குகளாகிய பேராசியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் அடிபாடுகளைக் காட்டிலும் கலந்துரையாடல் ஊடாக சமயக் குழுக்களுக்கிடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்படக்கூடுமென இணக்கங்களை நிருபிப்பிப்புக்களாக வாழ்த்தியுள்ளார்.

வாதிட்டனர்.[39] எவ்வாறாயினும், 2013 மார்ச் 17 ஆம் திகதி கண்டி நகரத்தில் இடம்பெற்ற ஒரு ஊர்வலத்தில் உரையாற்றிய ஞானசார தேரர், ஹலால் விடயத்தில் தாம் வெற்றியடைந்து விட்டதாகக் குறிப்பிட்டதுடன், குருணாகல் பௌத்த ஆச்சிரம கட்டிடத்தொகுதியில் இருந்து ஒரு பள்ளிவாசலை அகற்றும் ஒரு பணியை இப்பொழுது எடுத்துள்ளதாக தெரிவித்தார்.[40] பின்பு பாணந்துறையில் ஹலால் பிரச்சினையை தீர்ப்பதாக உத்தரவாதத்தை தமக்கு பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளதாக பொது பல சேனா குறிப்பிட்டது.[41]

## பொது பல சேனாவும் வன்முறை விழிப்புணர்வு வாதமும்

முஸ்லிம்கள் மாத்திரம் பொது பல சேனாவுக்கு எதிரான கவலைகளை கொண்டுள்ள மதச் சிறுபான்மையினராக இருக்கவில்லை. 2013 மார்ச்சில் பொது பல சேனாவும் நூற்றுக்கணக்கான காடையர்களும் கண்டி அஸ்கிரியவிலுள் ஒரு கிறிஸ்தவ போதகரின் வீட்டைச் சூழ்ந்து கொண்டு வெளியில் ரயர்களைக் கொளுத்தி உள்ளே உள்ளவர்களுக்கு எதிராக தூஷண வார்த்தைகளைப் பயன்படுத்தி கூச்சலிட்டுள்ளனர். 2013 மார்ச் 24 ஆம் திகதி அவர்கள் தமது மாநாட்டை பாணந்துறையில் நடத்தியதுடன்[42] இலங்கை ஒரு பல்லின அல்லது பல்மத நாடு அல்ல எனவும்; ஆனால் சிங்கள பௌத்த நாடு எனவும் வாதிட்டனர். ஞானசார தேரர் உரையாற்றும் பொழுது தனது மக்கள் நாட்டில் செயற்படும் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களுக்கு எதிராக அணிதிரளத் தயாராக வேண்டுமெனத் தெரிவித்தார்.[43]

---

39 பார்க்க

40 இலங்கை பௌத்த தீவிரவாதிகள் குருணாகலையில் இருந்து முஸ்லிம் பள்ளிவாசலை அகற்றுவதற்கு சபதம் எடுக்கின்றனர். கொழும்பு பக்கம்18 மார்ச் 20133

41 இலங்கை பௌத்த தீவிரவாதிகள் குருணாகலையில் இருந்து முஸ்லிம் பள்ளிவாசலை அகற்றுவதற்கு சபதம் எடுக்கின்றனர். கொழும்பு பக்கம்18 மார்ச் 2013. பார்க்க - http://world-asia-21840600/. பார்க்க - “BBS insists Lanka not multiracial”, Colombo Gazette, 24 March 2013

42 பார்க்க - http://world-asia-21840600/.

43 பார்க்க - “BBS insists Lanka not multiracial”, Colombo Gazette, 24 March 2013

2013 மார்ச் 28 ஆம் திகதி Fashion Bug எனப்படும் முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான பிரபல்யமான ஆடையக் களஞ்சியம் தாக்கப்பட்டபொழுது முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்தது.[44] ஒரு மக்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கிச் சென்ற பௌத்த பிக்குகள் பின்னர் பெப்பிலியானவிலுள்ள களஞ்சியசாலைக்கு கற்களை வீசுவதையும் பொலிசார் அருகே நின்றபொழுதிலும் அவ்வாறு நடைபெறாது இருப்பதைத் தடுக்கத் தவறிவிடுவதையும் ஒளிக்காட்சிகள் காட்டுகின்றன.[45] சம்பவத்திற்கு முன்பாக பொது பல சேனா முஸ்லிம் கடைளை பகிஷ்கரிக்குமாறு மக்களைத் தூண்டும் வாசகங்ககளை பரப்புகிறது. அத்துடன் ஜாதிக ஹெல உறுமய 'முஸ்லிம் தீவிரவாதிகள் மறக்க முடியாத ஒரு பாடத்தை அவர்களுக்கு கற்பிப்பதற்கு சிங்கள பௌத்தர்கள் தீர்மானிக்க வேண்டும்' என்ற ஒரு கூற்றை வெளியிடுகிறது.[46] எவ்வாறாயினும், பொது பல சேனா தாக்குதலைக் கண்டித்ததுடன் அதனைப் பொறுப்பேற்க மறுத்தது.[47]

2013 ஆம் ஆண்டு 19 ஆம் திகதி பொது பல சேனாவிடம் கேள்விகளைத் தொடுக்கும் பௌத்தர்கள் என தம்மைத் தாமே அழைத்துக் கொள்ளும் ஒரு முகநூல் குழுவினால்[48] ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு அமைதியான மெழுகுதிரி விழிப்புணர்வு செயற்பாட்டை பொது பல சேனா குழப்பியது.[49]

---

44 பார்க்க - "Sri Lanka crowd attacks Muslim warehouse in Colombo", BBC, 29 March 2013.

45 மேலுள்ளவாறு The footage can be viewed at http://www.bbc.com/news/world-asia-21973292.

46 மேலுள்ளவாறு

47 பார்க்க "BBS condemns the attack" Daily Mirror, 29March 2013

48 பார்க்க On 'Nightclub Buddhists': The Disrupted Vigil", The Sunday Leader, 21 April 2013

49 மேலே உள்ளவாறாக சம்பவங்களின் பிற்பாடு டிலந்த விதானகே ஒரு குழப்பும் குற்றச்சாட்டாகிய இலங்கையின் தேசிய பாதீதத்தை திரித்த எல்ரிரிக்கு குரல் வழங்கிய போலிப் பௌத்தர்களைக் கைதுசெய் என ஊடகங்களுக்கான ஒரு எழுத்தினை சுற்றுச்செய்ததாக அறிக்கையிடப்பட்டது.

2013 ஜுலையில் மஹியங்கணையிலுள்ள ஒரு பள்ளிவாசல் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டபொழுது அங்கே வழிபாடு நடத்தியவர்கள் மீது பச்சை பன்றி இறைச்சியும் கற்களும் வீசப்பட்டன. அமைச்சர் ரவூப் ஹக்கீமும் பொது பல சேனாவுக்கு எதிரான விமர்சனத்தை வெளிப்படுத்தியிருந்தார்.[50] முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் ஒழுங்கமைக்கப்பட்டன எனவும் பொது பல சேனாவின் செயலாளர் நாயகம் வண. கலகொட அத்த ஞானசார தேரர் வெளிப்படையாகவே இப்பகுதியில் வெறுப்பு பிரசாரத்தை ஊக்குவிக்கிறார் எனவும் அவர் சுட்டிக்காட்டி மதத் தீவிரத்தை நோக்கிய அரசாங்கத்தின் முன்னெப்போதும் இல்லாத மனோபாவம் குறித்தும் அவர் அங்கலாய்த்துக் கொண்டார்.[51]

## 2014 உம் வரவிருக்கும் விடயங்களின் முன் அனுமானங்களும்

2014 ஆம் ஆண்டானது ஹிக்கடுவில் உள்ள தேவாலயங்களுக்கு எதிரான தாக்குதல் உட்பட பொது பல சேனாவின் வன்முறைப் போக்குகளைத் தொடர்ச்சியாகக் கண்டுள்ளது. பொது பல சேனாவும் ஆதரவாளர்களும் அப்பகுதியில் இரண்டு தேவாலயங்களை தாக்கினர். நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் அனுப்பப்பட்டிருந்த நிலையிலும் பெருந்தொகை சனக்கூட்டத்தை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை.[52] 2014 ஏப்ரல் 09 ஆம் திகதி ஞானசார தேரர் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் ஜாதிக பலசேன மற்றும் முஸ்லிம் சமயத் தலைவர்களினால்[53] ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு பத்திரிகையாளர் மாநாட்டிற்குள் நுழைந்தனர். பொது பல சேனாவின் பொதுச்

---

[50] பார்க்க. தாக்குதல்களுக்கு பின்பு மகியங்கணை பள்ளிவாசல் மூடப்பட்டது. வழிபடுவர்கள் மீது பச்சை பன்றி இறைச்சி மற்றும் கற்கள் வீசப்பட்டன. The Republic Square, 29 July 2013

[51] மேலுள்ளவாறு

[52] ஒளிப்படங்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளன https// www. youtube.com/ watch?v=c84C_m4kD6

[53] ஒளிப்படங்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளன https://www.youtube.com/ watch?v=LFSgzuNyBCA.

செயலாளர் அங்கிருந்தவர்களிடையே குரல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்து, முஸ்லிம்கள் தமது பிரச்சினைகளை பௌத்த குருக்களுடன்[54] பேசக்கூடது எனத் தெரிவிப்பதை ஒளிப்படங்கள் காட்டுகின்றன. மார்ச் மாதத்தில் புரட்டஸ்தாந்து மதகுருவும் அவரது மனைவியும் பொது பல சேனாவுக்குச் சொந்தமான பௌத்த பிக்குகள் தலைமையிலான சுமார் 250 காடையர்களினால் கண்டி அஸ்கிரியவில் தாக்குதலுக்கு உள்ளாகினர்.[55]

2014 ஜுன் 10 ஆம் திகதி அளுத்கம, பேருவளை சம்பவங்களுக்கு சற்று முன்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சட்ட மாஅதிபர் பாலித்த பெரணான்டோ அவர்களிடம் பொபசே வின் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டது. பொது பல சேனாவானது இந்தக் கடிதத்தைக் கண்டித்ததுடன் கடிதத்தின் உள்ளடக்கம் தொடர்பாக விவாதிக்க வருமாறு சட்டத்தரணிகள் சங்கத்திடம் சவால் விட்டது.[56] இன்று வரை சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வெறுப்புப் பேச்சை கட்டுப்படுத்துவது என்ற அரசாங்கத்தின் ஒரு கொள்கை ஊடாக கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பேசப்பட்டபோதும்,இதுவரை நடக்கவில்லை. 2013 ஏப்ரலில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தீவிரவாதக் குழுக்கள் மீதான ஒரு தடையை நாடி அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டுகளை மறுத்திருந்தார். இது ஜனநாயக நாடு எனவும் நிறுவனங்கள் தமது எண்ணங்களை

---

54 மேலுள்ளவாறாக

55 பார்க்குக. கிறிஸ்தவ போதகர் பௌத்த தீவிரவாதிகளால் தாக்கப்பட்டார். CAN, 14 March 2014 ஆதரவளிக்க வேண்டாம். அவருக்கு நேரம் செலவழிக்க வேண்டாம் என கட்டளையிட்டு சப்பரகமுவவில் பௌத்த பிக்குகளால் அச்சுறுத்தப்பட்டதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

56 பார்க்க. காணொளிப்படங்கள் BBS challenges BASL to debate on letter sent to AG", Daily Mirror, 10 June 2014

வெளிப்படுத்துவதற்கு உரிமைகளைக் கொண்டிருக்கின்றன எனவும் அவர் சொல்லியதாக மேற்கோள் காட்டப்பட்டது.[57] ஜாதிக ஹெல உறுமயவும் அவ்வாறான அமைச்சரவைப் பத்திரங்களைத் தாம் வன்மையாக எதிர்ப்போம் என்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தது.[58]

அரசாங்க உறுப்பினர்களால் பொது பல சேனாவின் உயர் கை நடவடிக்கைகளின் மீது எத் தடையும் இல்லாமலும் Fashion Bug களஞ்சிய தாக்குதல் மற்றும் 2014 இன் ஆரம்பத்திலான வன்முறைச் சம்பவங்கள் போன்ற சட்டத்தை வெளிப்படையாக மீறும் பௌத்த பிக்குகளின் சம்பவங்களில் எந்தவித கைதும் இடம்பெறாமையும் ஆட்சியாளர்கள் பொது பல சேனாவின் எண்ணோட்டங்கள் மற்றும் தந்திரோபாயங்களில் அனுதாபத்துடன் இருப்பதுடன் அதனை தந்திரோபாய ரீதியாக ஏற்றுக் கொள்வதையும் சுட்டிக்காட்டுகின்றன. முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை நாடுவதில் முஸ்லிம் சிவில் சமூக நிறுவனங்கள் அரச பிரதிநிதிகளுடன் கலந்துரையாடும் ஓர் உபாயத்தை விசேடமாக பாதுகாப்பு செயலாளருடன் கலந்துரையாடும் ஒரு தந்திரோபாயத்தைக் கைக்கொண்டிருந்தன. ஹலால் பிரச்சினைகள், Fashion Bug க்கு எதிரான தாக்குதல் போன்ற நெருக்கடி நிலைமைகளின்பொழுது முஸ்லிம்களுக்கு தீர்வைக் கண்டுகொள்வதற்காக பாதுகாப்பு செயலாளர் தொடர்பு கொள்ளப்பட்டார். சில முஸ்லிம் நிறுவனங்களாலும் சட்ட உதவிகள் மற்றும் சர்வதேச அரங்கில் விடயத்தை எடுத்துக்காட்டுவதற்கு தேவையான தகல்களை வழங்கும் முகமாக வெறுப்பு சம்பவங்கள் தொடர்பான ஆவணப்படுத்தல்களை தேடிக்கொள்ளல் போன்ற மிகவும் பாரம்பரிய அணுகுமுறைகளை நாடியிருந்தனர். முக்கிய அரசியல் புள்ளியும் பொது பல சேனாவுக்கு எதிராகக் குரல் எழுப்புபவருமாகிய அசாத் சாலி 1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாத

---

57 பார்க்க. தீவிரவாத நிறுவனங்களை தடைசெய்வதை இலக்காகக் கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தை இலங்கை அமைச்சர் மறுக்கிறார். Colombo Page, 7 April 2013

58 மேலுள்ளவாறாக.

தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.[59] பொது பல சேனாவின் செயற்பாடுகளுக்கு எதிராக பலமான நிலையெடுப்பவர்களுக்கு எதிரான ஒரு முன்னோடி தண்டனையை சம்பவங்கள் முன்வைத்தன.

2014 ஜூனில் இடம்பெற்ற சம்பவங்களை மேற்படி சூழலமைவில் விளங்கிக்கொள்ள வேண்டும். இதனை அனுபவித்த பொதுமக்களுக்கு நிகழ்வுகள் பெரும் அதிர்ச்சியாக இருக்கும் அதேவேளை, இலங்கையில் மறைந்திருந்த நிகழ்வுகளைக் கண்ட பலருக்கு இது பெரும் ஆச்சரியமானதல்ல. ஒரு கிளர்ந்துவரும் எதிர் உணர்வலைகள் மற்றும் சமூக மற்றும் பாரம்பரிய ஊடகங்களின் பேச்சுக்கள் மற்றும் பொதுபலசேன அதனுடன் இணைந்த குழுக்களாகிய ராவண பாலய, மற்றும் சிங்கள ராவய என்பவற்றின் அதிகரித்த வன்முறை செயற்பாடுகளானவை இவ்வண்ணமான வன்முறையை நீண்டகாலம் எதிர்பார்த்திருக்கச் செய்தன.[60]

---

59 பார்க்க. இலங்கை அசாத் சாலியின் கைதும் தடுத்து வைப்பும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு 6 மே 2013; அசாத் சாலி கைது செய்யப்பட்டார் கொழும்பு கசற் 2 மே 2013.

60 https://www.colombotelegraph.com/index.php/hate-incidents-report-what-is-to-come-for-muslims-in-sri-lanka-are-ominous-muslim-secretariat/

# அத்தியாயம் III
## தூண்டிவிட்ட நிகழ்வு

2014 ஜூன் 15 ஆம் திகதி வெடிப்புக்கு முன்னதாகவே அளுத்கமையில் பதற்றங்கள் சில காலங்களாக கொதிப்படைந்து கொண்டிருந்தன. உதாரணமாக, மே 09 ஆம் திகதி அளுத்கமை நகரப் பகுதியில் ஒரு சம்பவம் இடம்பெற்றது. அங்கே ஒரு முஸ்லிமுக்கு சொந்தமான வினோதப் பொருட்கள் கடை எரிக்கப்பட்டது. இந்த எரிப்பானது கடைக்குள் ஒரு பணியாளர் தனது ஏழு வயது மகனை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்ததாக ஒரு பெண் குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து இடம்பெற்றது. இச்சம்பவம் நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்டது. கடையெரிப்புக்கு பின்னர் கடை உரிமையாளர் ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் தனது போட்டியாளர்களின்பொறாமை காரணமாகவே குறிப்பாக இது தூண்டப்பட்டது எனத் தெரிவித்திருந்தார். பீபீசி யுடனான பின்னைய நேர்காணலிலும் அவர் அப்பகுதியில் உள்ள பதற்றங்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். மேலும் அவர் சமூகங்களுக்கிடையிலான உறவுகளின் மேலதிக சீரழிவுகள் தொடர்பாகவும் தனது அக்கறையைத் வெளிப்படுத்தியிருந்ததுடன் எரிக்கப்பட்ட இறுதியான முஸ்லிம் கடையாக இது இருக்க வேண்டுமென தான் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தார். பிள்ளையின் தாயின் விடயத்தில் இருந்து பார்க்கும்பொழுது, பொலிசார் செயற்பாடற்றோராக இருந்ததுடன் தாயின் முறைப்பாட்டிற்கு உரிய நேரத்தில் பதிற்செயற்பாடு காட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாலியல் தாக்குதல் கதையின் உண்மைத் தன்மையை நிறுவ முடியவில்லை. பொலிஸ் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் நீதிமன்ற வழக்கும் நிலுவையில் உள்ளது. சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான நிகழ்வுகளைத் தொடர்ந்து அதன் விளைவாக பொலிஸ் நிலையத்திற்கு வெளியே ஒரு கூட்டம் கூடியதுடன் பின்பு கடைக்கு முன்னேயும் வந்து கடை உரிமையாளரிடம்

கடையை பூட்டிவிட்டு வெளியேறுமாறு அழைப்பு விடுத்தது. அவ்வாறு செய்ய கடைச் சொந்தக்காரர் மறுத்தார். இரவு அக்கடைக்கு தீ வைக்கப்பட்டது. குறித்த இவ்விடயத்தில் என்ன நடைபெற்றது என்ற விபரிப்பில் இன அடையாளம் காணப்படுவதுடன் நடக்கவிருப்பது என்ன என்பதற்கான சாயலை அமைக்கிறது. உதாரணத்திற்கு கடைச் சொந்தக்காரரும் மற்றும் நேர்காணல் காணப்பட்ட அளுத்கமவிலுள்ள எல்ல முஸ்லிம்களும் சொல்வதின் பிரகாரம் CCTV கமராவானது[61] விரும்பத்தகாத அசம்பாவிதம் எதுவும் நடைபெறவில்லை என்பதை நிரூபிக்கிறது.

எவ்வாறாயினும், ராவய பத்திரிகை[62] CCTV ஆனது நடைபெற்ற துஷ்பிரயோகத்தின் ஒரு சிலவற்றையே பதிவு செய்துள்ளதாக பிள்ளையின் தாய் தெரிவித்ததாக அறிக்கையிட்டது. எனினும், இரு தரப்பினரும் இவ்விடயத்தைக் கையாள்வது தொடர்பில் அதிருப்தியுடன் இருந்துள்ளனர். வண. ஞானசாரரின் பேச்சுத் திறனில் 15 ஆம் திகதி அம்சப்படுத்தப்பட்ட மானபங்கக் கதையும் JHU பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவால் விசேடமாக வழங்கப்பட்ட நிகழ்வின் பல்வேறுபட்ட விளக்கங்களும் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டன.

கலவரத்திற்கான உடனடித் தூண்டுகோலாக பத்திராஜகொடவில் மூன்று முஸ்லிம் இளைஞர்களுக்கும் வண. அயகம சமித்தவின் வாகனத்தின் சாரதிக்கும் இடையிலான வாக்குவாதமே இருந்ததாக பலரால் கருதப்படுகிறது. பிக்கு தாக்கப்பட்டாரா இல்லையா என்பதில் பிரச்சினை இருந்தது.

வண. அயகம சமித்த தற்பொழுது JHU ஆல் வெளியிடப்பட்ட ஒளிக்காட்சியில் பதிவில் உள்ளார். அவர் முஸ்லிம் இளைஞர்களில்

---

61 Dharisha Bastians of the Daily FT reported on 13th June that the CCTV found no evidence of the molestation. The case is presently being heard in court.

62 JHU வின் பத்திரிகையாளர் மகாநாடு 21ஜுன் 2014

உயரமான ஒருவன் தனது கையில் தாக்கியதாகக் கூறுகிறார்.[63] சம்பவத்தின் பின்னர் சேதத்தைக் குறைக்கும் பல்வேறுபட்ட வடிவங்களுக்கு பிரதேச முஸ்லிம்கள் முயற்சித்ததாகவும் இதனுடன் சம்பந்தப்பட்ட இரு இளைஞர்களையும் பொலிசாரிடம் சரணடைந்து பிக்குவிடம் மன்னிப்பு பெற்றுக்கொள்வதற்கு இணங்கச் செய்வதில் முயற்சித்ததாகவும் முஸ்லிம் சமூகத் தலைவர்களிடமிருந்து நாம் கேட்கக்கூடியதாக இருந்தது. இன்னோர் ஆதாரத்தின்படி, அளுத்கம பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் அருகில் இருக்கும்போது புத்த பிக்கு அவர்களின் கன்னத்தில் அறைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.[64]

ஜூன் 12 ஆம் திகதி வாய்த்தர்க்கத்திற்குப் பின்னர் வெள்ளிக்கிழமை மதிய வேளைத் தொழுகைக்கு ஒன்றுகூடும் தர்கா நகர் முஸ்லிம்களிடமிருந்து ஏதாவது பிரச்சினைகளை அதிகாரிகள் எதிர்பார்த்திருந்ததாகக் கூறப்படுகிறது. வெள்ளிக்கிழமை காலை சமூகத் தலைவர்கள் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் உட்பட தர்கா நகர் சர்வமத வர்த்தக சங்கம் (சங்கத்தின் சிங்கள செயலாளர் உட்பட) களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கூட்டத்திற்காக அழைக்கப்பட்டனர். தாம் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அனுர சேனநாயக்கவையும் இராணுவப் புலனாய்வு மேஜர் மொஹமட்டையும் சந்தித்ததாக எங்களுடன் பேசிய மக்கள் எம்மிடம் குறிப்பிட்டனர். வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகைக்கு பிற்பாடு தர்கா நகரில் தேவையற்ற அசம்பாவிதம் எதுவும் நடைபெற்றுவிடாது உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் அறிவுறுத்தப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

---

63 பார்க்க videoThe True Story of Aluthgama aired at JHU press conference on 21st June. Available here https://www.youtube.com/watch?v=HrBgKWapYFA

64 மௌலவியின் மூன்றாம் சகோதரரானவர் தான் முழந்தாளிடச் செய்யப்பட்டபோது தான் உதைக்கப்பட்டதற்காக பொலிசாருக்கும் பிக்குகளுக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்தலினை சூரா சபை பத்திரிகைக் குறிப்பு பின்பு சுட்டிக்காட்டியது.

இந்தக் கூட்டத்தில் முஸ்லிம்கள் தமது அதிகாரிகளிடம் தமது சொந்த அக்கறைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தனர். குழுவினர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் கடந்த காலத்தில் இன வன்முறை ஏற்பட்டபொழுது நன்கு அறியப்பட்ட தர்கா நகருக்கான மூன்று வாயில்களிலும் மேலதிக பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென அறிவுரை கூறினர். எந்தவிதமான வன்முறைச் சம்பவமும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு ஜும்மா பள்ளிவாசலின் நம்பிக்கை பொறுப்பாளர் மக்களை விழிப்புடன் இருப்பதற்கு அறிவுறுத்துவதற்காக தாம் காலை 11.45 இருந்து வீதியில் இருந்தாகத் தெரிவித்தார். ஜும்மா தொழுகையின் இடத்தை பிரதான வீதியில் இருக்கும் பிரதான பள்ளிவாசலில் இருந்து உட்புறமாக ஸாவியா வீதியிலுள்ள தெருப் பள்ளிவாசலுக்கு தாம் மாற்றியதாக அவர் தெரிவித்தார். மக்களை பிரதான வீதியில் ஒன்றுகூட வேண்டாம் என்றும் தொழுகைக்குப் பின்பு தமது வீடுகளுக்கும் வியாபார இடங்களுக்கும் சிறிய உள்வீதிகள் ஊடாகச் செல்லுமாறும் மக்களுக்கு சொல்லப்பட்டிருந்து. சாட்சிகளின் பிரகாரம் 13 ஆம் திகதி கூட அப்பகுதியில் அதிரடிப் படையினரின் பலமான பிரசன்னம் இருந்துள்ளது.

அம்பகஹ சந்தி, வெலிப்பிற்றிய மற்றும் நாற்சந்தி ஆகியவை கந்த விகாரைக்கு அண்மையிலுள்ள பகுதிகளாகும். இப்பகுதிகள் குறித்த தகவல்களை பொலிசாரும் எழுதிக் கொண்டனர். 15 ஆம் திகதி நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பொது பல சேனாவின் கூட்டம் குறித்து தாம் கலந்துரையாடியதாகவும் இது வன்முறைக்கு இட்டுச் செல்லக்கூடியது என எச்சரித்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். கூட்டத்தை நடைபெறாமல் தடுப்பதானது புத்தி சாதுரியமற்றது எனவும் அது இன்னும் மேலதிக பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லலாம் எனவும் அவர்களுக்கு சொல்லப்பட்டது.

எந்த அசம்பாவித நிகழ்வுகளையும் தடுப்பதற்காக அதிகபட்ச பாதுகாப்பு, 1200 அதிரடிப் படையினரை வழங்குதல் உட்பட்டவை செய்யப்படும்

எனவும் அவர்களுக்கு சொல்லப்பட்டது. 15 ஆம் திகதி ஜும்மா தொழுகைக்குப் பிற்பாடு எந்தவித சம்பவமும் இல்லாதிருந்தபோதும், இரவில் வன்முறை இடம்பெற்றுள்ளது.

சிங்கள பெண் வைத்தியருக்குச் சொந்தமான ஒரு கடை மற்றும் அவரது மகன் மீது அம்பகஹ சந்தியில் கல்லெறியப்பட்டதுடன், அளுத்கம 'மல்லிகா' என்ற முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான கடைக்கும் கல்லெறியப்பட்டது. கடையின் முன் கண்ணாடிகள் சிதறிப் போயிருந்தன. அளுத்கமவிலும் தர்கா நகரின் சில பகுதிகளிலும் அதிரடிப் படையினரின் பிரசன்னம் இருந்தபொழுதிலும் உள்ளூர்வாசிகளால் அறிவுறுத்தப்பட்டவாறு எல்லைகளில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை என சாட்சிகள் தெரிவித்தனர். ஜூன் 15 ஆம் திகதி[65] பேருவளை 'ஷாசன ஆரக்ஷன பல மண்டல'வினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் பொது பல சேனாவின் பிரசன்னம் இருக்குமென அறிவிக்கப்பட்ட பின்பு நிலைமை தீவிரமடைவதைத் தவிர்ப்பதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுப்பதற்கு அளுத்கமவுக்கு உள்ளும் வெளியிலும் முஸ்லிம் சிவில் சமூகம், சமயத் தலைவர்கள் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களினால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

முஸ்லிம் சமய மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் தூ துக் குழுவொன்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அனுர சேனநாயக்கவுடன் 15 ஆம் திகதி அளுத்கமவில் ஏற்படக்கூடிய சாத்தியமான வன்முறை அச்சுறுத்தல் குறித்து கலந்துரையாடுவதற்கு களுத்துறைக்கு சென்றிருந்தனர். தேசிய ஷூரா சபையானது 15 ஆம் திகதி அதன் ஊடக அறிக்கையில் இனவாத பௌத்த குழுக்களால் இன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இன ரீதியாக ஊக்கப்படுத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதியளிக்க வேண்டாமென அரசாங்கத்திடம்

---

65 தேசிய ஷூரா சபையின் பத்திரிகைக் குறிப்பின் பிரகாரம்

வேண்டியிருந்தது. இது பிரதேசத்தில் தேவையற்ற பதற்றங்களை தோற்றுவிக் கூடியது என்பதால் அதனை இணக்கமாக தீர்த்துக் கொள்வதற்கு தலைவர்களிடம் வேண்டுகோள் விடுக்குமாறும் தேசிய ஷூரா சபை சுட்டிக்காட்டியதாக அது மேலும் தெரிவித்தது.[66]

பொலிஸ் மாஅதிபரை சந்தித்த தூதுக்குழு உறுப்பினர்களிடம் அவர்கள் கூட்டத்தை நடத்த அனுமதிப்பதாகவும் அதற்குப் பின்பு தேவையற்ற அசம்பாவிதங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு போதியளவில் பொலிசார் மற்றும் அதிரடிப்படையினரின் பிரசன்னத்தை ஏற்படுத்துவதாகவும் பொலிஸ்மா அதிபர் உறுதியளித்து இருந்ததை பொலிஸ் மாஅதிபரை சந்திக்க சென்றிருந்தவர்கள் ஆய்வுக் குழுவினரிடம் தெரிவித்தனர். அளுத்கம பிரதேச மக்களும் பல்வேறுபட்ட அரசியல் பிரமுகர்களை முஸ்லிம் அமைச்சர்கள், மக்கள் விடுதலை முன்னணி தலைமைத்துவ உறுப்பினர்களை உதவிக்காக தொடர்பு கொண்டபொழுது, போதிய பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதால் கவலைப்படுவதற்கு எதுவும் இல்லை என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

முஸ்லிம் சமூகத் தூதுக் குழுவின் சில உறுப்பினர்கள் 15 ஆம் திகதி பொலிசார் மற்றும் அதிரடிப்படையினரின் பலமான பிரசன்னம் இருந்தமையினால் அளுத்கமவை விட்டுச் சென்றபொழுது உண்மையில் அவர்கள் நிம்மதியுடன் இருந்ததாகத் தெரிவித்தனர். அளுத்தகமவிலுள்ள சில கடைச் சொந்தக்காரர்களும் கணிசமான அதிரடிப்படையினரின் பிரசன்னம் இருந்ததன் காரணமாக அவர்கள் ஓரளவு பாதுகாப்பையும் உணர்ந்ததாகக் குறிப்பிட்டனர். 15 ஆம் திகதி கூட்டத்திற்கான விளம்பரங்கள் பொது பல சேனா மற்றும் சிங்கள ராவயவின் இலச்சினைகளைத் தாங்கி வந்ததுடன் அவ்வாறு இருந்தபொழுதிலும் பின்பு இது ‘பேருவளை ஷாசன ஆரக்ஷ

---

[66] Shoora Council statement released on 15th June, signed by Ismail Azeez, General Secretary NSC

பல மண்டல' வினால் ஒழுங்கு செய்யப்பட்டதாகவும் பொது பல சேனாவினால் அல்ல எனவும் பின்பு உரிமை கோரப்பட்டது. இந்த விளம்பரம் இந்தத் தகவலை வெளிப்படுத்தவில்லை.

சுவரொட்டியில் இவ்வாறு காணப்பட்டது:

> ஓ! சிங்களவர்களே, புனிதமான போயா தினத்தன்று சில முஸ்லிம் (மரக்கலயா) பயங்கரவாதிகள் தாக்கியதுடன் எமது மதிப்பிற்குரிய பிக்குவை அழித்துள்ளனர். இது நடைபெற்றுள்ளது. இது பற்றி பேசுவதற்கு ஒன்றுமில்லை. இறுதித் தீர்மானத்தை பிரகடனம் செய்வதற்கான பௌத்தர்களின் மாபெரும் ஒன்றுகூடலானது ஜூன் 15 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அளுத்கமவில் இடம்பெறப் போகிறது.

பலரும் முஸ்லிம் சமூகத்தினரின் பிரதிநிதிகள் அல்லாதவர்களும் ஏற்கனவே நிலவும் பதற்றங்களுக்கு மத்தியில் இவ் அழைப்பிதழின் நோக்கத்தை புரிந்து கொண்டிருந்தனர். முஸ்லிம் சிவில் சமூகத்தினருக்கு மேலதிகமாக குமார வெல்கம மற்றும் ரோஹித்த அபயகுணவர்தண போன்றோரும் பொது பல சேனாவினால் முன்னெடுக்கப்படும் கூட்டத்தைத் தடுப்பதற்கு அதிகாரிகளுக்கு அழைப்பு விடுப்பதாக மேற்படி சொல்லப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் ஷூரா சபையினால் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.[67]

## கூட்டம்

கூட்டமானது ஊடகங்களின் பரந்த பிரசாரத்தைப் பெற்றுக்கொண்டதுடன் பிக்குவின் பேச்சானது தீ மூட்டும் கூற்றுக்களால் நிறைந்திருந்தது. கூட்டத்திற்கு எதிராக பாதுகாப்பு படையினரை நிறுத்தியிருந்தமை தொடர்பில் தனது கோபத்தை வெளிப்படுத்தி, நாட்டின் படைகள் இன்னும் சிங்கள இராணுவம், சிங்கள பொலிஸ்படையாக உள்ளதை எல்லோரும்

67 மேலுள்ளவாறாக

நினைவு கொள்ளும்படி அழைப்பு விடுத்தார். விவாதிக்கக்கூடிய வகையில் பிக்குவின் இனமயப்படுத்தப்பட்ட வேண்டுகோளானது பின்பு வன்முறையால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு சிறிது உதவி செய்த STF இனரால் பின்பு உறுதிப்படுத்தப்பட்டது.

சிங்கள தேசியவாதிகளால் வரையப்பட்ட அதிகாரத்தை முஸ்லிம்கள் மதிக்காவிட்டால் அளுத்கம, பேருவளை பகுதிகளில் உள்ள அவர்களது கடைகளுக்கு பாதுகாப்பு இல்லையென பிக்கு குறிப்பிட்டார் (*அப சரண*). நீதியமைச்சராக ஒரு முஸ்லிமை ஜனாதிபதி நியமித்ததற்கு பொறுப்புச் சொல்ல வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இளம் பிக்குவான வண. அயகம சமித்த மீது பத்திராஜகொடவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் விளைவாக பௌத்த மதத்திற்கு அவமரியாதை ஏற்பட்டுள்ளது குறித்து பேச்சுக்களிலும் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டது. முஸ்லிம்கள் பௌத்தர்களுக்கு தீங்கிழைக்கும் தொடர் செயற்பாடுகளின் உச்சமாக இது உள்ளது என பிக்கு குறிப்பிட்டார். ஒரு மாதத்திற்கு முன்பு இளம் பையன் ஒருவனின் ஆண் உறுப்பை அகற்றியதாக வெளிப்படையான மொழியில் அளுத்கம நகர முஸ்லிம்களை கூட்டத்தில் பிக்கு நினைவுபடுத்தினார். முஸ்லிம்களால் குற்றமிழைக்கப்படுவது குறித்துப் பேசுவதற்கு பௌத்தர்கள் அனுமதிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். அவர்கள் அவ்வாறு செய்வார்களாயின் அவர்கள் இனவாதிகள் என சொல்லப்படுகின்றனர். (அச்சமயத்தில் நாம் இனவாதிகள்தான் என பிக்கு குறிப்பிட்டார்) ஒரு சிங்களவர் தீண்டப்பட்டால் அது முஸ்லிம்களின் இறுதி முடிவாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார். கூட்டமானது பௌத்தர்களை விழித்தெழும்படியாகவும் தேசியத்தையும் சமயத்தையும் காப்பதற்கு பொறுப்பாக இருக்கும்படியும் அதற்காக செயற்படும்படியும் அழைப்பு விடுக்கப்பட்டது.

பாடகர் மது மாதவ அரவிந்தவும் நிகழ்வில் பங்குபற்றினார். அவர் தனது சில நிமிட உரையில், போர்த்துக்கேய காலத்தில் முஸ்லிம்களுக்கு

புகலிடம் வழங்கியதற்காக அரசன் செனரத்தை சபித்ததுடன், 80 களில் ஒரு மில்லியனாகவும் இன்று இரண்டு மில்லியன்களாகவும் முஸ்லிம்கள் பல்கிப் பெருகுவதற்கு வழிவிட்ட சிங்களவர்களின் குறுகிய பார்வை குறித்தும் கவலையை வெளிப்படுத்தினார். அடுத்து பக்தி கீதங்களுக்குப் பெயர் போன பிரபல முஸ்லிம் பாடகர் மொஹிடீன் பேக் போன்று சிங்களவர்களுடன் முஸ்லிம்கள் இருந்தால் அவர்கள் அமைதியாக வாழ முடியும். அவ்வாறு இல்லையெனின், அவர்களும் அவர்களுக்கு சொந்தமான முள்ளிவாய்க்காலுக்கே அனுப்பப்படுவார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.[68]

வண. ஞானசார தனது பேச்சில் “எதிர்காலத்தில் இன்னுமொரு மஞ்சள் அங்கி தீண்டப்பட்டால் அதற்காக பொலிசாரிடம் செல்ல வேண்டியதில்லை. காட்டுச் சட்டமே கைகளில் எடுத்துக்கொள்ளப்படும்” எனக் கூறி தனது பேச்சை முடித்தார்.

**ஊர்வலம்**

அளுத்கம - மத்துகம வீதியிலுள்ள தர்கா நகர் பெரிய பள்ளிவாசலைக் கடந்து சென்ற ஊர்வலமானது ஒளிப்படக் காட்சிகள், அரசாங்க தொடர்புசாதனங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பத்திரிகை மாநாடுகளில் கலந்துரையாடப்பட்டன. வன்முறையை ஆரம்பித்து முதலில் கல் வீசியவர்கள் முஸ்லிம்களா, சிங்களவர்களா என அடையாளம் காண்பதற்காக நேரடியான படக்காட்சிகள் மற்றும் திருத்தம் செய்யப்பட்ட படக்காட்சித் துண்டங்கள் கலந்துரையாடல்களுடன் சமூக ஊடகங்களினூடாக சுற்றுச் செய்யப்பட்டன. விமர்சனம் செய்வதற்குப் பெறுமதியானது என நாம் கருதும் குறிப்பான இரண்டு

---

[68] Footage from BBS led rally in Aluthgama on 15th June 2014. Clip available on youtube at https://www.youtube.com/watch?v=66MNrsQL gA

துண்டங்கள் உள்ளன. திருத்தம் செய்யப்படாத நேரடியான ஒரு படத் துண்டத்தில் அங்கு என்ன நடைபெறுகிறது என்றால், ஊர்வலத்தைத் தொடக்கி வைத்து பிரதான வீதியால் நடந்து செல்பவர்களிலுள்ள இளைஞர்கள் கற்களை எடுப்பதற்கு குனியாத நிலையில் கற்களை எறிவதை நாம் காண்கிறோம். காடையர்கள் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு இருந்தனர். அந்த இளைஞர்கள் பொதிகளைத் தூக்கி வைத்திருந்து அதிலிருந்தே கற்களை எடுத்தனர் என அனுமானிக்க முடிகிறது என்பதற்குச் சான்றாக முஸ்லிம் தரப்பினரால் வழங்கப்பட்ட வீடியோக்கள் மீது எமது கவனம் ஈர்க்கப்பட்டது. பொதுவாக முஸ்லிம்கள் யார் தொடக்கியது என்பதில் நாட்டம் குறைந்தவர்களாக உள்ளனர். கொள்ளையடித்தல், வன்முறை என்பவற்றின் ஒழுங்கமைக்கப்பட்ட இயல்புடன் அவர்களது அனுபவத்தின் விபரிப்பு தரப்படுகிறது. சீனவத்த பள்ளிவாசலைச் சேர்ந்த ஒருவர் யார் முதலில் கல்லை எறிந்தவர் என்பது பொருத்தமற்ற கதையாகும்; ஏனெனில், கற்கள் எறியப்படுவதற்கு முன்னரே சீனவத்தையைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான வான் ஒன்று வீதியில் வைத்து எரிக்கப்பட்டு விட்டது எனக் குறிப்பிடுகிறார். இது, பள்ளிவாசலில் இருந்தே கல் எறிந்ததாகக் குற்றம் சாட்டும் பள்ளிவாசலைச் சனக்கூட்டம் சென்றடைவதற்கு முன்னரே இடம்பெற்று விட்டது. வான் முதலில் எரிக்கப்பட்டதா இல்லையா என கால ஒழுங்கை எம்மால் உறுதிப்படுத்த முடியாதிருக்கும் அதேவேளை, பெரிய பள்ளிவாசலுக்கு எதிரில் எரிந்த வானின் பகுதிகளை நாம் கண்டோம்.

அதே ஒளிப்படக் காட்சியைக் காட்டி சிங்கள இடைத்தரகர் ஒருவர் வீடியோ காட்சியில் கற்கள் முஸ்ஸிம்களின் பக்கத்தில் இருந்து வந்ததாக கவனத்தை இழுக்கிறார். நிகழ்வு நடந்த ஒரு மாதத்திற்குப் பின்னர் வெளிவந்த இரண்டாவது ஒளிப்படக்காட்சியானது ஒலிநயங்கள், எழுத்துக் குமிழிகள் என்பவற்றுடனான ஒரு செப்பம் செய்யப்பட்ட துண்டமாக இருந்தது. அத்துடன் பல கமரா பண்புகளையும் காட்டி நிற்கிறது. இப்படக்காட்சியானது முஸ்லிம்கள் சிங்களவர்கள் பிரசன்னமாக இருக்கும் ஒரு முழுப் பார்வையை வழங்குவதுடன்

மிகவும் முக்கியமாக சேவையிலிருந்த அதிரடிப் படையையும் பொலிசாரையும் படம் எடுத்துள்ளது. இது கல்லெறியும் பல முஸ்லிம்களின் காட்சிகளை வழங்குவதுடன் முஸ்லிம்கள் அப்பாவிகள் அல்ல என்பதை எழுத்துக்கள் ஊடாகக் காட்டுவதற்கு முயற்சிக்கின்றது. சட்டகத்திலே தடித்த புகைக்கூட்டங்களை இது காட்டுவதுடன் ஒரு சிங்களக் கிராமம் எரிகின்றது என்ற பட விளக்கத்தையும் இது எடுத்துக்காட்டுகிறது. தேசிய மட்டக் கலந்துரையாடல்களில் இன்றும் அறிவிக்கப்படும் போட்டியிடும் விபரிப்புக்கள் இது போன்று பல்வேறு பதிப்புக்களினால் அறிவிக்கப்படுகிறது.

நிகழ்வுக்குப் பிற்பாடான பிரச்சாரங்களில் எடுத்துக்காட்டப்படும் வழியில் தம்மை அப்பாவிகளாகக் காட்டுவதற்கு முஸ்லிம்கள் எந்த சந்தர்ப்பத்திலும் முயற்சிக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. எம்முடன் பேசிய பலரைப் பொறுத்தமட்டில் அது உண்மையில் தொடர்பற்றது ஊர்வலங்கள் மற்றும் தாக்குதல்கள் பற்றிக் கலந்துரையாடும்பொழுது, முஸ்லிம்கள் உடனடியாக சுட்டிக்காட்ட விழைவது என்னவெனில், அவர்கள் தம்மைத் தாமே காத்துக் கொள்ள முயற்சித்தது என்பதுதான். ஊதாரணமாக, ஊர்வலத்தோடு தொடர்புபட்டவகையில் பார்க்கும் பொழுது சிங்களவர்கள் ஆயுதங்களுடனும் தயார்நிலையுடனும் வந்தபொழுது முஸ்லிம்களிடம் திருப்பி எதிர்த்துப் போராடுவதற்கு கற்கள் மாத்திரமே இருந்தன; பலஸ்தீனத்தில் போல என எம்மிடம் ஒருவர் சொன்னார். இன்னொரு சமயத்தில், சீனவத்தையில் அப்பகுதி மக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதில் இயலுமானவர்களாக இருந்தார்கள். அதிரடிப் படையினர் தான் அவ்வாறு செய்வதை தடுத்ததுடன், ஆயுதம் தாங்கிய காடையர்களின் தாக்குதல்களையும் வசதிப்படுத்தினர் என ஒருவர் குறிப்பிட்டார். வெலிப்பிற்றிய, சீனவத்த, அதிகாரிகொட மற்றும் இராணுவ வீதி என்பவற்றில் வைத்தே காடையர்களை தடுத்து நிறுத்துவதற்கான ஆட்களின் முயற்சிகளின் சான்றுகளை நாம் கண்டோம். இது இரு இறப்புக்களையும் காயம் ஏற்படுத்தல்களையும் விளைவித்திருந்தன.

# அத்தியாயம் IV
## வன்முறை: பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள்

இந்த அத்தியாயம் பாதிக்கப்பட்ட ஆட்களிடமிருந்து பெறப்பட்ட விபரமான சாட்சியங்களின் தொகுப்பாகும். இத்தகைய ஒரு பிரிவை உள்ளடக்குவது பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவங்களை விபரிப்பதற்கு அவசியமாக இருப்பதுடன் வாசகர்களுக்கு உண்மையான வன்முறை மற்றும் தாக்கங்கள் மீதான ஒரு அனைத்துமடங்கிய மேலோட்டப் பார்வையைக் கொடுக்கும் என்பது எமது கருத்தாகும். இதன் மூலம் இந்த சம்பவமானது இலங்கையில் யுத்தத்திலிருந்து ஜனநாயக அமைதியை நோக்கி சிரமமான நிலைமாற்ற செயன்முறையின் பொது அறிவின் ஒரு பாகமாக இச்சம்பவம் இருக்கும் என நாம் நம்புகிறோம். இவ் அத்தியாயத்தின் இறுதிப்பகுதியில் தனிப்பட்ட விபரிப்புக்களின் பிரதான கண்டறிதல்களை நாம் பொழிப்பாக்கியுள்ளோம். இந்த அத்தியாயமானது ஆய்வுக் குழுவினர் விஜயம் செய்த பாதிக்கப்பட்ட பகுதிகளின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்படுகிறது. கொழும்பில் நேர்காணல்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் தொலைபேசி உரையாடல்கள் மூலம் பெறப்பட்டவையும் இங்கே உள்ளடக்கப்பட்டுள்ளன. நேர்காணல் விபரிப்புக்களின் மூலம் பல இடங்களில் வன்முறையின் ஒத்த பாணித்தன்மைகளானவை அளுத்கம மற்றும் தர்கா நகர் பகுதிகளில் அநேகமாக ஒரே நேரத்தில் நடைபெற்றுள்ளன என ஆய்வுக்குழு முடிவுக்கு வருகிறது. இந்தப் பகுதிகள் அளுத்கம நகரத்தில் கூட்டம் முடிந்த பின்னர் ஊர்வலம் சென்ற பிரதான பாதையில் இருந்து தொலைவில் உள்ளன. இந்த இடங்கள் ஒரேவிதமான ஆயுதக் காடையர்களால் ஒரேமாதிரியான செயற்பாட்டு பாணியிலேயே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. தர்கா நகரில் சீனவத்தை, இராணுவ வீதி, புதிய வீதி, அதிகாரிகொட, வெலிப்பிற்றிய மற்றும் மிஹிரிப்பன்ன வீதி என்பன பாதிப்படைந்துள்ளன. இதற்கு மேலதிகமாக அளுத்கம நகரத்தில் உள்ள முஸ்லிம் வியாபார நிலையங்கள் வெளிச்சம் பிடித்து கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தர்கா நகரில் உள்ளவர்களால் எல்லைப் பகுதிகள் என இனம் காணப்பட்டு தாக்கப்பட்ட இடங்கள் சிங்கள வீடுகளுக்கு மிக அனித்தாக தர்கா நகர் முஸ்லிம்கள் வாழும் இடங்களாகும். இந்தப் பகுதிகளில் முஸ்லிம் வீடுகளில் தாக்குதல் நடந்ததற்கு மேலதிகமாக பத்திராஜகொடவில் சிங்களவர்களுக்கு சொந்தமான ஆறு வீடுகளும் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தன. தர்கா நகரின் மத்திய பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பகுதியில் இருந்து கணிசமான தூரத்தில் பத்திராஜாகொட அமைந்துள்ளது. ஆனால், தாக்கப்பட்ட சிங்கள வீடுகள் முஸ்லிம் மற்றும் சிங்கள வீடுகளுக்கு அண்மையாக கட்டப்பட்டிருந்தவையாகும். மேலதிகமாக அளுத்கம நகரானது தர்கா நகருக்கு இட்டுச்செல்லும் அளுத்கம - மத்துகம வீதியிலிருந்து தள்ளி காலி வீதியில் அமைந்துள்ளது. அதிகாரிகொடவில் கணிசமான சேதங்கள் முஸ்லிம்களின் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ளன. ஒரு சிங்கள வீடும் தாக்கப்பட்டுள்ளது. பென்தர ஆற்றின் எல்லையிலுள்ள மிஹிரிப்பன்ன வீதியில் சிங்களவருக்குச் சொந்தமான ஒரு விருந்தினர் விடுதி தாக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளது. (படத்தைப் பார்க்கவும்).

சமய அடிப்படையில் பிரிக்கப்பட்ட சேதங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை பேருவளை பிரதேச செயலகம் வழங்குகிறது. இதில் அளுத்கம, தர்கா நகர், வெலிப்பன்ன, பேருவளையில் உள்ள சேதங்கள் இதில் உள்ளடங்கியுள்ளன. ஆனால், மத்துகம, களுத்துறை பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்பட்ட சேதங்கள் உள்ளடக்கப்படவில்லை.

**வீடுகளில் ஏற்பட்ட சேதங்கள்**

| | முஸ்லிம் | சிங்களம் |
|---|---|---|
| முற்றுமுழுதாக சேதகமாக்கப்பட்டது | 31 | 2 |
| ஓரளவு சேதமாக்கப்பட்டது | 195 | 20 |

**வியாபார நிலையங்களில் ஏற்பட்ட சேதங்கள்**

| | **முஸ்லிம்** | **சிங்களம்** |
|---|---|---|
| முற்றுமுழுதாக சேதகமாக்கப்பட்டது | 69 | 5 |
| ஓரளவு சேதமாக்கப்பட்டது | 52 | 9 |

## தர்கா நகரிலிருந்து வந்த கதைகள்

### சீனவத்த

சிங்களக் குடும்பங்களுக்கு அடுத்தாக முஸ்லிம் குடும்பங்கள் வாழும் ஒரு கலப்பு அயலவர்களைக் கொண்ட ஒரு பகுதி சீனவத்தை ஆகும். அயற்சூழலில் முஸ்லிம்கள் வாழ்கின்ற மூன்று வீடுகளைக் கொண்ட ஒரேயொரு கூட்டுக் குடும்பத்துடன் நாம் பேசினோம். அவர்கள் தம் வீட்டையும் கடையையும் இழந்து விட்டனர். முதல் நாள் அவர்களது வீட்டிலே திருமணக் கொண்டாட்டம் இடம்பெற்றிருந்தது. குடும்பத்தினர் சிறிய வீதியின் உள்ளாக இருந்த ஒரு வீட்டில் குடியிருந்தனர். தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்ட வீடும் கடையும் பிரதான வீதியில் இருந்தன. அரை மணித்தியாலத்திற்குள் மூன்று அல்லது நான்கு இளைஞர் குழுக்கள் வந்தன. “தம்பிலா” என அவமதித்தவாறு அந்த ஒவ்வொரு குழுவும் வந்திருந்தது.

சாட்சி பின்வருமாறு கூறினார்:

> முதலில் ஒரு குழு வந்தது. அக்குழுவுக்கு இரு பிக்குகள் தலைமை தாங்கினர். அவர்கள் கற்களை வீசியெறிந்து யன்னல்கள் அனைத்தையும் உடைத்தனர். 15 நிமிடங்களுக்கு பின்பு மற்றொரு குழு வந்தது. இன்னும் சில நிமிடங்களுக்குப் பின்பு மூன்றாவது குழு வந்தது. அவர்கள் மிகவும்

கடுமையானவர்களாக இருந்ததுடன், அவர்கள் உடைத்து தூளாக்கி அனைத்தையும் எரித்துத் தள்ளினர். அந்தத் தீயை நாம் அணைக்க முற்பட்டபொழுது மற்றொரு குழு வந்தது. அவர்கள் இளம் பையன்களின் குழுவாகவும் சுமார் 15 வயதுடையவர்களாகவும் இருந்தனர். விசேட அதிரடிப் படையினர் அவர்களைக் கலைத்து விட்டனர். இன்னும் சிலர் தமது முகத்தை மறைத்துக் கொண்டு அங்கே வந்ததுடன் வீடுகளில் இருந்தவற்றை எடுத்து தமது பைகளில் போட்டுக் கொண்டு சென்றனர்.

அவ்வேளையில் விசேட அதிரடிப் படையினர் அங்கு இருந்ததாகவும் வீடுகள் எரியும்பொழுது உதவிக்காக அவர்களிடம் ஓடியவேளையில் தாம் வேறு வேலைக்காக வந்திருப்பதாகவும், அவர்களுக்கு உதவ முடியாமல் இருப்பதாகவும் தெரிவித்ததாக சாட்சியொருவர் குறிப்பிட்டார்.

இன்னொரு தடவை அவ்வாறு கேட்கச் சென்றபொழுது "தம்பி இவை நீங்கள் உருவாக்கிய விடயங்கள்; நீங்களாகவே இவற்றைத் தீர்த்துக்கொள்ளுங்கள்" என்று எம்மிடம் சொல்லப்பட்டது.

காடையர்கள் அகன்று சென்ற பின்னர், நெருப்பும் அணைக்கப்பட்ட பின்னர் பெண்களையும் சிறுவர்களையும் பள்ளிவாசலுக்கு அவர்கள் நகர்த்தினர். அதற்குப் பின்பு உடைக்கப்பட்ட வீடு, திறக்கப்பட்ட அலுமாரிகள், பணம் மற்றும் நகைகள் சூறையாடப்பட்ட வீடுகளை விட்டு அவர்கள் சென்றனர்.

எரிந்த வீடுகளிலும் கடைகளிலும் காடையர்கள் துணிகளையும், புத்தகங்களையும், ஏனைய எரியக்கூடிய பொருட்களையும் எடுத்து அவற்றை அறையின் நடுப்பகுதியில் குவித்து அவற்றுக்கு

> தீ வைத்தனர். எடுத்துச் செல்லக்கூடிய பெறுமதிவாய்ந்த பொருட்களாகிய புதிய துணிகளும் இயந்திரங்களும் இன்னும் பொதி உடைக்கப்படாதவையும் எடுத்துச் செல்லப்பட்டன. கடைகளில் இருந்த போட்டோ பிரதி இயந்திரங்கள், ஸ்கேனர், தொலைநகல் இயந்திரங்கள் என்பன கோடரிகளால் நொறுக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட ஒருவரால் சொல்லப்பட்ட, குழு விஜயங்களின்போது நாம் அடிக்கடி செவிமடுத்த குறிப்பு "இது ஒரு பட்டப்பகல் கொள்ளை; இதில் இனம், மதம் என்று எதுவும் இல்லை" என்பதாகும்.

அப்பகுதியில் வாழ்ந்த ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. வீதியின் மறு பக்கத்தில் இருந்த வீட்டுக்கு தீ வைக்கப்பட்ட பொழுது விசேட அதிரடிப்படையினர் மோட்டார் வண்டிகளில் சென்று கொண்டிருந்தனர். அந்த வீடுகள் எரிகின்றன என நான் அவர்களுக்கு காட்டினேன். அதற்கு முன்னரும் கூட சம்பவங்கள் தொடங்கும் பொழுது ஒரு வாகனத்தில் சென்றனர். ஆனால், அவர்கள் அதைக் கண்டுகொள்ளவே இல்லை; பொலிசாரும் அக்கறைப்பட்டுக் கொள்ளவில்லை. எல்லாம் முடிந்த பின்னர் சிங்கள அயலவர்கள் வந்தார்கள். நாங்கள் இங்கே 52 வருடங்களாக வாழ்ந்தோம். எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. நாங்கள் இப்பொழுது கவலையை உணருகிறோம். எனக்கு இப்பொழுது 55 வயது. (அயலவர்களின் உதவியுடன்தான் தீயை அணைக்க முடிந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.)

வன்முறை வெடித்த பின்னர் தமது வீடுகளுக்கு விஜயம் செய்த STF யினர் நடந்துகொண்ட விதம் குறித்து மற்றுமொரு தனிநபர் விபரிக்கையில்,

அவர்கள் தாம் வீடுகளுக்கு பாதுகாப்பு வழங்குவதாகவும் அவர்களைப் பள்ளிவாசலுக்கு செல்லுமாறும் கூறியதாகவும் சொன்னார். அவர்கள் தனிநபர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முடியாது எனவும் ஆனால் வீடுகளைப் பாதுகாப்போம் எனவும் கூறினர். அதன் காரணமாக மக்கள் பள்ளிவாசலுக்கு செல்ல வேண்டியிருந்தது. அவர்கள் திரும்பிவந்து தமது அழிந்த வீடுகளைப் பார்த்தபொழுது, தமது பெறுமதியானவற்றை கொள்ளையடிப்பதற்கும் வீடுகளை எரிப்பதற்கும் காடையர்களுக்கு சுதந்திரம் வழங்குவதற்காகவும் இடங்களை சுத்தப்படுத்துவதற்கும்தான் தம்மை வெளியேற்றி ஏமாற்றினார்கள் என்பதை உணர்ந்தனர்.

கொள்ளையடித்தல் பற்றி இந்த நபர் கூறியதாவது:

> எமது மகளின் திருமணத்திற்காக நாங்கள் சிறிதளவு நகைகளை சேகரித்து வைத்திருந்தோம். அவளுக்காக ஒன்பது பவுண் சங்கிலியொன்று செய்யப்பட்டிருந்தது. எல்லா நகைகளும் அவர்களால் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. வெளிநாட்டில் இருந்து சில செரமிக் பாத்திரங்கள் வந்திருந்தன. அதில் அரைவாசியை அவர்கள் எடுத்துச் சென்று விட்டனர். மிகுதியானவற்றை உடைத்து நொறுக்கி தளத்தில் எறிந்திருந்தனர். பெறுமதியான பொருட்களை வைக்கும் ஒரு பாதுகாப்புப் பெட்டகம் இருந்தது. அவர்கள் அதனை உடைத்து பொருட்களை எடுத்துச் சென்று விட்டனர்.

அதே பகுதியைச் சேர்ந்த மற்றொருவர் கூறியதாவது:

> இது மாலை 6 அல்லது 6.30 மணியளவில் இடம்பெற்றது. அவர்கள் எனது உடைமைகளை எரித்தது மாத்திரமன்றி, எனது வீட்டில் உள்ள பொருட்களைக் கொள்ளையடித்துமுள்ளனர். இரண்டு மாத காலத்திற்குள் எனது மகளுக்கு திருமணம் செய்வதற்கு திட்டமிட்டிருந்தேன். அவளது திருமணத்திற்காக நான் சேகரித்த பணமும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. நான் இப்பொழுது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளேன்.

> எனது சொத்துக்கள், உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் விட்டன. தயவு செய்து இக்கதைகளை அரசாங்கத்திற்கும் ஏனைய முஸ்லிம் சகோதரர்களுக்கும் சொல்லுங்கள்.

மற்றொரு சமயத்தில் இன்னுமொருவர் கூறியதாவது: குற்றமிழைத்தவர்களை தாம் கண்டதாகவும், அயலவர்கள் தங்களுக்கு உதவாதது மாத்திரமல்லாமல், தாக்குதல் நடத்தியவர்களுடன் அவர்கள் நின்றதாகவும் கூறினார்.

> இது எனது வீடு; இது எனது வாகனம். (எரிந்த வாகனத்தையும் வீட்டையும் காட்டி) அவர்கள் எனது உடைமைகள் எல்லாவற்றையும் அழித்து எனது வாழ்வைப் பாழடித்து விட்டனர். ஆனால் இது வெளியாட்களால் செய்யப்படவில்லை. இவை நாம் ஒன்றாக வாழ்ந்த உணவுகளையும் பொருட்களையம் பரிமாறிய அதே ஆட்களால்தான் செய்யப்பட்டது.

காயப்பட்டவரும் விசேட அதிரடிப்படையினரால் உதவி மறுக்கப்பட்டவருமான மற்றொருவர் குறிப்பிட்டதாவது:

> அவர்களுடைய கையில் ஆயுதங்களை வைத்திருந்தனர். அவற்றில் ஒன்றால் நான் தாக்கப்பட்டேன்; எனது தலையில் காயம் ஏற்பட்டது. (தலையைக் காட்டுகிறார்) வைத்தியசாலைக்கு நான் அனுமதிக்கப்பட்டதை நிரூபிக்கும் மருத்துவத் துண்டு இதோ உள்ளது. எனது கையில் அறிக்கை உள்ளது. தலையில் தாக்கப்பட்டபொழுது இரத்தம் வழிந்தது. வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல ஒருவரும் இருக்கவில்லை. ஒரு விசேட அதிரடிப்படை ஜீப் மாத்திரமே இருந்தது. என்னை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு அவர்களிடம் கெஞ்சினேன். அந்தக் கணத்தில் தம்மால் ஒன்றும் செய்ய முடியாது எனக் கூறி விட்டனர்.

மற்றுமொரு பெண் அங்கே சூழவிருந்த ஆயுதப்படையினர் வன்முறையைத் தடுப்பதற்கு எதுவும் செய்யவில்லை என அழுத்தியுரைத்து பின்வருமாறு கூறினார்:

> படையினர் விகாரைக்கு அருகில் நின்றிருந்தனர். இங்கிருந்து 300 மீற்றர் தான். விசேட அதிரடிப் படையினர் இந்தப் பகுதிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவர் என எமக்குச் சொல்லப்பட்டது. ஆனால், சம்பவம் இடம்பெற்றபொழுது அங்கு எவரும் இருக்கவில்லை. விசேட அதிரடிப் படையினரும் இருக்கவில்லை; பொலிசாரும் இருக்கவில்லை. எவரும் இருக்கவில்லை. ஆனால் அவர்கள் எனது கடையை தாக்கும்பொழுது மிக வேகமாக ஒரு பொலிஸ் ஜீப் கடந்து சென்றதை நான் கண்டேன். அதை நான் நன்றாகக் கண்டேன். இந்த சம்பவங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கும் பொழுது விசேட அதிரடிப் படையினரோ பொலிசாரோ எமக்கு உதவிக்கு வரவில்லை. மட்டுமல்ல, அவர்கள் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் எல்லாவற்றையும் உடைத்து எரிக்கும் வரையில் அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒருவரும் வரவில்லை.

குற்றமிழைத்தவர்களின் அடையாளம் பற்றிக் கேட்கப்பட்டபோது அவர்கள் அயல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என அவள் கூறினாள். பல இளம் பையன்கள் அங்கு இருந்ததாக அவள் சொன்னாள். காடையர்களுடன் முரண்பட்டுக் கொண்டு உதவி செய்வதற்கு முற்பட்ட ஏனைய அயவலர்கள் பற்றியும் அவள் பேசினாள். ஆம், அவர்கள் எனக்கு உதவ முன்வந்தார்கள்.

> அந்தக் கும்பலுடன் வாதாடி எம்மைப் பாதுகாத்தார்கள். எங்களுக்கு தீங்கிழைக்க வேண்டாம் என்றும் நாங்கள் நல்லவர்கள் என்றும் அவர்களைத் தாக்க வேண்டாம்

என்றும் அந்தக் கும்பலிடம் சொன்னார்கள். அந்தக் கும்பல் அவர்களை கெட்ட வார்த்தைகளால் ஏசியதுடன் உள்ளே செல்லுமாறு கூறியது. அந்த வீட்டில் ஒரு சிங்களப் பெண் இருந்தாள். அவள் ஒரு கர்ப்பிணி. ஆனால் அவளும் வீதிக்கு வந்து இந்த மக்கள் நல்லவர்கள் அவர்களுக்கு தீங்கிழைக்க வேண்டாம்; அவர்களது உடமைகளுக்கு தீங்கோ சேதமோ ஏற்படுத்த வேண்டாம் எனக் கூறினாள். அந்தக் கூட்டம் அவள் சொன்னதைக் கேட்கவில்லை. முஸ்லிம் வீடுகள் மற்றும் வாகனங்கள் அனைத்தையும் அடித்து சேதமாக்கியது. எனது கடை உடைக்கப்பட்டு எனது கண்களுக்கு முன்னாலேயே சேதமாக்கப்பட்டது.

தம்மை தாக்க முயற்சித்த காடையர்களை விரட்டியவர்களைப் பற்றியும் ஒருவர் சாட்சி கூறிய ஒருவரை நாம் சந்தித்தோம்:

இங்கே பொது பல சேனா ஒரு ஊர்வலத்தை ஏற்பாடு செய்தது. அது கடந்து சென்றபோது பெரிய விகாரை மீது கற்கள் எறியப்பட்டது என்ற குற்றச்சாட்டுடன் ஒரு பெரிய பதற்றம் நிலவியது. அது நடைபெற்றபொழுது நான் வாயில் கதவடியில் நின்றேன். அவ்வேளையில், இந்தப் பக்கத்தில் இருந்து சிங்கள பொதுமக்கள் கூட்டமொன்று கற்களுடனும் தடிகளுடனும் அணிவகுத்து வந்தது. அவர்கள் எல்லோரும் எமக்குத் தெரிந்தவர்கள். அவர்களில் சில பெண்களும் இருந்தனர். நான் வாயில் கதவடியில் நின்று கொண்டிருந்தேன். வீடுகளுக்கு கல்லெறிய வேண்டாம் என அவர்களிடம் கூறினேன். இல்லையம்மா நாங்கள் அடிப்படிச் செய்யவில்லை எனக் கூறி என்னை உள்ளுக்குள் போகச் சொன்னார்கள். அந்தச் சனக் கூட்டத்திலும் சிலர் கற்களை எறியவோ வீடு, பள்ளிவாசல்களுக்குள் நுழையவோ வேண்டாம் என்று

சொன்னார்கள். எனினும், ஒன்றிரண்டு கற்கள் பள்ளிவாசலை நோக்கி வீசப்பட்டன. யார் கற்களை எறிவது எனப் பார்க்க வந்தார்கள். அவர்கள் எதிர்வினை காட்ட மாட்டார்கள் என நாம் எதிர்பார்க்க முடியுமா?

ஆனாலும் அந்த நேரத்தில் பள்ளிவாசலில் மூன்று இளைஞர்களே இருந்தார்கள். அவர்கள் சனக்கூட்டத்திற்கு பின்னே ஓடிவந்து அவர்களைக் கலைத்து அவர்கள் மீது கற்களை எறிய ஆரம்பித்தார்கள். பள்ளிவாசல் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தபொழுது அவர்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பார்கள் என நீங்கள் எதிர்பார்க்க முடியாது. இளைஞர்கள் எதிர்த்து செயற்பட ஆரம்பித்ததால் சனக்கூட்டம் ஓட ஆரம்பித்தது. அவர்கள் ஓடும்பொழுது வாயிற் கதவைத் திறந்து கற்களையும் போத்தல்களையும் இந்தக் காரின் மீது எறிந்தார்கள். இந்த கார் மாத்திரமல்ல, அடுத்த பக்கத்தில் உள்ள எனது சகோதரியின் வீடும் சேதமடைந்தது. வீதியின் அருகில் இருந்த சிகை அலங்கார நிலையம் ஒன்றும் கடைகளும் கல் வீசப்பட்டு நொறுக்கப்பட்டன. இந்த மூன்று இளைஞர்களும் இல்லாதிருந்தால் காடையர் கூட்டம் உள்ளே வந்து காரை தலைகீழாக்கி இருக்கும். அந்த மூன்று இளைஞர்களையும் நாம் குற்றம் சாட்ட முடியாது. அவர்கள் இந்த இடத்துக்கு அப்பால் செல்லவேயில்லை.

வேறொருவர் மஸ்ஜித் வீதியில் வைத்தியசாலை வீதி சந்தியில் சரியாக 6.27 க்கு கூட்டம் கூடியதை தான் கண்டது பற்றிக் கூறுகிறார். (அன்று நோன்பு துறப்பதற்காக அவர் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததன் காரணமாக அவரால் சரியான நேரத்தை குறிப்பிடக் கூடியதாக இருந்தது)

> அண்ணளவாக 20 - 25 பேர் பொல்லுகளையும் தடிகளையும் ஏந்திக் கொண்டு நின்றதாக அவர் குறிப்பிடுகிறார். இந்தக் கும்பல் தர்கா நகரத்தில் அளுத்கம, மத்துகம வீதி வழியாக ஊர்வலம் சென்றவர்களில் இருந்து வேறுபட்டிருந்தது. அங்கே கூடியிருந்த கும்பலுக்கு சிவப்பு சட்டையும் காற்சட்டையும் அணிந்திருந்த ஒரு பெண் தலைமை தாங்கினாள். கனேகம பகுதியில் அவர் அடிக்கடி காணுகின்ற ஒரு பெண்ணே அவள்.

இந்தப் பிரளயத்தில் சிறிய களஞ்சியம், மருந்தகம், இரண்டு வாகனங்கள், அவருடைய வீடு என்பவற்றை இழந்த மற்றுமொருவர் தனது அனுபவத்தை விபரித்தார்.

> பொலிசாரும் விசேட அதிரடிப் படையினரும் முழுமையாகப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது தனது வான் காடையர்களால் அழிக்கப்படுவதை தான் பார்ப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். அவர்கள் இரும்புகளாலும் தடிகளாலும் தனது வானை அடித்ததாகவும் கண்ணாடிகளை உடைத்ததாகவும் அதனைத் தள்ளிவிட்டு பந்தங்களை எறிந்து எரியச் செய்ததாகவும் குறிப்பிட்டார். வாகனத்திற்கு தீவைத்த மனிதனின் முகத்தை தன்னால் அடையாளம் காண முடியவில்லை எனவும்; ஆனால், அச்செயலைச் செய்த பின்னர் பொலிஸ்காரர் ஒருவர் அவனை இழுத்துச் சென்றதைக் கண்டதாகவும், அந்த இடத்தை விட்டு அகலச் செய்ததைக் கண்டதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் தான் விசேடமாக இலக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் சொன்னார். காடையர்கள் வீட்டுக்குள் பாய்ந்து தனது தரிப்பிடத்தில் நின்றிருந்த இன்னொரு வாகனத்தை எரித்தனர். இது வெளிப்புறத்திற்கு கண்ணால் காணக்கூடியதாக இருக்கவில்லை. உள்ளூர் மக்களிடமிருந்து முஸ்லிம் மக்களின் சொத்துக்கள் குறித்து அவர்கள் தகவல்களைப் பெற்றிந்தனர்.

அந்தப் பகுதி முஸ்லிம்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள பலமுடையவர்களாக இருந்ததாக அவர் குறிப்பிட்டார். ஆனால் அவர்கள் விசேட அதிரடிப் படையினரில் நம்பிக்கை வைத்திருந்தடன் அவர்களுக்கு சொல்லப்பட்ட அனைத்தையும் நம்பியிருந்தார்கள். இதன் விளைவாக கிராமத்தில் இருந்தான எல்லா முஸ்லிம்களும் பள்ளிவாசலில் பொறியில் அடைக்கப்பட்டதுடன் தனிமைப்படுத்தப்பட்டார். எந்த முஸ்லிமும் ஊடரங்குச் சட்டத்தின்பொழுது நகர அனுமதிக்கப்படவில்லை. "ஆனால் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்த போதிலும் எங்களது கண்ணுக்கு முன்னாலேயே ஏனைய மக்கள் சுதந்திரமாக திரிந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. மோட்டார் சைக்கிள்கள் அங்கும் இங்கும் ஆட்களை ஏற்றிக்கொண்டு திரிந்ததை எம் கண்ணாலேயே நாம் கண்டோம். அதேவேளையில் எமக்கு வீதியைக் கடக்கக்கூட அனுமதிக்கப்படவில்லை."

இந்தத் தாக்குதல் முஸ்லிம்களின் பொருளாதாரத்தின் மீது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதல் என்பது மிகத் தெளிவானது என்று அவர் குறிப்பிட்டார். வெற்றிகரமாக வியாபாரத்தை செய்யவும் ஒரு கண்ணியமான வாழ்வைக் கொண்டு செல்லவும் தாம் சிரமப்பட்டு உழைத்ததாக அவர் குறிப்பிட்டார். ஆனால் இந்தச் சம்பவமானது அவரது வாழ்வில் பெரிய தடையைப் போட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் எங்களுக்கு இந்தப் பாதையை சரிப்படுத்துவதற்கு பொறுப்பெடுக்க வேண்டும். இதை மாத்திரமே அவர் கூறினார்.

## இராணுவ வீதி

தர்கா நகர இராணுவ வீதியில் தனியாக வாழும் மத்திய தர வயது முதிர்ந்த முஸ்லிம் பெண் ஒருவர் கூறிய கதை பின்வருமாறு:

யன்னல்கள் நொறுக்கப்படும் சப்தம் கேட்டபொழுது நான் வீட்டில் தொழுது கொண்டிருந்தேன். எனது உறவினர்கள் இங்கு பிரச்சினை எழலாம் எனக் கூறியிருந்தனர். நான் படுக்கை அறைக்குள் என்னை இட்டு பூட்டிக் கொண்டேன். ஆனால் அவர்கள் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்தனர். அன்றைய தினம் எனது வீட்டில் 500 காடையர்கள் நின்றிருந்தனர். அவர்கள் எல்லாவற்றையும் உடைத்தனர். கூட்டில் இருந்த பறவைகளைக் கூட கொன்றனர். தந்தையின் படத்தையும் அவர்கள் நொறுக்கினர்.

அவர்களுடன் நான் பேசியதால் காப்பாற்றப்பட்டேன். அவர்களுடன் பேச எனக்கு எங்கிருந்து பலம் வந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர்களோடு பேசக்கூடியதாக இருந்தது. அவர்கள் என்னைத் தொடவில்லை. நான் மிகவும் நன்றியுடையவளாக இருக்கின்றேன். சிலர் என்னைத் தாக்க முற்பட்டபொழுது சிலர் அவள் அப்பாவி என்றனர். ஆகவே அவர்கள் இதயத்திலும் ஒரு மென்மை இருந்திருக்க வேண்டும். எவரும் இன்றி எவ்வாறு நான் வீட்டை விட்டு வெளியே நடந்தேன் என்று எனக்குத் தெரியாது. இராணுவ வீதியிலிருந்து 100 அடிகள் அப்பாலிருந்த விசேட அதிரடிப் படையினரிடம் என்னை ஒப்படைத்தனர். நான் அப்பாவி எனவும் என்னைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்லும்படியும் கூறினர். விசேட அதிரடிப் படையினர் நான் எங்கு போக வேண்டுமென்று கேட்டனர். ஆச்சரியமான விதத்தில் என்னுடைய நண்பி ஒருவரின் ஞாபகம் வந்தது. அவர்கள் என்னை அங்கே அனுப்புவதாகக் கூறினர். என்னால் தனியே போக முடியாது என்று சொன்னேன். நான் எங்கும் தனியாகப் போனதில்லை. அப்பொழுது அங்குள்ள பொறுப்பதிகாரிகளில் ஒருவர் தான் தனிப்பட்ட முறையில் என்னை நண்பியின் வீட்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்தினார்கள். அவர்கள் எனக்காக வருந்தியிருப்பார்கள்.

என்னுடைய பெற்றோர் உயிரோடிருந்தால் இந்தத் துன்பங்கள் நேர்ந்திருக்க மாட்டாது. அவர்கள் என்னைக் கவனமாக கவனித்திருப்பார்கள். நான் அப்பாவி. இது ஏன் நடந்தது என்று எனக்குத் தெரியாது.

இராணுவ வீதியில் போக்குவரத்து வியாபாரத்தில் ஈடுபடும் கடுமையான பொருளாதார இழப்பினால் துன்பப்பட்ட ஒரு தந்தையுடனும் மகனுடனும் நாம் பேசினோம். அவர்கள் தமது சொத்துக்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக காடையர்களுடன் காரணம் கேட்டு முயற்சித்தனர். அத்துடன் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களுடன் சண்டையிடவும் முயற்சித்தனர். அவர்கள் பின்வருமாறு விபரித்தார்கள்:

**தந்தை:**

பி.ப. 7.00 மணியளவில் வாயில் கதவை உடைத்துக் கொண்டு வீட்டிற்குள் வந்தார்கள். எம்மால் முடிந்தளவு அவர்களை தடுக்க முயற்சித்தோம். அவர்களுடன் பேசினோம். வாகனத்திற்கோ வீட்டிற்கோ தீ வைக்க வேண்டாமென நான் கெஞ்சிக் கேட்டேன். ஆனால் அவர்கள் கெட்ட வார்த்தையால் எம்மை ஏசினர். நாம் அவர்களுடன் எதிர்த்துப் போராட முயற்சித்தோம். ஆனால் கும்பல் பெரிதாக இருந்தது. நானும் எனது மகனும் தப்பிப் போக முயற்சித்தபொழுதிலும் நாம் இருவரும் போராட்டத்தில் காயமடைந்தோம். அவர்கள் எமது வளாகம் முழுதும் ஓடி அவர்கள் கண்ட அனைத்தையும் அழித்தனர். இரண்டு மோட்டார் சைக்கிள்களில் இருந்து எரிபொருளை எடுத்து வளாகத்தில் இருந்த வான்கள் லொறிகளுக்கு தீ வைத்தனர். அவர்கள் எமது பெறுமதியானவற்றை களவெடுத்து அனைத்தையும் அழித்தனர். எங்களது ஆவணங்கள், உறுதிகள், பிறப்புச் சான்றுப் பத்திரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு விட்டது.

**மகன்:**

எனது தந்தை தனது சொந்தக் காணியில் 40 ஆண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறார். நாங்கள் நீண்டகாலமாக இந்தப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறோம். அவர்கள் இந்த இடத்தை அழித்த பொழுது 7 வாகனங்களையும் 3 மோட்டார் சைக்கிள்களையும் முழு வீட்டையும் அழித்தனர். எமக்கு உடை அணிவதற்கு கூட எதுவும் இல்லை. அவர்கள் எமது பெறுமதியான பணம், நகை என்பவற்றைக் கொள்ளையடித்தனர். இந்த வீட்டில் இருந்து எடுக்கக்கூடிய எல்லாவற்றையும் அவர்கள் எடுத்து விட்டார்கள். அவர்களுடைய நோக்கம் எம்மிடம் உள்ள எல்லாவற்றையும் கொள்ளையடிப்பதும் களவெடுப்பதும் அழித்துவிடுவதும் தான். அத்துடன் எம்மைக் கொல்லுவது பிரதான நோக்கமாக இருக்கவில்லை. தாக்குதல் இரவு 7.00 மணியளவில் இடம்பெற்றது. 50-60 ஆட்கள் எமது வீட்டைச் சூழ்ந்துகொண்டு இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர். எனது தந்தையும் நானும் அவர்கள் வீட்டிற்குள் வருவதைத் தடுப்பதற்கு போராடினோம். அவர்கள் உள்ளே வருவதற்கு 3 மணித்தியாலங்கள் எடுத்தது. எனது குடும்பத்தினர் வீட்டுக்குள்ளே அடைபட்டிருந்தனர். அதன் காரணமாகத்தான் அவர்களோடு நாங்கள் போராடினோம். அதனால்தான் இது நீண்டநேரமும் எடுத்தது.

இராணுவத்தினரும் பொலிசாரும் வரவேயில்லை. விசேட அதிரடிப்படையினரும் அங்கு இருக்கவில்லை. ஒரு காவலாளியோ ஒரு பொலிஸ்காரனோ அங்கு இருந்திருந்தால் நாம் எல்லாவற்றையும் பாதுகாத்திருக்க முடியும். எங்களது வாயில் கதவு ஒரு கல்லால் கூட தாக்கப்பட்டிருக்க மாட்டாது. (இந்த உராய்வுகளையும் புண்களையும் பாருங்கள்.) தலையில், தோளில், நெஞ்சில், தொடைகளில் இருப்பதைக் காட்டுகிறார்) என்னுடைய தந்தையார் கூட கற்களாலும் இரும்புக் கம்பிகளாலும் தாக்கப்பட்டார்.

அவர் ஒரு இருதய நோயாளி. அண்மையில் அவருக்கு இருதய சத்திரிசிகிச்சை இடம்பெற்றது. அவர் எந்தவித மருந்து சிபார்சு சிட்டையும் இல்லாமல் பனடோலையும் சில நோ நீக்கிகளையும் எடுத்து வருகிறார். இப்பொழுது எங்களால் அது கூட முடியாது. எமது அடையாள அட்டைகளையும் நாம் இழந்து விட்டோம்.

அவர்களில் சிலர் சூழ உள்ளவர்கள் என நான் நினைக்கிறேன்; ஏனையோர் அந்நியர்கள். அவர்களை இதற்கு முன்னர் நான் கண்டதில்லை. நாங்கள் முஸ்லிம்களோடு மாத்திரமல்ல, சிங்களவர்களோடும் நெருக்கமாக இருந்தோம். அவர்கள் வெறுப்புடன் புகைந்து கொண்டிருக்கிறார்கள் என நாம் உணர்ந்திருக்கவில்லை. முஸ்லிம்களோ சிங்களவர்களோ எல்லோரும் மக்கள். இலங்கையில் இந்த விதமாகவா மக்களை நடத்துகிறார்கள்? என்னுடைய குடும்பத்தினர் உள்ளே அடைபட்டிருந்தபொழுது அவர்களை வீட்டிற்கு வெளியே அனுப்ப எங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இராணுவ வீதியில் இருந்து மற்றொருவர் குறிப்பிடும்பொழுது:

அவர்கள் இரவு 7.00 மணியளவில் வீடுகளை நொறுக்க ஆரம்பித்தார்கள். விசேட அதிரடிப் படையினர் சந்தியில் நின்று கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் சென்று வீடுகளை நொறுக்கிக்கொண்டு காடையர்கள் முன்னேறுகிறார்கள். ஆகவே தயவுசெய்து அந்த இடத்திற்கு வருமாறு கேட்டேன். தாம் விடயங்களைக் கவனித்துக் கொள்ளுவோம் என்று அவர்கள் என்னைத் திரும்பிப் போகச் சொன்னார்கள். அவர்கள் வராதபொழுது இரண்டாவது தடவை நான் அங்கு சென்றேன். அவர்கள் அது குறித்து கவனம் எடுக்கவில்லை. கெட்ட வார்த்தையால் என்னை ஏசினர். “உன்னுடைய அம்மா ………… (கெட்ட வார்த்தை) இங்கிருந்து தொலைந்துபோ”

எனக் கூறினர். மூன்றாம் தடவை அவர்களிடம் நான் சென்று கூறியபோது அதே கெட்டவார்த்தையைக் கூறி என்னை எச்சரிக்கை செய்தனர். வேறொரு ஆள் எனக் காட்டுவதற்காக எனது சேட்டை மாற்றிக் கொண்டேன். அதேவேளை, காடையர் வீட்டை அடித்து நொறுக்கி அதற்குத் தீவைத்தனர்.

எமது பையன்கள் ஒன்றாகக் கூடி தாக்குதல் நடத்தியவர்களை விரட்டினர். அதன் பின்பு அவர்கள் அங்கிருந்து விலகினர். தாக்குதல்காரர் ஓடிய அதே பக்கத்தில் இருந்து அதிரடிப்படையினர் வந்தனர். விசேட அதிரடிப்படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். ஆனால் அது எங்களை நோக்கி இருந்ததே தவிர தாக்குதல் நடத்தியவர்களை நோக்கி இருக்கவில்லை.

தனது பிள்ளைகளுடன் வீட்டிற்குள் அடைபட்டிருந்த ஒரு பெண்ணின் சாட்சியம்:

மாலை 6.00 மணியளவில் திடீரென ஒரு கூட்டம் எங்களது வாயில் கதவில் கற்களை வீசத் தொடங்கி இரும்புச் சட்டங்களால் அடித்தது. எனது இரண்டு பிள்ளைகளுடன் அந்த நேரத்தில் நான் வீட்டில் தனியாக இருந்தேன். அதில் ஒருத்தி சிறு பெண்ணாக இருந்தாள். மற்றவர் ஒரு சிறிய பையன். நாம் பயந்து குளியல் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டோம். அதற்குப் பின்பு அவர்கள் சென்று விட்டு மீண்டும் வந்தார்கள். அவர்கள் வந்து கெட்டவார்த்தைகளால் எம்மை ஏசினர். அவர்கள் கடும் கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தியதுடன் அவர்கள் ஆயுதங்களுடன் தாம் வந்திருப்பதாகவும் எம்மைக் கொல்ல வந்திருப்பதாகவும் கத்தினர். அத்துடன் எம்மை எப்படியும் கொல்லுவோம் என்றனர். சிறிது நேரத்திற்கு பிற்பாடு நாம் பலர் கத்துவதைக் கேட்டோம். அத்துடன் யன்னல்கள்

உடைக்கப்படுவதையும் கதவுகள், அலுமாரிகள், தளபாடங்கள் உடைக்கப்படுவதையும் நாம் கேட்டோம். அதற்குப் பின்பு எமக்கு என்ன நடைபெறுகிறது எனப் புரியவில்லை. திடீரென நெருப்பினதும் சுவாலையினதும் சத்தத்தை உணர்ந்தோம். தாம் தீ வைத்துள்ளதாகவும் எம்மை ஒளித்து இருக்காமல் வெளியே வந்து போராடுமாறும் அவர்கள் கத்தினார்கள். சுவாலைகள் வெடித்துப் பரவும் சத்தத்தை நாம் கேட்டோம். எங்களிடம் தப்புவதற்கு ஒரு வழியும் இருக்கவில்லை. எமது பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதி நாம் வெளியே வரவும் இல்லை. நான் அல்லாஹ்விடம் அழுது மன்றாடினேன். இந்த வழியில்தானா நீ எமது கதையை முடிக்கப் போகிறாய்? இதுதானா (உனது) கருணை என்று அவனிடம் மன்றாடிப் பிரார்த்தித்தேன். அந்த நேரத்தில் எனது மகன் நாங்கள் கொல்லப்படப் போகிறோமா எனக் கேட்டான். அவனிடம் சொல்வதற்கு என்னிடம் பதில் இருக்கவில்லை. அல்லாஹ்விடம் மன்றாடும்படி சொன்னேன். அவன் மாத்திரம்தான் எம்மைக் காப்பாற்றுவான்; இல்லாவிட்டால் நாம் இறந்துவிடுவோம் என்று சொன்னேன். அப்போது எனது மகளும் இறப்பதற்கு முன்னான எமது இறுதிப் பிரார்த்தனையைக் கேட்போம் என்றாள். (பின்பு நாம் ஒருவாறு வீட்டுக்கு வெளியே வந்தோம்.)

### பத்திராஜகொட

பத்திராஜ கொடவிலுள்ள பாதிக்கப்பட்ட சிங்களக் குடும்பங்களிடம் நாம் விஜயத்தை மேற்கொண்டோம். அங்கே ஆறு சிங்களக் குடும்பங்கள் இருந்தன. அவர்கள் ஒருவர் ஒருவருடன் உறவுடைய மேசன் தொழில் செய்யும் குடும்பங்கள். அவர்களுடைய வீடுகள் 15 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு தாக்கப்பட்டன. சுமார் 250 பேர் எமது இடத்திற்கு வந்து நான்கு குழுக்களாகப் பிரிந்து வீடுகளைத் தாக்கத் தொடங்கியதாக அவர்களில் ஒருவர் குறிப்பிட்டார். தங்களுள் 12

பேர் தம்மை ஓர் அறைக்குள் பூட்டிக் கொண்டதாகவும் காடையர்கள் என்ன செய்கிறார்கள் என அறிந்திருக்கவில்லையெனவும் ஒரு பெண் கூறினாள். கும்பலானது நான்கு குழுக்களாகப் பிரித்து நான்கு வீடுகளையும் தாக்கியது என ஒரு ஆண் தெரிவித்தார். அந்த ஆட்களில் சிலர் வெளியிடத்தை சேர்ந்தவர்கள். சில தாக்குதல்காரர்கள் எமக்குத் தெரிந்தவர்கள். அவர்கள் அயற்பகுதியை சேர்ந்த முஸ்லிம்கள் என்று அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டனர். ஏனையோரைத் தான் குரலில் இருந்து தெரிந்து கொண்டதாகவும் கூறினர். எம்மவர்களில் சிலர் அறையில் ஒளித்திருந்தனர்; சிலர் ஓடிவிட்டனர். அவர்கள் திரும்பிவந்தபொழுது வீடுகள் எரிந்திருந்தன. வீடுகளில் எரியும் ரயர்களை அவர்கள் கண்டதாக அவர்கள் கூறினர்.

அவர்கள் மீதான தாக்குதலுக்கு மிக அயலில் உள்ள முஸ்லிம்களே பொறுப்பு என அவர்கள் கூறினர். தனிப்பட்ட தகராறே இந்த வன்செயலை உருவாக்கியுள்ளது என அவர்கள் உணருகின்றனர். வேலை தொடர்பாக தமது அயலவர்களுடன் எதிரிகள் இருந்ததாகவும் காணி விடயமாக நீதிமன்ற வழக்குகள் இருந்ததாகவும் அவர்கள் கூறினர். கும்பலாலானது 2 அல்லது 3 தடவைகள் வந்திருப்பதாக தெரிவதாக அவர்கள் குறிப்பிட்டனர். முதலாவது கும்பலின் நெருப்பை அவர்கள் அணைத்ததாகவும் அதற்குப் பின்பு விகாரைக்கு சென்றுவிட்டதாகவும், ஆனால் வீட்டுக்குத் திரும்பி வந்தபொழுது வீடுகள் எரிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தனர். பணம், நகை களவாடப்பட்டு பல்லைக்கழக இரண்டாம் ஆண்டு மாணவன் ஒருவனுக்குச் சொந்தமான உடமைகள், புத்தகங்கள் என்பனவும் அழிக்கப்பட்டிருந்தன.

இதற்கு முன்னரும் இது போன்ற இனக் கலவர சம்பவங்கள் நடந்திருந்தபோதும், மக்கள் தமது வீடுகளை கடந்து செல்லக் கூடியதாக இருந்தது. இதற்கு முன்னர் அவர்களை எவரும் தாக்கவில்லை. தமக்கு இத்தகைய சம்பவம் நேரும் என தாம் எதிர்பார்க்கவில்லை என அவர்கள் கூறினர்.

மேசன் தொழில் செய்வோர் என்ற வகையில் தர்கா நகர முஸ்லிம் மக்களிடமிருந்து தமக்கு தொழில் கோரிக்கைகள் பலவற்றை அவர்கள் பெற்றுக்கொள்வதாக தெரிவித்தனர். அவர்களது வீடுகளைத் தாமே கட்டியதாகவும் தெரிவித்தனர். அவர்கள் குறிப்பிட்டு பேசும் அவர்களது முஸ்லிம் எதிரிகளைக் காட்டிலும் அதிக வேலைகளைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். தாம் அவர்கள் கல்வி கற்றவர்கள் அல்ல எனவும் கூறினர். முஸ்லிம் நகரத்தில் இருந்து அவர்கள் ஒருவித நன்மதிப்பையும் ஒருவித மரியாதையையும் கொண்டிருந்ததாக அவர்கள் கூறினர். அவர்களது வீடுகளுக்கு முன் கதவாலே சென்று பின் கதவாலே வரும் அளவிற்கு அவர்களுடன் நெருக்கம் இருந்தது. ஆனால் இப்பொழுது அவை எல்லாம் சென்று விட்டன என அவர்கள் கூறினர். முஸ்லிம்கள் தமக்கு வேலை தரமாட்டார்கள் எனக் கேள்விப்பட்டதாக அவர்கள் கவலைப்பட்டனர். அவர்கள் விகாரைகளில் இருந்தும் மூன்று தடவைகள் அரசாங்கத்திடமிருந்தும், சர்வோதயவிடமிருந்தும் உதவி பெற்றுள்ளனர். இதற்கு முன்னர் எந்தவிதப் பிரச்சினையும் இருக்கவில்லை என அவர்களில் ஒருவர் கூறிய அதேவேளை, இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் காரணமாக இருந்தது பொது பல சேனா கூட்டமே என வேறுபட்ட ஒரு பார்வையைத் தெரிவித்தனர். போயா தினத்தன்று ஒரு பிக்கு தாக்கப்பட்டதனாலேயே இந்த நிகழ்வுகள் யாவும் இடம்பெற்றதாக மற்றுமொருவர் குறிப்பிட்டார். அப்படியான ஒன்றுக்கு எவ்வாறு ஒரு பதிற்செயற்பாடு காட்டாது இருப்பார்கள் என அவர் கூறினார். அளுத்கம பொலிசார் கூட முறைப்பாட்டை எழுதவோ தாக்குதல்காரரை கைது செய்யவோ எதுவும் செய்யவில்லை. பிக்குவை காத்திருக்க வைத்ததன் மூலம் பிக்குவானவர் அவமானப்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். அளுத்கம பொலிசார் முஸ்லிம்களுக்கு ஆதரவு அளித்திருப்பதான ஒரு பார்வை அவரிடம் இருந்தது. தாம் ஊர்வலத்தில் பங்குபற்றியதாக நினைத்ததினாலே தாம் காடையர்களால் இலக்கு வைக்கப்பட்டதாக அவர்கள் உணர்ந்தனர். தாக்குதல்காரர்களிடம் அவர்கள் நாங்கள் ஊர்வலத்திற்கு செல்லவில்லை; எம்மைக் காயப்படுத்த வேண்டாம் என தாம் அவர்களிடம் சொல்லியதாக எம்மிடம் கூறினர்.

முஸ்லிம் குழுக்களிடம் நாம் அறிந்துகொண்டதற்கு சமதையாகவே தாக்குதல் பாணிகள், தாக்குதல் மூலங்கள் எல்லாம் இருந்துள்ளன. தாக்குதல் நேரமாகிய 6.45 மற்றும் அதையொட்டியவை இந்த வீடு யாருக்குச் சொந்தமானது எனக் காட்டுவதற்கு உள்ளூர் மக்கள் அணிதிரட்டப்பட்ட உண்மை, 200 பேர் அளவில் குழுவில் வந்திருப்பது, வீடுகளை எரிப்பதற்கு ரயர்களைப் பயன்படுத்தியது முதலானவை ஏனைய இடங்களில் இருப்பதைப் போன்ற ஒத்த விபரிப்புக்களாக இருப்பது அச்சம் ஏற்படுத்துவதாகவும் அறிய ஆர்வம் மிக்கதாகவும் உள்ளது. அந்தக் காடையர்கள் முஸ்லிம்கள் தான் என்பதில் சிங்கள மக்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை.

எவ்வாறாயினும், அப்பகுதியில் இருந்து ஆறு வீடுகளையும் தவிர வேறு எந்த வீடுகளும் தாக்கப்படவில்லை. தாக்குதலின் நேரத்தைப் பார்க்கும்பொழுது இந்த தாக்குதலானது முஸ்லிம் வீடுகளின் மீதான தாக்குதலுக்கு எதிராக செய்யப்பட்ட தாக்குதல் எனவும் தெரியவில்லை.

வெலிப்பிற்றியவை தவிர ஏனைய இடங்களில் நடந்த தாக்குதல்களுடன் ஒரே நேரத்தில் இது இடம்பெற்றுள்ளது. இந்த சமயத்தில் கூட மின்சாரம் இருக்கவில்லை. தாக்குதல்காரர்கள் கொண்டு வந்த வெளிச்சத்தின் சக்தியுடன் வெறும் இருட்டிலேயே இடம்பெற்றிருக்கிறது. குருட்டு வெளிச்சங்கள் அவர்களது முகத்தை கூட தெரியச் செய்யாதிருந்தது என எமக்கு சொல்லப்பட்டது. அவர்களது குரல்களாலேயே தமது அயலவர்களை அவர்கள் இனம்கண்டு கொண்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

### அதிகாரிகொட

தாக்குதலுக்குப் பிற்பாடு உடனடியாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் குடும்பங்களுடன் அதிகாரிகொடவில் நடத்தப்பட்ட நேர்காணல்களில்

பெற்றுக் கொள்ளப்பட்டவை கீழே உள்ளன. பிரதேசத்தில் இருந்து கண்டறியப்பட்டவற்றுள் தலையிடுவதற்கு விசேட அதிரடிப் படையினர் மறுத்தமை, வீடுகளில் இருந்து தொடர்ச்சியாகப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டமை, அவர்கள் வீட்டிலிருந்து சோபா, கதிரை பஞ்சணைகள், மற்றும் உடைகள் புத்தகங்கள் அல்லது பாவித்த ரயர்கள் என்பவற்றிலிருந்து எரிபொருட்களைப் பயன்படுத்தியுள்ளமை பிரதானமானவை. ஒரு சந்தர்ப்பத்தில் சிங்கள அயலவர்களின் வீடுகளில் இருந்தான ரயர்களை அவர்கள் தமது வீடுகளுக்குத் தீவைக்கப் பயன்படுத்தியதாக ஒரு பெண் குறிப்பிட்டாள். காடையர்களுக்கு அவர்கள் கொடுத்தனரா அல்லது அவற்றினை களவாடினார்களா என நிச்சயமாக அவள் அறிந்திருக்கவில்லை.

அதிகாரிகொட சாட்சியங்களின் விபரிப்புக்கள் பின்வருமாறு:

> நாம் பொலிசாருக்கு அறிவித்தோம். தர்கா நகரில் உள்ள விசேட அதிரடிப் படையினருக்கு அறிவித்தபொழுது அவர்கள் ஆயுதத்தை எமது நெஞ்சில் வைத்து, தரக்குறைவான முறையில், தாம் விடயங்களைப் பார்த்துக் கொள்வதாகவும் எம்மைத் தொலைந்து போகும்படியும் கூறினர். நாம் வெளியே வந்து சண்டைபிடிக்க விரும்பவில்லை. ஆனால், எமது வீடுகளுக்கு தீ வைக்கப்படுகின்றது; அவற்றை நாம் பாதுகாக்க வேண்டுமெனக் கூறினோம். பதிலாக அவர்கள் அந்த விடயங்களைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அவை அழிக்கப்பட மாட்டாது எனவும் ஆனால் நீங்கள் வெளியே வந்தால் நாங்கள் உங்களை சுடுவோம் எனவும் கூறினர். ஆகவே, நாம் உள்ளூர் மக்களிடம் பாதுகாப்பு கேட்டோம். பொலிஸ் அவசர அழைப்பு எண் 119 இற்கு அழைப்பு எடுத்தோம். அவர்களும் வருவோம் வருவோம் என சொன்னார்கள். ஆனால் வரவே இல்லை.

அவர்கள் அலுமாரிகளை சுத்தம் செய்து பெறுமதியான அனைத்தையும் எடுத்துக் கொண்டார்கள். எமது வீட்டின் நடுவில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கும் சுவர் உள்ளது. இந்தப் பக்கத்தை கொள்ளையடித்த பின்னர் சுவருக்கு மேலே ஏறி அடுத்த பகுதிக்கு சென்றனர். அந்த நேரத்தில் எந்த ஆணும் வீட்டில் இருக்கவில்லை; பெண்கள் மாத்திரமே இருந்தனர். 15 பெண்கள், 4 இளம் பெண்கள். அவர்களுள் மூவர் சிறு குழந்தைகளுடன் இருந்தனர். சில வயது முதிர்ந்த பெண்களும் இருந்தனர். எனது சிறிய தாயார் 3 இளம் பிள்ளைகளைக் கொண்டிருந்தார். அதிலும் ஆக இளையவர் சில மாதங்கள் வயதுடையவர். அவர்கள் சிறு பிள்ளைகளை அழைத்து இழிவுபடுத்தும் வகையில் உங்களது வீட்டை நாங்கள் எரிக்கப் போகின்றோம். வேண்டுமென்றால் உங்களது பொருட்களை நீங்கள் வந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினர். அவற்றைச் சொல்வது அவர்களுக்கு வேடிக்கையாக இருந்ததுடன் சவால் விடுவதாகவும் இருந்தது. அதிஷ்டவசமாக அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான். அவர்கள் முன்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தால் காடையர்கள் அந்தப் பெண்களை வன்புணர்வு செய்திருப்பர்.

இளம் பெண்ணுடனான நேர்காணல்:

அவர்கள் 50-60 பேர் இருந்தனர். அவர்கள் அனைவரும் இளம் ஆட்கள். அவர்கள் சப்பாத்துக்கள் அணிந்திருந்ததுடன்தமது முகங்களை தலைக்கவசங்களால் மூடியிருந்தனர்.[69] இதைப் பற்றி எல்லாம் பொலிசாருக்கு நாங்கள் அறிவித்தோம். ஆனால் இதில் அவர்களுடைய கையும் இருந்துள்ளது. எம்மைத் தாக்குமாறு அவர்கள் தாக்குதல்காரருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களிடையே ஒரு பிக்குவும் காணப்பட்டார்.

[69] அதிகாரிகொடவில் தலைக்கவசங்கள் விற்கும் ஒரு கடை உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டதாக நாங்கள் பின்பு கேள்வியுற்றோம்.

அந்தப் பகுதியில் எரிக்கப்பட்ட ஒரு பெரிய வீட்டின் சொந்தக்காரர்:

வீட்டுக்கான சேதம் 110 மில்லியனாக மதிப்பிடப்படுகிறது. எனது மருமகன் நகை வியாபாரம் செய்கின்றார். நான் பொய் சொல்லவில்லை. என்னிடம் 30,000/- காசாக இருந்தது. எனது மகள் ஆடைத் தொழிற்சாலைக்காக பைகள் செய்கிறார். அவரிடம் அந்த நேரத்தில் 7 இலட்சம் பெறுமதியான இருப்பு இருந்தது. அவர்கள் அதனை கொள்ளையடித்து விட்டனர். ரூபா 50,000/-, 80,000/- மற்றும் 110,000/- பெறுமதியுடைய நான்கு ஐந்து வகை ஜுக்கி தையல் இயந்திரங்களை அவர் அப்பொழுது வைத்திருந்தார். அவர்கள் நல்ல இயந்திரங்களையும் நல்ல பாகங்களையும் அகற்றியதுடன் மிகுதியானவற்றுக்கு தீவைத்துள்ளனர். எனது மகன் வெளிநாட்டில் இருந்து வந்தவர். நல்ல பொருட்களைக் கொண்டு வந்திருந்தார். அவரது சகோதரின் திருமணத்திற்காக 20 இலட்சம் பெறுமதியான பொருட்களைக் கொண்டு வந்திருந்தார். ஒன்றும் விட்டு வைக்கப்படவில்லை. அவர்கள் எல்லாவற்றையும் கொள்ளையடித்து விட்டார்கள். ஆகவே, இவை அனைத்தையும் கணிப்பிட்டுப் பார்ப்போமாயின், உதாரணமாக தையல் இயந்திரங்கள் மாத்திரமே 15 மில்லியன்கள் நட்டமடைந்துள்ளது. எனது மருமகனின் நகை 40 மில்லியன் பெறுமதி உள்ளது.

அங்கே ஒரு மேசை இருந்தது. அதில் எனது மகன், மருமகன் மற்றும் மகளின் கணக்குப் பதிவுகளுடன் கூடிய புத்தகங்கள் பரவியிருந்தன. இவை நெருப்பு வைக்கப்பட்டு விபரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த கணக்குகளின் இழப்பு காரணமாக அவர்கள் கண்ணீருடன் இருக்கிறார்கள்.

ஏனெனில் அவர்களுக்கு வரவேண்டியவற்றை மதிப்பீடு செய்ய முடியாதவர்களாக தற்போது இருக்கிறார்கள். அவர்கள்

எல்லாவற்றுக்கும் தீ வைத்தார்கள். தொலைக்காட்சி, கணினி என்பவற்றுக்கு கூட தீ வைத்துள்ளார்கள். எனது மகளுக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்ட புதிதாக கட்டப்பட்ட வீடு. 7 அலுமாரிகள் இங்கே இருந்தன. ஒரு உடைந்த உடுப்பு அலுமாரி மாத்திரமே விட்டு வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் வரவேற்பறையில் உள்ள இருக்கைகளைக் கூட எடுத்துச் சென்று விட்டனர். எனது மகளின் நகை மற்றும் பணத்தையும் கொள்ளையடித்து விட்டனர்.

நான் உங்களுக்கு குளியலறையைக் காட்டுகிறேன் பாருங்கள். அவர்கள் குளியலறைப் பொருத்திகளைக் கூட அகற்றிவிட்டார்கள். (குளியலறை, வீட்டின் பின்பகுதியைக் காட்டுகிறார் அங்கே 6 அல்லது 7 இயந்திரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.)

அவர்கள் சீருடையில் இருந்தனர். அவர்கள் சப்பாத்துக்களையும் தலைக் கவசங்களையும் அணிந்திருந்தனர். அவர்கள் ஆயுதங்களை வைத்திருந்தனர். எம்மால் அவர்களுக்கு எதுவும் செய்ய முடியவில்லை.

அதிகாரிகொடவில் இருந்து ஒரு பெண்:

ஜூன் 15ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் நாங்கள் எமது மாலை வேளைத் தொழுகைகளை நடத்திக் கொண்டிருந்தோம். “தம்பிலா தம்பிலா” என ஆட்கள் கூக்குரலிடுவதை நாம் கேட்டோம். அப்பொழுது எனது சகோதரன் சிங்களக் காடையர்கள் எம்மைத் தாக்க வந்திருப்பதாக சொன்னார். அவர்கள் சத்தமிடுவதைக் கேட்டதும் தொழுகையை பாதியிலேயே நிறுத்திவிட்டு பள்ளிவாசலை நோக்கி ஓடினோம். நாங்கள் எந்தப் பொருளையோ காசையோ எடுக்காது ஓடிச் சென்றோம். மலையிலுள்ள வீட்டுக்கு நாம்

சென்றோம். மாலை 6.45 அல்லது 7.00 மணியளவில் வீடுகள் சூறையாடப்படுவதாகவும் மக்கள் தாக்கப்படுவதாகவும் நாம் கேள்விப்பட்டோம்.

அவர்கள் வீட்டுக்குள் வந்து முன்னறையில் இருந்த தளபாடங்கள் கதிரைகள் என்பவற்றை ஒரு வாகனத்தில் எடுத்துச் சென்றனர். அவர்கள் அறைகளுக்குள்ளும் வந்தனர். அலுமாரிகளைத் திறந்து காசு ஒன்றரை இலட்சம், 10 பவுண் தங்கம் என்பவற்றையும் எடுத்தனர். மிகுதியானவற்றுக்கு தீ வைத்தனர். (அலுமாரியில் இருக்கும் மிகுதியான பொருட்களை அவள் எறிகிறாள்) ஒரு LCD தொலைக்காட்சி இருந்தது; தையல் இயந்திரம் இருந்தது; பெரிய படிக்கும் மேசை இருந்தது. அவர்கள் எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு தீ வைத்தனர்.

அதற்குப் பின்பு 6.30 அளவில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஆரம்பித்த கலவரங்கள் இரவு 11.00 வரைக்கும் நீடித்தன. முஸ்லிகள் ஒட்டுமொத்தமாக இந்த தாக்குதலுக்கு தயாராக இருந்தார்கள். தாக்குதல்காரர்கள் சப்பாத்துக்களையும் தலைக் கவசங்களையும் அணிந்திருந்தனர். அவர்கள் பெற்றோல் நிரப்பப்பட்ட சாராயப் போத்தல்களை வைத்திருந்தனர். அவர்கள் இந்த போத்தல்களை தீ மூட்டி வீடுகளின் கூரைக்குள் எறிந்தனர். ஆண்கள் வீடுகளை விட்டு வெளியே சென்று திரும்ப முடியாமல் போனமையால் பெண்கள் தனியாக இருந்தனர்.

பொலிசார் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு நாம் தொலைபேசி அழைப்பு எடுத்து அறிவித்தோம். ஆனால் 11.00 மணி வரை எவரும் வரவில்லை. மாலை 6.30 மணிக்கு விசேட அதிரடிப் படையினர் வந்தனர்.

பிரதேசத்தில் பதற்றம் அதிகரிப்பது குறித்து எமது இளைஞர்கள் அவர்களிடம் கூறினர். ஆனால் அவர்கள், நீங்கள் சண்டை பிடித்து சாக வேண்டியதுதான். நாம் இதைப் பற்றி அக்கறைப்படவில்லை என எம்மிடம் கூறி விட்டுச் சென்றுவிட்டனர். அதற்குப் பின்பு 5 மணித்தியாலங்களாக எங்களது அழைப்புகளுக்கு பதில் சொல்லவும் இல்லை; வரவும் இலை. எல்லாம் முடிந்த பிற்பாடு எமது சகோதரர் எங்கேயோ இருந்து வந்தார். அந்த நேரத்தில் அவர்கள் எமது வீடுகள் எல்லாவற்றையும் எரித்து விட்டார்கள்.

**தமது வீடு எரிக்கப்பட்ட அதிகாரிகொட சிங்களக் குடும்பத்தினர்.**

தாயுடனும் மகளுடனுமான நேர்காணல். அவர்களது வீட்டுக்கு வெளியில் இராணுவத்தினர் அதனைத் திருத்திக் கொண்டிருந்தனர்: சில சிங்களப் பையன்கள் முஸ்லிம் எதிர்ப்பு சுலோகத்தை கூறியபடி வீதியால் சென்றதைக் கண்டதாக மகன் தெரிவிக்கிறார்.

சிறிது நேரத்தில் முஸ்லிம்கள் எங்களைத் தாக்குகின்றனர் என்று சிங்களப் பையன்கள் சப்தமிட்டுச் சென்றனர். சிறிது நேரத்தில் வீதி வழியே ஒரு முஸ்லிம் குழுவினர் வருவதைக் கண்டதாக அவன் கூறுகிறான். அவர்கள் சிங்களக்குழுக்களின் மீது நறுமணத் திரவப் போத்தல்கள் மற்றும் குளிர்பானப் போத்தல்களை எறிந்தனர். இதன் விளைவாக சிங்களக்குழுவும் திரும்பத் தாக்கத் தொடங்கியது. பதற்றத்தின் காரணமாக முஸ்லிம்கள் தமது வீடுகளை விட்டு புறப்பட முயற்சிப்பதாக தான் கேள்விப்பட்டதாக அவன் தெரிவித்தான். தான் வழமையாக தனது வானைத் தரித்து நிறுத்தும் முஸ்லிம் வீட்டிற்குச் சென்று பாதுகாப்புக்காக அதனைத் தனது சிறிய தாயாரின் வீட்டுக்கு எடுத்துச் சென்றுள்ளான்.

முஸ்லிம்களால் பௌத்த பிக்கு கொல்லப்பட்டதாக நாம் கேள்விப்பட்டோம். சிங்கள இளைஞர்கள் இயல்பாகவே அதிக

கோபமடைந்தனர் என அவன் சொன்னான். காடையர்கள் கைகளில் தடிகளை ஏந்தியவண்ணம், நாம் கேட்டிராத மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்திய காற்சட்டை அணிந்த பெண்களும் காணப்பட்டனர் என அவன் சொன்னான். அவர்களுள் உயர் தொழிலில் இருப்பவர்களும் காணப்பட்டனர். சிங்களக் காடையர்கள் தாம் போத்தல்களால் தாக்கப்பட்டதால் கோபமடைந்தனர். அவர்கள் காயமடைந்திருந்தனர். பிரதேச சபையில் பணிபுரியும் அவனது சிறிய தாய் பொலிசாருக்கு அழைப்பு எடுக்க தொடர்ந்து முயற்சித்தாள். ஆனால், தொலைபேசி வழிகள் எல்லாம் நெருக்கடியாக இருந்தன.

மேலும், ஒருமுஸ்லிம் கும்பல் வீதிச் சந்தியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது என்றும் அவன் சொன்னான். அது ஒன்றுதான் அந்தப் பகுதியிலுள்ள சிங்கள வீடு. அவன் சொல்வதன் பிரகாரம் சிங்களவர்கள் தவறுதலாக சிங்களவருக்கு சொந்தமான ஒரு வீட்டையும் எரித்து விட்டார்கள் என்று முஸ்லிம்கள் சொல்கிறார்கள். ஆனால், அப்படியிருக்க முடியாது. சீவலி புத்த சிலையானது உடைக்கப்பட்டு நொறுக்கப்பட்டுள்ளது. வீடுகளை எரிப்பதற்கு வெசாக் கூடுகளை எரிபொருட்களாக அவர்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். சிங்களவர்கள் தமது வீடுகள் எரிக்கப்பட்டதாக கேள்விப்பட்டபொழுது மிகவும் வன்முறையாகினர் என அவன் தெரிவித்தான்.

சுமார் 7000 பேர் வந்தனர். போத்தல்களைக் கொண்டுவந்த லொறிகள் இருந்தன. முஸ்லிம்கள் நறுமண திரவப் போத்தல்களைப் பயன்படுத்தினர். ஆனால் சிங்களவர்கள் பெரிய போத்தல்களைப் பயன்படுத்தினர். அவற்றுள் அதிகமானவை மதுபானப் போத்தல்கள். மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது; விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. ப்ளாஷ் விளக்குகளைப் பயன்படுத்தி தாக்குதல்கள் மேற்கொள்ளப்படடன. இந்த வெளிச்சம் காரணமாக உண்மையில் எவரையும் அடையாளம் காண முடியவில்லை. இந்த வெளிச்சங்கள் வீடுகளையும் அவர்களையும் நோக்கியதாக இருந்தன. அவர்களைத் தாக்கியவர்கள் அயலில்

உள்ள முஸ்லிம்கள் என அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஏனெனில், அவர்களது குரல்களை அவர்கள் அடையாளம் கண்டிருந்தனர். அத்துடன் பையனின் சகோதரி முறையானவளின் பெயரை அவர்கள் பயன்படுத்தியிருந்தனர். அவளைக் குறிப்பிடுவதற்கு கெட்ட வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தனர். ஆகவே இது அவர்களை அறிந்த ஆட்கள்தான். சிங்கள வீடு எரிக்கப்பட்டுள்ளது எனக் காடையர்கள் கேள்விப்பட்ட பொழுது அவர்கள் உடனடியாக வந்து தீயை அணைப்பதற்கு முயற்சித்தனர்.

> இப்பகுதி முஸ்லிம் மக்கள் இப்பொழுது எங்களைத் தவிர்த்து வருகிறார்கள். அவர்கள் மிகவும் நட்பற்ற முறையில் பார்க்கிறார்கள். இது மிகவும் விரும்பத்தகாதது. முன்பு நாங்கள் சேர்ந்து விளையாடிய பிள்ளைகள் கூட இப்பொழுது எங்களைக் கவனிக்கிறார்கள் இல்லை. இந்தப் பிரதேசத்தில் முன்பு பிரச்சினை இருக்கவில்லை. நாம் ஒன்றாக அமைதியாக வாழ்ந்து வந்தோம். நீங்கள் ஒவ்வொரு ஆட்களினதும் வேறுபாடுகளை அறிந்து ஒன்றாக வாழ வேண்டும். முன் வீட்டில் மரண வீடு இடம்பெற்றபொழுது நாம் அவர்களுக்கு வெளிச்சம் கொடுத்தோம். ஆனால் அடுத்த வீட்டு முஸ்லிம்கள் அவ்வாறு செய்யவில்லை. ஏனெனில், அவர்களிடையே பிரச்சினையிருந்தது. அவர்கள் எங்கள் எல்லோருடனும் நன்றாகத்தான் இருந்தார்கள். இந்தப் பகுதி மக்கள் பிழையானவர்கள் அல்ல. ஆனால் மலையில் இருப்பவர்கள் வேறுபட்டவர்கள். அவர்கள் ஜிஹாதிகள். அவர்கள்தான் எங்களது வீட்டைத் தாக்கியவர்கள். அவர்கள் சிறிய வான்களில் கால்நடைகளை எடுத்துச் செல்வர். அவர்கள் தொடர்பில் பல தடவைகள் அறிவிக்கப்பட்டபொழுதிலும் பொலிசார் எதனையும் செய்யவில்லை. பொலிசார் சட்டத்தை அமுல்படுத்தினால் இவை ஒன்றும் நடவாது. முஸ்லிம்கள் தலைக் கவசம் அணிவதில்லை. ஆனால் பொலிசார் எதுவும் செய்வதில்லை.

இனிமேல் இந்த இடத்தில் எனக்கு வாழப் பிடிக்கவில்லை. நான் எங்கேயாவது போக விரும்புகிறேன். எனது சகோதரனும் மிக அமைதியானவனும் மிருதுவானவனும் கூட. அவனது இசைக்கருவி (மேளம்) எரிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து அவன் மிகவும் குழப்பமடைந்து இங்கு வாழ விருப்பமில்லை என்று சொல்கின்றான். அவன் எங்கேயாவது போக விரும்புகிறான். இந்த மக்களின் முகத்தைப் பார்த்துக்கொண்டு யார் இங்கே வாழ்வது? எனது தந்தைக்கு தமிழ் புரியும். அவருக்கு தமிழ் புரியும் என்று இந்த ஆட்களுக்குத் தெரியாது. துரதிஷ்டவசமாக எனது தந்தை இங்கே இருக்கவில்லை.

துரதிஷ்டவசமாக அவர் எங்கோ ஒரு இடத்தில் வரமுடியாது தடைப்பட்டு போய் நின்று விட்டார். அவர் இங்கே இருந்தால் அவர் தமிழில் பேச அவர் ஒரு முஸ்லிம் என அவர்கள் நினைத்து அதிக பிரச்சினைகள் எழுந்திருக்க முடியும்.

இரண்டு சமூகங்களையும் சேர்ந்த மூடர்களுக்கிடையிலான உரசலின் விளைவு இரு குழுக்களுக்கிடையிலான தாக்குதலுக்கு இட்டுச் சென்றுள்ளது எனவும் குழுக்கள் ஒன்றுக்கொன்று தாக்கப்பட்டதுடன் அவர்கள் வீடுகள், மூன்றாம் வீடும் எரிக்கப்படுவதை விளைவித்ததாகவும் தாயார் குறிப்பிடுகிறார். பாதிக்கப்பட்ட மக்களே எதிர்ப்புக் காட்டுகிறார்கள் எனவும் அவள் தெரிவித்தாள். இந்த விடயங்கள் இடம்பெறுவதாகவும் அவர்கள் எல்லோரும் முன்நகர வேண்டுமெனவும் அவள் தெரிவித்தாள். அயவலர்களுடனான உறவு விரைவாக மீள்நிலைப்படுத்தப்படும் எனவும் தாயார் நம்பிக்கை கொண்டிருந்தாள். அவர்கள் நெருக்கமாக வாழ்ந்து வந்ததாகவும் உரிய நேரத்தில் எல்லாம் நன்றாக அமையும் எனவும் உணர்ந்தாள்.

## புதிய வீதி (பதா ஹாஜியார் மாவத்தை)

இது பெரிய இடவசதியுடைய வீடுகளை உடைய, தெளிவாகவே செல்வந்தர்களைக் கொண்ட ஓர் இடமாகும். புதுவிதமான சீருடை அணிந்தவர்களால் விரைவாக மீளக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு வீட்டுக்கு நாம் சென்றோம். அவர்கள் கடற்படையினர் என நாம் அறிந்து கொண்டோம். அடுத்த வீட்டில் முற்றுமுழுதாக எரிந்துபோன வீட்டின் ஒரு பகுதியை நாம் கண்டோம். அத்துடன் அப்பகுதியில் சில சேதமடைந்த வீடுகளும் இருந்தன. அந்த வீட்டின் உரிமையாளர் தனக்கு வேலை அனுமதிப்பத்திரம் இருப்பதினால் அமெரிக்காவுக்கு சென்று வரும் ஒரு வர்த்தகர் ஆவார். அவரது பெரிய இடவசதியுள்ள, 2013 மே மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வீடானது 15 ஆம் திகதி இரவு தாக்கப்பட்டது. பெற்றோல் குண்டுகள் மற்றும் கண்ணாடிகள் என்பன வீசப்பட்டபொழுதிலும் அவர் தனது காரை செலுத்திக் கொண்டு வாயிற் கதவுக்கு அண்மையில் வந்ததனால் தாக்குதலிலிருந்து காப்பாற்றப்பட்டதாகக் கூறினார். அப்பொழுது அவர் வெளியே நின்ற விசேட அதிரடிப் படையினரிடம் தனது வீடு உடைக்கப்படுவதாகவும் தயவு செய்து உதவி செய்யுமாறும் கேட்டார். ஆனால், அவர்கள் பதிற் செயற்பாடு காட்டவில்லை. பின்பு அவர் பாதுகாப்பு வர்த்தகத்திலுள்ள சகோதர முறையானவருக்கு அழைப்பு செய்துள்ளார். அவரும் அவருக்குத் தெரிந்த விசேட அதிரடிப்படையில் உள்ள செல்வாக்குள்ள ஒரு ஆளை தொடர்பு கொள்ளும்படி கேட்டுள்ளார். பின்பு தர்கா நகரிலிருந்த அந்த மனிதர் விசேட அதிரடிப் படையில் உயர் பதவியிலுள்ள ஒருவருக்கு அழைப்பு எடுத்துள்ளார். அவர் பதிலளித்தபொழுது இந்தக் கதையை அங்கு சொல்லியிருக்கிறார். அவர் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த ஆளுக்கு தொலைபேசியை ஒலிபெருக்கியில் ஒலிக்க விட்டு தர்கா நகரில் உள்ள விசேட அதிரப் படையினரிடம் கொடுத்துள்ளார். அவர்களும் ஆம் ஐயா... ஆம் ஐயா... எனக் கூறிவிட்டு உடனடியாகச் செய்கிறோம் என பதிற்செயற்பாடு காட்டியதுடன்,

தங்களது கட்டளை அதிகாரியிடம் கொடுத்தனர். அவரும் அங்கு சில படைவீரர்களுக்கு பதிற்செயற்பாடு காட்டச் செய்தார். அங்குள்ள விசேட அதிரடிப்படையினர் வானத்திற்கு வேட்டுக்களைத் தீர்த்து ஆட்களைக் கலைத்ததுடன் விசேட அதிரடிப் படை ஆட்கள் வீடுகளுக்குச் சென்று தீயை அணைத்து எரிவதை நிறுத்தினர். பின்பு உள்ளூர் கட்டளையிடும் அதிகாரி, விசேட அதிரடிப் படை உயர் பீடத்தில் உள்ள முஸ்லிம் அதிகாரியை அந்த மனிதருக்கு எவ்வாறு தெரியும் எனக் கேட்டார். தாம் பரஸ்பரம் அறிமுகமானவர்கள் என அந்த மனிதர் கூறினார். வெளிநாட்டில் இருக்கும்பொழுது அவர்கள் ஒருவர் ஒருவரது வீட்டுக்கு சென்றுவருவது வழக்கம்.

வீட்டு யன்னல்கள், திரைச்சீலைகள் என்பன கண்ணாடிகளுடன் சிதறியும் மூடப்பட்டிருந்த தளபாடங்கள் முற்று முழுதாக எரிந்தும் இருந்தன. நாங்கள் வீட்டுக்குள் நுழைந்தபொழுது மீள் நிர்மாண வேலைகள் ஏறத்தாழ பூர்த்தியடைந்திருந்தன. 20 கடற்படை வீரர்கள் வீட்டின் வேலைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருந்ததை நாம் நேரடியாகக் கண்டோம். பெற்றுக் கொண்ட உதவிக்கு நன்றியுடையவராக இருப்பதாலும் அவருக்கு எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது என்பதாலும் அந்த விசேட அதிரடிப் படை உத்தியோகத்தரின் பெயரைக் குறிப்பிட வேண்டாம் என முஸ்லிம் வீட்டுச் சொந்தக்காரர் எம்மிடம் வேண்டுகோள் விடுத்தார். இந்தத் தாக்குதலின் திட்டமிடப்பட்ட தன்மையை இது காட்டுகிறது. சந்தேகமற்ற முறையில் அவர்கள் முயற்சி செய்திருந்தால் அவர்கள் படையினரை குறிப்பாக விசேட அதிரடிப் படையினர் முயற்சி செய்திருந்தால் இந்தத் தாக்குதலை சுலபமாக நிறுத்தியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்ய வேண்டாம் என அவர்களுக்கு அறிவுறுத்தியிருப்பது தெளிவாகிறது.

## மிஹிரிப்பன்ன வீதி

தர்கா நகர் மிஹிரிப்பன்ன வீதியில் உள்ள சிங்கள சொத்துக்களின் உரிமையாளரிடமிருந்தான ஒரு விபரிப்பின் சுருக்கம் கீழே தரப்படுகிறது:

தர்கா நகர் மிஹிரிப்பன்ன வீதியில் 66 பேர்ச் சொத்துக்களுக்கு சொந்தக்காரராக இருக்கின்றேன். அது ஒரு சுற்றுலா விடுதியாக மாற்றப்பட்டிருந்தது. நாங்கள் காணியைக் கொள்வனவு செய்து வீட்டை கட்டினோம். கலவரத்தின்பொழுது தோட்டப்பகுதியில் பாதையமைப்புக்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. நாங்கள் வழமையாக ஞாயிற்றுக்கிழமைகளில் வேலையைப் பரிசோதிப்பதற்காக அங்கு செல்வோம். எனது கணவர்களின் உறவினர்கள் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவுவதால் அங்கு வரவேண்டாம் என தொலைபேசியில் கூறினர். எங்களது வீட்டில் வேலை செய்யும் ஒருவரும் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என எமக்கு சொல்லப்பட்டு இருந்தது.

15ஆம் திகதி இரவு 10.00 மணியளவில் ஒரு முஸ்லிம் காடையர் கூட்டம் வந்து பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியது. அவர்கள் முழு வீட்டையும் எரித்து விட்டார்கள். எங்களது ஜீப், எங்களது படகு எல்லாம் எரிந்து விட்டது. எல்லாம் முற்றுமுழுதாக எரிக்கப்பட்டது. பணியாள் மரணத்தின் வாயிலுக்கே சென்று வந்துவிட்டார். சொத்தானது ஆற்றுக்கு அருகில் இருந்தது. அவர் ஆற்றுக்கு அண்மையிலுள்ள கால்வாயில் ஒளித்துக் கொண்டார். அதன் மூலம் தப்பியும் கொண்டார். சுமார் 40 பேர் வந்திருந்தனர். அவர்கள் எல்லோரும் தமிழில் பேசினர். முந்திய சொந்தக்காரரிடமிருந்து (அவர் ஒரு முஸ்லிம்) இச்சம்பவம் பற்றி நாம் அறிந்து கொண்டோம். தாக்குதல் நடத்தியவர்கள் முஸ்லிம்கள் என அவர் எமக்குச் சொல்லவில்லை. எமது வீட்டில் வேலை செய்தவரே அவ்வாறு எமக்கு சொன்னார்.

எமது வாயில் கதவுகள் புதியவையாகவும் ஒவ்வொன்றும் 5 இலட்சம் பெறுமதியுடைனவாகவும் இருந்தன. அவைகள் கோடரியால் முற்றுமுழுதாக கொத்தப்பட்டிருந்தன. எங்களது

ஜீப்பையும் அவர்கள் எரித்து விட்டிருந்தார்கள்; அண்மையில் வாங்கிய படகும் எரிக்கப்பட்டிருந்தது. நாங்கள் 20 மில்லியன் பெறுமதியான சொத்துக்களை இழந்தோம். கடற்படையினர் அவற்றை மீளக் கட்டிவருகின்றனர். அதற்காக நாம் நன்றியுடையோராய் உள்ளோம். இது நாம் சிரமப்பட்டு உழைத்த பணம். ஏனையோரின் சொத்துக்களை அழிப்பதற்கு ஒருவருக்கும் உரிமையில்லை. நாங்கள் அளுத்கம பொலிசாரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம்.

சிங்களவர் ஒருவரால் நடத்தப்படும் வெளிநாட்டவர் ஒருவருக்குச் சொந்தமான இன்னொரு வீடும் தாக்கப்பட்டது. ஆனாலும் அங்குள்ள முஸ்லிம்களின் வீடுகள் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை. ஆகவே இது திட்டவட்டமாக முஸ்லிம்களாலே செய்யப்பட்டது. ஏனைய மக்கள் வந்து இதனை தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. இது பொறாமையினால் செய்யப்பட்டது என நான் நினைக்கின்றேன். தாக்குதல் நடத்தப்பட்ட முஸ்லிம் வீடுகளைப் பார்த்தீர்களாயின் அவற்றுக்குச் சொந்தமானவர்கள் நன்கு செயற்படுபவர்களாக உள்ளனர்.

நாங்கள் முஸ்லிம்களுடன் நன்றாகவே இருந்து வருகிறோம். சட்ட வேலைகளில் நான் அவர்களுக்கு உதவியிருக்கிறேன். நான் ஒரு முஸ்லிம் சட்டத்தரணிக்கு பிரதிநிதியாக இருந்து அவர் சட்டத்தரணியாக செயற்படுவதற்கான உரிமம் தடைசெய்யப்படுவதிலிருந்து அதனை தடுத்தேன். அந்த வேளையில் எந்த சட்டத்தரணியும் உதவ முன்வரவில்லை. அவர்களது மரண வீடுகளுக்கு எனது கணவர் உதவியிருந்தார். ஆனால் இப்பொழுது அவர்களைப் பார்த்து சிரிக்கக்கூட தோன்றுவதில்லை. ஏனெனில், அவர்கள் எங்களுக்கு உதவியிருக்க முடியும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

## வெலிப்பிற்றிய

இந்த இடத்தில் தான் சூட்டுச் சம்பவம் காரணமாக இரண்டு பேர் தமது உயிர்களை இழந்திருந்தனர். மேலும் 19 வயதுடைய மற்றும் 17 வயதுடைய இருவர் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தினால் தமது ஒரு காலை இழந்திருந்தனர்.

நேரில் கண்டவர்களின் சாட்சியத்தின் சுருக்கம் பின்வருமாறு:

> வெலிப்பிற்றியவின் நிலைமையானது பல நாட்களாக பதற்றமாக இருந்தது. 13 ஆம் திகதி ஜும்மா தொழுகையிலிருந்து விலகியிருக்க மார்க்க அறிஞர்கள் அனுமதியளித்திருந்ததுடன், பள்ளிவாசலுக்கு வெளியே இருந்து எல்லையிலே விரும்பத்தகாத சக்திகள் நுழைவது குறித்து அவதானிக்கவும் அனுமதி அளித்திருந்தனர். 19 ஆம் திகதி இரவு கூட நிலவும் பதற்றத்தின் காரணமாக இஷா (இரவு நேர) தொழுகையின்பொழுது வெளியில் சனக்கூட்டம் இருந்தது. ஒரு காடையர் கூட்டம் வந்தது. ஆனால் அவர்கள் பின்பு பின்வாங்கிச் சென்றனர். அவர்கள் மீளக் குழுவாகி பலப்படுத்திக் கொண்டு வருவதற்கே அநேகமாக அவ்வாறு சென்றிருந்தனர்.
>
> இரவுத் தொழுகைக்குப் பின்பு காடையர்கள் எல்லைப்பகுதிகளைச் சூழ அம்பஹுக சந்தி, அதிகாரிகொட, சீனவத்த ஆகிய எல்லாப் பகுதிகளிலும் தீ வைப்பதாக செய்தி வரத் தொடங்கியது. எல்லையைப் பாதுகாப்பதற்கான தேவை மற்றும் கிராமத்துக்குள் மக்கள் வருவது குறித்தும் நாம் மிகவும் தெளிவாக இருந்தோம். மக்களை விழிப்பாக இருக்கும்படியும் தேவையேற்படின் பெண்களையும் சிறுவர்களையும் பள்ளிவாசலுக்கு நகர்த்தும்படியும் பள்ளிவாசல் அறிவித்திருந்தது.

சரியாக இரவு 10.59 மணிக்கு பள்ளிவாசலுக்கு பெண்களையும் சிறுவர்களையும் கொண்டு வரும்படி அறிவிப்பு விடுக்கப்பட்டது. வேறொரு பொதுக் கட்டிடமும் அண்மையில் இல்லாமையினால் முழுக் கிராமமும் பள்ளிவாசலில் ஒன்றுகூடியது. காடையர்கள் மீண்டும் திரும்பிவந்து சண்டை தொடங்கிய பிற்பாடு இவ் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

15 ஆம் திகதி காலையில் இராணுவப் புலனாய்வுப்பிரிவின் முஸ்லிம் உறுப்பினர் ஒருவர் தன்னை ஒரு முஸ்லிம் எனவும் மேஜர் மொஹமட் எனவும் அறிமுகம் செய்துகொண்டு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். தான் ஒரு முஸ்லிம் என நிருப்பிப்பதற்கு விருத்தசேதனம் செய்து கொண்டதைக் காட்டுவதற்கும் அவர் தயாராக இருந்தார். அவர் எதுவித பிரச்சினையும் இருக்காது எனவும் ஏதாவது சிரமம் இருப்பின் தனக்கு அழைப்பு எடுக்கும்படியும் கூறினார். இப்பகுதியில் ரோந்து செல்லும்பொழுது முஸ்லிம் அதிகாரிகளுடனான கிட்டத்தட்ட 3-4 வரையான நடமாடும் ரோந்து சேவைகள் உள்ளன என்றும் எனவும் கூறினார்.

அவ்வாறான கட்டத்தில் காடையர்கள் பள்ளிவாசலுக்கு அண்மையில் ஒன்று கூடியதுடன் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அவர்கள் நுழைவதைத் தடுப்பதற்கு தம்மாலான வகையில் முயற்சித்தனர். ஏனெனில் அவர்களை அனுமதித்தால் வரவிருக்கும் ஆபத்துக் குறித்து நன்கு அறிந்திருந்தனர். காடையர்கள் நன்கு பலமான தடிகளையும், கற்களையும், போத்தல்களையும், பெற்றோல் குண்டுகளையும், நீண்ட கத்திகளையும் பயன்படுத்தினர். கூட்டத்தினருக்கும் வீதியில் நின்றவர்களுக்கும் இடையில் சண்டை ஆரம்பித்த பொழுது 119 க்கு அழைப்பு எடுக்க பலர் முயற்சித்த அதேவேளை, இராணுவப் புலனாய்வுப் பிரிவு மேஜர் மொஹம்மட்டுக்கும் அழைப்பு எடுத்தனர்.

அப்பொழுது அவர் தான் இராணுவத்தை சேர்ந்தவர் எனவும் தனக்கு இராணுவத்துடனனேயே தொடர்பு உள்ளது எனவும் தனக்கு STF இலோ ஏனைய படைகளின் கிளைகளிலோ எவரையும் தெரியாது எனவும், தன்னால் செய்யக்கூடியதை செய்ய முயற்சிப்பதாகவும் கூறினார். நாங்கள் பொலிசாரைத் தொடர்பு கொண்டபொழுது அவர்கள் இந்த செய்தியால் ஆச்சரியமடைவது போன்று காட்டிக் கொண்டார்கள். அவர்கள் வருவார்கள் ஆனால் சண்டை முடியும் வரைக்கும் காடையர்கள் அந்த இடத்தை விட்டு புறப்படும் வரைக்கும் அவர்கள் அவ்விடத்திற்கு வரவில்லை.

சண்டை நடைபெற்றபொழுது வாகன தலைவெளிச்சத்தை ஒத்த ஒரு பலமான ஆனாலும் அதைவிட மிகவும் சக்திவாய்ந்த வெளிச்சமானது வெலிப்பிற்றிய மக்களை நோக்கி பாய்ச்சப்பட்டது. வெளிச்சம் மிகவும் பலமாக இருந்தபடியால் அது மக்களை குருடாக்கியதுடன் அவர்களால் தாம் சண்டையிடும் தாக்குதல்காரர்களின் முகங்களைக் காண முடியாது போனது. பள்ளிவாசலின் மேலே இருந்து தாக்குதலைப் பார்த்துக் கொண்டிருந்த எமது சாட்சிகளுள் ஒருவர் அவரின் பணியாளது மேலே உள்ள ஆட்களுக்கு சக்தி அளிப்பதும் அமைதியாக இருக்கச் செய்வதும் ஆகும்.

அவர் குறிப்பிடுவதின் பிரகாரம், அவர் ஒரு சூட்டுச் சத்தத்தை திடீரெனக் கேட்டார். அத்துடன் சிறிது நேரத்திற்கு பின்பு கிராம மக்கள் சிலர் வேறொருவரைக் தூக்கிக்கொண்டு பள்ளிவாசலை நோக்கி வருவதைக் கண்டார். அப்பொழுது நேரம் 12.53. எமது சாட்சி கூறுவதின் பிரகாரம் அந்த சூட்டுச் சம்பவமானது 12.30 – 12.45 க்கும் இடையில் இடம்பெற்றது. அவர் உடனடியாகக் கீழே ஓடிச்சென்று பள்ளிவாசலுக்கு அடுத்துள்ள மத்ரஸா கட்டிடத்திற்கு அவருடன் சேர்ந்து சென்றார். அதன் பின்பு வேறொருவர் காவி

வரப்பட்டார். அதனைத் தொடர்ந்து பல காயப்பட்டவர்கள் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் சுடப்பட்டு இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது. ஒருவர் அவரது நெற்றியில் சிவத்த பூ பூத்தது போன்று சுடப்பட்டு இருந்தார். மற்றொருவருக்கு அவரது பின்பக்கத்தில் அதையொத்த காயம் காணப்பட்டது. இன்னும் இருவர் அவர்களது காலின் பின்பகுதியில் காயங்களைக் கொண்டிருந்தனர். வேறொருவருக்கு பின்பக்கத்தில் காயம் இருந்தது. வேறொருவருக்கு பக்கப்பாட்டில் ஒரு காயம் இருந்தது. ஒரு சன்னமானது அவரது உடம்பில் இருப்பதாக அவர்களுக்கு சொல்லப்பட்டது.

அவர்களை நோக்கிச் சுட்டது யாரென்று அவர்களுக்குத் தெரியுமா என்று எமது சாட்சியைக் கேட்டபோது பின்வரும் வகையில் அவர்களில் ஒருவர் பதிலளித்தார்:

படையினருக்கு அவர்கள் பின்பற்ற வேண்டிய செயன்முறை இருந்தது. முதலில் அவர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள். அவர்கள் அடுத்து கண்ணீர் புகையை பயன்படுத்துகிறார்கள். பின்பு அவர்கள் இறப்பர் சன்னங்களைப் பயன்படுத்துகிறார்கள். அதற்குப் பின்புதான் நிலைமையானது தேவைப்படும் பட்சத்தில் அவர்கள் உண்மையான வெடிபொருட்களைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் படையினராக இருந்தால் அவர்கள் ஒரு எச்சரிக்கையை வெளிவிடவில்லை. ஏன் அவர்கள் கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்தவில்லை? நகரத்தின் பிரதான பள்ளிவாசலுக்கு அண்மையிலிருந்த 3000 மக்கள் கூட்டத்தைக் கலைப்பதற்கு அவர்கள் அதனைப் பயன்படுத்தவில்லை. ஏன் அவர்கள் உண்மையான வெடிபொருட்களைப் பயன்படுத்தினார்கள்? நாங்கள் கிட்டத்தட்ட 50 பேர் மாத்திரம் உள்ளே உள்ள மக்களை பாதுகாத்துக்கொண்டு பள்ளிவாசலை சூழ நின்றிருந்தோம். அத்துடன் துப்பாக்கிச்

சூடு இடம்பெற்றபொழுது எங்களின்மேல் போத்தல்களும் கற்களும் தொடர்ந்து வந்து விழுந்தன. ஆகவே, அவர்கள் கூட்டத்தைக் கலைப்பதற்கு வானத்தை நோக்கிச் சுடவில்லை. பக்கத்தில் இருந்த மக்களிடம் இருந்து தாக்குதல் தொடர்ந்து கொண்டிருந்தது. அவர்கள் தான் எம்மைச் சுட்டவர்களாக இருந்தால் அதற்குப் பின் ஏன் அவர்கள் உதவவில்லை? எல்லாவற்றுக்கும் மேலாக, நாங்கள்தான் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தவர்கள். படைகள் வீதியில் எமது பக்கத்திலும் எம்மையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக இருந்திருக்க வேண்டும். படையினர் தான் எம்மை நோக்கிச் சுட்டனர் என்று நாம் நினைக்கவில்லை. இது ஒரு பயங்கரவாதிகள் குழுவாக இருக்க வேண்டுமென நாம் நம்புகிறோம்.[70]

வன்முறை எவ்வாறு நிறுத்தப்பட்டது என்பது தொடர்பாக பின்வருமாறு அவர் விபரித்தார்:

"காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு போராடிக் கொண்டிருந்தோம். நாங்கள் ஒரு யுத்தத்திற்கு தயாராக இருக்கவில்லை. எம்மிடம் முதலுதவி உபகரணங்கள் இருக்கவில்லை. ஒரு வாகனத்தைத் தேடிக் கொள்ள எம்மால் முடியாதிருந்தது. ஒருவர் ஒரு லொறியினை வழங்கினார். ஆனால் அவர் அதனை ஓட்டிச்செல்ல அஞ்சினார். அதிகாரிகளுக்குச் சொந்தமான சில ஜீப்புகள் - அவர்கள் விசேட அதிரடிப் படையினரா அல்லது பொலிசாரா எனத் தெரியாது மற்றப்பக்கத்தில் இருந்து வந்து சேர்ந்தன. சண்டை இடம்பெற்ற பகுதியில் இருந்து அல்ல; வந்து காயமுற்றவர்களை எடுத்துச் சென்றனர். எவ்வாறாயினும், சூட்டுச் சம்பவத்திற்குப் பின்னர் காயப்பட்டவர்களை கவனம் எடுப்பதற்கு முயற்சிப்பதில்

70 இரவு நிகழ்வுகள் தொடர்பாக பல்வேறுபட்ட வகையானவைகள் உள்ளன. D.B.S ஜெயராஜ் விபரிப்பை பார்க்குக

வேலையாக இருந்தபொழுது வன்முறையானது திடீரென நிறுத்தப்பட்டது.

சம்பவத்தின்பொழுது நாட்டின் மற்றப் பகுதிகளுக்கும் உலகத்திற்கும் என்ன இடம்பெற்றது என்பதை சொல்லுவதற்கு எம்மால் முடிந்தவற்றை எல்லாம் நாம் செய்தோம். மிகவும் கடுமையான ஒன்று இடம்பெறுகிறது என சொல்வதற்கு எம்மால் முடிந்தவற்றை செய்தோம். முடிந்தளவிற்கு நாமும் போராடினோம். எம்மிடம் பல ஆயுதங்கள், தடிகள், கற்கள் இருக்கவில்லை என அவர் கூறினார்.

அடுத்த நாள் இராணுவப் புலனாய்வுப் பிரவின் முஸ்லிம் பிரதிநிதியான மேஜர் மொஹம்மட் வெலிப்பிற்றியவுக்கு விஜயம் செய்தார். சம்பவத்தின் அளவைக் குறைப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தார். அவர்களுக்கு நடந்ததை அவர்கள் பெருப்பித்துக் கூறுகிறார்கள் என அவர் கூறினார். ஊடகத்தில் உள்ள அறிக்கைகள் பற்றிப் பேசினார். உண்மையில் அப்படியான ஒரு சம்பவம் இடம்பெற்றதா என அவர் அறிய விரும்பினார். தாம் கண்டு எடுத்த சன்னம் ஒன்றின் பாகத்தை அவருக்கு அவர்கள் காட்டினர். அவர் அதனைப் பார்த்து கருத்தில் எடுக்காதது போன்று காட்டி, இதனையா நீங்கள் சன்னம் என்று சொன்னீர்கள் என்றவாறு அந்த சன்னத் துண்டை எடுத்து வைத்துக் கொண்டார். அவரிடமிருந்து அதனை மீளப் பெற்றுக் கொள்வதற்கு அவர் ஒரு சந்தர்ப்பத்தையும் தரவில்லை என எமது சாட்சி கூறினார்.

சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்குப் பின்னர் வெள்ளிக்கிழமை ஜும்மாவிற்கு முன்பாக மேஜர் மொஹம்மட் மக்களிடையே கையளிப்பதற்காக ஒரு கட்டு துண்டுப் பிரசுரங்களைக் கொண்டு வந்திருந்தார். அத்துண்டுப் பிரசுரங்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் நல்லிணக்கத்திற்கான அமைப்பு என தம்மை அழைத்துக் கொண்ட அமைப்பினால் விடுக்கப்பட்டு இருந்ததுடன், விரும்பத்தகாத வெளிநாட்டு சக்திகள் சிங்கள முஸ்லிம் மக்களுக்கிடையே வன்முறையைத் தூண்டுவதாகவும், இது குறித்து

மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் பொறுப்பானவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துண்டுப்பிரசுரத்தில் நிறுவனத்திற்கான தொலைபேசி இலக்கமோ அல்லது முகவரியோ இருக்கவில்லை. அது சந்தேகமானதாகக் காணப்பட்டதால் விநியோகிப்பது அவசியமானது என்று நாம் நினைக்கவில்லை என எமது சாட்சி கூறினார்.

## அளுத்கம நகரம்

தர்கா நகரில் முஸ்லிம் ஒருவருக்கும் சிங்களவர் ஒருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்படும்பொழுதெல்லாம் அளுத்கம நகரத்தின் முஸ்லிம் கடைகள்மீது தாக்குதல் ஒன்று இடம்பெறும் என எமக்கு சொல்லப்பட்டது. 2006 இல் கூட ஒரு செல்லிடத் தொலைபேசி தொடர்பாக ஒரு சிங்களவருக்கும் ஒரு முஸ்லிமுக்கும் இடையிலான ஒரு வாய்த்தர்க்கத்தின் விளைவாக தர்கா நகரில் பதற்றம் ஏற்பட்டதுடன் பல கடைகள் அளுத்கம நகரத்தில் எரிக்கப்பட்டது என சொல்லப்பட்டது.

ஒரு நிஹாலுக்கும் ஒரு மொஹமட்டுக்கும் இடையிலான எந்த ஒரு இணக்கமின்மையையும் இனப்பிரச்சினையாக மாறும் ஒரு போக்கு இந்தப் பிரதேசத்தில் காணப்பட்டதாக அவர்களில் ஒருவர் சொன்னார். 2006 இல் இலக்கு வைக்கப்பட்ட அதே கடைகளே இம்முறையும் இலக்கு வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டது. இந்த ஜூன் நிகழ்வுகளில் இருந்து அவர்களால் விடுபட முடியுமா என நிச்சயமற்று இருந்தனர். 2006 இல் சேதங்களுக்காக வர்த்தமானி அறிவித்தலின் வகையில் உறுதியளிக்கப்பட்ட நட்டஈடுகள் இன்னும் வழங்கப்பட்டதாக இல்லை.[71]

---

71 இவ்விடயமானது மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அனுர திசநாயக்கவின் பாராளுமன்ற விவாதத்தில் 2014 ஜூலை அன்றான சட்டம் ஒழுங்கு நிலை விவாதத்தில் கலந்துரையாடப்பட்டது.

ஆடைக் கடையொன்றின் சொந்தக்காரர் தனது கணிசமானளவு பாரிய ஒரு களஞ்சியம் நெருப்பால் முற்று முழுதாக அழிக்கப்பட்டது.

இந்தக் கடையானது 12 ஆம் திகதி புத்த பிக்குவுடனான வாய்த்தர்க்கத்தின் பிற்பாடு அளுத்கம பட்டினத்தில் கல்லெறியப்பட்ட கடைகளில் மிகப் பெரிய கடையாக இருந்தது. 15 ஆம் திகதி தனது கடையானது தாக்கப்படுவதை தூர இருந்து பார்க்கக்கூடிய CCTV கமரா மூலமாக தான் கண்டதாக கடை உரிமையாளர் தெரிவித்தார். கடையானது மாலை 6.50 மணியளவில் கடை தாக்கப்பட்டு எரிக்கப்பட்டது. ஆனால் பின்கதவூடாக இருப்புக்கள் கொள்ளையடிக்கப்பட்ட பிற்பாடே அது எரிக்கப்பட்டது. கடையானது கட்டிடங்கள், இருப்புக்களுடன் ரூபா 60 மில்லியன் தொகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதுடன் உதவியில்லாமல் அவர்களது இழப்புக்களை மீட்டுக்கொள்ள முடியாது எனக் கருதுகின்றனர்.

15 ஆம் திகதி இரவு பிரச்சினையொன்று இருக்குமென அவர்கள் வாடிக்கையாளர்களிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டதுடன் தமது பாதுகாப்பிற்காக முன்னெச்சரிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
பௌசி, அலவி மௌலானா மற்றும் அனுர குமார திசநாயக்க போன்ற அரசியல்வாதிகளுடன் பேசியபோது அந்த அரசியல்வாதிகள் அனைவரும் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதால் பயப்படத் தேவையில்லை என்றே கூறினர். கடுமையான பொலிஸ் அதிரடிப்படையினரின் பிரசன்னம் நகரம் முழுவதும் அடிக்கடி காணப்பட்டதால் தாக்குதல்களில் இருந்து கடைகள் பாதுகாக்கப்படும் என அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் எடுக்கப்படுமென்று அவருக்கு உறுதியாக இருந்தபொழுதிலும் தனது மகன் அதனை ஒரு சந்தர்ப்பமாக கொள்ளாமல் தந்தை கடையைப் பூட்டியபொழுது அதிஷ்டவசமாக மகன் இருப்புக்களை அவ்வளாகத்தில் இருந்து நகர்த்தி விட்டதாக ஒருவர் சொன்னார்.

கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஆடைக் கடை சொந்தக்காரர் மற்றும் பலரும் அளுத்கமவில் பதற்றமான சூழல் வன்முறை நடந்து இரண்டு வாரங்களுக்குப் பின்பும் நிலவியதாகவும் என்ன நடக்கும் என தெரியாமல் அச்சத்துடன் இருந்ததாகவும் குறிப்பிட்டனர். அளுத்கம நகரில் ஒரு குழு ஆட்கள் இருந்ததாகவும் அவர்கள் தான் சேதங்களையும் அழிவுகளையும் வசதிப்படுத்தியிருக்கலாம் எனக் குறிப்பிட்டனர். அப்பகுதியில் தொந்தரவு கொடுக்கும் ஒரு குழுவினர் இருந்தனர். அவர்களை சிங்கள வர்த்தக ஆட்கள் கூட சகித்துக் கொள்வதில்லை. இந்த ஆட்கள் சுலபமாக இவர்களை விலக்கிவிட முடியாத இன அக்கறைகளைக் கொண்ட இந்த ஆட்கள் சுரண்ட முயற்சித்தனர். இந்த ஆட்கள் சில வேளைகளில் உல்லாசப் பயணிகளை நகரத்திலுள்ள கடைகளுக்கு கொண்டுவந்து விட்டு தமது சேவைகளுக்காக தரகினை எதிர்பார்ப்பர் என அவர்கள் குறிப்பிட்டனர். வேறு சமயங்களில் அவர்கள் உல்லாசப் பயணிகளை அதீத விலையில் கடை உரிமையாளர்கள் பொருட்களை விற்கச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து விட்டு வேறுபாடான தொகையை தாம் எடுத்துக் கொள்வர். அவ்வாறான திட்டங்களில் பங்குபற்றாதவர்களோ அல்லது தரகு கொடுக்காதவர்களோ அச்சுறுத்தப்பட்டனர் என சொல்லப்பட்டது. முஸ்லிம் கடை சொந்தக்காரர்களைப் பொறுத்தளவில் இவ் அச்சுறுத்தலானது மாற்றமில்லாத முறையில் கடைகளை எரிப்பதற்கு இட்டுச் செல்லும். தாம் பொலிசாருக்கும் முறைப்பாடு செய்ததாக அவர்கள் கூறினர். ஆனால் பொலிசார் குற்றமிழைத்தவர்களுக்கு எச்சரிக்கை விடுத்ததைத் தவிர அதிகம் செய்யவில்லை. இந்த சக்திகள் இந்த அழிவுக்கு பங்களிப்பு செய்திருக்கக் கூடும் என அவர்கள் உணர்ந்தனர்.

தீ மிகவும் உக்கிரமாக இருந்ததாகவும் அது கொங்கிறீட்டுக்களை வெடிக்கச் செய்திருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். பெற்றோல் குண்டுகளைத் தவிர வேறு ஏதோ பொருட்கள் நெருப்பு தொடர்ந்து எரிவதற்கு பயன்படுத்தச் செய்யும் என அவர்கள் நம்பினர்.

அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களமானது தீயின் தன்மை தொடர்பாக ஒரு விசாரணையை மேற்கொள்வதற்கு விஜயம் செய்ய வேண்டியுள்ளது. எமது விஜயத்தின்போது இராணுவத்தினர் சேதங்களை சுத்தம் செய்திருந்தனர். ஆடைக் கடையானது முற்றுமுழுதாக அகற்றப்பட்டிருருந்ததுடன் ஒரு எரிவு மணமானது இன்னும் வளியில் கலந்திருந்தது. பரந்துபட்ட இடவசதியும் நீண்டு வளர்ந்த படிக்கட்டுக்களும் இந்த மாடிக் கட்டிடமானது ஒரே நேரத்தில் எவ்வளவு பெரிய வர்த்தக நிலையமாக இருந்திருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டின. இவை வியாபார இடங்களாக இருந்ததால் மக்கள் கூட்டத்தினை உள்ளே எடுப்பதற்கு இந்தக் கட்டிட அமைப்புக்கள் போதியளவு உறுதியானதாக இல்லையெனவும், இக்கட்டிடங்களானவை இடிக்கப்பட்டு மீளக்கட்டப்பட வேண்டுமென இக்கட்டிடச் சொந்தக்காரர்கள் உணர்ந்துள்ளனர். கட்டிடமானது கைவிடப்பட வேண்டுமென சான்றுப்படுத்தும் ஒருவர் பொறியியலாளர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென அவர்கள் நம்புகின்றனர்.

கட்டிடங்களை மீளக் கட்டித்தருவதாக அரசாங்கம் வாக்களித்திருந்தபோதிலும் அவர்கள் கட்டிடங்களை பூசி வர்ணம் பூசும் வேலைகளுக்கான நிர்மாண முயற்சிகளாகவே இது இருக்குமென அவர்கள் கூறினர்.

## வெலிப்பன்ன

ஜூன் 16 ஆம் திகதி கலவரத்தின் இரண்டாம் நாள் வெலிப்பன பகுதிக்கு ஆய்வுக்குழு விஜயத்தை மேற்கொண்டது. நாங்கள் எரிக்கப்பட்ட வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு சென்றோம். நகரத்தின் ஊடாகச் சென்று தாக்கப்பட்ட கடைகள் மற்றும் ஒரு காவலாளி கொலை செய்ப்பபட்ட லங்கா பண்ணைகள் என்பவற்றையும் பார்வையிட்டோம். பண்ணையின் சொந்தக்காரர் தாக்குதல் இடம்பெற்றபோது அங்கு இருக்கவில்லை. அதனால் காடையர்களை இனம் காணவும் முடியவில்லை. மிகவும்

இருட்டாக இருந்ததால் எதனையும் காண முடியவில்லை என உயிர் தப்பிய காவலாளி கூறினார். பண்ணை அலுவலகம் மற்றும் களஞ்சிய கொட்டகைகள் எரிக்கப்பட்டு ரூபா 500,000 பெறுமதியானவற்றுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் ஆட்களே இந்த சம்பவத்தில் ஈடுபட்டிருப்பதாக சொந்தக்காரர் சந்தேகித்தார்.

### வெலிப்பன்ன நகரத்தில்

சகோதர்கள் குழுவொன்றுடனும் அவர்களது அயலவர்களுடனும் நாம் கலந்துரையாடினோம். சகோதரர் குழுவினர் வெலிப்பன நகரத்தில் ஒரு வாகன சுத்திரிகரிப்பு நிலையத்தை சொந்தமாக வைத்திருந்தனர். அளுத்கமவில் நடைபெற்றதை ஏதோ பற்றவைக்கப்பட்டது போன்று பார்க்கின்றார்கள். ஆனால் உள்ளூர் எதிரிகளாலேயே இது ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது, உள்ளூரில் உள்ள சிங்களக் காடையர்களே இந்தத் தாக்குதலை ஊக்குவித்ததாகக் குற்றம் சாட்டுகிறார்கள். நிகழ்வின் ஒரு நாளின்பொழுது இரண்டு சிங்கள முதலாளிகள் முஸ்லிம்களுடன் இணைந்துகொண்டு பொலிஸ் பாதுகாப்பைக் கேட்பதற்கு திட்டமிட்டார்கள். அவர்களுக்கிடையில் இன அடிப்படையிலான வெறுப்புணர்வு இருக்கவில்லை. வன்முறை இல்லாது இருப்பதை உறுதிப்படுத்துவதையே தாம் விரும்புவதாக அவர்கள் கூறினார்கள். பொலிசார் இவ் எரிப்பு இடம்பெற வேண்டுமென்பதையே உண்மையில் விரும்பினார்கள் என முஸ்லிம்கள் தெரிவித்தனர். அவர்கள் தமது சிங்கள வாடிக்கையாளர்களுக்கும் அந்த இரவில் ஒரு தாக்குதல் நடைபெறக்கூடியதாக இருப்பது குறித்தும் அறிவித்ததுடன் பெண்களின் பாதுகாப்பை ஆகக் குறைந்தது பாதுகாத்துக்கொள்ளுமாறு அறிவுரை கூறியிருக்கிறார்கள். ஆகவே, பெண்கள் மற்றும் சிறுவர்கள் அண்மையில் உள்ள முஸ்லிம் கிராமத்திற்கு நகர்த்தப்பட்டு இருந்தனர். கொள்ளையடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பொலிசாரும் பிரசன்னமாக இருந்து அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தனர் எனக் கூறினர். பொலிசாரை பார்த்து ஒருவர் சப்தமிட்டபொழுது எம்மால்

ஒன்றும் செய்ய முடியாது; எமக்கு கட்டளைகள் இல்லை எனக் கூறியுள்ளனர்.

தாம் எதிர்த்துப் போராட முயற்சித்ததாக இளைஞர்களுள் ஒருவர் குறிப்பிட்டார். பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவரைக் கழுத்துப்பட்டியில் பிடித்து ஏன் ஒன்றும் செய்யாதிருக்கின்றீர் என அவர் கேட்டுள்ளார். அப்பொழுது அந்தப் பொலிசார் எம்மால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. அவர்களை நிறுத்துவதற்கு உங்களால் செய்யக் கூடியதை செய்யுங்கள் எனச் சொல்லியுள்ளார். அவர்கள் கற்களாலும் தடிகளாலும் சண்டையிட்டனர். அவர்கள் எதிர்த்துச் சண்டையிட்டதால் காடையர்கள் உற்சாகம் குறைந்து பின்வாங்கினார்கள். அதற்குப் பின்பு கடைகள் மீதான தாக்குதல்கள் முடிவுக்கு வந்தன.

அந்த இரவு தாக்குதல் நடத்திய ஆட்கள் அயல் கிராமங்களில் இருந்தான அவர்களது நண்பர்கள் உறவினர்கள் மற்றும் ஒரு உள்ளூர் காடையருக்கு பணம் கொடுத்தவர்கள் போன்றோர் தவிர்ந்த வேறு யாரும் இல்லை என அவர்களுக்கு தெரியும் என அவர்கள் கூறினர். அந்த உள்ளூர் காடையர் பொது பல சேனாவின் ஓர் உறுப்பினராவார். அந்த உள்ளூர் காடையரும் தம்முடையதை ஒத்த வாகனச் சுத்திகரிப்பு நிலையத்தை வைத்திருந்தார் என சகோதர்கள் தெரிவித்தனர். காடையர்கள் ஒரு லொறியில் வந்து கடைகளில் இருந்து களவெடுத்து, கொள்ளையடித்து அந்தக் கடைகள் மற்றும் வீடுகளுக்கு தீவைப்பதற்கு முன்னதாக அந்த லொறியில் பொருட்களை ஏற்றினர். அவர்கள் குடித்திருந்தனர். சுத்திகரிப்பு நிலையத்தை தாக்கிய பின்னர் அவர்கள் பிரதான வீதியில் உள்ள கடைகளைத் தாக்கினர். எது யாருக்குச் சொந்தமானது அவர்களுக்கு தெரியாது அதனால் பல சிங்களக் கடைகளும் தீ வைக்கப்பட்டன.

அடுத்தநாள் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து முறைப்பாடு செய்ய பொலிசாரிடம் சென்றனர். அவர்களுள் பலர் சிங்களக் கடைகள்

மீதான தாக்குதலுடன் சம்பந்தப்படுத்தி கைது செய்யப்பட்டனர். சிங்களக் கடைகளைத் தாக்கியவர்களின் முஸ்லிம்களின் பெயர்களை சிங்களக் கடை உரிமையாளர்கள் கொடுத்திருந்தனர்.

அண்மையில் உள்ள பௌத்த வழிபாட்டு தலத்தையும் தாக்குவதற்கான முயற்சிகளுக்கான சான்றுகள் இருந்தன. கண்ணாடிகளுக்கும் சுவர்களுக்கும் சேதம் ஏற்பட்டு இருந்தது. பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுடனான எமது உரையாடல்களில் இந்த விடயம் வரவில்லை.

## பேருவளை

பேருவளை சீனன் கோட்டையில் உள்ளூர் விகாரையின் மணிகள் ஒலிக்கப்பட்டு பொது பல சேனாவினால் நடத்தப்படும் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு மக்கள் ஒன்றுகூடினர். இளம் ஆட்கள் பஸ்களிலும் லொறிகளிலும் ரிப்பர் லொறிகளிலும் கூட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இந்தக் கூட்டத்தினர் கூட்டம் முடிந்து திருப்பிச் செல்லும் வழியில் அம்பேபிற்றிய, பேருவளை முஸ்லிம் பகுதிகளில் தாக்குதல் நடத்தியதாக பேருவளை முஸ்லிம்கள் தெரிவித்தனர்.

வன்முறை இடம்பெற்ற உடனடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் சான்றுகள் பின்வருமாறு:

> வீதியோரத்தில் உள்ள இந்தக் கடைகள் அனைத்தையும் நொறுக்குங்கள்... அழியுங்கள்... இந்த முஸ்லிம்களை அழியுங்கள்... என அவர்கள் கத்திக் கொண்டிருந்தனர். அவர்கள் கடைவீதிக்குள் முன்னேறினார்கள். எம்மில் 25 பேர் தான் இருந்தனர். துணிச்சலையும் அல்லாஹ்வின் ஆசீர்வாதத்தையும் எடுத்துக் கொண்டு நாம் முன்னே சென்றோம். நாம் முன்னே வருவதைக் கண்ட அவர்கள் எமக்கு பின்னாலே அதிக மக்கள்

கூட்டம் இருப்பதாக நினைத்தனர். பின்பு அவர்கள் பின்வாங்கத் தொடங்கினர். கற்களை எறிந்துகொண்டு அவர்களை கலைத்தோம். கற்களையும் தடிகளையும் தவிர எம்மிடம் வேறு ஆயுதங்கள் இருக்கவில்லை. சுமார் 45- 50 நிமிடங்களாக நாம் அவர்கள் மேலும் முன்னேறுவதைத் தடுத்தோம். நாம் அவர்களை விரட்டினோம். அவர்கள் திரும்ப ஓடிச் சென்று தொலைதூரம் ஓரிடத்தில் ஒன்றுகூடி மீண்டும் முன்னேற முயற்சித்தனர். நாம் கற்களை எறிந்து அவர்களைக் கலைத்தோம். இந்த சண்டை சிறிதுநேரம் தொடர்ந்தது. எமது இளைஞர் ஒருவரின் கையை அவர்கள் வெட்டினர். வேறொருவரது முகம் கண்ணாடியால் வெட்டப்பட்டது. ஏனையோருக்கும் காயங்கள் ஏற்பட்டன. அதேநேரத்தில் சில பெண்கள் பொலிசாருக்கு 119 மூலம் அழைப்பு எடுக்க முயற்சித்தனர். ஒரு மணித்தியாலமாக அவ்வாறு முயற்சித்தனர். அந்த நேரத்தில் அவர்கள் உள்ளே வருவதை நாங்கள் தடுத்தோம். இரத்தினக்கல் வெட்டும் கடையை அவர்கள் முதலில் அடித்து நொறுக்கினர். ஏனெனில், அது எங்களிடமிருந்து மிகத் தூரத்தில் இருந்தது.

நாம் பொலிசாரிடம் சென்று அறிவித்தபொழுது அங்கு எவரும் இருக்கவில்லை. பொறுப்பதிகாரியும் இல்லை. ஒருவரும் கண்ணில் படவில்லை. (அவர்கள் எல்லோரும் அளுத்கமவுக்கு அனுப்பப்பட்டு இருந்தனர்) நாங்கள் பொலிஸ் கான்ஸ்ரபிளுக்கே தெரிவித்தோம். சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது பொலிசார் கொண்டுவரப்பட்டு அங்கு ஆறு பொலிசார் வந்தனர். அவர்கள் காடையர்களிடம் மேலும் முன்னேற வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டனர். ஆனால் அந்தக் காடையர்கள் பொலிஸ் கட்டளைகளை மதியாமல் முன்னே வந்தனர். ஆகவே பொலிசாரின் பிரசன்னம் இருந்தபொழுது நாங்கள் இன்னும் முன்னே சென்று கூட்டத்தினரைக் கலைக்க வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்திற்கு

பின்னர் இராணுவத்தினர் வந்தனர். ஆனால் விசேட அதிரடிப் படையினர் வரவில்லை. அதற்குப் பின்பு அவர்களை முன்னே வரவேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் எம்மையும் வீடு செல்லுமாறு கேட்கப்பட்டது. அவர்கள் கண்ணீர்ப்புகையை அவர்கள் பக்கத்திற்கு பீய்ச்சினர். ஆனால் அந்தக் கூட்டத்தினர் கலையவில்லை. அவர்கள் எமது களஞ்சியம் ஒன்றை அடித்து நொறுக்கினர்.

ஒவ்வொரு 100 மீற்றர் தூரத்திற்கு இராணுவத்தினரினதும் பொலிசாரினதும் பிரசன்னம் இருந்தது. ஆனால், அவர்களுக்கு முன்னாலேயே கடையை உடைத்து இருப்புக்களையும் ஏனைய பொருட்களையும் வீதிக்கு இழுத்து அவற்றைத் தீயிட்டனர். அவை சுமார் 15 இலட்சம் பெறுமதி கொண்டவை. இராணுவத்தினரோ பொலிசாரோ விசேட அதிரடிப் படையினரோ வெறுமனே அவர்கள் செய்வதை நிறுத்தாமல் எம்மையும் முன்னே செல்விடாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சனக்கூட்டம் மேலும் முன்னே வராமல் சிரமப்பட்டு தடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால், விசேட அதிரடிப் படையினரும் பொலிசாரும் வீதியில் இருந்தமையால் அவர்களுக்கு முன்னே வந்து கொள்ளையடித்து பொருட்களுக்கு தீயிடக் கூடியதாக இருந்தது. கொள்ளையடித்த பொருட்கள் மாத்திரம் 20 இலட்சம் ரூபா மதிப்புள்ளதாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது

## வைத்தியரின் விபரிப்பு

காடையர்களாலும் ஊரங்குச் சட்டம் காரணமாகவும் பொறியில் அகப்பட்டிருந்த ஆட்களின் மருத்துவ உதவிக்காக வேண்டுகோளின் பேரில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்ற ஒரு வைத்தியரும் நாம் நேர்கண்டவர்களுள் ஒருவராக இருந்தார். வைத்தியர்கள் உட்பட பலர் அவர்களை அவசரமாக

அழைப்பு விடுத்தனர். ஏனெனில், அவர்களுக்கு மருந்துகளும் விநியோக வசதிகளும் தேவைப்பட்டிருந்தன. அத்துடன் மக்கள் காயப்பட்டு மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ளாமல் இருந்துள்ளனர். நாகொடை வைத்தியசாலையிலிருந்த காயப்பட்டோர் கவனிக்கப்படவில்லை. அதனால் அவர்களின் நிலைமை மேலும் மோசமடைந்தது எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு வைத்தியர் தெரிவித்தார். தான் நிவாரணம் மற்றும் அபிவிருத்திக்காகப் பணியாற்றும் ஒரு நிறுவனத்திடமிருந்து நோயாளர் காவும் வண்டிகளைப் பெற்றுக்கொண்டதாகவும், ஒரு கொடையாளியிடமிருந்து மருத்துவ பொருட்களைப் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார். பேருவளை பொறுப்பதிகாரி மற்றும் வைத்தியரைத் தெரிந்த வேறு ஒருவரிடமிருந்து அவர்கள் நோயாளர் காவு வண்டி, மருந்துப் பொருட்கள் மற்றும் மருந்து கலப்பவர் ஒருவரையும் பெற்றுக்கொண்டனர். காடையர்கள் இன்னும் சூழ இருப்பதினால் பொலிஸ் பாதுகாப்புடன் வரும்படி அவர்களுக்கு சொல்லப்பட்டது. அவர்கள் களுத்துறையில் நிறுத்தி இறந்தவர்களை அடக்கம் செய்யும் உடைகளை (கபன்) சேகரித்துக் கொண்டனர். பேருவளை பொலிஸ் நிலையத்திற்கு அவர்கள் வந்தபொழுது, இதற்கு அப்பால் செல்வது ஆபத்து மிக்கது எனவும் பொலிசாருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்பதால் பொலிஸ் பாதுகாப்பை வழங்க முடியாது எனவும் அவர்களுக்கு சொல்லப்பட்டது. பெருந்தொகையான காடையர்களின் பிரசன்னம் இருப்பதன் நிமித்தமாக பொலிசாரும் ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டி வரலாம் என சொல்லப்பட்டது. என்ன செய்யலாம் என ஊகிக்க முடியாமல் அக் குழுவினர் பேருவளை பொலிஸ் நிலையத்தில் சில மணி நேரம் தங்கியிருந்தனர். அதேவேளை, கெஞ்சிக்கேட்டு பல தொலைபேசி அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றன.[72] பிக்குகள் நாகொடை வைத்தியாசலைக்குள்

[72] பொலிஸ் நிலையத்தில் இருந்தபொழுது தான் கண்டதாக அவர் தெரிவித்தார். அவற்றில் ஒன்றின் சாரதி அதனை வெளியே எடுப்பதற்கு அதில் டீசல் இல்லை எனத் தெரிவித்தார்.

நுழைந்து சிகிச்சை பெற்று வரும் முஸ்லிம்களின் சேலைன் குழாய்களை அகற்றுவதாக அந்தத் தொலைபேசி அழைப்பு கூறியது. அவர்கள் நிர்க்கதியற்று இருப்பதாக உணர்ந்தபொழுது பல செல்வாக்குடைய நபர்களுடன் தொடர்புகொள்ள முயற்சித்தார்கள். எவ்வாறாயினும், எவரும் அவர்களுக்கு உதவவோ அல்லது அவர்கள் என்ன செய்ய வேண்டும் எனச் சொல்லவோ இல்லை.

பின்பு அவர்கள் அந்த இடத்தை சென்றடைவதற்கு கந்த விகாரை வீதியை பயன்படுத்துவதற்கு தீர்மானித்தனர். அங்கேயும் வீதியில் காடையர்கள் இருந்ததாகவும் 3-4 அதிரடிப்படையினரைக் கண்டதாகவும் வைத்தியர் தெரிவித்தார். காடையர்கள் இரும்புப் பொல்லுகள், போத்தல்கள், மரப் பொல்லுகள் என்பவற்றை வைத்திருந்தனர். நோயாளர் காவு வண்டிச் சப்தத்தைக் கேட்டவுடன் அவர்கள் அகன்று சென்றனர். உண்மையில் அவர்கள் இதைக் கேட்டபொழுது ஓடிச் சென்றார்கள் என வைத்தியர் கூறினார். அவர்கள் உள்ளூர் வைத்தியர்களை நோயாளர் காவு வண்டியில் ஏற்றிக் கொண்டு ஸாவியா வீதியிலுள்ள தெருப்பள்ளிக்கு முதலில் சென்றனர்.

பின்பு அவர்கள் வெலிப்பிற்றிய, அதிகாரிகொடை மற்றும் சீனவத்தைக்குச் சென்றனர். உட்புற வீதிகள் காடையர்களின்றி இருந்ததுடன் அங்கு வேலை செய்யக்கூடியதாக இருந்தாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். நோயாளர் காவு வண்டியானது ஒரு வைத்தியர் அல்லது மருத்துவ மாணவனை ஒவ்வொரு இடத்திலும் காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மருந்துகளுடன் இறக்கிவிட்டது. அவர்கள் அதிகாரிகொடையிலிருந்து தெருப்பள்ளிக்கு பலத்த பாதுகாப்புடன் ஒரு பெண்கள் குழுவினரை அனுப்பி வைத்தனர்.

வெலிப்பிற்றிய பகுதியைச் சேர்ந்த மக்கள் துப்பாக்கிச் சூட்டு காயங்களைக் கொண்டிருந்தனர். ஏனையோருக்கு போத்தல் வெட்டுக்காயங்களும், ஏனைய கண்ணாடி வெட்டுக் காயங்களும், தலைக்காயங்களும், எரிகாயங்களும் இருந்தன. 16 வயதுடைய ஒரு இளம் பெண் மதிலால் பாய்ந்து தனது தோள் விலகி விட்டதாகக் கூறினாள். அவள் மருத்துவ வசதியில்லாமல் 18 மணித்தியாலங்களாக வேதனையோடு இருந்திருந்தாள்.

வதந்திகள் காட்டுத்தீ போல் பரவியிருந்தன. வெலிபிற்றிய பகுதியில் கொல்லப்பட்ட இரண்டு ஆண்கள் அடக்கப்பட்ட பின்னர் சிங்களவர்கள் மீது முஸ்லிம்கள் தாக்குதல் நடத்துவர் என ஒரு வதந்தி கூறியது. உண்மையில், அப்படியான ஒரு தாக்குதல் எதுவும் இல்லையெனவும், ஏற்கனவே அந்த உடல் அடக்கம் செய்யப்பட்டு விட்டது எனவும் அப்பகுதி சிங்கள மக்களிடம் தெரிவிக்குமாறு உள்ளூர்வாசிகளை வைத்தியர் கேட்டுக் கொண்டார். அவர்கள் சீனவத்தையில் இருந்து பேருவளைக்கு ஜூன் 16ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு சென்றனர். 100 மீற்றர் வரை தாம் பிரச்சினையும் இன்றிக் கடந்து சென்றுவிட்டதாக வைத்தியர் தெரிவித்தார். அதற்குப் பின்பு அவர்கள் காடையர்களை எதிர்கொண்டனர். அங்கே ஆயிரம் ஆட்கள் நின்றிருந்ததாகவும் அவர்கள் துவிச்சக்கரவண்டி சங்கிலிகள் மற்றும் ஏனைய கருவிகளுடன் இருந்ததாக வைத்தியர் கூறினார். அவர்கள் வானை சூழந்து கொண்டு அதனைத் தாக்க ஆரம்பித்தனர். நன்கு அனுபவமுடையவரான வானின் சாரதி காடையர்கள் இருந்தபொழுதிலும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு காலி வீதிக்கு சென்றுவிட்டதாக வைத்தியர் தெரிவித்தார். எவ்வாறாயினும், துரதிஷ்டவசமாக சினமூட்டப்பட்ட சாரதி வாகனத்தை பேருவளைப் பக்கம் திருப்பாமல் காலிப் பக்கம் திருப்பி விட்டார். அவர்களால்

பேருவளைக்கு திரும்ப முடியாது எனத் தீர்மானித்துக் கொண்டு நெடுஞ்சாலைக்கான நுழைவாயிலைக் கண்டறிந்து கொண்டு கொழும்புக்குத் திரும்பினர். கூடி நின்ற காடையர்களில் பிரதானமாக இளம் ஆண்களும் பெண்களும் இருந்ததாக வைத்தியர் தெரிவித்தார். பல பெண்கள் வெள்ளை உடையில் கோயிலுக்குச் செல்வதுபோல உடுத்தியிருந்தாக தெரிவித்தார். சிலரிடத்தில் காயங்கள் தென்பட்டதாகவும் ஏனையோர் முகத்தில் கிரீஸ் பூசியிருந்தவர்கள் போல் இருந்தனர் என்றும் அவர்கள் கல்வி கற்காதவர்கள்போல் இருந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

**அப்பகுதியின் நிகழ்வு விபரிப்புக்கள் அவதானிப்புக்களில் இருந்தான பிரதான கண்டறிகைகள்:**

1. தாக்குதல்கள் ஒரே நேரத்தில் அந்த சில இடங்களில் ஏற்கனவே நிலையெடுத்து நின்ற ஆட்களாலும் குழுக்களாலும் நடத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, அதிகாரிகொடை, சீனவத்தை, பத்திராஜகொடை, இராணுவ வீதி தாக்குதல்கள் 6.45 மணியளவில் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட உடனடியாக இடம்பெற்றுள்ளன.

2. மேலே சொல்லப்பட்ட நான்கு இடங்களிலும் விசேட அதிரடிப்படையினர் நிலை கொண்டுள்ளனர். ஆனாலும் அவர்கள் வன்முறை நடந்த பொழுதும் தாக்குதல்கள் பூர்த்தியடைந்த பின்னரும் பாதிக்கப்பட்டவர்களுடன் ஈடுபடுவதற்கு மறுத்துள்ளனர்.

அநேகமான இடங்களில் காடையர்கள் அந்தப் பகுதி மக்களை உள்ளடக்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இது தாக்குதலுக்குள்ளாகிய முஸ்லிம்களாலும் இலக்குவைக்கப்பட்ட சிங்கள வதிவாளர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டது.

3. எல்லா இடங்களிலும், குறிப்பாக சீனவத்தையில் ஊடரங்குச் சட்டம் அமுலில் இருந்தபொழுது முஸ்லிம்கள் சுதந்திரமாக நடமாடுவதை விசேட அதிரடிப் படையினர் தடுத்ததாக மக்கள் மீண்டும் மீண்டும் அழுத்தியுரைத்துள்ளனர். ஆனால் படையினரின் இடையீடு இன்றி சிங்கள மக்கள் நடமாடக் கூடியதாக இருந்துள்ளது.

4. பாதிக்கப்பட்டவர்களின் கூற்றுக்களின் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ சிகிச்சைக்கு எடுத்துச் செல்வதிலோ, தீயினை தணிப்பதிலோ எந்த வடித்திலுமான பாதுகாப்பை வழங்குவதிலோ படையினரிடம் இருந்து எந்த உதவியும் வழங்கப்படவில்லை. (இரண்டு விதிவிலக்குகளை கீழே பார்க்க.)

5. ஒரு விதிவிலக்கான சம்பவம் புது வீதியில் இடம்பெற்றது. அங்கே சிரேஷ்ட விசேட அதிரடிப்படை அதிகாரியின் இடையீடானது நாடப்பட்டதுடன், விசேட அதிரடிப்படையினரின் வாகனத்தை நோக்கிய வேட்டுக்கள் காரணமாக தாக்குதல்காரர்கள் கலைந்து சென்றனர். இன்னொரு சம்பவத்தில் வயது முதிர்ந்த ஒரு பெண் தாக்குதல்காரர்களிால் அதிரடிப் படையிடம் கையளிக்கப்பட்டு பாதுகாப்பான இடத்தை அவள் கண்டுபிடிப்பதற்கு அவர்கள் உதவிசெய்துள்ளனர். அதேவேளை, காடையர்கள் அவளதும் அவளுடைய வீட்டையும் அயலிலுள்ள வீடுகளையும் தாக்குவதையும் கொள்ளையடிப்பதையும் தொடர்ந்தனர்.

6. தாக்குதல்கள் நடத்தப்பட்ட முறையிலும் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மற்றும் தாக்குதல்களின் செயற்பாடுகளிலும் ஒருவித ஒத்த தன்மை காணப்பட்டிருந்தது. அவர்கள் சனக்கூட்டத்திற்குள் நகர்ந்திருந்தனர். பெற்றோல் நிரப்பப்பட்ட கண்ணாடிப் போத்தல்களைக் கொணடு வந்திருந்தனர். பொதுவாக அவை சாராயப் போத்தல்களாக இருந்தன. அவர்கள் தடிகளையும்

இரும்புக் கம்பிகளையும் கொண்டு வந்திருந்தனர். அவர்கள் குஷன்கள், உடுதுணிகள், மெத்தைகள், சில சமயங்களில் ரயர்கள் போன்ற எரியக்கூடிய மூலப்பொருட்களை சேகரித்து வைத்திருந்ததுடன் நடு அறையில் தீயை மூட்டினர் என கண்கண்ட சாட்சியங்கள் தெரிவித்தன.

தாக்குதல்காரர்கள் மக்களைக் காயப்படுத்துவதில் விருப்புடையோராய் இருக்கவில்லை. உண்மையில், அவ்வாறான தாக்குதல்களை விலக்குவதற்கு ஏற்பாடுகள் எடுக்கப்பட்டிருந்தன என சாட்சிகள் சுட்டிக்காட்டினர். பல சமயங்களில் மக்களிடம் உங்களது வீட்டை எரிக்கப் போகிறோம் புறப்பட்டுச் செல்லுங்கள் எனக் கூறியிருக்கின்றனர். சில வேளைகளில் அவர்கள் மக்கள் வேறு அறைகளில் ஒளித்திருக்க வீட்டில் உள்ள பொருட்களுக்கு தீ வைத்துள்ளனர். தாக்குதல்காரர்கள் களவு, தீ வைத்தல் என்பவற்றில் ஈடுபட்டதுடன் எதிர்ப்பு ஏற்பட்ட சமயங்கள் தவிர அவர்கள் ஆட்கள் மீது காயம் ஏற்படுத்துவதில் அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. ஒரேயொரு விதிவிலக்காக இருந்தது வெலிப்பன்ன லங்கா பண்ணையிலுள்ள தமிழ் காவலாளி தொடர்புடைய சம்பவமாகும். அவர் தாக்குதல்காரர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார். தனிநபர்கள் மீது பெரும் வன்முறை மேற்கொள்ளப்படாதிருப்பது பெரிய ஆறுதலாக இருக்கும் அதேவேளை, நாடு அனுபவித்த ஏனையவைகளில் இருந்து வேறுபட்டதாக இன வன்முறை நிகழ்வு அமைந்திருப்பது அறியாசை கொண்ட ஒரு நிகழ்வாக நிலைத்துள்ளது.

7. தாக்குதல்களில் மிக முக்கியமான நிகழ்வாக கொள்ளையடிப்பு இடம்பெற்றுள்ளது. நகை மற்றும் பணம் என்பன சிரமப்பட்டு தேடி எடுக்கப்பட்டுள்ளது. புதிய உபகரணங்கள், இயந்திர உதிரிப் பாகங்கள், தளபாடங்கள் என்பன பெறுமதியாக கருதப்பட்டு இருப்பதுடன் குளியலறை பொருத்துகைகள்கூட கொள்ளையடிக்கப்பட்டு, இந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்ட வாகனங்களில் ஏற்றப்பட்டுள்ளன.

அலுமாரிகளும் பெட்டிகளும் உடைக்கப்பட்டு காசு, நகை என்பன அநேகமான வீடுகளில் களவாடப்பட்டுள்ளன. தளபாடம் மற்றும் களஞ்சியங்களில் இருந்த கையிருப்புகள் என்பன திட்டமிடப்பட்டு வெறுமையாக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

8. வீடுகள், கடைகள், வாகனங்கள், பொருள் இருப்புக்கள், வியாபாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் போன்ற சொத்துக்கள் இலக்கு வைக்கப்பட்டதுடன் ஒன்றில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன; அன்றேல் அழிக்கப்பட்டுள்ளன. இலக்கு வைக்கப்பட்ட முஸ்லிம்களைப் பொறுத்தளவில் இது அவர்களது பொருளாதார நலன் மீதான ஒரு தாக்குதல் என்பது மிகத் தெளிவாக உள்ளது.

9. மின்சாரம் நிறுத்தப்பட்டதன் காரணமாக பயன்படுத்தப்பட்ட கண்களைக் குருடாக்கும் வெளிச்சமானது பத்திராஜகொடை, அதிகாரிகொடை, வெலிப்பன்னை போன்ற இடங்களில் இருந்து அறிக்கையிடப்பட்டுள்ள மற்றொரு ஒத்த தன்மையாக இருந்தது.

10. கூறப்பட்ட அநேகமானவற்றின் பிரகாரம் காடையர் குழு 15-35 வயதிற்கு இடைப்பட்டவர்களைக் கொண்டிருந்தது. பெண்களும் தாக்குதல்களில் சம்பந்தப்பட்டிருந்தனர். அநேகமாக தாக்குதல் நடத்தும்படி ஆண்களைத் தூ ண்டியிருந்தனர். சில வேளைகளில் வன்முறைகளில் நேரடியாக ஈடுபட்டிருந்தனர். கூட்டத்தினரிடையே பிக்குகளும் இருந்ததாகவும் அவர்களில் பலர் (ஆகக் குறைந்தது ஒரு பிக்குவாவது போதையிலிருந்தாக தெரிய வருகிறது)

11. வன்முறைக்கான ஒரு தவறிழைக்கப்பட முடியாத வகுப்புக் காரணியிருந்துள்ளது. வீடு, தளபாடம், கணினிகள், தொலைக்காட்சிகள், கார்கள், நகை போன்ற சொத்துக்களுடன் கூடிய மத்தியதர மற்றும் மேல் மத்தியதர

குடும்பங்களே இலக்குவைக்கப்பட்டன. காடையர்கள் வறிய வகுப்புகளைச் சேர்ந்த இளம் ஆண்களையும் சில சமயங்களில் இளம் பெண்களையும் கொண்டிருந்தது. காடையர்கள் பற்றிக் குறிப்பிடும் மத்திய தர, இடைத் தரகர்கள் சொல்வதன் பிரகாரம் அவர்கள் எல்லோரும் கல்வி கற்காதவர்களாகவும் முகங்கள் கொடூரமானவையாகவும் காணப்பட்டன. பெண்கள் தாம் கேள்விப்படாத கெட்டவார்த்தைகளைப் பயன்படுத்தியதாகவும் கூறினர். வசதி குறைந்தவர்களைக் குறிப்பிடுவதற்கு மத்திய வர்க்கத்தினரால் வகுப்பு தொடர்பாக பயன்படுத்தப்படும் எல்லா சுட்டிக்காட்டிகளாகவும் இவை உள்ளன. வண. ஞானசார தேரரும் தனதுரையில், அந்தக் குழுவினரை "***thanrasthiyadugahuwaathi.***" என்று கூறும்பொழுது "***rasthiyadukarayo***"[73] என அழைத்துள்ளார்.

12. மேற்படி 11 இல் இருந்து தொடர்வதாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் இன உறவுகளால் தற்காலிகமாக சோடிக்கப்பட்டவையாக வகுப்பு உறவுகள் காணப்படுகின்றன. இவ் வன்முறைகளின் காரணமாக ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக இருந்த சமூகங்கள் இப்போது ஒன்றோடொன்று பேசுவதில்லை. பல முஸ்லிம்கள் தமது அயலவர்கள் தம்மை முன்கூட்டியே எச்சரிக்கை செய்யவில்லை என்ற மன உளைச்சலில் இருந்தனர். அத்துடன் அவர்கள் காடையர்களுக்கு உடந்தையாக இருந்து விட்டனர் என உணருகின்றனர். அவர்களும் இவர்கள் நெருக்கடியில் இருந்தபொழுது உதவ முயற்சிக்கவில்லை. பாதிக்கப்பட்ட சிங்களவர்களும் அதேவிதத்தில் சொத்துக்களின் இழப்பால் அழிந்துபோயிருப்பதுடன் தாக்குதலை நிறுத்த

73 "Rasthiyadu Karayo" எனப்படுவது ஒரு சிங்கள பேச்சுவழக்கு சொல்லாகும். அது செய்வதற்கு ஒன்றுமில்லாமல் வெட்டியாக இருப்பதைக் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. வண. ஞானசார தேரவும் Rasthiyadu என்ற அதேபெயரை பயன்படுத்தி இருந்தார்.

எவரும் முயற்சிக்கவில்லை என்ற சிந்தனையால் மகிழ்வடையாதோராய் இருப்பதுடன் ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிரான வன்முறையில் முஸ்லிம் மக்கள் வன்முறையில் பங்குபற்றியதாக அறிந்திருந்தனர். வேடிக்கை பார்த்த சிங்களவர்கள் சம்பவங்கள் குறித்த ஒரு தெளிவை ஏற்படுத்துவதற்கு சிரமத்தைக் காண்பதுடன் எமது இனக்குழு உறுப்பினர்களின் நடவடிக்கைகளை ஆகக் குறைந்தது சம்பவங்களின் விபரிப்பை உருவாக்குவதற்கு சிரமத்தை எதிர்கொள்கின்றனர். ஆனால் என்ன நடந்தது என்பது குறித்தது இப்பொழுதும் விமர்சனம் உடையோராய் உள்ளனர்.

13. உறவுகள் முறிந்தது கவலைக்குரியது. தம்மைத்தாமே உறுதிப்படுத்திக் கொள்ளும் நல்ல உறவுகளுக்கான ஒரு சில உதாரணங்களையே நாம் கண்டோம். இங்கே சேகரிக்கப்பட்ட எல்லாக் காட்சியகங்களிலும் தாக்குதல்காரர்களை சிங்களவர்கள் எதிர்த்ததாகவும் தீயை அணைப்பதற்கு முஸ்லிம்களுக்கு உதவியதாகவும் இருவர் மாத்திரம் பேசியதையே நாம் கண்டோம். பொது பல சேனா மற்றும் அதனோடு இணைந்த குழுக்களால் கடந்த இரண்டு வருடங்களாகப் பேணப்பட்ட வெறுப்புணர்வு பிரசாரத்திற்கும் திரிபுபடுத்தப்பட்ட வதந்திகள் காரணமான அச்சமாகவே நாம் காண்கிறோம்.

14. வெலிப்பிற்றிய பள்ளிவாசல் தாக்குதல் சம்பவமானது மிகவும் வேதனை மிக்கது. ஏனெனில் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ள முனைந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டுச் காயங்களும் இறப்புக்களும் ஏற்பட்டிருந்தன. வன்முறைக்கு முன்னரும் பின்னரும் இராணுவ உத்தியோகத்தர்களின் பிரசன்னம் இருந்தது என்பதை நாம் அக்கறையுடன் குறித்துக்கொள்கிறோம். அவை அறியப்படுவதும் மேலும் நுணுகி ஆராயப்படுவதும் அவசியமானது.

படம் I : களுத்துறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகள்




படம் II: தர்கா நகரில் பாதிக்கப்பட்ட



# அத்தியாயம் V
# நிகழ்வுகளின் பின்னர்

## அளுத்கம தொடர்பில் அரசின் பதிற் செயற்பாடு

முஸ்லிம் சிவில் சமூகத்தினர் பொது பல சேனா யுகம் தொடர்பானவற்றுடன் தமது பல அக்கறைகள் மீது அதிகாரிகளுடன் ஈடுபடுவதற்காக அதிகாரத்தை வைத்திருப்போர் எனக் கருதுவோருடன் உரையாடல் ஊடாக ஈடுபடுவதற்கான தெரிவை செய்திருந்தனர். உதாரணமாக, முஸ்லிம் கவுன்சில், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மற்றும் முஸ்லிம் இளைஞர் பேரவை உட்பட்ட ஏனைய நிறுவனங்கள் அக்கறையுடைய விடயங்கள் தொடர்பாக பாதுகாப்பு செயலாளருடன் அக்கறையுடன் ஈடுபட்டு வந்துள்ளன. இதன் விளைவாக பலர் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்களுடன் அவர்கள் ஒரு பணியாற்றல் உறவைக் கொண்டிருந்தனர் எனவும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளின் பொழுது அவர்களை அழைத்துக்கொள்வார்கள் எனவும் பலர் சொல்லியிருந்தனர். ஜூன் 15 ஆம் திகதி பிற்பகலில் வன்முறைச் செய்தி வெளிப்பட்டபொழுது அவர்கள் அதே பாணியை பின்பற்றியதுடன் அதிகாரிகளுடனான ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

### 2014 ஜூன் 15 தெஹிவளை பள்ளிவாசலில் இடம்பெற்ற கூட்டம்

அளுத்கமவில் வன்முறை வெடித்ததை அவர்கள் கேள்விப்பட்டவுடன் முஸ்லிம் சமூக சிவில் உறுப்பினர்கள் தெஹிவளை பள்ளிவாசலில் ஒன்றுகூடியதுடன் இராணுவப் புலனாய்வுப் பிரதிநிதிகளுடனான ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இந்தக் கூட்டத்தில் அளுத்கமவில் இடம்பெற்றது என்ன; அதிகாரிகளால் எடுக்கப்பட்ட ஏற்பாடுகள் என்பன கலந்துரையாடப்பட்டன. சுரேஷ் சாலி மற்றும்

பிரிகேடியர் ஹெந்த விதாரண என்போர் இந்தக் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்ததுடன் முஸ்லிம்களின் நிலைமை குறித்து விளக்கமளித்தனர். அளுத்கமவில் பொது பல சேனாவால் நடத்தப்பட்ட கூட்டமானது முடிவுக்கு வந்துள்ளது எனவும் அசம்பாவிதம் எதுவும் இன்றி கூட்டம் கலைந்து விட்டது எனவும் அவர்கள் தெரிவித்தனர். எவ்வாறாயினும், ஊர்வலத்தில் முஸ்லிம்கள் கற்களை வீசியதன் காரணமாகவே வன்முறை வெடித்தமை, முஸ்லிம்கள் ஒரு வான் நிறைய வந்து பிக்குகளை தாக்கியமை முதலான முஸ்லிம் அடாவடித்தனங்கள் போன்று பல செய்திகள் வந்திருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். வன்முறைக்கான குற்றச்சாட்டுக்களை தனியே முஸ்லிம்கள் மீது போட முயற்சிப்பதை உணர்ந்த முஸ்லிம் சிவில் சமூக உறுப்பினர்கள் எரிச்சல் உணர்வை வெளிப்படுத்தியதை இராணுவப் புலானய்வினர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கூட்டத்தின் முடிவில் எதிர்கால நடவடிக்கை குறித்து முஸ்லிம்கள் தெளிவற்றிருந்தனர், எனினும், எடுக்கப்பட்ட படிநிலைகள் குறித்த தகவல்களுக்காக இராணுவப் புலானய்வினருடன் மக்கள் தொடர்பு கொள்வதற்கு முயற்சிப்பதையும் தொடர்ந்தனர். அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என முஸ்லிம்களிடம் உறுதியளித்தனர். ஆனால் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அவருக்கு நெருங்கிய தொடர்புடைய முஸ்லிம் பிரதிநிதிகளிடம் காடையர்கள் பெருந்தொகையினராக இருப்பதினாலும் மிகவும் வன்முறையுடையோராக இருப்பதினாலும் அவர்களை அடக்க முயற்சி எடுத்தபோதிலும் அவ்வாறு செய்ய முடியவில்லை என சொல்லியிருந்தார்.

## 2014 ஜூன் 14ஆம் திகதி கச்சேரி கூட்டம்

முதல் நாள் வன்முறைகளின் பின்னர் பிரதமரால் களுத்துறை கச்சேரியில் ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கூட்டத்திற்கு சமுகமளித்த முஸ்லிம் பிரதிநிதிகளுடன் எம்மால் பேசக்கூடியதாக இருந்தது. அங்கு பிரசன்னமாக இருந்தவர்களுள் பிரதமர், அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, எஸ்.பி. திசாநாயக்க, டளஸ்

அழகப் பெரும, குமார வெல்கம, ரோஹித்த அபயகுணவர்தன, பிரசன்ன ரணதுங்க, ஏ.எச்.எம். பௌசி, மொஹமட் அஸ்லம், களுத்துறை நகர பிதா ஜவ்பர் மஹ்றூப், மற்றும் பொலிஸ் மாஅதிபர் இலங்கக்கோன், பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அனுர சேனநாயக்க என்போர் உள்ளடங்குவர். முஸ்லிம்களுக்கும் பௌத்த குருக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட அதேவேளை, பொது பல சேனாவைச் சேர்ந்த வண. ஞானசார தேரர் தனது பரிவாரங்களுடன் வந்திருந்தார். ஆரம்பத்தில் அளுத்கமவில் இடம்பெற்ற கூட்டமும் அக்கூட்டத்தில் வண. ஞானசாரவின் பேச்சும் வன்முறையில் வகிபங்கை ஆற்றியிருப்பதாக பலர் கருதியதன் காரணமாக இக்கூட்டத்திற்கு வண. ஞானசாரவை அழைப்பது முக்கியமானது என அரசியல் பிரதிநிதிகள் ஆரம்பத்தில் கருதியிருந்தது சுவாரசியமானது. பொது பல சேனாவால் பிரசாரம் செய்யப்பட்ட விதத்தில் அளுத்கம கதையினை வரையறுத்துக் கொள்ளும் அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரல் தொடர்பாக இங்கு பேசப்பட்டதாக நாம் நம்புகிறோம். நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக கிழக்கில் இருந்து படையினரைப் பயன்படுத்தப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடையதாக கைதுசெய்யப்பட்ட 11 பேரில் 07 பேரை விடுவிப்பதில் பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கும் வண. ஞானசாரவுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு எட்டப்பட்டது. பரிமாற்றத்தின்பொழுது வண. ஞானசார மாவனல்லவில் பொது பல சேனவால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தை இரத்துச் செய்வதற்கு இணங்கியிருந்தார். கலந்துரையாடலின்பொழுது பொது பல சேனாவின் கருத்தியலுக்கு முரணான எண்ணங்களைக் குறிப்பிடுவதற்கு பலர் முயற்சித்ததாக எமக்கு சொல்லப்பட்டது. ஒரு சமயத்தில் அமைச்சர் குமார வெல்கம ஒரு இடையீட்டை செய்ய வேண்டியிருந்தபொழுது வண. ஞானசார அவரை நோக்கி சப்தமிட்டதைத் தொடர்ந்து குமார வெல்கம அறையை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டார்.[74]

[74] JHU வின் மாகாணசபை உறுப்பினர் உதய கம்பன்பில 2014 ஜுலை 6 ஆம் திகதிய சிலோன் ருடே பத்திரிகையில் 16 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தை எடுத்துக்காட்டியதுடன், அமைதியான ஊர்வலமானது பள்ளிவாசலைக் கடந்து செல்கையில் கல்லெறிதலுக்கு உள்ளானதான விபரிப்பை அழுத்தியுரைக்கிறார். பிக்கு தாக்கப்பட்டதான பிணக்கிற்குரிய கதையை உண்மையாக அது உள்ளடக்குகிறது.

## அளுத்கம கலவரங்கள் மீதான இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் உத்தியோகபூர்வ கூற்றுக்கள்

நிறைவேற்று அதிகாரிகள் மட்டிலிருந்தான அளுத்கம பதிற்செயற்பாடுகளில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் ருவிற்றர் ஊடாக அமைதியாக இருக்கும்படி தூண்டியிருந்தார். அடுத்த பிரிவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளபடி தாக்குதலுக்குப் பின்னான தாக்குதல் தொடர்பான ஊடக வெளிப்படுத்துகைகள் தாக்குதலுக்குப் பின்னர் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கம் தொடர்ச்சியாக சம்பவத்தைக் குறைத்து மட்டிட்டுப் பேச முற்பட்டதுடன் எல்லாப் பங்களிப்புச் சக்திகள் தொடர்பாக கருத்தில் எடுக்காது, சம்பவம் தொடர்பான ஒரு விபரிப்பை பிரசாரம் செய்வதற்கும் குறைந்த அக்கறை செலுத்துவதற்கும் முயற்சித்தது. எந்த நேரத்திலும் அரசாங்கமானது வன்முறையின் அளவு குறித்தோ பாதிக்கப்பட்ட பகுதிகளில் உறவுமுறைகளின் கடுமையான உடைவு குறித்தோ யுத்தத்தில் இருந்து சமாதானத்திற்கு நிலைமாறும் இக்காலப்பகுதியில் இடம்பெற்ற இத்தகைய நிகழ்வொன்றினது உண்மையின் பாரதூரம் குறித்தோ தெற்கு முஸ்லிம்களின் உணர்வுகள் பாதிக்கப்பட்டது குறித்தோ அரசாங்கம் எந்தக் கட்டத்திலும் எதையும் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. சம்பவத்தின் பாரதூரத்தன்மையை குறைத்துப்பேச முயற்சித்திருப்பதில் அரசாங்கமானது சமூகங்களுக்கிடையிலான அவசியமான மீளிணக்கத்தில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை இழந்திருந்தது. அவ்வாறு செய்ததன் காரணமாக அரசாங்கம் முஸ்லிம் ஒதுக்குகை, சிங்கள பௌத்த மேலோங்கு தன்மை என்பவற்றின் எண்ண நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியதுடன் பொது பல சேனா குற்றத் தண்டனைக்கு உட்படாமல் செயற்படக்கூடிதாக இருந்த தன்மையையும் உறுதிப்படுத்தியது.

உதாரணத்திற்கு பின்வரும் தொடர்ந்து வந்த நிகழ்வுகள் தொடர்பாக நடந்து கொண்டிருக்கும் UNHRC கூட்டத்தில் சம்பவம் குறித்தான கேள்விகளுக்கு அரசு பதிலளிக்கிறது.

பிணக்கைத் தொடர்ந்து மூன்று முஸ்லிம் இளைஞர்களால் பௌத்த பிக்கு ஜுன் 12ஆம் திகதி தாக்கப்பட்டார் என்று சந்தேக நபர்கள் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். அதேவேளையில் பொலிசாருக்கு வாக்குமூலமளித்த பிக்குவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.[75]

அந்தப் பிக்கு வேறு சில பிக்குகளுடனும் பொதுமக்களுடனும் விகாரை நோக்கி சென்று கொண்டிருந்த பொழுது தர்கா நகர் பள்ளிவாசலைக் கடந்து செல்லும்பொழுது ஒரு குழுவினரால் கற்கள் வீசப்பட்டன. இந்தச் சம்பவம் வன்முறைக்கு இட்டுச் சென்றதுடன் அது ஜுன் 16 ஆம் திகதி பேருவளைக்கும் பரவியது. நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக கண்ணீர்ப்புகையை வீசவும், ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தவும் பொலிசார் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

மேற்படி முதலாம் பந்தியில் ஒரு பிக்குவை முஸ்லிம் இளைஞர்கள் தாக்கியதன் உண்மையானது பிணக்கிற்கு உட்படுத்தப்படுவதானது பிரதிபலிக்கப்படவில்லை. மேலும், பிக்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை என்ற உண்மையானது வெளிப்படையான காயங்களாக இருக்கவில்லை.[76] இந்தக் காயங்கள் தொடர்பாக சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை இருக்கவும் இல்லை அவைகள் உள்ளடக்கப்படவும் இல்லை. பிக்குவும் அவருடன் வந்த பொதுமக்களும் அந்தக் கூட்டத்தின் பின்னரேயே அவருடன் வந்திருந்தனர். மேலும் வன்முறைக்கு இட்டுச் சென்ற சம்பவம் என்ற

---

75 https://www.colombotelegraph.com/index.php/prompt-action-on-aluthgama-violence-taken-sri-lanka-tells-unhrc

76 இன்று பிக்குவைத் தாக்கியதாக குற்றம்சாட்டப்பட்ட இளைஞரின் சகோதரனாகிய மௌலவி ஜுன் 12 ஆம் திகதி அளுத்கமை பொலிஸ் நிலையத்தில் பௌத்த பிக்குவால் கழுத்தில் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டதாக பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார். அந்த முறைப்பாட்டில் பிக்குவைத் தாக்கியதை திட்டவட்டமாக மறுக்கின்றனர்.

வகையில் பிக்குகளும் மற்றும் பொதுமக்களும் பள்ளிவாசலைக் கடந்து சென்றோர் மீது ஏற்பட்டதாகக் காட்டப்பட்டது. நகரத்தின் ஏனைய பகுதிகளிலும் தாக்குதல்களின் ஒருங்கிணைக்கப்பட்ட தன்மை தொடர்பாக எத்தகவலும் வழங்கப்படவில்லை. அல்லது அநேகமான வன்முறை மற்றும் அழிவுகளானவை பொலிஸ் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது குறித்தும் எதுவும் சொல்லப்படவில்லை. கடைசிப் பந்தியிலும் கூட புத்த பிக்கு ஒருவர் தாக்கப்பட்டது தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட வன்முறை என்றே கூற்று எடுத்தாளப்படுகிறது. வன்முறையானது முஸ்லிம் சமூக செயற்பாட்டாளர்களால் உருவாக்கப்பட்டது என்பதைக் காட்டிக்கொள்ளும் அதன் முயற்சிகளில் தொடர்ச்சியாக உறுதியாக இருந்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றுக்கு 2014 ஜூன் 17ஆம் திகதி பதிலளித்த பிரதமர், காயப்பட்டதாக சொல்லப்படும் ஒரு பிக்குவை விகாரைக்கு ஒரு குழுவினர் எடுத்துச் சென்றபொழுது வன்முறை வெடித்து தர்கா நகர் தாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். தர்கா நகரில் உள்ள பெரிய பள்ளிவாசலைக் குழுவினர் கடந்து சென்றபொழுது சிலர் அவர்கள் மீது கல்லெறிய ஆரம்பித்ததாக அவர் சொன்னார்.[77]

நாடு பூராகவும் பதற்றம் தொடரும் சூழமைவில், 2014 ஜூன் 21 ஆம் திகதி ஜனாதிபதி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பதுளையில் ஒரு விசேட கூட்டத்திற்கு அழைப்பு விடுத்ததுடன் ஒரு இரண்டு நிமிட நீளமான ஒலிப்பதிவு செய்யப்பட்ட கூற்று விடுவிக்கப்பட்டது.[78] இலங்கையில் செய்துகொள்ளப்பட்ட யுத்தத்திற்குப் பிந்திய முன்னேற்றத்தை கீழ்நிலைப்படுத்துவதற்கான ஒரு வெளிநாட்டு சதியாக இது இருக்கமுடியுமென அளுத்கமவை எடுத்துக்காட்டி கூற்று

77 Sirasa News First prime time news at 7. Available at https://www.youtube.com/watch?v=4cTARXgaQKI

78 http://colombogazette.com/2014/06/21/mr-orders-police-action-over-hatred/

குறிப்பிட்டது. ஏனையோரின் கருத்துகளுக்கு மரியாதை அளிப்பது மற்றும் சட்ட ஒழுங்கில் நாடு வைத்திருக்கப்பட வேண்டுமெனவும் அவ்வாறான ஒரு மரியாதையை வைத்திருப்பதே நாகரிக சமூகத்திற்கு தனித்தன்மை வாய்ந்தது எனவும் குறிப்பிடப்பட்டது. என்ன நடந்தது என்பது குறித்த பெரும் கொடுங்கோன்மைக்கு ஏற்றுக்கொள்கைக்கு அண்மித்த இலாபகரமான கூற்றினைத் தொடர்ந்து அடுத்தநாள் ஜனாதிபதியினால் இன்னும் அதிகரித்தவிதமாக வலியுறுத்தப்பட்டது.

“சிறிய விடயத்திற்காக பெரிய ஹர்த்தால்”[79] மத்தள ராஜபக்ஷ விமான நிலையம் மற்றும் மாகம்புர துறைமுகத்திற்கான எரிபொருள் நிரப்பும் தொகுதி மற்றும் எரிபொருள் களஞ்சிய வசதியினை திறந்து வைத்து பேசும்பொழுது ஜனாதிபதி அளுத்கம குறித்து நம்பிக்கையற்ற விதத்தில் பேசியிருந்தார்.[80] காத்தான்குடியில் எல்ரிரிஈ யினர் கொன்றபொழுது ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்காதவர்கள், இரண்டு மணித்தியால அறிவித்தலில் முஸ்லிம்கள் விரட்டப்பட்டபொழுது ஹர்த்தால் மேற்கொள்ளாதவர்கள் இப்பொழுது ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கிறார்கள் என அவர் குறிப்பிட்டார். அளுத்கமவில் நடந்ததானது இராணுவத்திற்கு தகுதி கொண்டு வருவதற்கு முக்கியமானது ஒன்றல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.[81]

---

[79] https://www.youtube.com/watch?v=6Sxl9lYNndk,also see https://www.colombotelegraph.com/index.php/maha-loku-hartals-are-organized-for-minor-incidents-mahinda-slams-mulsim-hartals/ People in Dharga town and Beruwela made reference to this speech and were very distressed and critical of it by it.

[80] அளுத்கம சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முஸ்லிம் கடைகள், வியாபார நிலையங்களின் ஒரு பரந்துபட்ட கடை அடைப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது சிலபகுதிகளில் மாத்திரமே வெற்றியடைந்திருந்தது. ஆரம்பிக்கப்பட்ட பதற்றமானது மேலும் உயர்வாக தொடர்ந்து இருப்பதை மொத்தத்தில் முஸ்லிம் சனசமூகம் விரும்பியிருக்கவில்லை.

[81] 16 ஆம் திகதி வன்முறையை நிறுத்துவதற்காக இராணுவத்தினர் கொண்டுவரப்பட்டிருந்தபொழுதிலும் இன்று அப்பகுதிகளில் சேதமடைந்த சொத்துக்களை மீளக்கட்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

அதிகாரத்திலுள்ளவர்களின் எழுந்தமான முரண்பாட்டு நிலைப்பாடுகள் ஊடங்களில் நிறைந்திருந்ததுடன், ஆகக் குறைந்தது நிகழ்வின் இரண்டு வாரங்களுக்குப் பின்னரும் அங்கே பதற்றம் நிலவுவதற்கு பங்களிப்புச் செய்தது. ஜுலை ஆரம்பத்தில் கூட அரசாங்கமானது நிகழ்வுக்கான குற்றச்சாட்டை பத்திராஜகொடவில் பிக்கு மீதான சொல்லப்பட்ட தாக்குதலின் விளைவைத் தொடர்ச்சியாகப் பேணி வந்ததுடன் தர்கா நகர் பிரதான பள்ளிவாசலுக்கு அண்மையாக விகாரைக்கு பிக்குவுடன் சென்று வந்த குழுவினருக்கு கல்லெறியப்பட்ட பின்னர் வன்முறை ஆரம்பித்தது என்பதை தொடர்ந்தும் பேணி வந்தது. 2014 ஜுலை 10 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனிநபர் பிரேரணை ஊடாக பிரதமரிடம் அளுத்கம சம்பவங்களின் இழப்புக்கள் குறித்துக் கேள்வி எழுப்பியிருந்தார். பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்கான பதிலை நிகழ்வுகள் குறித்துப் பேசும்பொழுது மேற்படி சூழமைவை மீளவும் எடுத்தாண்டிருந்தார்.[82]

ஜுன் 16 ஆம் திகதி நிகழ்வுகளுக்குப் பின்பு உடனடியாக பொலிஸ் மாஅதிபர் விடுத்த கூற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டையே பேணியிருந்ததுடன் பொலிசார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் நடவடிக்கை இல்லாதிருந்து போனால் விளைவுகள் இன்னும் மோசமாக இருந்திருக்கும் எனவும் தெரிவித்திருந்தார். பொது பல சேனாவை தடைசெய்வது தொடர்பான கூட்டத்திற்கு சிவில் சமூகங்கள் குழுக்களின் தேவைப்படுவது உண்மை குறித்து பொலிஸ் மாஅதிபரிடம் கேட்கப்பட்டபொழுது பிரதேசத்தில் உள்ள பௌத்த மற்றும் முஸ்லிம் சமயத் தலைவர்களுடன் அதிகாரிகள் விரிவான கலந்துரையாடல்களை நடத்தியிருப்பதாகக் குறிப்பிட்டதுடன் இரு

82 Hansard 10th July 2014, p. 353. The Hon. Abdul Haleem provided some necessary context by brining in the manner in which the BBS was brought in to take advantage of the tension and propagate hate sentiment. There was a reference to the Ven. Gnanasara’s Aba Saranai” used during the meeting, meaning that “they will be destroyed.

குழுக்களுக்குமிடையே அங்கு இனி எதுவித வன்முறையும் இருக்காது எனவும் நிகழ்வானது முற்று முழுதாகவே இயல்பில் மதத் தன்மை வாய்ந்தாக இருந்தது எனவும் குறிப்பிட்டார்.[83]

ஆகவே, அதிகாரிகள் வன்முறை இடம்பெறும் என எதிர்பார்க்கவில்லை. வன்முறையைத் தடுக்கும் வகையில் பொலிசாரும் விசேட அதிரடிப்படையினரும் நடந்துகொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கையில், பொலிசாரும் விசேட அதிரடிப் படையினரும் தங்களது கடமைகளை நிறைவேற்றியிராது போயின் அளுத்கம மற்றும் அயலில் உள்ள பகுதியானது மிகவும் மோசமாக இருந்திருக்குமென பொலிஸ் மாஅதிபர் குறிப்பிட்டார். பொலிசார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் அர்ப்பணிப்பின் காரணமாகவே நிலைமை அடக்கப்பட்டது எனவும் அவர் கூறினார். தாக்குதல்காரர்களுடன் ஈடுபடுவதில் இருந்து முஸ்லிம்களை பொலிசார் தடுத்திருக்காது விட்டால் அதிக இரத்தம் சிந்தப்பட்டிருக்கக்கூடும்; அவ்வாறே நடந்திருக்கும் எனக் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், பொலிசார் உயிரிழப்பு வரையறுத்தல் மற்றும் கலவரத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய வழியென காடையர்களை தந்திரோபாய ரீதியாக மிகவும் பிரச்சினைக்குரியதாக இருக்கும் ஆட்கள் குழுக்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களை இலக்கு வைக்க அனுமதிப்பதானது சொத்து இழப்புக்கள் மற்றும் கலவரங்களை கட்டப்படுத்தக்கூடிய ஒரு வழியென பொலிசார் உணர்ந்தனர்.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 2014 ஜுலை 01 ஆம் திகதி ‘டெய்லி மிரர்’ பத்திரிகைக்கு அளித்த பரந்த வீச்சுடைய நேர்காணலில் அளுத்கம கலவரம் குறித்து குறிப்பிட்டார். அந்த நேர்காணலில் அவர் என்ன நடந்தது என்ற தனது கவலையை

83 Sirasanews first Sinhala language TV news program at 7p.m https://www.youtube.com/watch?v=kPijsObJA3U

வெளிப்படுத்தியதுடன், பொது பல சேனா மற்றும் அதனை ஒத்த குழுக்களுடனான தொடர்புகளை மறுத்தார். பொது பல சேனாவின் அனுசரணையுடனான நிகழ்வுகளில் அவரின் பிரசன்னம் தொடர்பில் தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்தார். எவ்வாறாயினும், முஸ்லிம்கள் பற்றிப் பேசும்போது பின்வருவனவற்றைக் கூறினார்:

> சிங்கள பௌத்தர்கள் மட்டுமல்ல, முஸ்லிம் சமூகத்தினர் தான் என குறிப்பிட்டுப் பேசுவதாயின், சிங்கள கத்தோலிக்கர்களும் சில பிரச்சினைகளை தம்மிடம் கொண்டுள்ளனர். மன்னாரில் சிங்களவர்கள் இல்லை. ஆனால் முஸ்லிம்களுக்கும் தமிழ் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் பிரச்சினைகள் உள்ளன. மட்டக்களப்பில் உள்ள தமிழர்களைப் பாருங்கள். அவர்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. வத்தளை மற்றும் ஜாஎலவில் உள்ள கத்தோலிக்கர்களைப் பாருங்கள். அவர்களும் இந்தப் பிரச்சினைகளை என்னிடம் கொண்டுவந்துள்ளனர். அதனால்தான் நாங்கள் முஸ்லிம்களுடன் பேச வேண்டும் என நான் நம்புகிறேன். இப்பொழுது நான் ஒரு பரந்துபட்ட கலந்துரையாடலை அவர்களோடு நடத்தி வருகின்றேன். மிதவாத முஸ்லிம்கள், முஸ்லிம் சமூகத்தின் சில தீவிரவாத சக்திகளால் தமக்கு பிரச்சினைகள் உள்ளன என என்னிடம் சொல்லியிருக்கின்றனர். நாங்கள் இந்த மிதவாதிகளுடன் பணியாற்றி வருகிறோம். இந்த நாட்டில் முஸ்லிம் பயங்கரவாதிகள் இருக்கிறார்கள் என நான் சொல்லவில்லை. இந்தியாவுக்கு எதிராக செயற்படுவதற்காக இலங்கையை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய தீவிரவாதம் இங்கு இருப்பதற்கான சாத்தியமிருப்பதாக இந்தியப் புலனாய்வு முகவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.[84] எவ்வாறாயினும், இந்த

84 http://colombogazette.com/2014/06/16/police-did-not-expect-clash-after-rally/

அக்கறைகள் குற்றச்சாட்டுகளுக்கான சான்றுகள் எதுவும் இல்லை எனக் கண்டுபிடித்துள்ளோம். எங்களது புலனாய்வு முகவர்கள் இந்த விடயங்களில் மிகவும் கவனமாக உள்ளனர். ஆனாலும் சில விடயங்கள் அரசாங்கத்திற்கும் பாதுகாப்பு படையினருக்கும் அப்பாற்பட்டவையாக உள்ளன. அவ்விடயங்களில் சமயத் தலைவர்கள் ஒன்றாகப் பணியாற்ற வேண்டும். நான் இது சம்பந்தமாகப் பணியாற்றியுள்ளேன். முஸ்லிம் சமூகத்தினர் மற்றும் மதத் தலைவர்களை நான் சந்தித்துள்ளேன். அத்தகைய விடயங்களைத் தடுப்பதற்காக எமது புலானாய்வு முகவர்கள் பணியாற்றியுள்ளனர்.[85]

மேலே குறிப்பிடப்பட்டதில் பாதுகாப்பு செயலாளர் நாட்டில் இஸ்லாமிய பயங்கரவாதம் தொடர்பான சான்று இல்லாதிருந்தபோதிலும், முஸ்லிம்கள் எவ்வாறாயினும் பிரச்சினையாக இருக்கிறார்கள் என்று சொல்வதுபோல் தெரிவிக்கிறது. அவர்கள் வெறுமனே சிங்களவர்களுக்கு மாத்திரம் அல்ல சிங்கள கத்தோலிக்கர்கள், தமிழ் கத்தோலிக்கர்கள், கிழக்கு மாகாணத் தமிழர்கள், வத்தளை ஜாஎல கத்தோலிக்கர்களும் பிரச்சினைக்குரியவர்களாக உள்ளனர். அதற்கு மேலதிகமாக பாரம்பரிய முஸ்லிம்கள் மற்றும் தீவிரவாத முஸ்லிம்களுக்கிடையில் ஒரு வேறுபாடு உள்ளது என அவர் சொல்கிறார். முஸ்லிம்களுடன் கலந்துரையாடுவதை பாதுகாப்பு செயலர் தூண்டுவது முக்கியமாக இருக்கும் அதேவேளை, ஒரு பொதுவான முஸ்லிம் பிரச்சினையென ஓரளவு குறைக்கக்கூடியதாக தீவின் பல்வேறுபட்ட பகுதிகளின் சமூகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இடையில் எழக்கூடிய பிரச்சினைகளைக் காணும் ஒரு கருத்தியலை அவர் பிரச்சாரம் செய்வது பிரச்சினையாகிறது. அவ்வாறான பொதுமைப்படுத்தல் குறைப்பதில் வெளிப்படுவது என்னவெனில், எந்தவகையில் முஸ்லிம் சமூகத்தினர், அவர்களது வகுப்பு, பிராந்திய,

85 http://www.dailymirror.lk/news/49090-if-proven-i-will-resign-gota.html

பிரிவு, மொழி, மற்றும் மறுசீரமைப்பு வேறுபாடுகள் இருந்தபொழுதிலும் இலங்கையில் சமதையானவர்களாகவே கருதப்படுகிறார்கள் என்பதாகும். இது பாதுகாப்பு செயலாளரால் தான் உண்மையாவது என்று அல்ல. ஆனால் ஏனைய செயற்பாட்டாளர்களாலும் ஆகும். முஸ்லிம்களுடனான பொதுப் பிரச்சினைகள் எவை என இனம் காணுவதில் பாதுகாப்பு செயலாளர் பொது பல சேனாவின் வாதத்தை எதிரொலிக்கிறார் என்பதுடன் முஸ்லிம்கள் தொடர்பாக பொது பல சேனாவின் கருத்தியலுடனான அடிப்படை ஒற்றுமைகளை தன்னுடைய சொந்தமானதாகவும் வெளிப்படுத்துகிறார்.

### அளுத்கம சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியின் பதிற் செயற்பாடு

ஐக்கிய தேசியக் கட்சி ஊடங்களிலும் பாராளுமன்றத்திலும் பிரச்சினைகளை தொடர்ச்சியாக எழுப்பியதுடன் சம்பவமானது ஒரு பொதுப்பதிவாக மாறியிருப்பதினை உறுதிப்படுத்தியது. எதிர் கட்சியின் கணிசமான இடையீடுகளில் உள்ளடக்கப்படக்கூடியதாக ஜூன் 20 ஆம் திகதி பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தமை விக்கிரமசிங்கவின் அளுத்கமவிற்கான விஜயம், ஜூன் 30 ஆம் திகதி அவர் ஆற்றிய உரை, பாராளுமன்றத்தில் ஜூன் 19 ஆம் திகதி மற்றும் ஜூலை 10 ஆம் திகதி எழுப்பிய பிரச்சினைகள் என்பன உள்ளடங்கும்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப்பெரும தர்கா நகர் வன்முறைகளுக்கு ஒரு கண்கண்ட சாட்சியாக இருந்துள்ளார். 16 ஆம் திகதி பிற்பகல் பாராளுமன்ற உறுப்பினர் வெலிப்பன்னையிலிருந்து தர்கா நகருக்கு வெலிப்பன பிரதேசத்தில் அதிர்ச்சியினால் மாரடைப்பினால் மரணமான ஒரு மனிதனின் மரண வீட்டிற்கு ஒரு குடும்பத்தினரை வெலிப்பன்னவில் இருந்து தர்கா நகருக்கு கொண்டு வருவதற்காக பயணிப்பதற்கு விரும்பியிருந்தார்.

இறந்தவரின் பெண் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சிறுவர்களுடன் வான் நிறைந்து திரும்பி பயணித்துக் கொண்டிருந்தபொழுது தர்கா நகரைச் சுற்றி இன்னும் திரிந்து கொண்டிருந்த காடையர்களால் அவர்கள் தாக்கப்பட்டனர். காடையர்கள் வாள்களுடனும் பெரிய மரப் பொல்லுகளுடனும் இருந்ததாக தெவரப்பெரும குறிப்பிட்டதுடன் நூற்றுக்கணக்கான பொலிசாரின் முன்னிலையிலும் அவர்கள் சுதந்திரமாக சுற்றித் திரிந்தனர் எனக் குறிப்பிட்டார். பெரிய கொங்கிறீட் துண்டத்தினால் அவரது வாகனம் தாக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். அவ்வாறான ஒரு துண்டம் ஒரு பெண்ணின் தலையின் பக்கமாகத் தாக்கியது. இன்னொரு துண்டு 9 மாதக் குழந்தையைத் தாக்கியது. வாகனத்தின் நொறுக்கப்பட்ட முன் கண்ணாடியின் சிறு துளையூடாகப் பாதுகாத்துக் கொண்டு காடையர்களைத் தவிர்த்து வாகனத்தைச் செலுத்திச் சென்றதாக அவர் தெரிவித்தார். 2014 ஜூன் 18 ஆம் திகதி தெவரப்பெரும இந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.[86] டெய்லி மிரர் பத்திரிகையின் இணையப் பதிப்பிற்கான ஒரு நேர்காணலில் வன்முறைகளுக்கு அரசாங்கமே பொறுப்பாக இருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.[87] சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்களுள் ஒன்றுக்கு கிளைமோர் கண்ணிவெடி வெடிக்க

[86] அளுத்கமவில் இடம்பெற்றவையைக் கண்டித்து வடமாகாணசபை உறுப்பினர் ஏ. அஸ்மினால் ஆலோசனை வழங்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டது. வெள்ள முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற பொழுது தமிழர்கள் சார்பாக முஸ்லிம்கள் அவ்வாறானதொன்றை குறிப்பிடவில்லை அவர் சுட்டிக்காட்டினார். பிரபாகரன் கொல்லப்பட்டபொழுது முஸ்லிம்கள் வெடி கொளுத்தினர். தமிழர்கள் இன்று எவ்வாறாயினும் முஸ்லிம்களுடன் நிற்கின்றனர். முரண்பாட்டின்பொழுதும் பிற்பாடும் முஸ்லிம்கள் அரசின் பக்கத்தை எடுத்துக் கொண்டது ஒரு சுவாரசியமான விடயமாகும். விபரிப்புக்களானவை முஸ்லிம்கள் தமிழர்கள் தேசியங்களுக்கிடையிலான உறவுகளின் சிக்கல் எதனையும் உள்ளடக்காதபொழுதிலும் இது ஒரு சிறுபான்மையினருக்கு இடையிலுள்ள தொடர்ச்சியான வேறுபாடுகளை சுவாரசியமாக நினைவூட்டுவதுடன் பெரிய நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான தேவையையும் நினைவூட்டுகிறது. கிழக்கு மாகாணசபையில் அளுத்கம சம்பவம் தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட முயற்சியானது வெற்றிகரமாக போகாதமையைக் கவனிப்பது சுவாரசியம் மிக்கது. (திவன 27 ஜூன் 2014 பக். 1)

[87] http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=105387

வைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். ஆயுதப் படையினரின் முன்னாள் உறுப்பினர் என்ற வகையில் அவருக்கு அத்தகைய வெடிப்புக் கருவிகளைத் தெரியும் எனவும் பள்ளிவாசலுக்கு உள்ளே ஏற்பட்ட பாதிப்பானது ஒரு பெற்றோல் குண்டால் ஏற்பட்டதல்ல[88] எனவும் அவர் தெரிவித்தார். பொலிஸ் மாஅதிபர் இராஜினா செய்யா விட்டால் தான் இராஜினா செய்யப் பொவதாக ஒரு பகிரங்க அறிக்கையை தெவரப்பெரும தெரிவித்தார். பொலிஸ் மாஅதிபர் இராஜினா செய்யாதபோது ரணில் விக்கிரமசிங்கவிடம் தனது இராஜினாமா கடிதத்தை தெவரப்பெரும கையளித்தார்.[89]

வெலிப்பிற்றியவில் மரணித்த இரு ஆண்களினது மரணங்கள் மீதான மரண விசாரணை அதிகாரியின் அறிக்கையானது அவ் மரணங்களானவை வெட்டுக்காயங்களால் ஏற்பட்டதாக குறிப்பிட்டது, பதிற் செயற்பாடாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினார். அதில் வன்முறைக்குப் பொறுப்பானதாக இருந்ததற்காகவும் அதற்குப் பின்பு அதனை மூடி மறைத்ததற்காகவும் பாதுகாப்பு அமைச்சை அவர் குற்றம் சாட்டினார். புலானய்வு சேவையின் மூன்று உறுப்பினர்களைப் பெயர் குறிப்பீட்டு இதில் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டினார்.[90] உத்தியோகபூர்வ இரகசிய சட்டங்களின் கீழ் சட்ட நடவடிக்கையுடன் அவர் அப்பொழுது அச்சுறுத்தப்பட்டார்.

ஜூன் 29 ஆம் திகதி ரணில் விக்கிரசிங்க ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றக் குழுவுடன் அளுத்கம பிரதான நகருக்கு விஜயம் மேற்கொண்டார். அதிகாரிகொடையிலுள்ள மத்ரஸ

88 https://www.colombotelegraph.com/index.php/stf-police-watched-the-savages-run-riot-claymore-bomb-was-used-on-mosque/

89 உண்மையில் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் யார்.

90 Island 28th June 2014. Arrest those who assist BBS in committing crimes against Muslims.

துர் ரஹ்மான் பள்ளிவாசலில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் எதிர் கட்சித் தலைவர் அப்பகுதியில் முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களின் முக்கிய பிரதிநிதிகள் குழுவொன்றுடன் சந்திப்பை மேற்கொண்டதுடன் பல முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டார். 1. இந்தப் பிரதேசமானது இலங்கையின் எல்லா இன, மத சமூகங்களும் நீண்டகாலமாக பரஸ்பரம் இணக்கமாக வாழ்ந்து வந்து பகுதி என்பதுடன் பிணக்குகள் எழும்பொழுது சமய மற்றும் சமூகத்தின் வழியே இடையீடுகளை பதற்றத்தைக் குறைப்பதற்காக உள்ளூர் பொறிமுறையே பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இந்தத் தடவை வெளியார் உள்ளே வந்து வன்முறையைத் தூ ண்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. 2. 15 ஆம் திகதி அளுத்கமவில் பொது பல சேனாவினால் வெளிக்கக்கப்பட்ட கெட்ட வார்த்தைகள் அனைத்தும் இப்பொழுது உலகம் பூராகவும் உப தலைப்புக்களுடன் காட்டப்படுகிறது. இது சிங்களவர்களை ஒரு அதீத எதிர்மறையினராக படம் பிடித்துக் காட்டுகிறது. 3. முஸ்லிம் கடைகள், வியாபார நிலையங்களின் அழிப்பு காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட சேதமானது சிங்கள சமூகத்தையும் பாதிக்கிறது. அத்துடன் இது உல்லாசப் பயணத்துறையையும் உண்மையில் பாதிக்கும். 4. எல்லா மக்களும் தமது வேறுபாடுகளைக் களைந்து ஒன்றாக வந்து உலகத்திற்கு சிங்கள பௌத்தர்கள் பிற்போக்கான மிலேச்சத்தனமான மக்கள் அல்ல எனக் காட்ட வேண்டும்.

அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதற்கு எந்த எடுத்தாளுகைகளையும் தவிர்த்துக்கொள்ளும் விதத்தில் தெளிவாகக் பொறுப்பு கூறி கருத்து தெரிவிக்கும்படி அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்து முஸ்லிம் கடைகள் இன்று இலக்கு வைக்கப்பட்டதாக இருந்தால் நாளை சிங்களக் கடைகள் நன்றாக இலக்கு வைக்கப்படக்கூடும் என்ற கவனத்தை இழுத்தார். இழப்புக்களைச் சந்தித்த எல்லாச் சமூகங்களுக்கும் அவர் தனது அனுதாபத்தை வெளிப்படுத்தியதுடன் இந்த நாட்டிலே எந்த வகையிலுமான தீவிரவாதத்திற்கும் இடமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

2014 ஜூன் 26 ஆம் திகதி சகவாழ்வு குறித்த ஒரு விசேட கூட்டத்தில்[91] ஐக்கிய தேசியக் கட்சி 1983 இல் அனுபவித்த கலவரங்களைத் தவிர்ப்பதற்கும் இன ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்குமான தனது சொந்தத்தில் சர்வ மதக் குழுவொன்றை உருவாக்கியது. எதிர்க் கட்சித் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சி 1983 கலவரங்களைத் தவிர்க்க தவறிவிட்டது என ஏற்றுக் கொண்டு ஒரு பொதுவானதும் சுயாதீனமானதுமான அணுகுமுறையாக இருக்குமெனக் கூறி அரசாங்கத்தின் ஆதரவையோ கருத்தையோ நாடி நிற்காது எனவும் குறிப்பிட்டார். அக் குழுவானது பின்வரும் தொழிற்பாடுகளைக் கொண்டிருக்கும் என அறிக்கை செய்தது.

உத்தேசக் குழுவானது அளுத்கம மற்றும் பேருவளையில் ஏற்பட்ட அண்மித்த மோதல்களில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களில் இருந்து சர்வமத ஐக்கியத்தை விருத்தி செய்வதற்கும் பதிவுகளை நேராக வைத்துக்கொள்வதற்கும் அரசாங்கம் கொடுப்பதில் பிரதானமாக கவனம் செலுத்தும். நாட்டிலுள்ள எல்லா மதத்தை சேர்ந்தவர்களதும் அரசியலமைப்பு உரிமைகளை உறுதிப்படுத்தும். எல்லா நேரத்திலும் நீதியையும் சமத்துவத்தையும் பேணும் அதேவேளை, சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுவதை உறுதிப்படுத்தும். எதிர்காலத்தை வகுத்தமைப்பதில் எல்லா சமயத் தலைவர்களிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும்.

பத்திரிகை செய்தி அறிக்கையானது மேலும் தெரிவிப்பதாவது:

> 1983 ஜூலைக் கலவரத்தை தடுப்பதில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் விட்ட தவறை ஏற்றுக்கொண்ட எதிர்க் கட்சித்

[91] The above statement is a paraphrasing of an account that appeared in the Lankadeepa of 30th June 2014, pp.1 & 10

தலைவர்[92] கூறியதாவது: பொது பல சேனா அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்கிறது. அரசாங்கமானது இது இடம்பெற அனுமதிக்கக்கூடாது. இந்த சம்பவமானது கறுப்பு ஜூலையில் நாம் அனுபவித்தது போன்ற இதையொத்த மற்றுமொரு சம்பவத்திற்கு இட்டுச் சென்றால் அதை ஏற்படுத்தக்கூடிய சேதங்கள் குறித்து எம்மிடையே எவராலும் கற்பனை செய்ய முடியாது.

## அளுத்கம விடயத்தில் மக்கள் விடுதலை முன்னணி

அளுத்கம தொடர்பாக தமது பதிற் செயற்பாட்டைக் காட்டுவதில் மக்கள் விடுதலை முன்னணி தலைமைத்துவம் முனைப்பாக இருந்தது. அப்பகுதிக்கு விஜயம் செய்வதிலும் மக்களுக்கு பரிவு உதவி காட்டுவதிலும் அவர்களே முதலானவர்களாக இருந்தனர். அதற்கு மேலதிகமாக அவர்கள் இந்த நிகழ்வை பாராளுமன்றத்தில் எடுத்துக்காட்டியும் உள்ளனர்.

இந்த வன்முறைக்குப் பின்னால் அரசாங்கமே இருந்தது என அவர்கள் பகிரங்கமாக குற்றம் சாட்டினர்.[93] நாட்டில் சட்டம், ஒழுங்கு சீரழிந்து போவது தொடர்பான ஒரு விவாவத்தின்பொழுது 2014 ஜூலை 10 இல் ஜேவிபி தலைவர் அனுர குமார திசநாயக்க அளுத்கம வன்முறையை நாட்டின் சட்டம், ஒழுங்கு சீரழிவுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தினார்.
அத்துடன் அவர் எதிர்க்கட்சி எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலாக பிரதமரால் முன்மொழியப்பட்ட சேதங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களைத் திருத்தியதுடன், சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதாரங்களின் எண்ணிக்கையைப் பதிவுசெய்தார். மூன்று

92 UNP Raps Government. Daily FT. 27th June 2014. P.1, Also see Divaina 27th June

93 http://www.srilankanews.lk/index.php/news/gene al-news/3637-those-who-sparked-aluthgama-clashes-backed-by-government-JVP

பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டதாகவும், புத்த சிலை வைக்கப்பட்ட இடத்தில் கண்ணாடி உடைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டதுடன் இந்த நிகழ்வை நாட்டின் வரலாற்றில் கறுப்பு புள்ளி என வர்ணித்தார். சேதமாக்கப்பட்ட சொத்துக்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட ரூபா 200 மில்லியன் போதாது என்ற உண்மையின் பக்கம் அவர் கவனத்தை ஈர்த்தார். அளுத்தகமவில் ‘மல்லிகா’ ஆடை நிறுவனத்தைப் பற்றிப் பேசும்பொழுது அரசாங்கம் 2006 ஆம் ஆண்டு இதையொத்த கவனத்தின் பிற்பாடு இக்கடையின் உரிமையாளருக்கு வாக்களிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையை இன்னும் செலுத்த வேண்டியிருக்கிறது எனக் குறிப்பிட்டார். ஆகவே, அவர் இந்த சமயத்தில் மீள்நிர்மாணத்தை நோக்கி 200 மில்லியன் செலுத்துவது தொடர்பாக அரசாங்கத்தின் நேர்மைத் தன்மை குறித்து பாரதூரமாக கேள்வி எழுப்பினார்.

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு

2014 ஜூன் 17 ஆம் திகதி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் பாராளுமன்றத்தில் அளுத்கம நிகழ்வுகளுக்கு கவனம் கொடுக்கும்படி அழைத்தார். வண. கலகொட அத்த ஞானசாரவின் பேச்சே வெறுப்புணர்வையும் வன்முறையையும் தூண்டியதாக அவர் அழுத்தம் கொடுத்தார். அத்துடன் வன்முறையின்பொழுது பொலிசார் செயற்பாடற்று இருந்ததற்கும் அழுத்தம் கொடுத்தார். ஏன் அந்த ஊர்வலம் நிறுத்தப்படாதிருந்தது எனக் கேள்வி எழுப்பிய அவர் அரசாங்கம் சம்பள உயர்வுக்கு அழைப்பு விடுக்கும் போராட்டக்காரர்களையும் பல்வேறு பிரச்சினைகளுக்காக போராட்டம் செய்யும் மாணவர்களையும் அடக்குவதில் மிகவும் துடிப்பாக இருக்கிறது எனக் குறிப்பிட்டார். பதற்றம் உயர்வாக இருந்த நேரத்தில் அந்த விதமான ஊர்வலம் ஏன் நிறுத்தப்படாதிருந்தது என்ற தனது ஆச்சரியத்தை வெளியிட்டார்.[94]

---

94 Island, 20th June 2014, p. 3.

## “அளுத்கமவின் உண்மை கதை”

எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகள் அரசாங்கத்தை சிக்கவைக்கும் நிகழ்வுகளின் பகுப்பாய்வு ஒன்றைத் தருவதற்கு முன்னிநின்ற, அதேவேளை அரச செயற்பாட்டாளர்களும் பகுப்பாய்வாளர்களும் பிக்கு மீதான தாக்குதல் மற்றும் ஊர்வலத்தின் மீது கல் எறிதல் மீதான தமது கதையினை வழங்கியிருந்தனர். ஜாதிக ஹெல உறுமய சம்பவத்தை ஒரு தீவிரமான முஸ்லிம் எதிர்ப்புப் பிரசாரத்துக்கு பயன்படுத்திக் கொண்டது. ஜாதிக ஹெல உறுமயவின் பிரசாரமானது அளுத்கம சம்பவங்களுக்குப் பின்னான ஒரு இன மத பதற்றத்தைப் பேணுவதங்கு பங்களிப்புச் செய்ததுடன், அதன் உறுப்பினராகிய சம்பிக்க ரணவக்கவின் இடையீடுகளானவை முஸ்லிம்களின் குற்றத்தன்மை, சிங்களவர்களைப் பலியாக்குதல் தொடர்பான கதையைத் திரும்பச் சொல்லுவதற்கு முயற்சித்தார்.

ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அளுத்கம சம்பவங்களில் தொலைக்காட்சியில் தோன்றி அமைதியாக இருக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். அமைதிக்காக அழைப்பு விடுத்தபொழுதிலும் பாராளுமன்ற உறுப்பினர், பிக்கு தாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சம்பவம் மற்றும் ஊர்வலத்தில் கற்களை எறிந்தது மீதான சம்பவம் இரண்டிற்கும் கவனத்தை ஈர்க்கும் நிகழ்வுகளின் அரச பதிப்பிற்கே அழுத்தம் கொடுத்தார். அவர் இன்னும் மேலே சென்று மத குருவுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான சொற்ப தனிநபர்களை சம்பந்தப்படுத்தி ஒரு சிறிய சம்பவத்தை வாய்த்தர்க்கம் என விமர்சித்தார். ஒரு பொசன் போயா தினத்தன்று இவ்வாறான சம்பவம் இடம்பெற்றது முழு பௌத்த நிறுவனத்திற்குமே ஒரு அவமானம் என வலியுறுத்தியதுடன் முஸ்லிம் தீவிரவாதிகள் செய்த வேலைக்காக சிங்கள பௌத்த மக்களிடம் முஸ்லிம்கள் மன்னிப்புக் கோர வேண்டுமெனவும் வற்புறுத்தினார். நிகழ்வானது சிங்களவர் முஸ்லிம்களைத் தாக்கியதாக காட்டப்பட்டிருந்தபோதிலும் முஸ்லிம்

ஜிஹாதிகளின் பிரசன்னத்தினாலேயே இந்த நிகழ்வு உண்மையில் உருவாக்கப்பட்டதாக தெரிவித்தார். தவ்ஹீத் ஜமாஅத்தினரை ஒரு தீவிரவாத நிறுவனமாக அவர் அழைத்ததுடன் அவர்களும் ஏனைய தீவிரவாதக் குழுக்களும் பொது பல சேனா மற்றும் ஏனைய சிங்கள பௌத்தக்குழுக்களின் கவனத்திற்கு அழைப்பு விடுப்பதற்கு முன்பதாக அவர்கள் முதலில் கவனிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.[95]

இரண்டாவது பத்திரிகையாளர் மாநாடு ஜூன் 21 இல் நடத்தப்பட்டது. இந்தப் பத்திரிகை மாநாட்டில் பத்திரராஜகொடையில் பாதிக்கப்பட்ட சமூகத்தின் 14 நிமிட வீடியோ காண்பிக்கப்பட்டது. அந்தப் படக் காட்சியானது திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இந்த வீடுகளின் படங்களுடன் இசை ஒளித்தடங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன் எழுதப்பட்ட தலைப்புக்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இறுதிப் பகுதியில் வெலிப்பன்னவில் ஒரு புத்த சிலையைக் கொண்டிருக்கும் ஒரு கட்டிடமானது சேதமாக்கப்பட்டிருக்கும் காட்சியும் உள்ளடக்கப்பட்டிருந்தது, இவ் ஒளிப்படத்துண்டானது கட்டிடத்தின் சேதமாக்கப்பட்ட கண்ணாடிகளையும் வெளிப்புறச் சுவர்களையும் காட்டியது. ஒரு நேர்காணல் செய்யப்பட்ட மனிதன் அவர் பொலிசார் சூழ இருந்ததையும் அவர் அநேகமாக தாக்குதலை நடத்திய ஒரு காடையராக இருக்கக்கூடியவர் அடியுங்கள் கட்டிடத்திற்கு சேதமாக்குங்கள் ஆனால் எரிக்க வேண்டாம் என அவர் சொல்வதாக கதையின் சிங்களப்பக்கமானது சொல்லப்படுவதாக சட்டமாக்கப்பட்டிருந்தது. ரணவக்கவின் தலையீடானது நிகழ்வு தொடர்பான சிங்கள உணர்வுகளை தீவிரமாக்கியது. ஜூன் 15 க்குப் பின்னர் அப்பகுதியில் உள்ள இரு சமூகங்களினதும் வன்முறையால் பல விதத்தில் பாதிப்படையச் செய்திருந்தது. அந்த நேரத்தில் தான் முழு சம்பவமும் புரியப்பட்டு இதைத் தவிர்ப்பதற்கு உள்ளூர் சமூகம் சிறியதாக ஏதாவது செய்திருக்க முடியும் என உணரப்பட்ட காலம்

95 http://www.gossiplankahotnews.com/2014/06/patali-champika-ranawaka-on-muslim.html

இதுதான். நிகழ்வுகளை சிங்கள - முஸ்லிம் மோதலாகப் பார்ப்பதற்கு எடுத்து (முஸ்லிம் செயற்பாட்டாளர்களாக உருவாக்கப்பட்டதாக தாமாக அதனைக் கொண்டு வந்த பின்னர்) அதனை அளுத்கமவின் உண்மைக் கதையாக சட்டகம் செய்யப்பட்டிருந்தது துரதிஷ்டவசமானது.[96]

ஒளிப்படக் காட்சியுடன் ரணவக்க எல்லா முஸ்லிம்களையும் ஜிஹாதிகளாக எடுத்தாண்டார். தர்கா நகரில் பள்ளிவாசலில் மூவாயிரம் பேர் ஒன்றுகூடுவதற்கு பொலிசார் அனுமதித்திருந்ததாகவும் அனுமதிக்கப்பட்டவர்கள் கொழும்பில் இருந்து வந்த சிங்கள பௌத்த எதிர்ப்புணர்வை அந்தக் கூட்டத்தினரிடையே பரப்பியதாககவும் அவர் கூறியிருந்தார். ஊர்வலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கல்லெறியானது ஒரு ஒழுங்கு செய்யப்பட்ட தாக்குதல் என அவர் குறிப்பிட்டார். ரணவக்கவின் பத்திரிகையாளர் மாநாடானது வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நிர்மல் தேவசிறி குறிப்பிடுவதுபோல வேறுபட்ட சூழமைவில் சொல்லப்பட்ட உண்மைகள்; அரை உண்மைகள்; பொய்கள் கலந்த ஒன்றாகும். ரணவக்க முஸ்லிம்களிடையே ஜிஹாத்வாசிகளின் சில குழுக்கள் செயற்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார். அவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் இளம் முஸ்லிம் ஆண் பெண்களுக்கான புர்க்கா, தொப்பி போன்ற அடையாளங்களைப் பயன்படுத்துவதைக் கட்டாயப்படுத்தியிருந்தனர்.[97] ரணவக்க மேலும் பல கேள்விக்குரிய வற்புறுத்தல்களைச் செய்தார். அதில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பெண்களுக்கு வாக்குரிமை இல்லை என உறுதிப்படுத்தும் முகமாக 1929 இல் உருவாக்கப்பட்டது. தர்கா நகர மக்கள் தான் 2012 இல் ஹலாலுக்கான கட்டாயப்படுத்தல்களை

---

[96] http://www.gossiplankahotnews.com/2014/06/patali-champika-ranawaka-on-muslim.html

[97] நிகழ்வின் ஊடக உள்ளடக்கத்தில் எவ்விடத்திலும் அவ்வாறான கூட்டம் ஒன்று தொடர்பாக காட்டப்படவில்லை. தர்கா நகரிலான எமது உரையாடல்களானவை அன்றைய தினத்தில் அவ்வாறான நிகழ்வு இடம்பெற்றதற்கான சாட்சியத்தைக் காட்டவில்லை.

கொண்டு வந்தனர் போன்றவையாகும்.[98] இதற்கு மேலதிகமாக அவர் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சிரியா, நைஜீரியாவில் போகோ ஹராமின் வளர்ச்சி போன்ற பழி ஏற்பட்ட நாடுகளின் அழிவுகளை எடுத்தாண்டு ஜிஹாதிகளின் கருத்தியலின் விருத்தியே மேற்சொன்ன அனைத்துக்கும் காரணம் என்றார். ஈராக்கிலும் சிரியாவிலும் ஏற்பட்ட அதே அழிவு இங்கே இலங்கையிலும் ஏற்படலாம் என ஆதங்கப்பட்டார். இராணுவப் புலனாய்வுப் பிரிவானது தேவையான முன்னெடுப்புகளை எடுக்கவில்லை எனவும் இந்த நாட்டில் முஸ்லிம் தீவிரவாதம் வளருவதற்கு அது பொறுப்பாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டார். ரணவக்கவின் கூற்றானது உண்மைகள், அரை உண்மைகள், அப்பட்டமான பொய்கள் என்பவற்றின் ஒரு ஆய்வாக இருந்தது. எவ்வாறாயினும், பதற்றம் தணிவதைத் தவிர்ப்பதும் முஸ்லிம் எதிர்ப்பு  உணர்வின் மெதுவான எரிவைப் பேணுவதுமே நோக்கமாக இருப்பது தெளிவாக இருந்தது.

## அடிமட்டத்தின் விபரிப்புக்களை ஒப்பிடுதல்

அளுத்தகம, பேருவளை போன்ற சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடம் நாம் மேற்கொண்ட விஜயத்தின் பொழுது நாம் போயா தினத்தில் என்ன நடந்தது என்பது தொடர்பான பல விளக்கங்களை எதிர்கொண்டோம். சிங்கள சமூகத்தின் பிரதிநிதிகள், வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் அவ்வாறு பாதிப்படையாதவர்கள், வேறுபட்ட மதங்களைச் சேர்ந்த அயவலர்களுடனான தமது ஊடாட்டங்களின் தனிப்பட்ட ஒரு சொந்த அனுபவத்தின் கலப்பு மற்றும் ஊடகங்களில்

---

[98] பல்கலைக்கழகங்களில் கட்டாயமான உடை அணிவு ஒழுக்கம் பற்றிய பல கதைகள் உள்ளன. அதிஷ்டவசமாக இன மத விசேடத்துவங்கள் இல்லை. உதாரணத்திற்கு முக்காற் காற்சட்டைகளை அணிவதற்கு கூட இளம் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே "jihadism" நடத்தை போன்றவைகளில் அவற்றுக்கு பொருத்தமற்றவாறு செயற்படுவதற்கு உடை தொடர்பான எதற்கும் ஆடைகளைக் கண்காணிக்கும் அதேவேளையில் அந் நடத்தைகளை "jihadism" என புதியதற்ற முறையில் பொருள் சொல் பாவிக்கப்படுகிறது.

தாம் கண்டவைகள் கேட்டவைகள் ஊடாக ஓரளவிற்கும் எவ்வாறு, என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள முயற்சித்திருந்தார்கள் என்ற வழிகளைக் கவனிப்பது ஒரு புதிராக இருந்தது. சிங்களவர்களிடையே பௌத்த பிக்கு தாக்கப்பட்டார் என்பது குறித்து எந்தப் பிணக்கும் இருக்கவில்லை. அதற்கு மாறாக, பௌத்த பிக்குவும் சாரதியும் இப்பொழுது முன்வந்து தாம் காயமடையவில்லை என்று சொல்ல விருப்பமாக உள்ளனர் என மறுவழமாக முஸ்லிம்கள் தெரிவித்தனர். நிகழ்வுகளின் முஸ்லிம் பக்க விளக்கத்தின் பிரகாரம் கலவரத்தை ஒழுங்கு செய்தவர்கள் ஏதோ ஒரு வடிவத்தில் ஊக்கிவிடும் ஒன்றிற்காக காத்திருந்தனர். இந்த வாய்த்தர்க்கம் இடம்பெறாதிருப்பின் வேறு ஏதாவது பிரச்சினை இருந்திருக்கும். ஒரு போயா தினத்தில் ஒரு பிக்கு தாக்கப்பட்டால் மறுதாக்கம் அளிப்பது பௌத்தர்களுக்கு இயற்கையானது என சிங்களவர்கள் குறிப்பிட்டனர். விடயங்களை மேலும் சிக்கலாக்குவதற்கு உள்ளூர் வைத்தியசாலைகள் இரண்டில் சேர்க்கப்படுவதற்கு பிக்கு மறுத்ததும் பிக்குவின் காயங்கள் தொடர்பாக சட்ட மருத்துவ அறிக்கை இல்லாதிருப்பதும் பிக்கு தாக்கப்படவேயில்லை என்பதற்கான சுட்டிக்காட்டியாகவே முஸ்லிம்கள் காணுகின்றனர். பிக்குவின் முறைப்பாட்டை எடுப்பதற்கும் குற்றமிழைத்தவர்களைக் கைது செய்வதற்கும் பொலிசார் தாமதம் செய்ததாகக் கூறும் சிங்களக் குறைகூறுபவர்கள் அதன் மூலம் பிரச்சினை பெரிதாக்கப்பட்டது என்கிறார்கள். பிக்குகளை காத்திருக்கச் செய்ததன் ஊடாக பொலிசார் அவரை அவமதித்ததாக ஒருவர் குறிப்பிட்டார். அரசாங்கத்தின் பக்க கதையானது அநேகமான சிங்களவர்களின் கதையுடன் ஒத்துப்போவதன் காரணமாக இந்த உரையாடலானது தேசிய மட்டத்தை சென்றடைந்தது.

பிக்குவைத் தாக்கியதாகச் சொல்லப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள மூன்று இளைஞர்களுள் ஒருவர் அளுத்கம பொலிஸ் நிலையத்தில் தான் பிழையாக நடத்தப்பட்டமை தொடர்பாக பொலிஸ் மாஅதிபரிடம் முறையிட்டதாகக் குறிப்பிட்டு தேசிய ஷூரா சபை ஒரு பத்திரிகைக் குறிப்பை வெளியிட்டது. அவர் ஒரு மௌலவி எனவும் தானும்

சகோதரர்களும் பொலிஸ் நிலையத்தில் முழந்தாளிடச் செய்யப்பட்டு பிக்குவை நோக்கி நடக்கச் செய்யப்பட்டதாகவும் முழந்தாளில் இருக்கும்போது பிக்குவால் கழுத்தில் உதைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். இது பொலிசார் மற்றும் சிங்கள சமூகப் பிரதிநிதிகளின் முழுமையான பார்வையில் இடம்பெற்றது. ஒரு சமயத் தலைவர் என்ற வகையில் தான் துன்புறுத்தப்பட்ட அநீதிக்கு எதிரான தீர்ப்பை நாடி நின்றிருந்தார். வாய்மூல அறிக்கையில் அந்த மூன்று முஸ்லிம்களும் பிக்கு தாக்கப்பட்டதை முற்று முழுதாக நிராகரித்திருந்தனர். சாரதியுடன் எந்தவிதமான தாக்குதல் சம்பவங்களும் நிகழவில்லை என்று தெரிவித்தனர். (பின்னிணைப்பு 1 ஐப் பார்க்க.)

தொடக்கி விட்ட நிகழ்வு கூட முஸ்லிம் சிங்கள வேறுபட்ட விளக்கங்களுடன் சர்ச்சைக்குரியதாக இருக்கும் அதேவேளை, அதிகாரிகொட, சீனவத்தை, பத்திராஜகொடை போன்ற இடங்களில் நாம் பேசிய சிங்களக் குடும்பங்களும், கதையின் மற்றொரு சூடாக விவாதிக்கப்பட்ட காரணி மீது பேரளவில் தங்கியிருந்தது. முதலில் கல் எறிந்தவர்கள் யார்? 15 ஆம் திகதி கூட்டத்தின் பின்னர் அமைதியாகக் கலைந்த கூட்டத்தினரிடையே முஸ்லிம்கள் கற்கள் எறிந்த உண்மை குறித்து அரச விபரிப்பின் பகுதியும் தங்கியிருக்கிறது. நாம் பேசிய சொற்ப சிங்கள குடும்பத்தின் புரிந்துணர்வானது அமைதியாக கலைந்து செல்லும் ஊர்வலத்தை நோக்கி முஸ்லிம்களால் ஒரு கல் எறியப்படாது இருந்திருக்குமானால் வன்முறை ஏற்பட்டிருக்காது என்றே பேசினர். வன்முறையானது முஸ்லிம்களாலேயே தொடக்கிவிடப்பட்டதாக புரிந்துகொள்ளப்பட்டிருப்பது பல சிங்களவர்களுக்கு முக்கியமானதாக இருந்ததை இது காட்டுகிறது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஒரே நேரத்தில் பல்வேறுபட்ட இடங்களில் காடையர்கள் முஸ்லிம் சொத்துக்கள் மீது தாக்குதலை நடத்திய உண்மையும் தமது பொருளாதார சொத்துக்கள் மீதான தாக்குதல்களின் முறைமை ரீதியான இயல்பும் யாரை, எதனைத் தாக்குவது தொடர்பான நன்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் காணக்கூடியதாக இருக்கும் உண்மையும், யார் முதலில் கல்

எறிந்தார்கள் என்ற விபரிப்பின் முக்கியத்துவத்தை முஸ்லிம்களைப் பொறுத்தளவில் அவர்களுக்கு குறைத்துள்ளது. உண்மையில் மேற்படி சான்றுகளே பாதிக்கப்பட்ட பல சான்றுகளுக்கு பெரிய பிரச்சினையாக எடுத்து வெளிக்கிளம்பி நிற்கிறது. அதாவது, தமக்கு எதிரான தாக்குதல்களில் அரச ஒத்துழைப்பு உள்ளது என்பதாகும். தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட முறையிலான ஒத்த தன்மைக்கு அழுத்தம் கொடுத்தல் பயன்படுத்தப்பட்ட தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட முறைகள், பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களின் வகை, வீடுகளுக்குள்ளே எவ்வகையில் தீ வைத்தார்கள், கொள்ளையடித்தல் மேற்கொள்ளப்பட்ட முறைமை ரீதியான முறை, நோக்கங்களுக்காக விசேடமாக வாகனங்கள் கொண்டுவரப்பட்டிருந்தமை, பொலிசார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் செயற்பாடின்மை முதலானவை தனிப்பட்ட நோக்கங்களைக் காட்டிலும் மிகவும் பெரியதாகவும் முக்கியமானதாகவும் இவைகளின் ஒத்த தன்மைக்கு அவர்கள் அழுத்தம் கொடுப்பதில் மிகவும் துடிப்புடையோராய் இருந்தனர்.

வன்முறையின் இரு நாட்களிலும் முஸ்லிம்கள் தொடர்பாக பல வதந்திகள் சுற்றுச் செய்யப்படுவது தொடர்பான கதைகளை நாம் கேட்டிருந்தோம். முஸ்லிம்களால் விகாரைகள் தாக்கப்படுவதாகவும், இளம் துறவிகள் கடத்தப்பட்டு வெட்டப்படுவதாகவும் அத்துடன் அண்மையில் உள்ள விகாரையில் இருந்து கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் சென்று உடல்களை எடுக்கத் முனைவதாகவும் சொல்லப்பட்டது.[99] பல சிங்களவர்கள் தாக்குதல்களை மேற்கொள்வதற்கும் மக்கள் சினம் ஊட்டப்படுவதற்கும் இவை காரணங்களாக இருந்தன எனக் குறிப்பிட்டுள்ளனர். ஒரு பிக்கு வெட்டப்பட்டதாக கேள்விப்படும்பொழுது மக்கள் செய்யக்கூடியது என்ன என்று அவர்கள் கேட்டனர். முஸ்லிம்களால் நடத்தப்படவிருக்கும் தாக்குதல்கள் குறித்தும் வதந்திகள் நிலவின. ஏற்கனவே இது

[99] குற்றச்சாட்டுக்கள் இரண்டும் பொய்யானவை.

பதிவு செய்யப்பட்டதுபோன்று கடந்த இரவு கொல்லப்பட்ட இரண்டு ஆண்களினதும் மரண வீட்டின் பின்னர் 16 ஆம் திகதி சிங்களவர்கள் முஸ்லிம்களால் தாக்கப்படக்கூடும் என ஒரு அச்சம் இருந்தது. வதந்திகளுக்கு வன்முறையுடன் செயற்படுவதில் காடையர்கள் நியாப்படுத்தப்பட்டதாக பிரசைகள் கருத்தைக் கொண்டிருக்கும் உண்மையானது சட்டம் ஒழுங்கு தொடர்ச்சியாக மீறப்படுவதை குறித்து நிற்கிறது.

சமூகங்களுக்கிடையிலான உறவின் சீரழிவினால் எல்லோரும் குழப்பப்பட்டனர். பத்திராஜகொடவில் தமது வீடுகள் எரிக்கப்பட்ட கட்டிட வேலை செய்பவர்கள் முஸ்லிம் தரப்பினரிடமிருந்து தமக்கு வேலை கிடைக்காது என்ற வதந்தியினால் அக்கறைப்பட்டுப் போயிருந்தனர். வெலிப்பிற்றியவில் சிங்களவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டாமென பள்ளிவாசல்கள் முஸ்லிம்களைக் கேட்டுக் கொண்டதாக சிங்களவர்கள் நினைத்ததாக நாம் அறிந்தோம். அதிகாரிகொட சிங்களவர்கள் சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன்னே அந்த மக்களுடன் நல்ல உறவுடன் இருந்த உண்மை குறித்தும் இப்பொழுது அவர்களுடன் பேசுவதில்லை என்பது குறித்தும் மிகுந்த வருத்தத்துடன் பேசினர். அவர்கள் மறுபக்கம் பார்த்துக் கொண்டு போகிறார்கள். சில சிங்களவர்கள் நடைபெற்றவைகளால் மிகவும் குழம்பியுள்ளனர் அவர்கள் தாம் நடந்தது குறித்தும் அயலவர்களுக்கு செய்தது குறித்தும் வெட்கப்படுவதாகவும் நல்ல உறவுகளுடன் இருந்ததாகவும் தெரிவித்தனர். சம்பவத்தை தெரிவிக்கும்போது இரண்டு பெண்கள் உண்மையில் கண்ணீர் வடித்தனர். இந்தத் தனிநபர்கள் தெரிவித்ததாவது: இந்த அயலவர்களுடன் தமது உறவானது மிகவும் நெருக்கமாக இருந்தது. தமது சகோதரரின் மரண வீட்டின்பொழுது அவரது இறந்த உடலைச் சுமந்தோரில் இந்த முஸ்லிம் நண்பர்களும் உள்ளடங்கியிருக்கும் அளவுக்கு நெருக்கமாக இருந்தது எனக் கூறினர். நாம் சிங்கள பிக்குகளைச் சந்தித்தோம். அவர்களுள்

ஒரு பௌத்த பிக்கு நிகழ்வுகளின் உண்மைத் தன்மை குறித்து தடுமாறியதுடன் சம்பவம் குறித்து மிகவும் வருந்தினார்.[100]

இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர் வெள்ளத்தை அனுபவித்ததாகவும் பள்ளிவாசலுக்கு வந்த நிவாரண விநியோகங்களில் இருந்து அப்பகுதியில் உள்ள எல்லோருக்கும் தாம் உணவு விநியோகித்ததாகவும் வெலிப்பன்ன முஸ்லிம்கள் தெரிவித்தனர். தண்ணீர் பற்றாக்குறையாக இருந்தபொழுது அயலில் உள்ள முழுப்பகுதிக்கும் தமது பாரவண்டியில் வந்த நீரை விநியோகித்ததாக சீனவத்தையிலுள்ள ஒரு முஸ்லிம் குடும்பம் தெரிவித்தது.[101] தனது வீடு எரிக்கப்பட்ட ஒரு சிங்களப்பெண் தானும் தனது கணவரும் எவ்வாறு முஸ்லிம்களுக்கு உதவிசெய்தனர் என்பதை விபரித்தனர். இந்தக் கதைகளை சொல்லும் பொழுது பலர் தமது அயலவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டதையும் உணர்ந்ததுடன் சமூகங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள் அயலவர்கள் தமக்கு அதிகம் உதவி செய்திருக்க முடியும் என உணர்ந்துள்ளனர். முஸ்லிம்கள் தாம் காட்டிக் கொடுக்கப்படுவதாக உணருவதுடன் காடையர்களை திசைதிருப்புவதற்காக பௌத்தர்கள் பௌத்த கொடிகளையும் விளக்குகளையும் சிங்கள வீடுகளில் திட்டமிட்டுத் தொங்கவிட்டிருந்தது முக்கியமானது எனச் சிந்தித்தனர்.[102] உறவுகள் முறிந்திருப்பதானது பாரதூரமானதும் முக்கியமானதுமான ஒரு விடயம் எனவும் இது தீர்த்துவைக்கப்படாது விடின் சமூகங்களுக்கிடையே நீண்டகாலத் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் சொல்லப்பட்டது. உண்மையில்

---

[100] தேசிய சூராசபை பத்திரிகைக் குறிப்பு 16.7.2014

[101] இக்கதையானது பின்பு ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெருமாவினால் டெயிலி மிரலில் அளிக்கப்பட்ட நேர்காணலில் காணப்பட்டது. அதில் அவர் அந்த நேரத்தில் வெலிப்பன மக்களுக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை எனவும் சனசமூகத்தினரிடையே இருந்த நல்ல அயலவர்களில் தான் தங்கியிருந்தார்கள் எனவும், பள்ளிவாசல்களால் வழங்கப்பட்ட நிவாரணங்களாலே தான் அவர்கள் தப்பிபிழைத்தார்கள் எனவும் குறிப்பிட்டார்.

[102] போயா தினங்களுக்கு ஒரு சில நாட்கள் பின்பு என்பதனால் போயா தினத்திற்காக சிங்கள வீடுகள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

அரசானது சனசமூக மட்டத்தில் காயங்களை குணமாக்குவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். விரைவான மீளக்கட்டுதலானது அவ்வாறு செய்யும் ஒரு வழியாக காணப்படும் வேளையில் அது போதியதற்றதாகவும் உள்ளது.

## நிகழ்வு தொடர்பான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதிற் செயற்பாடு

அளுத்கம நிகழ்வுகளின் பிற்பாடு உடனடியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் அரசின் குற்றத்தன்மை தொடர்பாக பலமான வார்த்தைகளுடன் கூடிய வெளிப்படையான கருத்துக்களை முன்வைத்தார். அவர் வண. ஞானசாரவின் வெறுப்பு பேச்சு, பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு, அரசின் குற்றத்தன்மை தொடர்பானவை சம்பந்தமாக கருத்து வெளியிட்டிருந்தார். இலங்கையில் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட குற்றம்சாட்டப்பட்ட பாரதூரமான வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான மனித உரிமைகள் விசாரணைக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் மீதான விவாதத்தின்பொழுது பாராளுமன்றத்தில் தனது அறிக்கையில் நாட்டில் மத வன்முறைகள் தொடர்பாக உயர் ஸ்தானிகரால் சொல்லப்பட்டவை இனியும் பொய்களின் திசுக்கள் என அழைக்கப்பட முடியாது எனக் குறிப்பிட்டார். சிவில் மற்றும் அரசியல் உரிமைச் சட்டத்தின் மீதான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) 3 ஆம் உறுப்புரையை எடுத்தாண்ட அவர் வெறுப்பு பேச்சு மற்றும் தூண்டுகைகளில் ஈடுபடுவோரை ஏன் நீதிமன்றத்திற்கு கொண்டுவர முடியாது எனக் கேள்வி எழுப்பினார். நாடானது சர்வதேச உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருக்கும் நிலையில் நேர் மாறாக செங்குத்துப் பாறையில் முன்செல்வதாக எச்சரிக்கை செய்ததுடன், அத்தகைய பெரிய இடையீடுகளுக்கான கிளறுகைகள் இன்னும் ஏற்படக் கூடுமெனவும் தெரிவித்தார். வண. ஞானசாரவின் வெறுப்புப் பேச்சு பிரச்சினையில் அவரது வகைகூறல் தொடர்பாக ஹக்கீம் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> சொந்த சட்டத்தின் கீழ் உணரக்கூடிய ஒரு குற்றத்தின் உதாரணமே அளுத்கமவில் இடம்பெற்றுள்ளது. வெறுப்பை பரப்பி வன்முறைக்கு மக்களைத் தூண்டிய ஒருவரைக் கைது செய்யாமல் நாம் ஏன் இன்னும் இருக்கிறோம்? அவ்வாறு செய்வது அரசாங்கத்தின் கடமையாகும். நாம் பேசாத காவலாளிகளாக நின்று கொண்டு இந்த ஏற்பாடுகளை வெறும் வாய்ப் பேச்சில் மாத்திரம் கவனம் செலுத்துபவர்களாகவும் அவர்களை பல் அற்றவர்களாகவும் வைத்திருக்க விரும்புகிறோம். நியாயாதிக்க ஏற்பாடுகளை வைத்திருப்பதும் இவ்வாறான நடத்தைகளுக்கு நடவடிக்கை எடுக்க போதிய கருவிகள் உள்ளது என உலகத்திற்கு பிரகடனம் செய்வதும் போதுமானதல்ல. இந்த ஏற்பாடுகளின் எழுத்துக்களையும் உத்வேகங்களையும் அமுல்படுத்துவது நாம் இன்று செல்லும் தீர்க்கமான செங்குத்துப் பாறையின் ஒளியில் கட்டாயமானதாகும்.

இதற்கு மேலதிகமாக 2014 ஜூன் 17 ஆம் திகதி அல்ஜஸீராவின் ‘உட்புறக் கதை’ நேர்காணலில் ரவூப் ஹக்கீம் வெறுப்பு பேச்சின் பரவுகை மற்றும் அரசின் பதிற்செயற்பாட்டின் மீது கடுமையான விமர்சனம் என்பவற்றை வெளிப்படுத்தியிருந்தார். அவர் பிபிசி க்கும் நேர்காணல் வழங்கியிருந்ததுடன், அதில் நிகழ்வுகளால் அவர்மிகவும் பாதிக்கப்பட்டவராக இருந்ததுடன் மிகவும் ஆணித்தரமாகவும் பேசியிருந்தார். தன்னிடமுள்ள சிங்கள மொழித்திறனைப் பயன்படுத்தி அளுத்கமவின் பதிற்செயற்பாட்டுக்காக சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகளை உள்ளூர் ஊடகங்களிலும் கடுமையாக விமர்சித்திருந்தார். மிக அண்மையில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ ானது இச்சம்பவம் தொடர்பாக ஒரு அறிக்கையை விடுத்திருந்தது. அது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது மதிப்பிடப்பட்ட இழப்புக்கள் தொடர்பான அனைத்துமடங்கிய ஆவணப்படுத்தலை வழங்குகிறது.

எவ்வாறாயிருப்பினும், அண்மைக் காலத்தில் அரசியல் செயற்பாட்டாளர்களிடம் ஒரு அமைதி நிலவுகிறது. அளுத்கமையில்

ஏற்படுத்தப்பட்ட இழப்புக்கள் தொடர்பாக 2014 ஜுலை 10 ஆம் திகதி எதிர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஊடாக கேள்விகள் முன்வைக்கப்பட்டன.[103] உண்மையில், அந்த நேரத்தில் எந்தவொரு முஸ்லிம் பிரதிநிதியும் பாராளுமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

## நிகழ்வுக்குப் பதிற்செயற்பாடாக ஏனைய உள்ளூர் மற்றும் சர்வதேச அறிக்கைகள்

சம்பவத்திற்குப் பின்னர் ஒரு கூப்பாடு இருந்தது. யுஎன்எச்ஆர்சி தலைவர் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட சர்வதேச, உள்ளூர் முன்னணி வியாபாரச் சங்கங்களின் குழுவினர், சிவில் சமூக நிறுவனங்கள் வன்முறையைக் கண்டித்து தொடர்ச்சியான அறிக்கைகளை வெளியிட்டன.[104] தொகுக்கப்பட்ட கள அறிக்கைகள் அல்லது கூற்றுக்களின் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு நிரலானது பின்வரும் இணைய இணைப்பில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

https://docs.google.com/document/d/1LLYyXN40uJE4p7R8CY48b7ckd8mxBIkuKzdipkhaw X0/edit?usp=sharing

103 ஹன்சார்ட் 2014 ஜுன் 17 ஆந் திகதி பக்கம் 752

104 மேற்படி கூற்றுக்களில் இலங்கை சுதந்திரக் கட்சியின் தவிசாளரான ஒரு உறுப்பினர் கூறுவது சுவாரசியமாக இருக்கையில் அந்தக் கூற்றில் வன்முறையைக் கண்டித்ததுடன் கட்சியானது அடக்கமான நிலைப்பாட்டினை அழுத்தியுரைத்து இருந்ததுடன் தீவிரவாதத்தால் மக்களைத் தூண்டியது. இவ்வண்ணமாக வென்றெடுக்கப்பட்ட அமைதியையும் மீளிணக்கத்தையும் கீழ்நிலைப்படுத்தும் முயற்சியாக சில சக்திகளால் கொண்டுவரப்பட்ட நிகழ்வுகள் என சந்தேகிக்கப்பட்டிருப்பதாகவும் அது குறிப்பிட்டு இருந்தது. அத்துடன் ஜனாதிபதி முஸ்லிம் சமூகத்துடனான வரலாற்று நல்லுறவுகளையும் கீழ்நிலைப்படுத்துவற்கான ஒரு நடவடிக்கையாக இது சந்தேகிப்பதாக குறிப்பிடப்பட்டது. கூற்றானது ஒரு குறிப்பிட்ட சமூகத்தை குற்றம்சாட்ட வேண்டாம் என அதன் வருத்தத்தை எடுத்துக்கொண்டதுடன் மக்களின் கூட்டு மனிதத்தன்மைக்கான தேவைக்கு அழுத்தியுரைத்ததுடன் இன அல்லது மத இணைப்புக்களை மாத்திரம் மனிதனின் கூட்டு மனித நேயத்தை எடுத்துக்கொள்வதற்கான தேவையை அழுத்தியுரைத்தது.

# அத்தியாயம் VI
## ஊடக உள்ளடக்கம்

மரபு ரீதியான பிரதான தளத்தில் இயங்கம் ஊடகங்களிலிருந்து சமூக ஊடகங்களைப் பிரிக்கும் கோடானது அதிகரித்தளவில் மங்கிவருகிறது. அநேமான செய்திப் பத்திரிகைகளும் தொலைக்காட்சி சேவைகளும் சமூக ஊடகங்கள் ஊடாக 24 மணித்தியால செய்திச் சேவையை நடத்துகின்றன. தொழில்வாண்மை ஊடகவியலாளர்கள் தாம் இணைந்துள்ள ஊடக நிறுவனத்தின் சொந்த புளொக்குகளையும் ருவிற்றர் கணக்குகளையும் சுயாதீனமாக நடத்துகின்றனர். இத்தகைய தற்போதைய ஊடக நுணுக்க வேறுபாடானது அளுத்கமை, பேருவளை கலவரங்களின்பொழுது முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது,

### மரபு ரீதியான ஊடகம்[105]

இன்று புதினப்பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி வழங்குனர்கள் செய்தி இற்றைப்படுத்தல்களை 24/7 மணித்தியால நேரமும் ருவிற்றர் கணக்குகள் ஊடாக வழங்குகின்றன. எவ்வாறாயினும் பேருவளை, அளுத்கம நிகழ்வுகள் ஊடகங்களுக்கு திறந்து வைக்கப்பட்டிருந்தபோதிலும் ஊடக சூரர்களாலேயே சிறிதளவே சொல்ல முடியுமாக இருந்தது. அத தெரண இரவு 8.30 மணிக்கு பொலிஸ் ஊடரங்குச் சட்டம் பேருவளை மற்றும் அளுத்கம பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இற்றைப்படுத்தியது.[106] அதனைத் தொடர்ந்து அடுத்த நாள் காலை 6.41 இற்கு அது ஜனாதிபதியிடமிருந்து சட்டத்தை தமது கையில் எடுப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற செய்தியை தொடர்பாடல்

[105] இப்பிரிவானது ஆங்கில சிங்கள ஊடகங்களை ராவய பத்திரிகை போன்ற சிங்கள ஊடகங்களை எடுத்துக்காட்டி வழங்குகிறது. இவைகள் தமிழ் மூலங்களை உள்ளடக்கவில்லை.

[106] Screenshots of some of the twitter feed can be found at https://app.box.com/s/frnz8fg4khjj6zeq04iq/1/2092435554

செய்து இற்றைப்படுத்தியது.[107] டெய்லி மிரரும் ருவிற்றர் மூலமாக அதையொத்த செய்தி வழங்கலைச் செய்தது. லங்காதீப அதற்கு மாறாக செய்திகளைப் புறக்கணித்ததாக தென்பட்டது. சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சில முக்கிய ஊடகவியலாளர்களான தனிநபர்கள் ருவிற்றர் ஊடாக பொதுமக்களுக்கு நிகழ்வுகளை விரிவாக வழங்கினர்.[108]

பிபிசியின் சார்ள்ஸ் ஹெவிலான்ட், டெய்லி FT யின் தர்ஷா பஸ்ரியன், அல்ஜசீராவின் தினுக் கொலம்பகே அளுத்கமையில் 15 ஆம் இரவு ஊடரங்குச் சட்ட அமுல்படுத்தலின்பொழுது இடம்பெற்றுக் கொண்டிருந்த படுகொலையின் தொடர்ச்சியான இற்றைப்படுத்தல்களை வழங்கினர். "இலங்கையின் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தர்கா நகர் பள்ளிவாசலில் கண்ணீரில் உள்ளார். இலங்கை அளுத்தகம முஸ்லிம் பெண்கள் வன்புணர்வு அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து காடுகளுக்குள் ஓட்டம்" என்று சாள்ஸ் ஹெவிலான்ட் ருவிற் செய்திருந்தார். அவர் மேலும் ருவிற் செய்கையில் உள்ளூர் சிங்கள பௌத்த மக்கள், பௌத்த கடும்போக்காளர்கள் வெளிப்பகுதிகளில் இருந்து வந்து இருபகுதிகளிலும் வன்முறை இடம்பெறுகிறது. இது இலங்கை கலவரங்கள் எனத் தெரிவித்திருந்தார். அழிவுகளில் அவை இடம்பெற்றவாறாகவே படங்கள் பதிவேற்றம் செய்யப்படுவதில் இந்த ஊடகவியலாளர்கள் உரிய பொருத்தமான இற்றைப்படுத்தல்களை பொதுமக்களுக்கு வழங்குவதில் புதிய சிறந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஏனைய பிரதான செய்தி வழங்குனர்களினால் உருவாக்கப்பட்ட இடைவெளியை நிரப்பி விட்டனர்.

16 ஆம் திகதி காலையில் அச்சு ஊடகப் பதிப்புக்கள் வெளிவந்தபொழுது அளுத்கமையில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கல்களை சிறிதளவே வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருந்தன.[109] அநேகமான

---

107 மேலுள்ளவாறாக

108 மேலுள்ளவாறாக

109 Screenshots of some online versions of daily newspapers on 16 June 2014 can be found at https://app.box.com/s/frnz8fg4khjj6zeq04iq

செய்திப் பத்திரிகைகள் அரசாங்க அதிகாரிகளால் ஊக்குவிக்கப்பட்ட அதே விபரிப்பையே அறிக்கையிட்டிருந்தன. பௌத்தர்களின் அமைதியான ஊர்வலத்துக்கு முஸ்லிம்கள் கல் எறிந்த பின்னரே அளுத்கமையில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மோதல்கள் உருவானதால் அளுத்கமையில் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக விபரிப்புக்கள் கூறின.[110] பொது பல சேனாவின் ஊர்வலமோ ஞானசார தேரரின் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் பற்றியோ குறிப்பிப்படவில்லை. இக்கதையின் கணக்கானது நிலைமையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் பொலிசார் திறமையாக செயற்பட்டிருப்பதாக உரிமை கோரியது.

சம்பவத்தின் பின்வந்த நாட்களில் கூட அச்சு ஊடகமானது அதன் செய்தி உள்ளடக்கத்தின் ஆழத்தை விஸ்தரிக்க முடியாதிருப்பதைக் காணக்கூடியதாக இருந்து. அடிமட்டத்திலிருந்து பலவகை விபரிப்புக்களை தெரிவிப்பதற்குப் பதிலாக ஊடக நிறுவனங்கள் விருப்புடைய குழுக்களின் செய்தி குறிப்புக்களை பொதுமக்களுக்கு பிரசுரித்து வழங்குவதில் திருப்திபட்டுக்கொண்டன. சிங்கள செய்திப் பத்திரிகைகள் ஜனாதிபதி, பொலிஸ் மாஅதிபர், அமைச்சர் ரவூப் ஹக்கீம், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பொது பல சேனா போன்றோரின் கூற்றுக்களை வழங்கின.[111] பொதுபலசேனா, சிங்கள ராவய, ராவண பலய என்பவற்றின் செயற்பாடுகள் காரணமாக எந்த உயிரும் இழக்கப்படவில்லையெனவும் முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களே ஏற்பட்ட இரண்டு உயிரிழப்புக்கள் மற்றும் சொத்துக்களின் அழிவுகளுக்கு பொறுப்பேற்க வேண்டுமென அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியதாக அறிக்கையிடப்பட்டது.[112]

சில செய்திப் பத்திரிகைகள் உத்தியோகபூர்வ அறிக்கையுடன் முரண்படாதிருக்கும் வண்ணம் எச்சரிக்கையுடன் ஆசிரியர் தலைப்பைத்

110 பார்க்க
111 பார்க்க
112 பார்க்க

தீட்டியிருந்தன. எனினும், சூழ்நிலையைக் கையாள்வதில் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் மந்தமாகச் செற்பட்டதைச் சொல்வதில் ஒருவாறு முகாமைத்துவம் செய்து கொண்டன.[113] இந்த ஆசிரிய தலையங்கங்களும் ஏனைய பரிசீலிக்கப்பட்ட கட்டுரைகளும் வன்முறை நிறுத்தப்பட வேண்டிய செய்தியின் தேவையைச் சுமந்து வந்ததுடன் மத சகவாழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டின.[114] எவ்வாறாயினும், பல சிங்கள அச்சு ஊடகங்கள் பொது பல சேனாவின் கருத்தியலையையே பிரதிபலித்தன. உதாரணமாக, போதைப் பொருள் வியாபாரியைக் கைது செய்வது தொடர்பான கட்டுரையொன்று அவர் ஒரு முஸ்லிமாக[115] இருப்பதன் காரணமாகவும் பெண்ணாக மாறுவேடம் போட்டுக் கொண்ட ஒரு ஆண் பற்றிய செய்தியும்[116], தனது விகாரையில் கொலை செய்யப்பட்ட ஒரு பிக்குவின் கதையும்[117] மத அடையாளத்தை தேவையற்ற விதத்தில் பெருப்பித்துக் காட்டின. பொதுவான தொனியில் ஐக்கியத்திற்காக பாடுபடும் சில கட்டுரைகள் இருந்தபோதிலும் அந்நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு சிறிதளவே செய்யப்பட்டு இருந்தன.

ராவய, டெய்லி FT போன்ற பத்திரிகைகள் ஆரம்பத்திலிருந்து இப்பொழுது வரைக்கும் நிகழ்வு தொடர்பான உத்தியோகபூர்வ கருத்தாடலுக்கு எதிர்வாதத்தை வழங்குவதைத் தொடர்ந்து வருகின்றன. இந்தப் பத்திரிகைகள் ஏனைய பத்திரிகைகளில் வெளிவராத புலனாய்வுத் தகவல்களை சுமந்து வந்ததோடு,

கையிலுள்ள பிரச்சினைகளை தெளிவாகப் புரிந்துகொள்ளும் கட்டுரைகளைப் பிரசுரித்தன. எவ்வாறாயினும், இந்தப் பத்திரிகைகளின் வாசகர் எண்ணிக்கை மட்டுப்பட்டதாகவே இருந்தது.[118]

---

113 பார்க்க
114 பார்க்க
115 பார்க்க
116 பார்க்க
117 பார்க்க
118 பார்க்க

## சமூக ஊடகம்

வன்முறைக்கு முன்பும் வன்முறையின்பொழுதும் வன்முறையின் பிற்பாடும் சமூக ஊடகங்களின் தாக்கமானது நெருக்கமான அவதானிப்பை வேண்டி நிற்கிறது. சமூக ஊடகம் என்ற சொல்லானது முகநூல், ருவிற்றர், புளொக்கிங், யுரியுப் மற்றும் தொழில்வாண்மை ஊடகவியலாளர்கள் அல்லாத தனிநபர்களும் பிரசுரங்களை வெளிப்படுத்தக்கூடிய இடவசதிகளையும் தளங்களையும் உள்ளடக்குகின்றன.[119] கலவரத்திற்கு முன்பாக இரு சமூகங்களுக்கும் இடையிலான பதற்றமானது சமூக ஊடகங்களில் பரவச் செய்யப்பட்ட வெறுப்புப் பேச்சின் ஊடாக ஏற்கனவே கவனிக்கக்கூடியதாக இருந்தது. சிங்கள பௌத்த மற்றும் ஞானசார தேரரின் தனிப்பட்ட பக்கம் போன்ற முகநூல் குழுக்கள் சுதந்திரமாக முஸ்லிம்சமூகத்திற்கு எதிரான புகைப்படங்களை பதிவேற்றியிருந்தன.[120] பொது பல சேனாவின் அநேகமான பிரசாரங்கள் இந்த ஊடகங்களால் ஊக்குவிக்கப்பட்டதுடன், வெறுப்பு நிறைந்த ஒவ்வொரு படமும் முகநூலில் ஆயிரக்கணக்கான விருப்புக்களை நிறைத்துக் குவித்தன. இந்தப் பக்கங்களில் காணப்பட்ட கருத்துக்களானவை வெறுப்பு, வன்முறை நிறைந்த மனோநிலையை சுட்டிக்காட்டியிருந்தன. Groundviews பொறுப்பாளராகிய சஞ்சன கொத்தொட்டுவ கூறுவதன் பிரகாரம் சமய வெறுப்பை பரப்பும் 35க்கு மேற்பட்ட இணையவழிக் குழுக்கள் உள்ளன.[121] இந்த வழிகள் ஊடாகத்தான் அளுத்கமை பகுதியில் உள்ள முஸ்லிம் சமூகம் ஒரு ஊர்வலம் ஒழுங்கு செய்யப்படுவது குறித்தும் அதற்குப் பின்னாலுள்ள எதிர்ப்பு உணர்வலைகள் குறித்தும் அறிந்து கொண்டது.[122]

---

[119] சமூக ஊடகங்கள் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதாக ?”,Rayava, 29June 2014; “Aluthgama, A game without winners”, Daily FT, 3 July 2014

[120] பார்க்க. பொதுபலசேனவையும் ஞானசாரவையும் முகநூல் தடைசெய்கிறது Asian Mirror, 20 June 2014

[121] ரோயல் கல்லூரியில் நடந்த ஒரு வைபவத்தில் அவர் இந்தக் கருத்தை 17 ஜுலை 2014 ஆம் திகதி தெரிவித்து இருந்தார்.

[122] அளுத்கம பேருவளை முஸ்லிம் மற்றும் சிங்கள வதிவாளர்களுடனான நேர்காணல்கள் ஊடாக அவதானிக்கப்பட்டவாறாக

கலவரத்தின்போதும் கலவரத்திற்கும் இட்டுச் சென்ற உடனடி நிகழ்வுகளின்போதுமான கவனிக்கப்பட வேண்டிய காரணிகள் உள்ளன. முதலில் யுரியுப் மூலமாக தமது பொதுப்பேச்சுக்களை பரப்புவது பொது பல சேனாவின் வழமையாகும். அத்துடன் ஜூன் 15 நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கும் எல்லா முஸ்லிம்களும் அளுத்கமவில் ஞானசார தேரரினால் ஆற்றப்பட்ட பேச்சை செவிமடுத்தவர்கள் கூறுவதன் பிரகாரம் அவரது வார்த்தைகள் *'அப சரண'* (முஸ்லிம்கள் அழிக்கப்படுவார்கள்) எனக் குறிப்பிட்டிருந்தார். சமூக ஊடகங்கள் ஊடாக இப்பேச்சை முஸ்லிம்கள் கேட்கக்கூடியதாக இருந்தமையானது பொது பல சேனாவினால் நடத்தப்பட்ட ஊர்வலத்தினால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலை அவர்கள் உணர்ந்து கொள்ளச் செய்தது.[123]

இரண்டாவதாக, சிங்கள பௌத்த சமூகத்தினரை தூண்டக்கூடிய வதந்திகளைப் பரப்புவதற்கு சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. மூன்று பிரதான வதந்திகள் பரவியிருந்தன: முதலாவது, தர்கா நகர விகாரை தாக்கப்பட்டதுடன் புத்த சிலை தகர்க்கப்பட்டு விட்டது; இரண்டாவது, பிக்கு ஒருவர் கடத்தப்பட்டு பள்ளிவாசல் வளாகத்திற்குள் வெட்டிக் கொல்லப்பட்டார்; மூன்றாவது கொல்லப்படுவதற்காக இளம் துறவிகள் விகாரைகளில் இருந்து கடத்தப்பட்டுள்ளார்கள்.[124] பிரதேசத்தில் இந்த வதந்திகள் காட்டுத்தீ போன்று குறும்செய்திகள் ஊடாகவும் செல்லிடத் தொலைபேசிகள் ஊடாகவும் பரப்பப்பட்டன.[125] மரபு ரீதியான ஊடகங்கள் அனைத்தும்

---

123 கலவரத்திற்கு பிற்பாடு நேர்காணல் செய்யப்பட்ட எல்லா முஸ்லிம்களும் இவ்வாட்சிக்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலின் பாரதூரம் குறித்தும் தமது வாழ்வுக்கான அச்சத்தை அது எவ்வகையில் உருவாக்கியது என்பது குறித்தும் குறிப்பிட்டிருந்தனர்.

124 இவ் வதந்திகளானவை முஸ்லிம் மற்றும் சிங்கள சாட்சிகளால் வழங்கப்பட்ட எல்லா கருத்துக்களினதும் ஒரு தொகுப்பாகும்.

125 கலவரம் தொடங்கிய உடனும் முன்பும் குறுஞ்செய்தி ஊடாக சிங்கள பொதுமக்களிடையே வேறுபட்ட வதந்திகள் பரப்பப்பட்டதாக சீனவத்தையில் இருந்தான சிங்கள குடும்பத்தினர் தகவல் வழங்கினர்.

செயலற்றதாக இருந்த வேளையில், கட்டுக்கதைகளை இல்லாது செய்வதற்கு செயற்படுவதற்கு அதிகார ரீதியான அல்லது சிந்தனா ரீதியான குரல் எதுவும் இருக்கவில்லை. இதன் காரணமாக, சிங்கள பௌத்த சமூகத்தினர் சிலர் நியாயமான கோபத்தின் அடிப்படையில் வன்முறையில் ஈடுபடுவதற்கு தூண்டப்பட்டிருக்கக் கூடும். அது அவ்வாறு இல்லாதிருந்தபோதும் அடையப்பெற்றது என்னவெனில், அவ்வாறான வன்முறைகளிலிருந்து பௌத்தர்களை நிறுத்தியதுடன் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான இந்த தாக்குதல்கள் உண்மையில் நியாயமானது என உணரச் செய்திருந்தமையாகும்.

சமூக ஊடகங்களினது வெறுப்புணர்வின் பரவுகையின் பின்னர்இடம்பெற்ற நிகழ்வானது பெருமளவில் பௌத்தர்களை கூடச் செய்ததும், சில மரபு ரீதியான பிரதான ஊடகங்களை கூடச் செய்தது என்பது கவனிக்கத்தக்கது. ஆகவே, சிங்கள பௌத்த ஊடகங்களை வாசிக்கும் பொதுமக்கள் இந்த வதந்திகளை அவர்கள் பதிற் செயற்பாடு காட்ட வேண்டிய ஓர் அச்சுறுத்தல் உருவாவதன் நிமித்தமான நிலையில் வைத்திருந்தது.

மூன்றாவதாக, கலவரத்தின்பொழுதும் கலவரத்தின் பிற்பாடும் சமூக ஊடகங்களினால் செய்யப்பட்ட பங்களிப்பு குறித்தும் ஊடகங்களினால் கண்டுகொள்ளாது விடப்பட்ட மாற்று விபரிப்புக்களை வெளிக்கொணர்வதிலும் சமூக ஊடகங்கள் ஆற்றிய பங்களிப்பை ஒருவர் ஏற்றுக்கொள்வது முக்கியமானது.

அளுத்கமவை நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து ஊடரங்குச் சட்டம் பிரித்து வைத்திருந்த வேளையிலும் கூட அங்கு நடப்பவற்றை ஸ்மாட் தொலைபேசி ஊடாக சாதாரண ஆட்களும் இற்றைப்படுத்துவதில் ருவிற்றர் வசனங்கள் பெருகிக் கிடந்தன.[126]

[126] பார்க்க “Aluthgama riots: Social media breaks SL media’s shameful silence”, First Post, 17 June 2014.

அளுத்கம வீதிகளில் காடையர்கள் அலைந்து திரிவதை ஸ்மாட் தொலைபேசிகளும் CCTV கமராக்களில் இருந்து வரும் வீடியோ காட்சிகளும் மிகுதியாக யுரியுப்புகளில் கிடந்தன.[127] பொலிசார் மற்றும் விசேட அதிரடிப்படையினரும் அவர்களது தொழிற்பாடு அல்லது அது செய்யப்படாமை என்பன பதிவு செய்யப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தன. ஒரு சாட்சி கூறியதன் பிரகாரம், தனது மகன் தனது ஸ்மார்ட் போனில் தாக்குதல்காரர்களின் அசையும் ஒளிப்படங்களை எடுத்து வற்சப்பினைப் பயன்படுத்தி மத்திய கிழக்கில் உள்ள உறவினர்களுக்கு அனுப்பியிருந்ததாகச் சொன்னார். அவர்கள் இதனை அறிந்து கொள்வதற்கு முன்பாக அளுத்கமையிற்கு வெளியிலிருந்த மக்கள் கலவரத்தின்பொழுது என்ன நடைபெற்றது என்பதை சரியான சான்றுகளை பதிவேற்றிக் கொண்டிருந்தன.

Groundviews எனப்படும் பிரசைகள் ஊடகவியலாளர்களுக்கான தளமானது நிரல்படுத்தப்பட்ட நிகழ்வுகளாக ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட பாணியில் எல்லா சாட்சியங்களின் விபரிப்புக்களையும் தொகுத்து இருந்தது.[128] பிரதான ஓட்ட விபரிப்பில் இருந்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கும் தனிநபர்களுக்கு களமமைத்துக் கொடுத்த பலவற்றில் ஒன்றாக இதிலிருந்தே அக் குரல்கள் முதலில் கேட்கப்பட்டன.

Republic Square போன்ற ஏனைய இணையதளங்களும் படுகொலையின் விஸ்தரிப்பின் ஒப்பீட்டளவிலான சரியான விபரிப்புடன் இணையதள ஆய்வாளர்களுக்கு அவற்றினை வழங்கியிருந்தன.[129] எவ்வாறாயினும்,

---

127 பார்க்க "CCTV footage. BBS Aluthgama attack. 15/6/2014", YouTube: https://www.youtube.com/watch?v=n1DkG7nO9fg; "CCTV footage of Aluthgama attack- Gossipbooklk", Youtube: https://www.youtube.com/watch?v=WZw6Rw72dDk.

128 பார்க்க "Aluthgama riots and deaths: Vital updates" Groundviews, 16 June 2014.

129 பார்க்க "What happened in Aluthgama, a verified account", The Republic Square, 15 June 2014.

சமூக ஊடகத்தின் சகதியில் கணிசமான ஊடக அறிவுள்ள வாசகர் அல்லது பார்வையாளர் களத்தில் இருந்தான முறைமையான விபரிப்புக்களிலிருந்து புனையப்பட்ட சான்றுகளுக்கு மாறிக்கொள்ள முடியுமாக இருந்தது. ஆகவே, சமூக ஊடகமானது தகவலுக்கு ஒரு பெறுமதியான கருவியாக செயற்படும் அதேவேளையில் தெளிவை ஏற்படுத்த தவறிவிட்டது.

# அத்தியாயம் VII
# அளுத்கமை சம்பவங்களின் பின்னரான சட்டரீதியான பதிற் செயற்பாடுகள்

கலவரங்களின் பின்னர் தமது பெறுமதியானவை கொள்ளையடிக்கப்பட்ட அழிக்கப்பட்ட மக்களிடையே உதவியற்ற உணர்வு இருந்தது. தமக்கு கிடைக்கக்கூடிய சட்டரீதியான பரிகாரங்கள் குறைந்தபட்சமானவை அவர்கள் உணர்ந்திருந்தனர்.[130] குற்றமிழைத்தவர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுக்கு எதிராக சில துணிவான தனிநபர்கள் முறைப்பாடுகள் செய்தபொழுது முறைப்பாடு செய்தவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சம்பவங்களை முஸ்லிம்கள் நினைவுகூர்ந்தனர். ஆகவே, பொதுமக்களிடத்தில் ஒரு பெரு ஏமாற்றமான எதிர் மனப்பாங்கு குடிகொண்டிருந்தது.[131]

அளுத்கமை கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு முதலில் வந்தோரிடையே இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஒன்றாக இருந்தது.[132] இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பொது பல சேனாவால் மத ஐக்கியமின்மை தூண்டப்படுவது குறித்து சட்ட மாஅதிபர் திணைக்களத்தையும் அரசாங்கத்தையும் எச்சரித்தது. 2014 ஜூன் 15, 16 ஆம் திகதி சம்பவங்களின் பொழுது அவர்களது சொத்துக்கள்

---

130 அரசாங்க அதிகாரிகள் தமது கடமையைச் சரியாக செய்வதை உறுதிப்படுத்தும் முகமாக அவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக உள்ள பல்வேறுபட்ட நீதிமன்ற சம்பவங்கள் குறித்து சாட்சிகளாக செயற்பட்ட வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் அறிந்திருக்காது இருப்பது அவதானிக்கப்பட்டது.

131 உள்ள சாட்சிகள் தாம் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக தாம் பொலிசாரிடம் முறைப்பாடு செய்ய சென்றபோது அவர்கள் துன்புறுத்தப்பட்டதாகவும் அவர்கள் இலக்கு வைக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாறான 12 முறைப்பாடுகள் அவர்களுக்கு எதிராக செய்யப்பட்டு இருப்பதுடன் அவற்றில் அநேகமானவர்கள் கைது செய்யப்பட்டு இருந்தனர். ஆகவே இது பலரை பொலிசாரிடம் சென்று முறைப்பாடுகளைச் செய்வதிலிருந்து உற்சாகமளிக்காது விட்டது.

132 அளுத்கம இராணுவ வீதியில் பாதிக்கப்பட்ட ஒரு வயதுமுதிர்ந்த பெண் இலங்கை சட்டத் தரணிகள் சங்கத்தில் நிகழ்ந்த பிற்பாடு தனக்கு உதவி செய்ய வந்ததாக குறிப்பிட்டனர். இந்த உதவியானது கலவரத்தின் பிற்பாடு உடனடியாக பணியாற்றிய சட்டத்தரணிகளின் சாட்சியங்களோடு ஒத்ததாக இருந்தது.

மற்றும் பாதுகாப்பு என்பன மீறப்பட்டதன் பிற்பாடான சட்ட அறிவுரை தீவிரமாக தேவைப்பட்டோருக்கு சட்ட சேவைகளை வழங்குவதற்கு அவர்கள் ஒன்றுகூடினர்.[133]

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய மற்றும் செயலாளர் அஜித் பத்திரண ஆகியோர் தோன்றிய இரண்டு மரண விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. சிங்கள முஸ்லிம் கலவரத்திலிருந்து ஏற்பட்ட இரண்டு முஸ்லிம்களின் மரணம் தொடர்பாக B.R.1501/14 இலக்க வழக்கின் கீழ் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் முதலாவது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இறப்புக்கள் தொடர்பான சட்ட மருத்துவ அறிக்கையானது ஒருமைப்பாடு இல்லாதிருப்பதை விளங்கப்படுத்துவதற்கு இது முயற்சித்தது. இறப்பானது வெட்டுக்காயங்களால் ஏற்படுத்தப்பட்டது என்று பதிவு செய்திருக்க சூட்டுக் காயங்கள் அங்கே காணப்பட்டிருந்தமை தொடர்பாக தெளிவுபடுத்துவதற்கான முயற்சியாக பிரதானமாக இது அமைந்திருந்தது. இது ஒரு இடைக்கால சட்ட மருத்துவ அறிக்கை எனவும் அது சான்றாக மாறியபொழுது இவ்விடயமானது மேலும் விசாரிக்கப்பட வேண்டுமென பொலிசார் தெரிவித்தனர். சட்ட மருத்துவ அறிக்கையின் செல்லுபடித்தன்மை குறித்து தமக்கு சந்தேகங்கள் இருப்பதாக சபை குறிப்பிட்டதினால் வைத்தியர் அழைக்கப்பட்டார்.[134]

விண்ணப்பமானது சேதங்கள் தொடர்புடையதாக இருந்தது. அரசாங்கப் பகுப்பாய்வாளர்கள் அப்பகுதியை பரிசோதித்த ஒற்றை உதாரணம் கூட இருக்கவில்லை. பிரதேசத்தை அரசாங்கப் பகுப்பாய்வாளர்கள் விசாரிக்கும் வரையில் அப்பகுதியை சுத்தம் செய்வதை நிறுத்துமாறு பொலிசாருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது.[135]

---

133 இலங்கை சட்டத் தரணிகள் சங்கத்தில் கலவரத்தில் பாதிக்கப்பட்ட ஒரு சட்டத்தரணியின் விபரிப்பின் பிரகாரமான ஜனாதிபதியும் செயலாளரும் இந்த விடயத்தில் தனிப்பட்ட கவனம் எடுத்திருந்தனர்.

134 This is based on a lawyer's opinion on case number B.R. 1501/14 and its implications

135 சட்டத்தரணியால் வழங்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அளுத்கமை மற்றும் பேருவளை சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் இதற்கு மறுதலையான எந்த விபரிப்பையும் வழங்கவில்லை. களுத்துறை மாவட்ட நீதிமன்ற அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

அரசாங்கப் பகுப்பாய்வாளர்களுக்கு வெலிப்பிற்றிய தொடர்பாக மாத்திரம் கட்டளைகள் கொடுக்கப்பட்டன. ஏனைய இடங்களில் தீவைப்புக்கள் இடம்பெற்றிருந்த போதிலும் வெலிப்பிற்றிய தொடர்பாக மாத்திரமே அரசாங்கப் பகுப்பாய்வாளர்களுக்கு கட்டளைகள் கொடுக்கப்பட்டிருந்தன. அரசாங்க திணைக்களங்களானது உடனடியாக விசாரணை நடாத்துமாறு அழைக்கப்பட்ட சம்பவங்கள் கிட்டத்தட்ட 15 இருந்தன. துப்பரவு செய்யும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு மற்றுமொரு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. எவ்வாறாயினும், இந்தக் கட்டளை பிந்தி வந்தமையினால் அந்த இடத்தில் அநேகமான சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் ஏற்கனவே தொடக்கப்பட்டு இருந்தன. குற்றவியல் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழ் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களைக் கவனிக்கும் முகமாக களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் 20 க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டன.

எவ்வாறு அவர்களது உரிமைகள் நிலைநாட்டப்படும் என்பது தொடர்பாக மக்களுக்கு எந்த வழிகாட்டுதலும் வழங்கப்படவில்லை.[136] நிவாரணத்தின் பல்வேறுபட்ட விடயங்களை அரசாங்கத்தின் வேறுபட்ட திணைக்களங்கள் கையாண்டன.[137] உத்தியோகபூர்வ ஆவணப்படுத்தல் செயன்முறையின் ஊடாக ஏற்பட்ட சேதங்களின் சொற்ப பகுதி மாத்திரமே இவ் ஆவணப்படுத்தல் ஊடாக கொண்டு செல்லப்பட்டன. சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் சட்டமா

---

136 பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிப்பதில் அரசாங்கத் திணைக்களங்களிடம் ஒருங்கிணைப்பு இல்லாமையை எழுத்தாளர்கள் அவதானித்ததுடன் பொதுமக்களிடம் குழப்பம் மற்றும் நம்பிக்கைத்தன்மையிருப்பதை அவதானித்துள்ளனர். அத்துடன் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைளினை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

137 அரசாங்கத் திணைக்களங்களுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளிப்பதில் காணப்படாத ஒருங்கிணைப்பானது பொதுமக்களிடத்தில் நம்பிக்கையின்மையை உருவாக்கியிருப்பதை எழுத்தாளர்களால் அவதானிக்கப்பட்டது. அநேகமாக எழுத்தாளர்கள் நேர்காணல்களை நடத்தும்பொழுது எந்த அரசாங்க உத்தியோகத்தரக்ளுடன் பேச வேண்டும் என்ற தகவல்களை வழங்குவதினால் புனர்வாழ்வு செயன்முறையை வசதிப்படுத்துவதற்கு எடுக்க வேண்டியிருந்தது.

அதிபர் திணைக்களம் என்பன சட்ட உதவி தேவைப்பட்டோருக்கு உதவுவதற்கும் இதனுள் காலடி எடுத்து வைப்பதற்கு தவறிவிட்டன.[138] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அளுத்தகமைக்கு விஜயத்தை மேற்கொண்டதுடன் கலவரம் காரணமாக அடிப்படை உரிமைகள் மீறப்பட்டவர்களிடம் சத்தியக் கடதாசியை தாக்கல் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தது.[139]

தர்கா நகர் வதிவாளராகிய மொஹமட் ஜுனைத் மொஹமட் இம்ரான் ஆகிய முஸ்லிம் எதிர்ப்பு வன்முறையால் பாதிக்கப்பட்டவர் அரசியலமைப்பின் உறுப்புரை 17 மற்றும் 126 இன் பிரகாரம்[140] உயர் நீதிமன்றத்தில் தனது சொந்த விருப்பத்தின் பேரிலும் பொதுமக்களின் நலனுக்காகவும் பொலிஸ் மாஅதிபர், மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர், இலங்கை பொலிசாரின் விசேட அதிரடிப் படையின் கட்டளைத் தளபதி, சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபருக்கு எதிராக அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு முனைப்புக்களை எடுத்துள்ளார்.[141] மனுதாரர் தர்கா நகரில் முஸ்லிம் எதிர்ப்பு வன்முறையின் ஜுன் 15 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டு காயங்களினால் பாதிக்கப்பட்டவர் ஆவார். தனது மனுவுக்கு அடிப்படையாக இருப்பது இலங்கை பொலிஸ் திணைக்களம் தனது கடமைகள் மற்றும் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதிலும் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் தனது பங்கினை முழுமையாகவும் முறைமை ரீதியாகவும் ஆற்றத் தவறிவிட்டதாக அவர் குறிப்பிடுகிறார். மனுவின் பிகாரம் பொலிஸ் திணைக்களமானது

---

138 தனியார் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

139 அளுத்கமையில் பல்வேறுபட்ட சாட்சிகளின் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

140 இது அளுத்கமையில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளின் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டது. SC (FR) Application Number: 203/14

141 பார்க்க "AluthgamaGun-Shot Victim Goes to SC; Full Text off The Petition", Colombo Telegraph, 17 July 2014

1865 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க பொலிஸ் திணைக்கள சட்டத்தின் 56 மற்றும் 77 ஆம் பிரிவுகளையும், 1979 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டம் 15 ஆம் இலக்க சட்ட 107 ஆம் பிரிவினையும் நிலைநாட்டத் தவறியுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வெறுப்பு பிரசாரத்திற்கு எதிராக பாதுகாப்பு ஏற்பாடுகளை எடுக்கப் பொலிசார் தவறியது மற்றும் கடந்த இரண்டரை வருடங்களாக மத சிறுபான்மையினருக்கு எதிரான எதிர்ப்பு பிரச்சாரங்களுக்கு எதிராகவும் ஏற்பாடுகள் எடுக்கத் தவறியமையும் ஒரு எரிபற்று சூழலை உருவாக்கியுள்ளது போன்றதே இதுவும் ஆகும். முழுமையான பராமுகத்தன்மை, கண்டும் கவனியாமை, செயற்பாடின்மை, பாரபட்சம் என்பன பொலிசாரால் காட்டப்பட்டதாகவும், அளுத்கமை மற்றும் பேருவளையைச் சேர்ந்த முஸ்லிம்கள் பொலிசாரும் விசேட அதிரடிப்படையினருமே முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை வசதிப்படுத்தினர் எனக் கருதுகின்றனர் என்பதும் மனுவில் சொல்லப்பட்டது.

## முடிவுகளும் சிபாரிசுகளும்

### முடிவுகள்

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சு உருவாக்கிய வெறுப்புணர்வானது ஒரு சமூகம் மற்றொன்றின் மீது கொண்டுள்ள அபிப்பிராயங்களில் கடுமையான தீங்கான விளைவை ஏற்படுத்தியது என்பதற்கு சான்று உள்ளது. முஸ்லிம்களால் பிக்குகள் மற்றும் விகாரைகளுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்கள் தொடர்பான பேச்சானது பின்னர் வதந்தியாக பரவி மக்கள் அந்தக் கதைகளை நம்பியதுடன் அவர்கள் காடையர்களுடன் இணைந்து கொள்ளும் அளவுக்கு இருந்ததும் அவை முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை வளர்த்து விட்டதும் சமூகத்தில் சட்டம் ஒழுங்கின் நிலையின் ஒரு கவலைக்குரிய கருத்தாக உள்ளது.

எந்தக் கட்டத்திலாவது அரசாங்கம் வன்முறையின் அளவு குறித்தோ, பாதிக்கப்பட்ட பகுதிகளில் உறவுமுறைகளின் கடுமையான சீர்குலைவு குறித்தோ யுத்தத்தில் இருந்து அமைதிக்கான நிலைமாற்றக் காலப்பகுதியின் இவ்வாறான ஒரு நிகழ்வு இடம்பெறுவதன் பாரதூரம் குறித்தோ அல்லது தெற்கு முஸ்லிம்களின் உணர்வுகள் என்ன முறையில் பாதிக்கப்படுகின்றன என்பது குறித்தோ அரசாங்கம் ஏற்றுக் கொண்டதாகவோ அறிந்து கொண்டதாகவோ இல்லை. அரசாங்கத்தின் பதிற்செயற்பாடானது சம்பவங்களின் பாரதூரத்தன்மையைக் குறைத்துக் காட்டுவதாகவும் சர்வதேச அரங்கில் அதன் கீர்த்திக்கு சேதம் ஏற்படுத்துவதைத் தணிப்பதற்காகவுமே இருந்தது. அரசாங்கத்தின் பதிற்செயற்பாடு எதனைக் காட்டியது எனில், அரசாங்கத்தின் ஸ்திரமற்றது அல்லது இனவாதமானது என்ற உணர்வுகளுடன் ஈடுபடுவது தொடர்பிலேயே அக்கறையுடன் இருந்தது. தனது கீர்த்திக்கு சேதம் ஏற்படுத்தாத ஒரு வகையில் நிகழ்வுகளில் இருந்து எழும் விபரிப்புக்களை முகாமைத்துவம் செய்வதே அதற்குத் தேவையாக இருந்தது. அவ்வாறு செய்யும்பொழுது அரசாங்கம் சமூகங்களுக்கிடையே தேவையான மீளிணக்க வேலையைச் செய்வதற்கான சந்தர்ப்பத்தை இழந்திருந்தது. அரசாங்கம் முஸ்லிம் பாரபட்ச எண்ணத்தை மீளமைத்துக் கொண்டதுடன் பௌத்த உயர்நிலைத்தன்மை, தண்டனையிலிருந்து தப்பும்வகையில் பொது பல சேனா செயற்பட முடியும் என்ற உண்மையையும் மீளமைத்துக் கொண்டது. இவ்வாறான சம்பவங்கள் தனிநபர்களையும் சமூகங்களையும் எந்தளவுக்குப் பாதிக்கின்றன எனப் புரிந்துகொள்வதற்கான அரசாங்கத்தின் இயலுமைகளின் எல்லைகளையும் அது வெளிப்படுத்தியது. வீடுகளையும் கட்டிடங்களையும் மீளக்கட்டுவதற்கான அரசாங்கத்தின் உடனடியான பதில் கூட, உட்கட்டமைப்புப் பிரச்சினைகளுடன் ஈடுபடுவது மாத்திரமே அரசாங்கத்தின் தந்திரோபாயம் என நினைக்கத் தூண்டுகிறது. பிரதானமானதும் மிகவும் சிக்கலானதும் பாரதூ ரமானதுமான சமூக உறவுகள, சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு

இன்மைகள், பெரும்பான்மையினரின் ஆதிக்கம் என்பன அசட்டை செய்யப்பட்டுள்ளன; அல்லது அங்கீகரிக்ப்படக்கூட இல்லை.

தர்கா நகரில் உள்ள முஸ்லிம்களின் வீடுகள் தாக்கப்பட்டதற்கு மேலதிகமாக பத்திராஜகொடவில் 6 வீடுகள், மிஹிரிப்பனவில் ஒரு வீடு என சிங்களவர்களுக்கு சொந்தமான வீடுகளும் தாக்கப்பட்டிருந்தன. பத்திராஜகொடவில் இடம்பெற்ற தாக்குதலானது தர்கா நகரில் ஏனைய தாக்குதல்கள் இடம்பெற்ற அதேநேரத்தில் இடம்பெற்றுள்ளது. அதிகாரிகொடவில் உள்ள ஒரு வீடும் பின்பு தாக்கப்பட்டுள்ளதானது பதிற் தாக்குதலாக இருக்கக்கூடியது. பத்திராஜகொடவில் வீடுகள் தாக்கப்பட்டதானது தர்கா நகரில் முஸ்லிம்களின் வீடுகள் தாக்கப்பட்ட அதேநேரத்தில் இடம்பெற்றுள்ளதுடன், அதன் விளைவான பதிற்தாக்குதலாக இருக்க முடியுமென நாம் உணரவில்லை. காடையர்களுக்கு வழிகாட்டிய முஸ்லிம் ஆட்களிடையே அயலவர்களை தாம் அடையாளம் கண்டு கொண்டது போன்ற பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, சிங்கள வீடுகளில் தாக்குதல் நடத்தியவர்கள் முஸ்லிம் வீடுகளில் தாக்குதல் நடத்தியதை ஒத்தவகையில் ஒழுங்கமைக்கப்பட்டவர்களாக உள்ளதாக சாட்சியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஒத்த தன்மைகளில் உள்ளடங்குவனவாக ஆட்களுக்கு குறைந்த தீங்கை ஏற்படுத்துதல், ஒழுங்கமைக்கப்பட்டதும் முறைமை ரீதியானதுமாக நகை, காசு என்பவற்றைக் கொள்ளையடித்தல், உள்ளூர் வீட்டுப் பாவனைப் தளபாடங்கள், புத்தகங்கள் மற்றும் கார் ரயர்கள் போன்றவற்றை எரித்தலுக்காகப் பயன்படுத்தல் என்பன அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்த ஒத்த தன்மைகள் சிங்கள காடையர்களாலோ அல்லது முஸ்லிம் அயலவர்களாலோ எழுந்தமாறாக ஏற்படுத்தப்பட்ட தாக்குதல் அல்ல; ஆனால் பாரிய ஒழுங்கமைப்பு தந்திரோபாயத்தின் ஒரு பகுதி எனச் சொல்கிறது. சிங்களவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் 06 வீடுகளுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டதாக உள்ளதாக இருந்தது. அதேவேளையில் ஏனைய அண்மையாக உள்ள சிங்கள வீடுகள் தொடப்படாது இருந்தது ஆர்வமான ஒரு விடயமாக இருந்தது.

அரசாங்கம் ஒரு வாரத்திற்குள்ளே இராணுவத்தினரை மீளக் கட்டுவதற்காக அனுப்பியது என்ற உண்மையும் மீளக் கட்டப்படுகிறது என்ற உண்மையும் முஸ்லிம் சமூகத்தினருக்கு அரசாங்கம் ஏதோ ஒரு வழியில் சம்பவத்தின் பின்விளைவுகளை திருப்பிக் கொள்வதற்கு அர்ப்பணித்துள்ளது என்பதற்கான சாதக செய்திகளை அனுப்புகிறது. எவ்வாறாயினும் குற்றங்களை இழைத்தவர்களை கண்டுபிடித்தல், வழக்குத் தாக்கல் செய்தல் என்பவை தொடர்பாக வரையறுக்கப்பட்ட முன்னேற்றம், வெறுப்பை தூண்டியவர்கள் இன்னும்பெரிய அளவில் இருக்கின்றனர் என்ற உண்மை, மற்றும்அவர்களது வேலையை அவர்கள் தொடர்வதுபோல் தெரிதல் நிகழ்வுகள் தொடர்பாக ஒரு வரையறுக்கப்பட்ட விபரிப்பை அரசாங்கம் பேணியதன் உண்மை என்பன இனவாதிகளுக்கும் வன்முறை பிரிவினருக்கும் குற்றச்செயல்களில் இருந்து தாம் தப்பி விட்டதாக மீள உறுதிப்படுத்துவதான ஒரு செய்தியை அனுப்புகிறது.

சுத்தம் செய்தல், மீளக்கட்டுதலுக்காக இராணுவப் பிரசன்னமானதுஇப்பகுதியில் உள்ள சமூகங்கள் மீது கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளது. அரசாங்கம் ஒரு தொகைப் பணத்தை வாக்களித்திருப்பதும் மீளக்கட்டுவதில் இராணுவத்தினர் ஏற்கனவே அங்கே ஈடுபட்டிருப்பதும் ஓரளவு நம்பிக்கை அளித்திருப்பதாக உள்ளது. அதேவேளை, அப்பகுதியில் உள்ள இராணுவ பிரசன்னம் குறித்து அக்கறை கொண்டுள்ள ஏனையோர் இராணுவத்துடன் நல்ல உறவுகளை விருத்தி செய்துள்ளனர். சில குடும்பத்தினர் சமையல் பாத்திரங்களையும் அடுப்புக்களையும் இராணுவத்துக்கு கொடுத்துள்ளதுடன் கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கும்பொழுது தமது வீடுகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதியையும் கொடுத்துள்ளமையை சுட்டிக்காட்டுகின்றனர். அதிகாரிகொடவில் உள்ள இராணுவத்தினர் சுவர்களை நகர்த்துதல், உத்தியோகபூர்வ திட்டத்தில் சிறு மாற்றங்களைச் செய்தல் போன்ற கட்டிடம் கட்டும் செயன்முறை தொடர்பாக நெகிழ்ச்சித் தன்மையைக் காட்டியுள்ளனர்.

இந்த மனோபாவமானது ஒரு அரசாங்க உத்தியோகத்தரை உண்மையில் இது ஒரு மாறுவேடத்தில் உள்ள ஆசீர்வாதமென அழைக்கச் செய்துள்ளது. அத்துடன் பல வீடுகளைப் பொறுத்தளவில் முன்னதாக இருந்ததைவிட சிறந்தமுறையில் கட்டப்படுவதற்கான சாத்தியமும் உள்ளது.[142]

சுயாதீன விசாரணைக்கான எந்தவிதமான பொறிமுறையும் இல்லாமை ஒரு பிரச்சினையாக உள்ளது. இரண்டு நாட்களிலும் என்ன நடந்தது தொடர்பாக நம்பக்கூடிய ஏதாவதை நிறுவுவதில் அரசாங்கம் விருப்பற்று இருக்கிறது என்பதையும் அது சுட்டிக்காட்டுகிறது.

முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான வன்முறையின் தூண்டிகளாக முஸ்லிம்கள் இருந்தது என்பதை சட்டகப்படுத்திக் காட்டுவதற்கும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வலைகள் மேலும் விரிவடைவதற்கும் பங்களிப்புச் செய்ததற்கும் முஸ்லிம்-சிங்கள சமூகத்தினருக்கிடையில் உறவுகள் சீரழிவதற்கும் அரசாங்கம் விளக்கங்களை வழங்குகிறது.

எவ்வகையிலும் என்ன நடைபெற்றது என்பதற்காக சிங்கள சமூகத்தினர் குற்றம்சாட்டப்பட அல்லது குழப்பப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த ஆதிக்கமுள்ள விளக்கங்கள் நாடி நின்றன. இது இரு சமூகங்களாலும் பெருமளவு சர்வதேசமயப்படுத்தப்பட்ட ஏறுவரிசை படிநிலை நிலைப்பாட்டை மீளப் பலப்படுத்தியது. எதிர்க் கட்சிகள் கூட இதனை எதிர்கொள்வதற்கு பலமான செய்தியை அனுப்புவதில் தவறிவிட்டமை அதீத துரதிஷ்டவசமாக இருக்கிறது. வேறுபட்ட குழுக்களிடையே சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான தேவையை எல்லாக் குழுக்களும் பேசியபொழுதிலும் சிங்கள மேலாண்மையை ஏற்றுக்கொள்ளும் ஒரு சட்டக வேலைக்குள்ளாகவே இந்தச் சமத்துவத்தின் உள்ளார்ந்த புரிந்துணர்வு உள்ளது.

---

142 தேடுகைக் குழுவினர் இந்தக் கூற்றோடு ஒன்றாக இருக்கவில்லை என்பதைச் சொல்லுவதற்கு தேவையில்லை.

இந்த சம்பவங்களில் இருந்தான மிகவும் துரதிஷ்டவசமான பின்விளைவாக இருப்பது இந்த பிரதேசத்தின் சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கு இடையிலான உறவுகள் முறிந்துபோனமையாகும். நாம் சந்தித்த மக்கள் இவ் உறவுகள் முன்னேறக்கூடும் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். ஏனையோர் வன்முறையை உருவாக்கியவர்கள் பாதுகாப்புடன் சூழ உலா வருவதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கத்தான் முடிகிறது என்று கூறினர்.

முஸ்லிம் அரசியல் கட்சிகள், விசேடமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் என்போர் ஆவேசத்துடன் இருந்ததுடன் சேதமடைந்த சொத்துக்களை மீளக்கட்டுவதற்கு நிதியுதவிகளுக்கு அழைப்பு விடுத்து அண்மையில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. என்ன நடந்தது என்பது தொடர்பான துல்லியமான சரிபார்க்கப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான அர்ப்பணிப்பு பாராட்டப்பட வேண்டியது என்பதுடன் எழும் பிரச்சினைகளுடன் பகிரங்கத்தில் ஈடுபடுவதினை தொடர வேண்டுமென தலைமைத்துவத்தை நாம் வேண்டி நிற்கின்றோம்.

எதிர் அரசியல் கட்சிகளாகிய ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி என்பன அரசாங்கம் தொடர்பான விமர்சனத்தை வெளிப்படுத்தியதுடன் அரசாங்கம் இந் நிகழ்வுகளை திட்டமிட்டு நடத்தியதாகக் குற்றம்சாட்டும் அளவுக்கு சிலர் சென்றனர். எல்லா அரசியல் கட்சிகளது தலையீடுகள் இத்தகைய நிலைமைக்கு இட்டுச் செல்லும் வகையில் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் குழம்பியிருப்பதாக குற்றம் சாட்டின. பாராளுமன்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளால் பாராளுமன்றத்தில் இடம்பெறும் உரைகள், கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் நிகழ்வுகளின் பல விபரிப்புக்கள் நாட்டின் வரலாற்றுப் பதிவின் பாகமாக உள்ளதை உறுதிப்படுத்துகின்றன.

மறுபக்கத்தில் ஜாதிக ஹெல உறுமய தனது சொந்த அரசியல் நலனுக்காக நிகழ்வை மூலதனப்படுத்த முயற்சித்தது. விவாதிக்கத்தக்க முறையில் சிங்களவர்கள் வன்முறையால் பாதிக்கப்பட்டதானது முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் போன்று பெரியளவு ஊடக உள்ளக்கத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஜாதிக ஹெல உறுமயானது நிகழ்வின் ஒரு பிரத்தியேகமாக சிங்கள பௌத்த விபரிப்பொன்றை வழங்கியே வேலையை நிலைமையை சிறிதளவு இலகுவாக்க உதவியதோடு மாத்திரமல்லாமல் சர்வதேச மயப்படுத்தவும் பெரிதுபடுத்தவும் உதவியது. உதய கம்பன்பில, சம்பிக்க ரணவக்க போன்ற ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களின் ஊடக இடையீடுகள் நிகழ்வுக்குப் பின்னர் பதற்றத்தைப் பேணுவதற்கு பங்களிப்பு செய்திருந்தன.

அதிகாரிகளில் யார் இந்தக் கலவரங்களில் பின்னணியில் இருந்தனர் என்று குற்றம்சாட்டுவது சிரமானதாக இருக்கும் அதேவேளை, ஒழுங்கமைப்புக்கள் மற்றும் திட்டமிடல்களின் அடையாளங்கள் சிறந்த சாட்சியங்களாக உள்ளன என்பவற்றைக் கவனிப்பது முக்கியமானது. அங்கீகரிக்கப்பட்ட பொருட்களுக்கு போக்குவரத்து வழங்கப்படாமை, கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களுக்கு போக்குவரத்து வழங்கப்பட்டமை, மாலை 6.30 மணிக்கு தாக்குதல்காரர்கள் ஆயுதத்தைக் கொண்டு வந்தமை, கண்ணாடிப் போத்தல், பெற்றோல் மற்றும் நீண்ட தடிகள், இரும்புத் துண்டங்கள், நீளமான துவிச்சக்கர வண்டி சங்கிலிகள், உலோகத் துண்டங்கள் -இவற்றை நாம் கண்டு புகைப்படம் எடுத்துள்ளோம். எழுந்தமானமான ஒரு தீவைப்பின் எந்த சாத்தியத்தையும் கொடுப்பதாக இல்லை.

விசேட அதிரடிப் படையினர் கவனியாது இருந்ததினால் தாக்குதலுக்கு உடந்தையாக இருந்துள்ளனர் என்பதை அதிகாரத்துடன் நாங்கள் கூற முடியும். எங்களுக்கு உதவ விசேட அதிரடிப் படையினர் மறுத்தனர் என்ற பல சாட்சியங்கள் மட்டுமல்லாமல் உதவிகளை வேண்டிய

முஸ்லிம்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளான சாட்சியங்களையும் நாம் கொண்டுள்ளோம்.

விசேட அதிரடிப் படையினரின் சில தனித்த உறுப்பினர்களின் பங்கில் இந்த உணர்வானது கடந்த இரண்டு வருடங்களின்பொழுது வளர்க்கப்பட்ட முஸ்லிம் பொது எதிர்ப்பு உணர்வு மற்றும் வெறுப்பு பேச்சினால் உருவாக்கப்பட்ட அவதூறுடன் காரணப்படுத்தப்படக் கூடியது. உதவுவதற்கு மறுப்பதான பரந்துபட்ட இயல்பானது ரீதியான விசேட அதிரடிப் படையினரின் மட்டிலான மிகவும் முறைமை ரீதியான நிலைப்பாட்டை பேசுகிறது.

வன்முறையின் போது ஊடகத்தின் வகிபங்கானது இரண்டு மட்டங்களில் முக்கியமானதாக இருந்தது. ஒரு மட்டத்தில் பாரம்பரிய ஊடகங்கள் முணுமுணுத்தன. அத்துடன் அரச அதிகாரமானது ஊடகங்களை ஆதிக்கம் செய்திருந்ததுடன் நிகழ்வின் மீதான அரசின் நிலைப்பாடும் சித்திரிக்கப்பட்டிருந்தது. சமூக ஊடகங்கள் மற்றும் நவீன ஊடக தொழில்நுட்பம் என்பன அதற்கு மாறாக உலகம் பூராகவும் செய்தியைப் பரப்பின.

## சிபாரிசுகள்

அளுத்கமை மற்றும் அதனை அண்மித்த பகுதிகள் தொடர்பான சம்பவங்கள் தொடர்பாக அனைத்தும் அடங்கியதும் நடுநிலையானதுமான அரச விசாரணைகள் பாரதூரமானவும் மிகவும் முக்கியமானதுமான தேவையாக உள்ளன. இந்த விசாரணைகள் ஊடாக வெறுப்புப் பேச்சின் தாக்கம், பொலிசார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் செயற்பாடின்மை, பாதிக்கப்பட்ட மக்களால் எதிர்கொள்ளப்படும் சேதங்கள், சமூகத்தின் உடைவு என்பன எடுத்துக்காட்டப்பட வேண்டும்.

நீதி, சமத்துவம் மற்றும் நல்லாட்சிக்கான அர்ப்பணிப்பினால் பொது பல சேனாவின் பிரசாரங்களை எதிர்கொள்ளும் ஒரு கலந்தாடல் இலங்கையின் பிரசைகள் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்தில் அது வெளிப்படுத்தும் அவர்களது வரலாறு கலாசாரத்தை விதந்துரைப்பவை மீதான தேவையான தகவல்களை வழங்கும் அதன் மூலம் வெறுப்பு பேச்சுக்களின் தாக்கங்களைக் குறைக்கும் கலந்தாடல் என்பது இந்தக் கட்டத்தில் அவசரமான தேவையாக உள்ளது. உதாரணமாக, ஜாதிக ஹெல உறுமயவால் கைக்கொள்ளப்பட்ட நிலைப்பாடானது அரசியலை சேதப்படுத்துவதுடன் அது மறுசீரமைக்கத் தேவைப்படுத்தப்படுகிறது.

முஸ்லிம் சிவில் சமூகத்தினர் ஒரு சமூகம் என்ற வகையில் அவர்கள் தமிழ் சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்பவற்றுக்கிடையிலான வரலாற்று ஒத்த தன்மைகள் தொடர்பாக ஒரு பகுப்பாய்வை மிகவும் அறிந்து வைத்திருப்பதுடன் நல்ல முறையில் அவற்றினை கூட்டிணைக்கவும் வேண்டும். உதாரணத்திற்கு 1983 ஜுலையுடனான 2014 ஜுனின் ஒத்த அதிர்வுகள் பலவாக உள்ளதுடன், எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பல விமர்சகர்களால் சுட்டிக்காட்டப்பட்டவையும் கூட. ஜுன் மாத வன்முறைகள் நன்றிக்குரிய வகையில் குறித்த தெற்கின் பகுதிகளுக்கு அப்பால் பரவவில்லை. ஆனால், வன்முறைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஒரு நேரத்தில் இது அவ்வாறு ஆகலாம் எனப் பார்க்கப்பட்டது.[143]

அரசாங்கத்துடன் தொடர்ச்சியாக கலந்தாலோசிக்கும் திறந்த தந்திரோபாயத்தை மேற்கொள்ளும் அதேவேளை, முஸ்லிம் சிவில் சமூக நிறுவனங்கள் அதேயளவு ஒத்த சக்தியினை உரிமைகள் மற்றும் தண்டனையிலிருந்து தப்புகை விடயங்கள் தொடர்பாக இடையீடுகளின் வரலாற்றுடன் ஏனைய நிறுவனங்களுடன் ஈடுபடுவதற்கு செலவிடுவது முக்கியமானதாகும்.

143 தேடுகைக் குழுவினர் இந்தக் கூற்றோடு ஒன்றாக இருக்கவில்லை என்பதைச் சொல்லுவதற்கு தேவையில்லை.

மனித உரிமைகள் பணியில் ஈடுபடும் சிவில் சமூக நிறுவனங்கள், மனுக்கள் கைச்சாத்திடல் மற்றும் இலங்கையில் யுத்ததத்திற்கு பிந்திய சூழமைவில் மனித உரிமைகள் சீரழிந்து போவதற்கு பங்களிப்பு செய்வதில் பொது பல சேனாவின் செயற்படும் விதத்திற்கு எதிரான முறைப்பாடுகளை எடுக்கும் நிலையில் ஆட்சி அத்துமீறல்களுக்கு எதிராக ஒரு இனசார்பற்ற விசேடித்த நிலைப்பாட்டை எடுக்கும் நிறுவனங்கள் இன்று சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஒரு பகுப்பாய்வை கூட்டிணைப்பதும் ஆட்சி தொடர்பான அவர்களது விமர்சனத்திற்குள் பொது பல சேனாவால் எழுப்பப்பட்ட முஸ்லிம் விடயங்களில் ஈடுபடும் பகுப்பாய்வில் கூட்டிணைத்துக்கொள்வதும் முக்கியமானது. இல்லாதுபோனால் அவர்களது விமர்சனமானது முற்றுமுழுதாக இந்த நாட்டில் சிக்கலான யுத்தத்திற்கு பிந்திய நிலைமாற்றம் இடம்பெறும் நிலையில் முஸ்லிம் பிரச்சினைகள் எழும் விதத்தினை அது முற்றுமுழுதாக தவறவிட்டு விடுவதற்கான சாத்தியம் உள்ளது.

பொது பல சேனாவாலும் அதனோடு இணைந்த குழுக்களாலும் பரப்பப்பட்ட முஸ்லிம் எதிர்ப்பு உணர்வலைகளாலும் வன்முறையாலும் பின்பு அது பரப்பட்டவையாலும் உருவாக்கப்பட்ட பிளவை இணைப்பதற்கு முயற்சிகள் எடுப்பது முக்கியமானது. அவ்வாறான மத்தியஸ்தத்திற்கான எந்த முயற்சியும் எவ்வாறான பெரும் தீங்கு ஏற்படுத்தாது இருப்பதற்கு கூருணர்வு காட்ட வேண்டும்.

வன்முறையில் பங்குபற்றியவர்களில் பலர் (பிக்குகளும் பொது ஆட்களும்) இளம் ஆட்களாகவும் குறைந்தளவில் பெண்களும் இருந்ததாக சாட்சியங்கள் உள்ளன. விசேடமாக, கல்வி மற்றும் வேலைவாய்ப்பின் வெடிப்புக்களால் விழுந்துவிடக்கூடிய இளைஞர்கள் மற்றும் யுவதிகளுடன் பணியாற்றுவதற்கு விசேட முனைப்புக்கள் அதீத அவசியமானவையாக உள்ளன. ஏனெனில், இந்தக் குழுக்கள் இத்தகைய நிகழ்வுகளில் அணிதிரட்டப்படுவதற்கு சுலபமானவர்களாக உள்ளனர்.

பௌத்த மத குருக்கள் அதன் உறுப்பினர்களுக்கு மீளிணக்கம் தொடர்பாகவும் சமூக உறவுகளைப் பலப்படுத்துவதின் முக்கியத்துவம் தொடர்பாகவும், விசேடமாக பிரிவினைகளை உறுதிப்படுத்துவதை விட முரண்பாடுகளை இணைப்பதில் மதங்களின் வகிபாகம் என்பவற்றை அதன் உறுப்பினர்களுக்கு கற்றுக்கொடுத்து உணர்வூட்டுவதில் அவர்கள் பொறுப்பெடுக்க வேண்டும்.

கொள்கைகளால் பிரிந்துள்ள எதிர்க்கட்சிகள் சிறுபான்மை சமூகத்தின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவையுள்ளது. ஆட்சி தொடர்பான அவர்களின் பகுப்பாய்வும் அதன் பின்விளைவுகளும் இன உறவுகளின் விடயங்கள் மற்றும் காலனித்துவவாதத்தின் பின்விளைவாக இன ஐக்கியம் சீரழிந்துபோனது எனக் கண்டுபிடிப்பதுபோன்ற இன உறவுகளின் எளிமைப்படுத்தல் கதைகளுக்கு அப்பால் நகர்ந்து உறவுகள்மீதான பிரச்சினைகளில் அதிகம் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையுள்ளது. ஒரு உத்வேகத்துடன் மீள்கட்டுமான முயற்சிகள் பொறுப்பெடுக்கப்பட்டுள்ளதைப் பாராட்டக் கூடிய அதேவேளை, பல பகுதிகளில் அதிகமான சுத்தப்படுத்தல் இடம்பெற்றமைக்கான சான்றுகள் உள்ளன. அரசாங்க முயற்சிகளின் ஊடாக பாதிக்கப்பட்ட எல்லா மக்களும் ஓரளவு நிவாரண ஏற்பாடுகளை அனுபவித்துள்ளனர் என்பது முக்கியமானது. பாதிக்கப்பட்ட எல்லா தனிநபர்களுக்குமான விளைவுகளை இது சாதிக்கும் வரையில் மீள் நிர்மாண முயற்சிகளை இச்சமயத்தில் நிறுத்தக்கூடாது என்பது முக்கியமானது. ஆட்கள் சொத்துக்கள் கைத்தொழில்களின் புனருத்தாரணத்திற்கான அதிகாரசபை (REPIA) பாதிக்கப்பட்ட மக்களிடையே அவர்களது இழப்புக்களினை விபரங்களைக் கேட்டு படிவங்களை விநியோகித்துள்ளது. மக்கள் தமது வாழ்வை மீளக்கட்டிக்கொள்ளும் முகமாக இந்த உரிமை கோரல்கள் விரைவாக செயன்முறைப்படுத்தப்படுவது முக்கியமானது.

அளுத்கமை மற்றும் ஏனைய இடங்களின் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு மீள்கட்டியெழுப்பும் அரசாங்கத்தின்

முயற்சிகள் வெறுமனே வீடுகளுக்கும் கட்டிடங்களுக்கும் அப்பால் நகர்ந்து இந்த நிகழ்வுகளின் மிகவும் பாரதூரமான தாக்கமாகிய இந்த சமூகத்தின் பொருளாதார நலனோம்பலானது கருத்தில் கொள்ளப்பட வேண்டும். சமூகங்கள் தமது வாழ்வாதார வழிவகைகளை மீளக் கட்டியெழுப்புவதை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்ட விசேட தலையீடுகள் தேவைப்படுகின்றன.

## பின்னிணைப்பு I

### 2014 ஜுலை 16 ஆம் திகதி தேசிய ஷுரா சபை (NSC) ஆல் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை

### NSC ஜுன் 12 சம்பவங்கள் தொடர்பாக நடுநிலையான விசாரணைகளை NSC வேண்டுகிறது

தேசிய ஷுரா சபை (NSC) எனப்படும் தொழில்வாண்மையாளர்கள், புலமையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் தேசிய மட்ட நிறுவனங்களின் குழுவானது மௌலவி மொஹமட் அமீன் மொஹமட் அஸ்கார் அலி ஆகிய அஹமத் மற்றும் அவரது இரண்டு சகோதரர்கள் பிழையாக சித்திரிக்கப்பட்டு ஜுன் 12 ஆம் திகதியிலிருந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக அவர்கள் பௌத்த பிக்கு ஒருவரை அளுத்கமை பத்திராஜகொடை விகாரைக்கு அண்மையில் தாக்கியதாகவும் அது அவ்வாறு இடம்பெறவில்லை எனவும் அவர்கள் மூன்று சகோதரும் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அளுத்கமை பொலிஸ் நிலையத்தில் அவர்கள் பல பிக்குகளை நோக்கி முழந்தாளில் நின்று நடந்துவந்து மன்னிப்புக் கேட்க நிர்ப்பந்திக்கப்பட்ட வேளையில் ஒரு பிக்கு கன்னத்தில் அறைந்ததாகவும் இது குறித்து அதிகாரிகள் நடுநிலையானதும் வெளிப்படையானதுமான விசாரணையை நடத்த வேண்டுமென்று பொலிஸ் மாஅதிபருக்கு முறைப்பாடு செய்யத் தூண்டினர். ஜுன் 12 ஆம் திகதி மதிப்பிற்குரிய ஒரு இறையியலாளரான ஒரு மௌலவியை ஒரு புத்த பிக்கு உதைத்த அதிர்ச்சி தரும் சம்பவமானது சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், பல உயர்மட்ட அரசியல்வாதிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் இடம்பெற்றுள்ளதாகவும் இது ஒரு அதிர்ச்சி தரும் சம்பவம் எனவும் NSC நம்புகிறது.

பத்திராஜகொட சம்பவமானது ஒரு சிறிய விவாதமானது தனது சகோதருக்கும் பிக்குவின் சாரதிக்கும் இடையில் கைகலப்பிற்கு இட்டுச் சென்றதாகவும் அது மன்னிப்புக் கேட்டதுடன் முடிந்ததாகவும் எந்தக் கட்டத்திலும் பிக்கு யாராலும் தாக்கப்படவில்லையெனவும் மௌலவி முறைப்பாடு செய்திருந்தார்.

மௌலவி அஸ்கார் அலியின் முறைப்பாடானது விசாரணையில் இருந்து தடுப்புக்காவலில் இருந்து அவரது இரண்டு சகோதரர்களும் வெளியே வந்த பிற்பாடு செய்யப்பட்டதுடன் அளுத்கமை பொலிஸ் நிலையத்தில் சாரதிகள் கேள்வி கேட்கப்பட்டபொழுது பிக்கு பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் சம்பவத்தில் தான் தாக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். பிக்கு பொலிஸ் நிலையத்தில் 3 – 4 மணித்தியாலத்திற்குள்ளாக அசௌகரியத்திற்குரிய எந்தவித அடையாளமும் இல்லாமல் இருந்துள்ளார். எவ்வாறாயினும், பிக்குகள் பலரும் பொதுமக்களும் ஒரு முஸ்லிமால் பிக்கு தாக்கப்பட்டது தொடர்பான பிழையான வதந்தியை பரப்பியதுடன் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீது அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் அவரை வழக்கு பதிவு செய்யுமாறு அழுத்தம் கொடுத்ததாகவும் மூன்று சகோதர்களையும் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்காக தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட வேண்டுமென்று தகவல்கள் கூறியதாகவும் மௌலவியின் IGP யின் முறைப்பாட்டின் பிரகாரம் சொல்லப்பட்டிருந்தது.

பிக்கு எடுத்துச்செல்லப்பட்ட முதலாவது வைத்தியசாலை அவருக்கு காயங்கள் இல்லாமையினால் அவரை அனுமதிக்க மறுத்தது என NSC க்கு தெரியவருகிறது. பிக்கு இரண்டாவது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன் வைத்தியசாலையால் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையானது காயங்கள் இல்லை என வெளிப்படுத்தியது. எவ்வாறாயினும், இரண்டாவது வைத்தியாசாலை மூன்று நாட்களுக்கு அவரைப் படுக்கையில் வைத்திருந்து பிக்கு மீதான தாக்குதலின் எல்லா வதந்திகளுக்கும் வலுவூட்டியது. ஆகவே, உண்மையை

நிறுவுவதற்கு இந்த எல்லா விடயங்களும் விசாரிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. மௌலவி உட்பட மூன்று சகோதரர்களாலும் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் அவர்கள் பொலிஸ் நிலையத்தில் கூடியிருந்த பல பிக்குகளை நோக்கி தமது மன்னிப்பைக் கேட்டு முழந்தாளில் நடந்தபொழுது மௌலவியானவர் அவர்களில் ஒரு பிக்குவால் உதைக்கப்பட்டதாகவும் அது மௌலவியின் கழுத்தில் தாக்கியதாகவும் அதற்குப் பின்னர் அவர்கள் பொலிஸ் கூட்டுக்குள் போடப்பட்டனர் என NSC ஆழ்ந்த அதிர்ச்சியைத் தெரிவிக்கிறது.

இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு முஸ்லிமால் ஒரு பிக்கு தாக்கப்பட்டதாக இல்லை. இரு சாரதிகளுக்கிடையிலான சம்பவத்தில் மீது ஒரு பிக்கு தாக்கப்படுவதற்கான நோக்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு பௌத்த பிக்குவிற்கு ஒத்ததாக சமூகத்தில் உயர் மதிப்புள்ள ஒரு முஸ்லிம் இறையியலாளரை ஒரு பிக்கு தாக்கிய குற்றம் சாட்டப்பட்ட முந்திய சம்பவம் இருந்தாகவும் இல்லை. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மௌலவியின் முறைப்பாட்டை சட்ட மாஅதிபருக்கு ஆற்றுப்படுத்தியதுடன் அவர் மௌலவியின் முறைப்பாடு தொடர்பாக ஒரு புதிய விசாரணைக்கு பொலிஸ் மாஅதிபர் அழைப்பு விடுத்திருப்பதை NSC பாராட்டுகிறது. யார் யாருக்கு எதிராக சான்றுகள் உள்ளனவோ அவர்களை நீதிமன்றத்திற்கு அழைப்பதற்கு சட்டத்தரணிகள் சங்கத்திடம் சட்ட மாஅதிபரால் கொடுக்கப்பட்ட உத்தரவாதத்தையும் NSC பாராட்டுகிறது.

உண்மையை நிலைநாட்டுவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னிலையில் பொலிசாரால் ஒரு சுயாதீனமானதும் நடுநிலையானதுமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென இலங்கை முஸ்லிம்களால் அழைப்பு விடுக்கப்பட்டது. பௌத்த பிக்கு தாக்கப்பட்டதான பொய்யான வதந்தியானது பொது பல சேனாவினால் பயன்படுத்தப்பட்டு குற்றம்சாட்டப்பட்ட மூன்று நாட்களுக்குள்ளாக

ஒரு மன்னிக்கப்பட முடியாத முஸ்லிம் வெறுப்பு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் அடுத்த மணித்தியாலத்திற்குள் மூன்று முஸ்லிம்கள் ஒரு தமிழர் கொலை செய்யப்பட்டதும் பெருந்தொகையானோர் காயமடைந்ததையும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான

எண்ணற்ற சொத்துக்கள் சேதமாக்கப்பட்டதும் ஆயிரக்கணக்கான பெண்கள், சிறுவர், வயது முதிர்ந்தோர்களுக்கு மனவடு ஏற்பட்டதும் ஒரு பிக்குவின் அழைப்பின் விளைவாக நடந்தேறியுள்ளது.

தாரிக் மொஹமட்

தவிசாளர்

தேசிய ஷூரா சபை

## பின்னிணைப்பு II

### அளுத்கம முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தில் இழக்கப்பட்ட அசையும் அசையாச் சொத்துக்கள்

அளுத்கம சம்பவங்களின் பின்னர் எடுக்கப்பட்டது. அளுத்கமை முஸ்லிம் எதிர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் உண்மையைக் கண்டறியும் 2014 ஜூன்: இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் ஒரு முனைப்பு / பொருளாதார கல்வி அபிவிருத்திக்கான மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

| சேதமாக்கப்பட்ட வியாபாரங்கள் | # | இழப்பு இலங்கை ரூபாவில் |
|---|---|---|
| தர்கா நகர், அளுத்கமவில் உள்ள கடைகள் | 36 | 250.14 மில். |
| பெரிய வியாபாரங்கள் (ஆடைத் தொழிற்சாலை) | | |
| அளுத்கம ∴மத்துகம பகுதியில் | 01 | 50.00 மில். |
| அளுத்கமவில் உள்ள பெரிய வியாபார ரீதியான | | |
| ஆட்டுப் பண்ணை | 01 | 7.5 மில். |
| வியாபாரங்களின் மொத்த இழப்பு | 38 | 307.64 மில். |
| ஒரு வியாபாரத்திற்கான சராசரி இழப்பு | 38 | 8.09 மில். |

வியாபாரங்களுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பு அட்டவணை (2014)

| வீடுகள் சேதமடைதல் (கட்டிடங்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள்) | # | இழப்பு |
|---|---|---|
| அளுத்கம மற்றும் தர்கா நகரில் | 84 | 302.21 மில். |

பேருவளையில் 13 7.13
மில்.

துந்துவவில் 18 5.68
மில். மொத்தம் 115 315.02
மில்.

---

ஒரு வீட்டுக்கான சராசரி இழப்பு 2.73 மில்.

சேதமடைந்த வீடுகளின் இழப்பு (2014)

இடரீதியான சேதங்கள்- நூற்று வீதத்தில் காட்டப்படுதல் (2014)

| | |
|---|---|
| அளுத்கம | 96% |
| பேருவளை | 2.2% |
| துந்துவ | 1.8% |

சேதமாக்கப்பட்ட சமய நிறுவனங்கள் இலங்கை ரூபாவில்

| | |
|---|---|
| மஸ்ஜிதுந் நூர், 93, மரிக்கார் வீதி | 5 மில். |
| பஸாலத்தொட்ட பள்ளிவாசல் | 0.15 மில். |
| மொத்த இழப்பு | 5.15 மில். |

சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்களின் அட்டவணை (2014) (sic)

எல்லாச் சொத்துக்கள் #
இலங்கை ரூபாவில்

வியாபாரங்களின் மொத்த இழப்பு 38 307.64
மில்.

வீடுகளின் மொத்த இழப்பு 115 315.02
மில். பள்ளிவாசல்களின் மொத்த இழப்பு 2 5.15
மில்.

மொத்தம் 155 627.81M

சேதமாக்கப்பட்ட வியாபாரங்கள், வீடுகள், பள்ளிவாசல்களின்

மொத்த இழப்பு அட்டவணை (2014)

**நிறுவகப் பிரிவுகளின் சேதங்களின் நூற்றுவீதம்**

| | | |
|---|---|---|
| வீடுகள் | - | 50.17% |
| வியாபாரங்கள் | - | 49% |
| பள்ளிவாசல்கள் | - | 0.82% |

மேற்படி அட்டவணையானது வியாபார நிலையங்கள் மற்றும் வீடுகளின் இழப்பு மதிப்பீட்டின் சுருக்கமாகும். அளுத்கமையிலும் தர்கா நகரிலும் 38 வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. 38 மொத்த வியாபார நிலையங்களில் 02 நிலையங்கள் பெரியளவிலான வருமானம் ஈட்டுபவையாகவும் பெரியளவிலான பணியாட் தொகுதியினரைக் கொண்டிருப்பவையும் ஆகும். Gateway Apparel ஆடைத் தொழிற்சாலையானது 400 சிங்களவர்களுக்கு வேலை வழங்கியது. வன்செயலில் 50 மில்லியன் இலங்கை ரூபாவை அது இழந்துள்ளது. அதன் விளைவாக இயந்திரத் தொகுதிகள் முற்றுமுழுதாக எரிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலை ஒரு சிங்களக் கிராமத்தில் அமைந்திருந்தது. வன்முறையின் பின்னரான பெரும் நெருக்கடியில் வியாபாரங்களை முற்று முழுதாக எரிப்பதற்கு இலக்கு வைக்கப்பட்டிருந்தது. வியாபாரங்கள் ஏற்றுமதிக் கட்டளைகளுடன் மறுக்கப்பட்டுள்ளன. (Shiras, Farook 2014) வன்முறைக்குப் பின்னர் பணியாட்களில் 75% இனர் மாத்திரம் வேலைக்குத் திரும்பியிருந்தனர். இக்கட்டத்தில் சம்பளம் கொடுப்பதற்கு முகாமைத்துவம் திணறுவதாகத் தெரிகிறது.

| இலங்கை ரூபா மில்லியனில் இழப்புக்களின் வீச்சு | # வியாபாரங்களில் | % |
|---|---|---|
| 1< | 10 | 26 |
| 1-3 | 15 | 34.5 |
| 3-5 | 1 | 3 |
| 5-7 | 4 | 10.25 |
| 7-10 | 1 | 2.6 |
| 10-50 | 2 | 5.12 |
| 50-100 | 3 | 8 |

---

வியாபாரங்களின் எண்ணிக்கையிலும் ஏற்பட்ட இழப்பின் தொகையின் வீச்சின் பிரகாரமான நூற்றுவீதத்திலும் அட்டவணை வகைப்படுத்துகிறது. (2014)